# உரையாடல்

இலக்கியத்தை அண்டியுள்ள புள்ளிகளில்...



URAIYAADAL ISSN 2292-4817

2015 APR-JUNE | VOL.1 NO3


BIRUNTHAN
LIMO SERVICE
Murali
647 972 3619
Cheapest Limo Service
Airport, Wedding, Casino Trips, Corporate Parties
Proms, Concert and Sporting Events
www.birunthanlimo.com







| | |
|---|---|
| | தீபன் யாருடைய குரல் |
| சோலைக்கிளி | நினைவுகளைச் சாப்பிடுபவன் |
| டி.செ. தமிழன் | நானுன்னை முத்தமிடுகையில் புத்தர் சிரித்துக் கொண்டிருந்தார் |
| யமுனா ராஜேந்திரன் | ஜெயகாந்தனின் கருத்துலகம் |
| நேத்ரா ரொட்றிகோ | செல்வா கனகநாயகம் நினைவஞ்சலி உரை |
| ஸ்ரீரஞ்சனி | கண்ணகி, மாதவி, கோவலன் மனப்பான்மையைக் களைந்தெடுத்தல் |
| தேவ அபிரா | கண்ணம்மா தந்த காதல் |
| சக்கரவர்த்தி | மாயன் |
| மெலிஞ்சி முத்தன் | ஒரு கவிஞனின் அவஸ்தை |
| கோ. நாதன் | பாசிக்குடா |
| மீராபாரதி | பெண்களிடமிருக்கும் அதிகாரம் பெண்களுக்கானதல்ல |
| தர்சன் | ஆயுத எழுத்து ஒரு சிப்பாயின் உலகம் |
| எஸ். கே. விக்னேஸ்வரன் | யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும் |
| தமிழ்நதி | பார்த்தீனியம் நாவலிலிருந்து ஒரு அத்தியாயம் |
| திருமாவளவன் | கறிசோறும் கரண்டி முள்ளும் |
| நெற்கொழுதாசன் | இருள் தின்ற ஈழம் எனது பார்வை |
| தமிழில் ரஃபேல் | இலங்கை: புலிகளுடைய போர் நிறைவடைந்திருக்கலாம், |
| மைதிலி | இசைவானில் ஒரு விண்மீன் |
| கோ. நாதன் | நதி மார்புச் சுழியில் பொம்மைத்துவம் |
| அருண்மொழிவர்மன் | சாத்தனூர் எனும் கனவுக் கிராமம் |
| ஆ.வில்லவராயர் | ஒரு விரித்த பக்கம் |
| ரியாஸ் குரானா | நுண் விமர்சனம் |










இலக்கியத்தை அண்டியுள்ள புள்ளிகளில்...

URAIYAADAL

ISSN 2292-4817
2015 APR-JUNE | VOL.1 NO3

**ஆசிரியர்** / Editor

நடராஜா முரளிதரன்
Nadarajah Muralitharan

**ஆலோசனை** / Consultant

வின்சென்ற் போல் சந்தியாப்பிள்ளை
Vincent Paul Santhiyappillai

**முகப்போவியம்** / Cover Design
கருணா – டிஜி மீடியா
Karuna - Digi Media

**ஓவியங்கள்** / Graphic

கிருஷ்ணா – கிராஃபிக்லேண்ட்
Krishna - Graphicland
கருணா – டிஜி மீடியா
Karuna - Digi Media
பாரதி வடிவேல்
Barathi Vadivel

**அச்சமைப்பு, அச்சுப் பதிவு** / Layout & Printing

கிராஃபிக்லேண்ட் – 416 412 0900
Graphiclnad

**விளம்பரம்** /Advetise

கி.ஜெயக்குமார்
K.Jeyakumar
தி. கலியுகராஜா
T.Kaliyugaraja

Published By:
Nadarajah Muralitharan
36 Salamander St.
Scarborough, ON. M1X 1Y9
Canada
647 972 3619
uraiyaadal@yahoo.com

## ஆசிரியம்

மே மாதத்தின் முற்கூற்றில் "உரையாடல்" மூன்றாவது இதழைக் கொண்டு வரலாம் என்று நாம் நினைத்திருந்தோம். ஆயினும் இயலவில்லை. ஆனால் அது யூனில் கைகூடியுள்ளது. காலம் தாழ்த்தியாவது இலக்கிய இதழொன்றை வெளிக் கொணருகையில் ஏற்படும் மகிழ்ச்சி சொல்லி மாளாததாக இருப்பதை இங்கு பதிவு செய்தேயாக வேண்டியுள்ளது.

புலம் பெயர் சூழலில் கனடாவில்தான் அதி கூடிய இலக்கிய நிகழ்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. அப்படியிருந்தும் இலக்கிய இதழொன்றைக் கொண்டு வருவதென்பது மிகவும் கடினமாகவே உள்ளது. ஒரு இலக்கிய இதழைக் கொண்டு வருவதில் உண்மையில் சிரமங்கள் உண்டா அல்லது எமது முயற்சி, விவேகம், வியூகம் போன்றவைதான் இதனைச் சாத்தியப்படுவதில் கடினங்களைத் தோற்று விக்கின்றதா என்பது போன்ற கேள்விகளை நான் எனக்குள் கேட்டுக்கொள்வது வழக்கம். இங்கு இவையெல்லாமே காரணிகளாக அமைந்துள்ளன என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது. எனவே இந்த அரண்களையெல்லாம் தாண்டியே இப்பிரசுரத்துக்கான சாத்தியம் நிகழ்ந்துள்ளது.

பிறந்த மண்ணிலும், புகுந்த மண்ணிலுமாக எத்தனை பாடுகளைச் சந்தித்தவர்கள் நாம். இந்த அனுபவங்கள், தரிசனங்கள், வாழ்வியல் சிக்கல்கள், முரண்பாடுகள் இலக்கிய வடிவம் எய்துகின்ற பொழுது காலம் உள்ள வரையும் அவை ஆற்றல் படைத்தவைகளாக எதிர்காலத்தை ஊடுருவும் வாய்ப்புடையதாக அமையு மல்லவா? வரலாறுகள் யாவும் அதிகார வர்க்கங்களின் நலன்களுக்காகப் பொய்யாகப் படைக்கப்படுபவை என்று கூறப்படும் வாதங்களையும் கருத்தில் எடுத்துக்கொண்டே இதனைப் பகுத்துப் பார்க்கலாம். இந்தச் சூழ்நிலையில் ஆளும் வர்க்கக் கட்டமைப்புக்குள் தன்னைப் பிணைத்துக் கொள்ளாத கலைஞர்களும் படைப்பாளிகளும் பங்கு கொள்ளுகின்ற சிற்றிலக்கியத் தளத்தில் எம்மை இணைத்துச் செயற்பட ஆர்வம் காட்டுகின்றோம். அதுவே இங்கு பேசுபொருள் !

எழுதும் ஆற்றல் படைத்த பலர் இங்குள்ளார்கள். அவர்களை ஊக்குவிக்க வேண்டியுள்ளது. தொடர் சந்திப்புகளையும் கலந்துரையாடல்களையும் நிகழ்த்தி அவர்களை எழுதுவிக்க வேண்டியுமுள்ளது. பிரசுரங்களும் சஞ்சிகைகளும் நிறைய வெளிவர வேண்டும். நாடகங்களும் திரைப்பட முயற்சிகளும் கூட. அவை நடைபெறாமல் இல்லை. ஆனால் போதாமை உள்ளது. எவ்வாறு இந்தப் போதாமையைக் குறைப்பது என்பதே இங்கு எழுப்பப்பட வேண்டிய கேள்வி! எனவேதான் எத்தனையோ கருத்து முரண்களுக்கு மத்தியிலும் நாம் சில தளங் களிலாவது ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டி யுள்ளது. ஆனால் இயல்பான சூழலை உடைத்து இலட்சியவாதக் கோட்டைகளைக் கட்டுவதென்பதும் வெறும் கற்பனையே! ஆனாலும் கற்பனைதான் இலக்கியத்துக் கும், மறுமலர்ச்சிக்குமான அடிப்படை! ஆகவே கனவுகள் காண்போம்! கற்பனை கள் செய்வோம் ! இந்தக் உட்கிடக்கையில்தான் படைப்பாளிகளும் கலைஞர்களும் களிநடம் புரிந்து புதியவைகளை உருவாக்குகிறார்கள். எனவே அவற்றுக்கான உத்வேகத்தை அளிப்பதில் என்றென்றும் "உரையாடல்" முன்னிற்கும்.

இந்த இதழின் முகப்பு அட்டையில் "மே இனப்படுகொலை" அவலத்தை ஓவியமாகத் தீட்டிய ஓவியர் டிஜி கருணாவுக்கு எமது நன்றி ! அவரே "உரையாடல்" தலைப்பையும், மாயன் சித்திரத்தையும் உருவாக்கித் தந்துள்ளார். மற்றும் சித்திரங்களை வரைந்து உதவிய ஓவியர்கள் கிருஷ்ணா, பாரதி வடிவேல் ஆகியோருக்கும் படைப்புகளையும் எழுத்தாக்கங்களையும் வழங்கிய எழுத்தாளர்க ளுக்கும் "உரையாடல்" சார்பில் நன்றி!

நடராஜா முரளிதரன்
ஆசிரியர்

# தீபன் யாருடைய குரல்?



கடந்த மே மாதம் நடைபெற்ற 'கான்' திரைப்பட விழாவில் தீபன் (Dheepan) என்ற பிரெஞ்சுத் தமிழ் திரைப்படம் பால்மடோர் ( Palme d'Or) என்ற உயர் விருதைப் பெற்றுக்கொண்டது. இத் திரைப்படத்தைப் பிரான்ஸின் பிரபலமான இயக்குனர் ஜக்குஸ் ஓடியாட் (Jacques Audiard) இயக்கியுள்ளார். புலம் பெயர்ந்து பாரிசில் ஈழத்து எழுத்தாளர் சோபாசக்தி என்ற ஜேசுதாசன் அன்ரனிதாசன் மற்றும் சென்னையைச் சேர்ந்த நாடகக் கலைஞரான காளீஸ்வரி சிறினிவாசன் மற்றும் கலைத்துறையைச் சேர்ந்த கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட பெற்றோரின் மகள் கிளவுடின் வினாசித்தம்பி பிரதான பாத்திரங்களில் நடித்துள்ளனர். இது திரைப்பட ரசிகர்களான எமக்கு மகிழ்ச்சியான ஒரு செய்தியே.

ஏனெனில் 'கான்' திரைப்படவிழாவில் எங்கள் திரைப்படம் ஒன்றைத் திரையிட விரும்புவது எங்களின் கனவுகளில் ஒன்று. அப்படியிருக்கும் பொழுது நமது நண்பர்கள் நடித்த தமிழ் மொழி பேசும் பிரஞ்சுத் திரைப்படம் ஒன்று விருதும் பெருகின்றதாயின் அது பெரும் மகிழ்ச்சியே. இக் கனவை நனவாக்கியது சோபாசக்தியினதும் தீபன் படக்குழுவினரிதும் பங்களிப்பு என்றால் மிகையல்ல.

திரைப்பட இரசிகர்களாக நாம் ஒஸ்காரைவிட 'கான்' திரைப்பட விழாவில் சிறிது மதிப்பு வைத்திருக்கின்றோம் என்றால் அது பொய்யல்ல. இத் திரைப்பட விழாவில் இதுவரை வென்ற பல திரைப்படங்களைப் புகழ்ந்திருக்கின்றோம். அந்தப் படங்களில் நடித்த நடிகர்களை அவர்களது அரசியல் சமூக கருத்துக்களூக்கு அப்பாற்பட்டுப் பாராட்டி இருக்கின்றோம். அப்பொழுதெல்லாம் இந்த நடிகர் இந்தக் கருத்துள்ளவர் என்பதால் நாம் நிராகரிக்கின்றோம் எனக் கூறியதில்லை. இதேபோல் இசையமைப்பாளர் ரகுமான் அவர்கள் இரண்டு ஒஸ்கார் விருதுகளை வாங்கியபோது குறிப்பிட்ட திரைப்படம் மீது விமர்சனங்கள் இருந்தபோதும் நாம் மகிழ்ந்தோம். பெருமைப்பட்டோம். வாழ்த்தினோம். அப்பொழுதெல்லாம் அத் திரைப்படத்தின் விமர்சனத்தைத் தனியாகவும் விருதை தனியாகவுமே பார்த்தோம்.

அந்தவகையில் சோபாசக்தி என்ற மனிதரின் அரசியல்



நிலைப்பாடுகளை சிறிது ஒதுக்கிவைத்துவிட்டு இத் திரைப்படத்தையும் நடிகர்களையும் இயக்குனரையும் தமிழர்களாகவும் நண்பர்களாகவும் வாழ்த்துவோம். பாராட்டுவோம். இப் பாராட்டும் வாழ்த்தும் எந்தவகையிலும் சோபாசக்தியின் அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பான நமது முரண்பாடுகளையோ, அல்லது விமர்சனங்களையோ அல்லது இத் திரைப்படம் கூறப் போகின்ற கருத்துத் தொடர்பான நமது விமர்சனங்களையோ மழுங்கடிக்காது அல்லது வலுவற்றதாக்காது.

இத் திரைப்படத்தின் இயக்குனர் யார்?

இயக்குனர் ஜக்குஸ் ஓடியாட்டின் (Jacques Audiard) திரைப்படங்களை இதுவரை பார்த்தில்லை. இவர் இதற்கு முன்பு ஏழு திரைப்படங்களை இயக்கி இருக்கின்றார். அவற்றுள் சில, A Prophet - Rust & Bone and The Beat That My Heart Skipped. ஐந்து வருடங்களுக்கு முன்பு இவரின் Prophet என்ற திரைப்படம் 'கான்' திரைப்பட விழாவில் இரண்டாவது இடத்தைப் பெற்றது. இத் திரைப்படமானது ஆறு வருடங்கள் சிறைத்தண்டனை பெற்ற பிரான்சில் புலம்பெயர்ந்து வாழ்கின்ற அல்ஜீரிய நாட்டு இளைஞன் ஒருவனின் கதையை மையமாகக் கொண்டது. பலரினதும் பாராட்டுக்களைப் பெற்றது எனக் குறிப்பிடப்படுகின்றது.

நாம் ஒரு தேநீர் கடையில் இருக்கும் பொழுது எங்களிடம் வந்து பூ விற்கும் ஒருவரின் வாழ்வு எப்படியானது. அவர் எங்கிருந்து வந்தவர்? போன்ற கேள்விகள் தனக்கு முக்கியமானவை என்கின்றார் இத் திரைப்படத்தின் இயக்குனர் ஜக் ஓடியாட். ஏனெனில் ஒரு சமூகத்தில் வேறுபட்டவராக இருப்பவரின் வாழ்வை அறிவதில் ஆர்வமுள்ளவனாக உள்ளேன். அந்தவகையில் தீபன் திரைப்படத்தின் வெற்றியானது ஐரோப்பாவில் வாழ்கின்ற இவ்வாறான புலம்பெயர்ந்து வாழ்கின்ற தொழிலாளர்களின் வாழ்க்கைக்கு உதவியாக இருக்கும் என்கின்றார்.

இத்திரைப்படத்தின் முக்கியத்துவமானது குடிவரவாளர்களை மையப்படுத்திய அரசியல் பிரச்சினையை மையமாகக் கொண்டதல்ல. மாறாக வசதிகளின்றி வீதிகளில் மிகவும் கஸ்ரப்பட்டு வாழ்கின்ற குடிவரவாளர்கள் தொடர்பான கேள்விகளைக் கொண்டது. அந்த வகையில் தீபன் திரைப்படம் முக்கியமானது என விருதைத் தேர்வு செய்த நடுவர்களில் ஒருவர் கூறியுள்ளார். இவ்வாறு ஒரு புறம் பாராட்டுக்கள் இருந்தாலும் மறுபுறம் விமர்சனங்களும் இல்லாமல் இல்லை. ஆகவே இத் திரைப்படத்தின் குரலானது ஈழத் தமிழர்களின் குரலாக ஒலிக்குமா? புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களின் குரலாக ஒலிக்குமா? அல்லது குடிவரவாளர்களின் குரலாக ஒலிக்குமா? அல்லது வழமைபோல வெள்ளை நிற ஐரோப்பிய மையவாதச் சிந்தனையின் குரலாகவே ஒலிக்குமா? என்பதை திரைப்படம் திரையரங்குகளுக்கு வரும் வரை காத்திருக்க வேண்டும்.

தீபன் திரைப்படத்தின் கதை என்ன?

இலங்கையில் போர் முடிவுற்றபின் விடுதலைப் புலிப் போராளிகள் மரணித்த போராளிகளை எரித்துவிட்டு தமது சீருடைகளைக் களைந்து சாதாரண உடைகளை அணிந்து கொண்டு மக்களுடன் மக்களாக இணைந்து கொள்கின்றனர். தற்காலிக அகதிகள் முகாமில் ஒருவரை ஒருவர் முன்பின் அறியாத ஒரு பெண், ஒரு போராளி மற்றும் ஒன்பது வயதுக் குழந்தை ஆகியோர் தப்பிப்பதற்காகத் தம்மை ஒரு குடும்பமாக இணைத்துக் கொள்கின்றனர். இவர்கள் முகாமிலிருந்து வெளியேறிப் பிரான்சில் புகலிடம் கோருகின்றார். புகலிட அனுமதியை பிரச்சினையில்லாமல் பெற்றுக் கொண்டு ஒரு புதிய வாழ்வை ஆரம்பிக்க தமக்கென ஒரு குடும்பத்தைப் பொய்யாக உருவாக்குகின்றனர். இவர்கள் வாழ்வதற்கு கைவிடப்பட்ட கட்டிடம் ஒன்று கிடைக்கின்றது. இது பிரான்சின் வசதிகள் அற்ற புறநகர்ப் பகுதி. இதேவேளை தீபன் (சோபாசக்தி) பராமரிப்பாளர் வேலை ஒன்றைப் பெற்றுக் கொள்கின்றார். குழந்தை இளையாள் (கிளவுடின் வினாசித்தம்பி) பாடசாலைக்குச் செல்ல



ஆரம்பிக்கின்றார். "துணைவியார்" யாழினிக்கு (காளீஸ்வரி) சமையல் மற்றும் சுத்தம் செய்கின்ற ஒரு வேலை கிடைக்கின்றது.

துரதிர்ஸ்டவசமாக இவர்கள் வசிக்கும் கட்டிடத்திற்கு அருகாமையில் உள்ள கட்டிடம் போதைப் பொருள் விற்கின்ற குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. படத்தின் அரைவாசியில் சிறையிலிருந்து ஒருவர் விடுதலையாகி இவர்கள் வசிக்கின்ற இடத்திற்கு வருகின்ற பொழுது கதை இன்னுமொரு பாதையில் திரும்புகின்றது. புதிதாக வருகின்றவர் போதைப்பொருள் விற்கின்ற குழுவின் தலைமைப் பொறுப்பை மீளப் பெற்றுக் கொள்கின்றார். இச் சூழ்நிலையில் யாழினி இத் தலைமைப் பொறுப்பாளர் மீது ஈர்ப்பு கொள்கின்றார். அதேவேளை தீபன் இக் குழுவின் தாக்குதல்களை எதிர்கொள்ள மீளத் தனது போராளிக்குரிய குணவியல்புகளை வரவழைத்துக் கொள்கின்றார். இதன்போது அவர் எதிர்கொள்ளும் போரின் தாக்கங்களினால் உருவான போரின் பின்பான மன அழுத்தம் (PTSD) இயல்பாக சித்தரிக்கப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது.

புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களின் வாழ்வை ஐரோப்பிய வெள்ளையர்களின் பார்வையில் இல்லாமல் நமது பார்வையில் கூறினாலே பெரிய விடயம். அவ்வாறு இல்லாவிட்டாலும் ஓரளவு நியாயமாகக் கூறி அகதிகளின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வந்தாலே போதும். இத் திரைப்படம் எவ்வாறு கூறுகின்றது என்பதை அறிய ஆகஸ்ட் மாதம் திரையரங்குகளில் திரையிடப்படும் வரை காத்திருப்போம்.

தொகுப்பு :வீ.கே.எஸ்

உசாத்துணைகள்
http://www.theguardian.com/film/2015/may/24/jacques-audiard-dheepan-cannes-europe-migrant-workers?CMP=share_btn_fb

http://www.theguardian.com/film/2015/may/21/dheepan-review-tamil-tiger-jacques-audiard-cannes-2015

http://variety.com/2015/film/festivals/dheepan-film-review-cannes-1201502383/

# உங்களின் சகல விதமான மோட்கேஜ் தேவைகளையும் சிறந்த முறையில் பூர்த்தி செய்யப்படும்!




**BonaFide**
Mortgage Solutions Inc.
the true freedom

SUREN NATHAN | 416 436 1111
MORTGAGE BROKER

7 Eastvale Drive, Unit 203, Markham, Ontario L3S-4N8
Office: 416 548 7475 | Fax: 416-548-7496 | Email: suren@bmsic.com




# நினைவுகளைச் சாப்பிடுபவன்



- சோலைக்கிளி

நினைவுகள் விடாதவை
நமக்குள் நுழைந்தால் துளைக்கும்
கட்டுப்பெட்டிக்குள் எலி இருப்பதனைப்போன்றது
நமது நெஞ்சுக்குள் நினைவுகள் வாழுவது

நினைவு சுமக்காத ஒருவனைக் காட்டு
தெருவில் நடந்து போகும்போது வானத்தில் கால்வைத்து
சறுக்கி விழுகிறவன் யார்
நினைவுகளால் துளைக்கப்படுகிறவன்

பார்க்கும் நேரமெல்லாம் கட்டிலில்
முளைக்காத மாங்கொட்டைபோல
நினைவு நீர் ஊற்ற
தோல் இழகி
அவள் வைத்துவிட்டுப்போன தேநீரை
ஈயுடன் சேர்த்துக் குடிப்பவன்
நினைவுகளைச் சாப்பிடுபவன்

ஆனால் வாய் துடைத்து
கை கழுகுவது நினைவு
நினைவுகளாலேயே தம் மனதை
அலங்கரித்துக்கொண்டு
கடற்கரையில் கல்லானவர்களில்
கடல் பறவைகள் குந்தி
எழுந்ததைக் கண்டிருக்கிறேன்

என்னில்
அலை நின்றிருக்கிறது
ஏற்றிவைத்த ஆணியைப்போல
அவர்கள் மண்ணை அள்ளி அள்ளி
ஊதிக்கொண்டிருப்பார்கள்
கரையிலுள்ள மணல்களெல்லாம்
தீரும்
அந்த மடுவுக்குள்
அவர்களையே போட்டு
நினைவு மூடிவிட்டு
தான் மேலும் மேலும்
இளமையாகும்

நினைவுக்கு வயது கடப்பதில்லை
பிறந்த பாப்பாவைப்போல என்றும் இருக்கும்
தான் தூங்கும் தொட்டிலுக்குள் விரல் சூப்பிக்கொண்டு

ஒரு பல்விழுந்த நினைவைக்
காட்டலாமா யாரும்
கூனல் விழுந்த நினைவுகள் என்று
ஏதாவது இருக்கிறதா
பாட்டிக்கு சோறு பிசைந்து கொடுக்க

எல்லா நினைவுகளும் இளைஞன்
எலும்புகள் உடைய
இறைச்சியை கடித்துச் சாப்பிடும்



# நானுன்னை முத்தமிடுகையில் புத்தர் சிரித்துக்கொண்டிருந்தார்



-டிசெ தமிழன்

**1.அந்நியன்**

மெல்லிய பனித்தூவிக்கொண்டிருக்க ஓர் உருவம் நடந்து போய்க்கொண்டிருக்கின்றது. மனிதர்களின் மனங்களுக்குப் பலவர்ணங்கள் இருப்பதுபோல, பனியிற்கும் பல உருமாற்றங்கள் நிகழ்கின்றன. இப்போது பெய்யும் பனி, பூக்கள் சொரிவதைப் போன்று மென்மையானது. பனிக்காலம் தாண்டி வசந்தத்தில் பிறழ்வாய் பொழிகின்றதெனினும் இதற்கென்று ஓர் அழகுண்டு. உடலை உறையச் செய்யும் காற்றில்லாது, நிலத்தை முத்தமிடும் எந்தப் பனியும் எவரையும் அலுக்கச் செய்வதுமில்லை.
இது காலையா அல்லது மாலையா என்ற தடுமாற்றங்களைத் தருகின்ற வானம், கரும்சாம்பல் போர்வையைப் போர்த்திய ஒரு பொழுது. அந்நியன் தேர்ந்தெடுத்த இந்த இடம், பெரும் கூட்டத்திடையே தனித்து நிற்கும் ஒரு அமைதியான பெண்ணைப் போல, பெருநகருக்குள் இருந்தாலும் அவ்வளவு சப்தமில்லாத ஓரிடம்.



சிலர் நாய்களோடு நடந்துகொண்டிருக்கின்றார்கள். வேறு சிலர் இணைகளாய் கைகோர்த்து கதைபேசிக் கொண்டு செல்கின்றார்கள். சலிப்பான நாளாந்த வாழ்விலிருந்தும், பேரிரைச்சலிருந்தும் வெளியே இப்படிக் கொஞ்சநேரமேனும் தப்பிவிட்டவர்களைப் பார்க்கும்போது அந்நியனுக்கு ஏதோ நெருக்கமும் நெகிழ்வும் அவர்கள் மீது பெருகுகிறது.
வானம் சாம்பலாகிப் போகும்போது கடலும் அதே வர்ணம் பூசி மென் அலைகளோடு மிதந்துகொண்டிருக்கிறது. “சாம்பல் வானத்தில் மறைந்த வைரவர்கள்“ மீண்டும் தோன்றக்கூடிய தருணமாகக் கூட இது இருக்கக்கூடும். கடலையொட்டி நீண்ட நெடிய செம்மண் பாதை அருகிலிருப்பதும் ஓர் அதிசயமென்றுதான் கூறவேண்டும். நீர் அரித்த சிறு மண்குன்றுகள் இன்னமும் நம்பிக்கையை இழந்துவிடாத இயற்கையின் பெரும் சக்தி பற்றி எதையோ சொல்ல முயல்கின்றன.

மனிதர்கள் அவ்வளவு ஏறாத ஒரு மலையில் யாரோ படுக்கையை மரங்களைக் கொண்டமைத்து தங்கி விட்டுப் போயிருப்பதை காணக்கூடியதாய் இருக்கிறது. மனிதர்கள் சக மனிதர்களிடமிருந்து தப்பியோடி, தம் மனச்

சிலந்திகளின் வலைப்பின்னல்களிலிருந்தும் தப்பிக்க முயற்சித்ததன் ஒரு தடயமாக இது இருக்கவும் கூடும்.

அந்நியன் நடந்தபடி போய்க்கொண்டிருக்கின்றான், பாதையும் முடிவுறாது விரிந்துகொண்டேயிருக்கிறது. இதற்கு முன் பலமுறை வந்தபோது இருந்த பாதையைப் போல இதுவில்லையென அவனது காலடிகள் வியந்துகொள்கின்றன. காலமும் வெளியும் இல்லா இடத்தில் வாழ்வு என்பது சாத்தியமா என்பதைவிட, காலமும் வெளியும் நம் மனதிற்கேற்ப நீட்சியும் விரிவும் கொள்ளக்கூடியதா என்பதைப் பற்றி யோசிக்கின்றான்.
பறவைகள் வசந்தத்தின் முதற்பாடலை பனித்தூவல்களிடையே இசைத்துக்கொண்டு மேற்கு நோக்கிச் சிறகடிக்கின்றன. ஒருவகைப் புல்லினம் தன்னைவிட இரண்டு மடங்கு உயரத்தில் வளர்ந்து நிற்பதைப் பார்த்து அந்நியன் திகைக்கின்றான்.
மெல்லியதாய்த் தட்டினாலே முறிந்துவிடக்கூடிய இந்தப் பொன்னிறப்புற்கள் இப்படி வளரமுடியுமென்பதும் இயற்கையின் விந்தைதான் என வியந்துகொள்கிறான்.
யாரோ ஒருவர் சமாதானக் குறியீடை நடக்கும் பாதையில் வரைந்து விட்டுப் போயிருக்கின்றார்.
வியட்னாமில் அமெரிக்கா போர் நடத்தியபோது போருக்கு எதிராக எழுந்தவர்கள் அமைதியிற்காய் முன்வைத்த ஓர் அடையாளம் அது. அந்நியனுக்கு அது எதையெதையோ நினைவுபடுத்துகிறது.
வெளியுலகமும் அகவுலகமும் தளும்பாது அமைதியான ஒரு வாழ்வு முறையைக் கொண்டவர்கள் தேவதைகளால் ஆசிர்வதிக்கப்பட்டவர்களென நினைத்துக்கொள்கிறான். அந்த அடையாளத்திற்கு அருகிலேயே “நான் அமைதியை நேசிக்கிறேன்“ என மெல்லிய பனியோடு குழைந்துபோன மண்ணில் எழுதிவிட்டு நகர்கின்றான்.
தொடர்ந்து நீளநடக்கும் அந்நியன் யாரோ ஒருவர் சிறுபாறையில் வைத்துவிட்டுப் போயிருக்கும் அன்னை மேரியின் திருவுருவைக் காண்கிறான். மேரியின் முகத்தில் பரவும் சாந்தம் இயற்கையோடு இரண்டறக் கலக்க முடிந்த ஒருவரினால் மட்டுமே சாத்தியமானது போலத் தோன்றுகின்றது. செய்த பாவங்களுக்கும், இனி செய்யப்போகும் பாவங்களுக்குமாய் என்னை மன்னித்துவிடுங்கனென, கடல்விரியும் பின்னணியில் நிற்கும் மேரியைப் பார்த்து வேண்டிக்கொள்கிறான். “உன்னைப் போன்றவர்களின் பாவங்களை வாங்கிக்கொள்ளத்தானே என் மகனை அனுப்பி வைத்தேன்“ என்பதை மேரி சொன்னாற்போல் தோன்றியது. அனுப்பப்பட்ட எல்லாக் கடவுள்களையும் கொன்றுவிட்டு, கடவுளர்களும் கைவிடப்பட்ட ஒரு கழிவரக்கக் காலத்தில் அல்லவா வாழ்ந்துகொண்டிருக்கின்றோமென அந்நியனின் உதடுகள் முனுமுனுத்துக்கொள்கின்றன.



மேனியில் பனி இலவம் பஞ்சாக மிதந்து வந்து தொடுகின்றன. பின்னர் அவை சொற்பக்கணத்தில் உருவமிழந்து நீராகக் கரைந்தும் போகின்றது. இரண்டு கரிய அணில்கள் பாதையின் குறுக்கே ஓடுகின்றன. ஒன்றையொன்று சீண்டி விளையாடுகின்றன. பல பத்தாண்டுகள் உயிர்த்திருக்கும் முதிய மரங்களின் அடிப்பாகங்களில் பசுமை வர்ணங்களைப் பூசி நிற்கின்றது. “April's air stirs in/willow-leaves.../a butterfly/floats and balances” என்கின்ற பாஷோவின் ஸென் படிமம் அந்நியனுக்கு நினைவில் வந்து தெறிக்கிறது. நெடுந்தூரம் நடந்தாயிற்று சற்று இளைப்பாறுவோமென, ஓரிடத்தில் உட்கார்ந்துகொள்கிறான். சாம்பல் பூசிய வானமும் கடலும் விழிகளுக்குள்ளும் அதே வர்ணத்தைக் கொண்டு வந்துவிட்டாற்போல் தோன்றுகின்றது. இறுதியில் நாம் எதுவுமற்றவர்களாகப் போகும்போது எந்த வர்ணத்தில் இருப்போமென யோசிக்கின்றான் அந்நியன். “காடுடைய சுடலை பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்“ என்ற பாடல் எங்கிருந்தோ ஒலிப்பதாய்த் தோன்றுகின்றது. தொலைவிலிருந்து அல்ல, தன் ஆழ்மனப் படிமம்தான் அதை இசைக்க விரும்புகிறது என்பதை அறிந்து உடலை உதறிப்பார்க்கின்றான்.

மனிதர்கள் அவனின் முதுகின் பின்னால் கதைத்துக்கொண்டும், உலாத்திக்கொண்டும் மறைந்து கொண்டிருக்கின்றார்கள்.யாரோ ஒருவர் ஓடி வருவதாய்க் காலடிச்சத்தங்கள் நெருங்க, திரும்பிப்பார்க்கையில் மென் நீலநிற ஸ்வெட்டருடன் ஒரு பெண் ஓடுவதைப் பார்த்து புன்னகைக்கின்றான்.

கடலைப் பார்த்தபடிமெல்ல மெல்லத் தன்னை மறக்கின்றான், அந்நியன். சப்பணமிட்டு பாறையில் அமரும்போது ஏதோ ஒரு அமைதி வந்துவிடுகின்றது போலும். குதிரைச் சத்தங்கள் கேட்கின்றன. யாரோ காட்டுக்குள் விறகு வெட்டுவதாய்க் காட்சிகள் விரிகின்றன. எதுவெனச் சொல்லமுடியாத நறுமணம் கூட சூழ்ந்துகொள்கின்றது. மெல்ல மெல்ல தானில்லாத ஏதோ ஒன்றில் கரைந்துபோய்க்கொண்டிருக்கின்றான். ஒருபொழுது கடல் ஊழியாய் தன்னை உள்ளிழுத்துக்கொள்ளும்போது தான் உடலற்ற ஒருவனாய் ஆகுவதையும் பார்க்கின்றான்.

எவ்வளவு நேரம் இப்படி அமர்ந்திருந்தான், எதில் கரைந்திருந்தான், எங்கு தன்னைத் தொலைத்திருந்தான் என்பதன் “காலமும் வெளியும்“ உணராது விழிகளைத்

திறந்தபோது, அருகிலொரு பெண் இருப்பதைக் காண்கின்றான். அவளுக்கு, முன்னர் பார்த்த ஓடிக்கொண்டிருந்தவளின் சாயல் இருப்பதைப் போலத் தெரிகிறது.

“உன்னைத் தொந்தரவு செய்துவிட்டேனா?“ என்கிறாள் அவள்
“இல்லையே“ என்கிறான் அந்நியன்.
“நான் சிலதடவைகள் இப்படியும் அப்படியுமாய் ஓடிக்கொண்டிருந்தேன். நீ இங்கேயே நீண்டநேரமாய் உட்கார்ந்திருந்தாய்“
‘சும்மா கடலைப் பார்க்கத்தான் வந்திருந்தேன். ஆனால் மனம் எங்கெங்கோ இழுத்துச்சென்றிருக்கிறது“
‘இப்படி ஒருவர் நீண்டநேரம் அமர்ந்திருந்தது வியப்பாகவும், ஆனால் அதேசமயம் பயமாகவும் இருந்தது அதுதான் அருகில் வந்து உட்கார்ந்திருந்தேன்.“
‘ஏன், கடல் என்னைக்கொண்டு போய்விடும் என யோசித்தாயா?“
“பலவிதமாய் யோசித்தேன். அவற்றில் ஒன்றில் நீ குறிப்பிடுவதுந்தான்.“
‘பிரச்சினைகள் இருந்தால்தான் தனிமையில் இருக்கவேண்டும் என்றில்லைத்தானே?“
‘உண்மைதான். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்போது தனித்தே அதை அனுபவிக்க விரும்புகின்றவள். இல்லாவிட்டால் இப்படியும் கூறலாம். தனித்திருக்கும்போதே மகிழ்ச்சியின் உச்சத்தை உணரமுடிகிறது, என்னால்“
“நீ கதைப்பதைப்பார்த்தால், புத்தரை அறிந்து வைத்திருப்பது போலத் தோன்றுகின்றது“
‘ஆமாம். நான் புத்தனைப் பின் தொடர்பவள்“
‘புத்தரைத் தெருவில் கண்டால் கொன்றுவிடவேண்டும் என ஸென் கூறுகிறது, எப்படி நீ புத்தரைப் பின் தொடர்பவளாகச் சொல்லமுடியும்“
“நானுமொரு புத்தராக மாறும்போது புத்தரைக் கொன்றுவிடுகின்றேன். இப்போது புத்தரைப் பின் தொடர்வதைவிட வேறு வழியில்லை“



‘விழிப்படைந்த மனதுக்கு புத்தரோ ஜீஸசோ பெயர்கள் மட்டுமே. அதற்கப்பால் எந்த வரலாற்றையோ எதிர்காலத்தையோ அடையாளப்படுத்துவதில்லை“
‘நாங்கள் தேநீர் அருந்தப் போவாமா?“
‘என்னைப் போன்ற அந்நியனை ஒருவனை எப்படி நம்பி அழைக்கின்றாய்?“
‘புத்தர்கள் நமக்கு முன் சாட்சியமாய் இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையில்தான்“
‘புத்தர் சாட்சியாய் இருக்க கொலைகள் புரிந்த வரலாறு நான் பிறந்த நாட்டில் நிகழ்ந்திருக்கின்றது“
“சிலுவைகளை எடுத்துக்கொண்டு கடல்கடந்து வந்தவர்கள் இங்கேயிருந்த ஆதிக்குடிகளை வதைத்த வரலாறுதான் இங்கேயும் நடந்திருக்கிறது“
‘மானுடத்தால் நிகழ்ந்த பேரிடர்கள் இல்லாத ஒரு நிலப்பரப்பை இனிக் கண்டடைதல் சாத்தியமேயில்லை“
‘உண்மைதான். ஆனால் இயற்கையிற்கு ஏதோ ஒருவகையில் எல்லாவற்றையும் ஆற்றும் சக்தியிருக்கிறது“
‘வரலாற்றை எளிதாய்க் கடந்துவரச் சொல்கின்றாயா?“
‘இல்லை, இயற்கையின் முன் நாமெல்லோரும் மிகச்சிறிய துளிகளே என்றுணரும்போது நமது அதிகாரத்தின் போலித்தனங்கள் தெரியும் எனச் சொல்ல வருகின்றேன்“
“சரி, நாம் தேநீர் அருந்தச் செல்லலாம்“

## 2. அவன்

என் பிரிய புத்தா, இந்த மாலைவேளை மங்க மங்க, ஏன் என் மனதும் ஒளி குறைந்து போகின்றது? “எதையாவது அறிவது என்றால் முதலில் எல்லாவற்றையும் மறந்துவிடவேண்டும்“ என்ற உன் வார்த்தையைப் போல இதுவும் இருந்தால் நல்லதிற்கு என்று இருந்திருப்பேன். ஆனால் மனமேன் ஒரு பூனையைப் போலச் சோர்ந்து சுருண்டு படுத்திருக்கின்றது என்று விளங்கவில்லை. எல்லோரும் “உனக்கு விடுதலை தருவது எப்படி“ எனப் பேசித்திரிகையில், நீதானே முதன்முதலில் “உன் சுயத்திலிருந்துதான் உனக்கு முதலில் விடுதலை வேண்டும், அதைக் கவனி“ என எல்லாவற்றையும் புரட்டிப்போட்டவனல்லவா?
உன்னோடு ஆறுதலாக அமர்ந்து அருந்துவதற்கெனத்தானே ஒரு பழமைவாய்ந்த வைன் போத்தலை நீண்டநாட்களாய் குளிர்பதனப்பெட்டியில் வைத்து காத்துக்கொண்டிருக்கின்றேன். சென்றமுறை வீட்டுக்கு வந்தபோது எப்போதும் மனம் உறுதியாய் முடிவுகளை எடுக்கமுடியாது சஞ்சலம் அடைகிறதே, நான் உறுதியானவாய் மாறும்வரை அருகில் இருக்கக்கூடாதா என்றல்லவா புத்தா உன்னிடம் கேட்டிருந்தேன். நீயோ புன்னகைத்தபடி, “ஒரு மாணவர் எப்போது கற்றுக்கொள்ளத் தயாராகின்றாரோ அப்போதே அவருக்கான ஆசிரியர் முன்னால் தோன்றிவிடுகின்றார்“ எனச் சொல்லி, அப்படியே நீ வாழ்வில் எதையாவது கற்றுக்கொள்ளத் தயாராகும்போது நானும் உன் முன்னால் வந்துவிடுவேன் என்றல்லவா கூறிச் சென்றாய். நான் இந்த அறையில் தனிமையை நிரப்பியபடி வெளியில் சிறுகுன்றைப் போல விரியும் நிலத்தில் எழுந்த மரங்களையல்லவா விழியெறிந்து பார்த்தபடியிருக்கின்றேன். இங்கே எந்நேரமும் பல்வேறு குருவிகளின் ஒலி காற்றில்

கரைந்தபடியே இருக்கின்றது. இதுவரை இந்தப் பனிதேசத்திற்கு வந்தபின் கேட்கமுடியா சில்வண்டுகளின் ஒலியையும், காகங்களின் கரைதலையும் கேட்டிருக்கின்றேன் என்றால் நீயும் மகிழத்தான் செய்வாய்.
இயற்கையை உற்றுப் பார்க்கப் பார்க்க, உள்மனதின் ஆழங்களுக்குப் போவது ஒரளவிற்கு சாத்தியமாகின்றது. உள்ளே பார்த்தலும், பிறகு எதுவுமில்லையெனத் தெளிதலிலுந்தான், எவரும் பிறப்பதுமில்லை எவரும் மறைவதும் இல்லை என்ற உன் சூத்திரங்கள் உருவாகின்றனவோ தெரியாது.

எதைத்தான் நான் சரியாகக் கற்றிருக்கின்றேன்? நீ கூட என்னைப்போன்றவர்களுக்கு முதன்முதலில் வெறுப்பின் அரசியல் திருவுருவாக அல்லவா அறிமுகமாகினாய். உன் பீடங்களில் அரளிப்பூக்களையும், தாமரைப்பூக்களையும் பரப்பவேண்டியவர்கள், வேறு மொழிபேசுகின்றார்கள் என்ற ஒரேகாரணத்திற்காய், என் இனத்தவர்களின் இரத்தத்தையல்லவா ஊற்றி உனக்குப் புது உருவம் கொடுத்திருந்தார்கள். இப்போது மட்டுமென்ன, “நீ வேண்டாம் வேண்டாம் என கதறக் கதற இரவோடு இரவாகத் தூக்கிக்கொண்டு, அரசமரங்களின் முன் இரவோடு இரவாக வைத்துவிட்டு இந்தத் தலைமுறைக்கும் வெறுப்பின் அரசியலை அவர்கள் புகட்டவில்லையா? எதைத் திணிக்கின்றார்களோ, அதற்கான எதிர்ப்பு விசை இன்னும் வீரியமாய் மேலெழும் என்பதை அறியாதவர்களா இவர்கள்? இல்லை, இன்னொரு மொழியைப் பேசினாலும் முன்னொரு காலத்தில் உன்னையும் தங்களின் வழிகாட்டியாகக் கொண்டு வழிபட்டவர்கள் தமிழர்கள் என்கின்ற உன் மெல்லிய குரலை, புத்தா, யார்தான் கேட்கப்போகின்றார்கள்?

உறவு, நட்பு, காதல் என எல்லாவற்றையும் தப்பும் தவறுமாய்க் கற்றுக்கொள்கின்ற ஒருவன், உன்னையும் நீ கூறிச்சென்றவைகளையும் ஒழுங்காய்க் கற்றுவிடுவான் என்பதை நீ நம்பப்போவதில்லைதான். ஆனாலும் புத்தா, ஏனிந்த தளும்புகின்ற மாணவனைத் தேடித் தேடி நீ அடிக்கடி வருகின்றாய்? இவனது இந்தத் தனிமை உன்னையும் அச்சுறுத்துகின்றதா? குறித்த நேரத்தில் வருவேன் என்ற புத்தன் வரவில்லை, ஆதலால் என்னை மாய்த்துக்கொள்கின்றேன், இந்த முடிவுக்குக் காரணம் புத்தன்தான் என்றொரு குறிப்பை எழுதிவிட்டு போய்விடுவேன் என்ற அச்சத்திலா, எத்தனையோ அவசர வேலைகளிருக்க என்னைத் தேடி வருகின்றாய்?
அப்படியிருக்கவும் சாத்தியமில்லை. எத்தனை அரிய மனிதர்கள் இந்த உலகில் வந்தமாதிரியே சட்டென்று போய்விடுகின்றார்களே. நான் யார் என்றும், இந்த வாழ்வின் அர்த்தம் என்ன என்றும் தேடித் தேடிக் களைப்புறும்போது ஒவ்வொருபொழுதுமல்லவா நீ என் முன்னால் தோன்றுகின்றாய். நீ என்பதே எவரும், எதுவும் இல்லையெனத் தெளிய இன்னும் கொஞ்சத் தூரந்தான் இருக்கிறதென – அது எவ்வளவு நீண்ட பயணமாய் இருந்தாலும்– என்னை உற்சாகப்படுத்தானே இந்தப் பனிக்குள்ளும், சுழன்றாடும் காற்றுக்குள்ளும் மெல்லிய ஆடையையை அணிந்தபடி வருகின்றாய்.
புத்தா, உன் திருவடிக்கு நான் மீண்டும் ஒரு தாமரைப் பூவோடு எனக்குப் பிரியமான ஒருவரோடு மலையேறுவதற்குள் ஒருமுறை என்னைச் சந்திக்க வந்துவிடு. உனக்காய்த் தயாரித்து ஆறிப்போன தேநீரைத் திரும்பத் திரும்ப சூடாக்கிக்கொண்டு இருப்பதும் கஷ்டமாயிருக்கிறது. இது புத்தனுக்குத் தயாரித்த தேநீர் என்பதால் எவராலும் அருந்தமுடியாது. “எதைப் பற்றி நினைக்கின்றாயோ, அதுவாக நீ ஆகின்றாய்“ என்று மென்மையாப் போதித்தவன் நீ. இந்தக் கணத்தில் என் நினைப்பெல்லாம் நீ மற்றும் நீ மட்டுமே.

### 3. அந்நியனும், அவளும்

அந்நியர்களை நேசிப்பவர்கள் சிலவேளைகளில் கைவிட்டாலும் நேசம் கைவிடுவதில்லை. தாம் கிறுக்குத்தனமாய் இருப்பதால்தான் எவரும்



நெருங்குவதில்லையென அந்நியர்கள் நினைத்துக்கொண்டாலும், அவர்களின் கிறுக்குத்தனத்தின் மீது அபரிதமான நேசத்தையுடையவர்கள் இந்த உலகில் இருக்கின்றார்கள்.

அலைவரிசைகள் வெவ்வேறு வெளியில் மிதந்துகொண்டிருந்தாலும், அவை தமக்கான காலத்தையெடுத்து எப்படியோ நெருங்கிவந்துவிடத்தான் செய்கின்றன. இயற்கை ஒரு காலத்தில் மரங்களில் இலைகளை உதிர்க்கச் செய்வதும், பின்னர் துளிர்க்கச் செய்வதும் போன்ற விந்தையைப் போன்றதுதான் இது. தேநீர் குடிப்பதுடன் மென்நீலப்பெண்ணுடன் தொடங்கிய சந்திப்பு மேலும் மேலும் நீளத்தொடங்கின. அந்நியனுக்கும்

அவளுக்கும் பிடித்த மலையேற்றம் செய்வதும், சைக்கிள் ஓடுவதும் என சேர்ந்து பொழுதுகள் கழியத்தொடங்கின. காடுகளையும் வாவிகளையும் அவர்கள் தேடியலைந்தனர். அடிக்கடி, செல்லவேண்டிய இடங்களுக்குப் போகாது தொலைந்துபோய்க்கொண்டிருந்தாலும் அதுவும் அவர்களுக்குச் சுவாரசியமாக இருந்தன. இலக்குகளை விட இலக்குகளற்ற அலைதல்களிலேயே விடுதலையும், மிகப்பெரும் வியப்புக்களும் இருப்பதையும் உணர்ந்துகொள்ளத் தொடங்கினர்.

ஒருமுறை மலையேற்றம் செய்தபோது, எங்கேனும் ஓரிடத்தில் "காம்பிங்" அமைத்து ஒரு சில நாட்கள் தங்குவதென தீர்மானித்திருந்தனர். இயன்றளவு இயற்கையிடமிருந்தே எல்லாவற்றையும் பெற்று வாழ்ந்து பார்ப்பதன் ஒரு முயற்சியாக அதைத் தீர்மானித்திருந்தனர். நான்கைந்து மணித்தியாலங்கள் மலையேறிப் போய் தமது கூடாரத்தை அமைத்துக்கொண்டார்கள். எவரும் பயிரிடாமலே முளைத்திருந்த காளான்களையும், ரெட்டிஷ்களையும் சேகரிக்க முடிந்திருந்தது. ஏற்கனவே வரும்வழியில் சோளப்பொத்திகளை எடுத்தும் வந்திருந்தனர். சிறு அடுப்பில் நீரைக் கொதிக்க வைத்த சோளத்தை மணிகளாய் உதிரச்செய்து சூப் செய்தார்கள். காளான்களையும் ரெட்டிஷ்களையும் வெந்தும் வேகாமலும் அவியவிட்டு சாப்பிட்டார்கள்.

அன்றைய மாலைதான் அவர்கள் இருவரும் தம் உடல்களின் வர்ணங்களை, இயற்கையைச் சாட்சியாக வைத்து அறிந்துகொண்டார்கள். கனவுகள் நுரைத்துப் பெருகும் கலயங்களை, மொழிகள் தாண்டிய வரைபடங்களை உடல்கள் தமக்குள் ஒளித்து வைத்திருந்த இரகசியங்களை வியப்புடன் உள்ளெடுத்துக்கொண்டனர்.
மரங்கள் சூழ்ந்த ஏகாந்தம் எல்லா தளைகளையும் அறுக்கச் செய்தன. ஆடைகள் எல்லாம் உதறியெறிந்து சூரியனுக்கு தம் நிர்வாணங்களை படையலிட்டார்கள். இனி மலையேறிக் கீழே போகும்வரை ஆடைகள் எதுவும் அணிவதில்லையெனவும் மகிழ்ச்சியின் எல்லையில் நின்று உரத்துச் சொல்லிக்கொண்டார்கள்.

சூரியன் மறைந்து, இருள் மெல்ல மெல்ல அடர்ந்துவந்தபோதும் தம்மை மறந்திருந்தார்கள். எப்போதுமே தன்னை வெறி பிடித்த நாய்போலத் துரத்திக்கொண்டிருக்கும் காமம், அருகில் ஒருத்தி நிர்வாணமாய் இருந்தபோதும், வாலைச் சுருட்டி அமைதியாக இருந்ததைக் கண்டு அந்நியனுக்கு வியப்பாக இருந்தது. காமத்தைத் தாண்டிப்போய் காமத்தை இரசிக்க முடிகின்ற கணத்தில் எல்லையற்ற பேரின்பத்தின் தெறிப்பு இருக்கிறதென அந்நியன் தனக்குள் நினைத்துக்கொண்டான்.

அவளே no-self ஆகும் பெரும் பயணத்தின் முதல் ஒளியைக் காட்டியவளென விபரிக்கமுடியாப் பேரன்புடன் அவளை இழுத்து அணைத்துக்கொண்டான்.
மயிர்கள் அடர்ந்த அல்குலிலிருந்து, யாரோ ஒருவன் தேநீருடன் காத்துக்கொண்டிருப்பதும், புத்தர் அவன் வீடு தேடிச் செல்வதும் காட்சிகளாய் விரியத்தொடங்கின. இது எப்படி இவளின் உடலிற்குள்ளிருந்து சாத்தியமென வியப்பும் திகைப்பும் கலந்து அவதானிக்கையில், அந்த "அவனும்" புத்தரும் தாமரை இதழ்களாய் மாறி எண்ணற்ற வட்டங்களாய் விரிந்து எதுவுமற்றவர்களாய் ஆகிக்கொண்டிருப்பது நிகழத்தொடங்கியது.

சட்டென்று, "நீதான் எனது புத்தர், சந்தேகமேயில்லை" என அவளின் காதுக்குள் முனுமுனுத்தான்.

விழிகள் மூடிக் கிறங்கிக்கிடந்த தருணத்திலும், "பாதையில் புத்தரைக் கண்டால் கொல்லவேண்டும் எனச் சொன்னவன் நீ "என்றாள் அவள்.
"நீயும், நானும் வேறுவேறானவர்கள் இல்லை என்று தெரிந்தபின், இப்பிரபஞ்சத்தில் எவரும் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை என்பதையும் அறிந்தேன்" எனச் சொல்லி அவளின் விழிகளிரண்டிலும் மெல்ல முத்தமிட்டான்.
அவள் தீராக் காதலுடன் இன்னும் இறுக்கி அணைத்தபோது, அந்நியன் ஒரு முயல்குட்டியாய் உருமாறியிருந்தான்..
.................



# ஜெயகாந்தனின் கருத்துலகம்

(25 ஏப்ரல் 1934 – 8 ஏப்ரல் 2015)

பெரியார், அண்ணா மற்றும் திராவிட மரபு தொடர்பான ஜெயகாந்தனின் விமர்சனத்தில் காத்திரமான ஒரு பகுதி உண்டு. அது காப்பியங்களையும் இலக்கியங்களையும் அவர்கள் அணுகியது தொடர்பான பகுதி.



**யமுனா ராஜேந்திரன்**

ஜெயகாந்தன் எழுத்துக்களில் மூன்றில் ஒரு பகுதி அரசியல் குறித்தவை. பிற இரண்டு பகுதிகள் நாவல்கள், குறுநாவல்கள் மற்றும் சிறுகதைகள். அவரது இலக்கியப் படைப்புகளைத் தழுவி உருவான அவரது பங்களிப்பாக திரைப்பாடல்களும் அவர் திரைக்கதை வசனம் எழுதிய திரைப்படங்களும் இருக்கின்றன. இந்த மூன்று தளங்களும் தழுவியதாகவே ஜெயகாந்தன் எனும் ஆளுமை குறித்த முழுமையான மதிப்பீடு என்பது உருவாக முடியும்.

2007 ஆம் ஆண்டு கவிஞர் ரவி சுப்ரமணியத்தினால் உருவாக்கப்பட்ட 'எல்லைகளை விஸ்தரித்த எழுத்துக் கலைஞன்' எனும் ஆவணப்படம் ஜெயகாந்தனின் பால்யகாலம் முதல் அவரது மரணம் வரையிலான அவரது சிந்தனைத் தொடர்ச்சியையும் அவருள் நேர்ந்த மாற்றங்களையும் புரிந்து கொள்ள அற்புதமானதொரு ஆதாரமாக இருக்கிறது.

இலக்கியம் குறித்த மதிப்பீடு எனும் போர்வையில் அவரது அரசியல் அக்கறைகளாக இருந்த திராவிட–பெரியாரிய எதிர்ப்பு கொண்ட அவரது அகண்ட பாரத இந்துத்துவக் கனவை – அவரது பிற்காலத்திய படைப்புகளில் அப்பாலைச் சிந்தனையாக அது வெளிப்படையாக இருக்கிறது – நாம் மறந்து விட முடியாது.

1936 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் திகதி பிறந்த ஜெயகாந்தனின் தாய் வழித் தாத்தா பெரியாரியர். அவரது மாமாக்களில் ஒருவர் காங்கிரஸ் கட்சியிலும் பிறிதொருவர் கம்யூனிஸ்ட் தொழிற்சங்க அமைப்பிலும் செயல்பட்டவர்கள். ஜெயகாந்தன் தனது 10 வது வயதில் (1946) காந்தியை பார்க்கிறார். காங்கிரசாருடன் சிறுவனாக காங்கிரஸ் கொடியேந்தி ஊர்வலங்கள் போகிறார். அவரது கம்யூனிஸ்ட் தொழிற்சங்கவாதி மாமாவின் உதவியுடன் தனது 13 வது வயதில் சென்னை வரும் அவர், 1947 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் கம்யூன் வாழ்க்கையைத் துவங்குகிறார்.

தனது 18 ஆவது வயதில் 1952 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராகும் அவர், 1962 ஆம் ஆண்டு இந்திய–சீன யுத்தத்தைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்டதைத் தொடர்ந்து, பிளவுபட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் நிகழ்ந்த காங்கிரஸ்–ஆதரவு எதிர்ப்பு விவாதங்களைத் தொடர்ந்து, 1964 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேறுகிறார். அதன் பின்பு அவரது நகர்வுகள் அவரது இறுதிக்காலம் வரை அரசியல் எனும் அளவில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்காரராகவே அவரை வைத்திருக்கிறது.

ஜெயகாந்தனை மறுமதிப்பீடு செய்வதானால் கம்யூனிஸ்ட்டுகள் இப்போது திராவிட–பெரியாரிய மரபு குறித்து வந்து சேர்ந்திருக்கும் இடத்திலிருந்துதான் அதனைச் செய்ய வேண்டும். இந்துத்துவம்–சாதி என்பது இந்திய வரலாறு நெடுகிலும் அடித்தட்டு மக்களின் விடுதலைக்கான பெரும் தடைகள் என்பதனை கம்யூனிஸ்ட்டுகள் இன்று ஏற்கிறார்கள். பெரியாரை அவர்கள் இன்று அவரது தூரதரிசனத்திற்காகக் கண்டடைந்திருக்கிறார்கள்.

முன்போது அவரை வரட்டு நாத்திகர் என்றும் பிரிட்டிஷ் அரசின் கையாள் என்றும் இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு எதிரானவர் என்றுமே அவர்கள் மதிப்பிட்டு வந்திருக்கிறார்கள். திமுக பேசிய மொழி சார்ந்த உணர்வை பாசிசம் எனவே கம்யூனிஸ்ட்டுகள் வரையறுத்தார்கள். இந்த உணர்வுடன் வளர்ந்த ஜெயகாந்தன் இதனோடு பிரக்ஞைபூர்வமாக பார்ப்பனிய மரபைப் போற்றுபவராகவும் சாதியமைப்பை சாஸ்வதமானது எனக் கருதுபவராகவுமே இருந்து வந்திருக்கிறார்.

ஜெயகாந்தனும் அன்றைய கம்யூனிஸ்ட்டுகளும் பகிர்ந்து கொண்ட ஒரு பொதுவெளி திராவிட–பெரியாரிய மரபு தொடர்பான ஒவ்வாமை. அதுபோலவே சாதியப் பிரச்சினையை அவர்கள் வர்க்கப் பிரச்சினைக்கு இணையாகப் பார்க்காமை. மொழி சார்ந்த அடையாளம் என்பதை பாசிசமாகக் குறுக்கிப் பார்த்தமை போன்றனவாகும்.

கார்ல் மார்க்ஸை ஜெயகாந்தன் ரிஷி என்றார். கம்யூனிசம் ஒரு வகை ஆன்மீக சிந்தனை என்றார். அவர் தமது இந்துப் பிரபஞ்ச அனுபவத்திலிருந்து இதனைச் சொன்னாரேயல்லாது மார்க்சியக் கோட்பாட்டு வாசிப்பின் அடிப்படையில் இருந்து இதனைச் சொல்லவில்லை. அப்படியான வாசிப்பு அவருக்கு இருந்திருந்தால் அமெரிக்கச் சமூகம் தான் கனவு கண்ட கம்யூனிச சமூகம் மாதிரி இருக்கிறது எனப் பின்னாளில் அவர் சொல்லியிருக்க மாட்டார். அவர் தனது படைப்புகளில் திட்டவட்டமான தத்துவம், கோட்பாடு, அரசியல் கொண்டு பேசினார் என அவரது வேறுபட்ட காலப் படைப்புகளை வைத்துச் சொல்ல முடியாது.

இரண்டு தருணங்களிலான அவரது உரைகளை இன்று வாசிக்க கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்த காலத்திலும் அதனின்று வெளியேறிய காலத்திலும் அவர் பார்ப்பனியம்–வருணம்–சாதி–இந்துத்துவம் தொடர்பான பார்வைகளை ஒன்றுபோலவே கொண்டிருந்தார் எனும் முடிவுக்கே எவரும் வரமுடியும்.

1959 ஆம் ஆண்டு அவர் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக இருந்தார். அந்த ஆண்டு தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் பேசவந்திருந்த பெரியாரது உரையை அடுத்து அவரை மறுத்துப் பேசிய உரையில் இந்துத்துவம்– சாதி–வருணம்–பார்ப்பனர் குறித்த ஜெயகாந்தனின் கருத்துக்கள் பின்வருமாறு:

“அவர்கள் பிராமண தர்மங்களிலிருந்து வழுவிப் போனதனாலேயே நமக்குக் கேடு சூழ்ந்தது என்று பாரதியார் பிராமணர்களைச் சாடுகிறார். எனக்கும் ‘பிராமண எதிர்ப்பு’ உண்டு. அது பாரதியார் வழி வந்தது. ‘பார்ப்பனக் குலம் கெட்டழிவெய்திய பாழ்பட்ட கலியுகம்’ என்று தனது சுய சரிதையில் பாரதி குறிப்பிடுகிறான். அந்நியருக்கு ஏவல் புரிந்த ஆங்கிலக் கல்விமான்களாய், ஆங்கில அரசாங்கத்தின் அதிகாரிகளாய், அறிவற்ற விதேசி மோகிகளாய் வாழ்ந்த பிராமணர்களை மிகக் கடுமையாக எதிர்த்தான் பாரதி. ஆயினும் பிராமணியத்தின் சார்பாகவே எதிர்த்தான். நான் பிராமணர்களை எதிர்க்க வேண்டுமெனில், அதற்குக் காரணம் அவர்கள் பிராமணர்களாக இருப்பதற்காக அல்ல பிராமணத்துவத்தை அவர்கள் இழந்ததற்காகவே எதிர்ப்பேன்.

வருணாச்சிரம தர்மத்தால் இந்நாடு மேன்மையுற்று வாழ்ந்தது. அந்தத் தர்மங்கள் கெட்டதனாலேயே தேசம் கெட்டது. ஆன்மீகத்தால் இந்தியக் கலாசாரமும் இந்திய சமுதாயமும் நாகரிகச் செழிப்புற்று விளங்கியது. அந்நியர் வருகையாலும், அடிமை வாழ்க்கையாலுமே நமது அவலங்கள் உருவாயின.

நாம் காட்டுமிராண்டிகளானது இந்த இரு நூற்றாண்டுக் கால அடிமை வாழ்க்கையில்தான். அதற்கு முன்னால் சுரண்டலற்ற, வர்க்க மோதல்கள் இல்லாத, ஊனமொன்றறியா ஞானமெய்ப் பூமியாய் இந்தியா திகழ்ந்தது. பிராமணர்கள் நமது அறிவுக்கும், ஞானத்துக்கும் தலைமை ஏற்று வழி நடத்திய சமூகத்தில் உயர்வு, தாழ்வு இருந்தது இல்லை. மனு தர்ம சாஸ்திரத்தில் சமூக நியாயங்கள் பேதப்படுகின்றனவே என்று கேட்கலாம். மனு தர்மம் ஒரு சட்டம். காலத்தின் தேவையால், நிர்ப்பந்தத்தால் உருவான சட்டம் அது. அதனை இக்கால அறிவும் அனுபவமும் கொண்டு பார்த்தல் தகாது. ஹிந்து சமூகத்தில் ஏற்பட்ட குறைகளை நான் மறைக்க முயலவில்லை. ஆனால் அந்தக் குறைகளுக்கும் ஹிந்து தர்மத்துக்கும் சம்பந்தமில்லை என்றே சொல்லுகிறேன். எல்லாக் காலங்களிலும் தோன்றிய ஹிந்துமத மகான்கள் அனைவரும் தீண்டாமையை எதிர்த்தே வந்திருக்கிறார்கள். ஹிந்து சமூகத்தில் ஏற்பட்ட குறைகளை அதன் வளர்ச்சியின் மூலமாகவே தவிர்ப்பதற்கான வாய்ப்பு நமக்குத் தடுக்கப்பட்டது. அந்நிய ஆட்சி முறைகளும், இங்கு





புகுத்தப்பட்ட ஐரோப்பிய பொருளாதார வாழ்க்கை முறைகளும் நம்மை மேலும் அலைக்கழித்துச் சீர்குலைத்தன".

வர்ணாசருமத்தினால் இந்த நாடு மேன்மையுற்றிருந்தது என்கிறார். அதனை மீட்பதன் வழி தனது கனவு பூமி மலரும் என்கிறார். இருநூறாண்டு காலனியாதிக்கத்தின் முன் இந்தியாவில் சுரண்டலற்ற, வர்க்க மோதலற்ற சமூகம் இருந்தது என்கிறார். அவரது மீட்சிக்கான வழி கனவுமயமான இந்துசாம்ராஜ்ய-வருண மீட்பில் இருப்பதை அவர் தெளிவாகவே முன்வைக்கிறார். இது இந்திய வாழ்வும் வரலாறும் குறித்த அவரது கோட்பாட்டுப் பார்வை.

1969 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3 ஆம் திகதி அன்றைய முதலமைச்சர் அண்ணாதுரை மரணமடைகிறார். அவருக்காகக் கவிஞர் கண்ணதாசன் ஏற்பாடு செய்யும் அஞ்சலிக் கூட்டத்தில் ஜெயகாந்தன் பேசுகிறார். இப்போது ஜெயகாந்தன் இந்திரா காங்கிரஸ் நோக்கி நகர்ந்துவிட்ட ஜெயகாந்தன். ஜெயபேரிகை, ஜெயக்கொடி, நவசக்தி என்றெல்லாம் காங்கிரஸ் அரசியல் கட்டுரை எழுத்தாளராகவும் ஆன ஜெயகாந்தன். இதிலும் அவரது இந்துதவப் பிரபஞ்சம் தொடர்பான கருத்துக்களும் திமுகவை சமூகவிரோதக் கும்பலாக வரையறுக்கும் அவரது பார்வையும் வெளிப்படுகிறது.

"அண்ணாதுரையின் மரணத்துக்குக் கூடிய அந்தக் கும்பல் எவ்வளவு பெரிது எனினும் இந்தக் கூட்டம் அதனினும் வலிது. கலைகின்ற கும்பல் கரைந்த பிறகு அந்தக் கும்பலில் பங்கு கொண்ட, அந்தக் கும்பலால் பாதிக்கப்பட்ட மனிதர்களை ஒரு கூட்டமாகச் சந்திப்பதற்கு நான் இங்கு அழைக்கிறேன். இது எனது தனித்த குரலே ஆயினும் இது காலத்தின் குரல் என்பதனைக் கண்டு கொள்ளுங்கள். இந்தக் குரலுக்கு வந்து கூடுகின்ற இந்தக் கூட்டம், பதட்டமில்லாதது நாகரிக மரபுகள் அறிந்தது சிந்தனைத் தெளிவுடையது. இதற்கு ஒரு நோக்கமும், இலக்கும், குறியும், நெறியும், நிதானமும் உண்டு...

ஆனால் கும்பலுக்கு எல்லாமே ஒரு வேடிக்கை. மரணம் உட்பட. கூட்டம் இனிது கூடும். இனிது நிறைவேறும். கும்பல் எதற்கு என்று தெரியாமல் கூடும். எப்படி என்று தெரியாது கலையும். கும்பல் என்பது ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கிற அறியாமையின், பைத்தியக்காரத்தனத்தின் மொத்த உருவம். அது ஒவ்வொரு மனிதனிலும் இருக்கின்ற மிருகங்கள் வெளிவந்து ஊளையிட்டு உறுமித் திரிகிற வேட்டைக் காடு. கும்பல் ஒரு பலமல்ல. அது பலவீனங்களின் தொகுப்பு. கோழை அங்கேதான் கொலை வெறியனாகிறான். பேடி அங்கேதான் காமப்பிசாசாகிறான்...

அண்ணாதுரையின் மறைவினால் அவர் இந்திய அரசியலில் பிரிட்டிஷ்காரர்களின் கையாளாக நமக்கு அறிமுகம் ஆனவர் என்ற உண்மை மறைந்து விடுவதில்லை. நாத்திகம், சமூக சீர்திருத்தம் என்ற அசட்டுத்தனங்களில் சிக்கி நமது இலக்கியங்களையும், புராணங்களையும், ஹிந்து சமயத்தையும் பாமரத்தனமாக விமர்சனம் செய்து பாமரர் மத்தியில் புகழடைந்தார் என்கிற உண்மையும் மறைந்து விடாது. அவர் எழுதிய குப்பைப் புத்தகங்களெல்லாம் அவரது மரணத்தை எருவாகக் கொண்டு குருக்கத்திப் பூக்களாய் மலர்ந்துவிடப் போவதில்லை. அவர் சம்பந்தப்பட்ட எல்லாமே இரவல். இரவலே ஆயினும் அதை அவர் ஒப்புக் கொள்ளாததால் அது இலக்கியத் திருட்டு. அதற்கும் மேல் அவரது இரவல் சரக்குகள் எத்தகையது என்பதை அறிகிற பொழுது, அவரது தரம் மிகவும் தாழ்ந்தது என்கிற உண்மையையும் இந்த மரணம் வந்து மறைத்துவிடப் போவதில்லை".

பெரியார் மீதான பிரிட்டிஷாரின் கையாள் எனும் வசை இங்கும் அண்ணாதுரை மீதும் பாய்கிறது. தி.மு.க எனும் இயக்கம் கும்பலாக, வன்முறை இயக்கமாக காமாந்தகர்களின் இயக்கமாக ஆகிறது. காங்கிரஸ் கட்சிக்குப் புனித மகுடம் சூட்டப்படுகிறது. இந்து சமயத்தைப் பாமரத்தனமாக அண்ணா விமர்சனம் செய்தார் எனவும் சொல்கிறார் ஜெயகாந்தன்.

இதே ஜெயகாந்தன் இந்திராகாந்தியின் அவசரநிலைய

ஆதரித்தார். இந்திரா காந்தியின் படுகொலையைத் தொடர்ந்து தில்லியில் சீக்கியர்கள் மீது காங்கிரசார் நிகழ்த்திய படுகொலைகளை மௌனமாக ஆதரித்தார். ஈழத்தில் இந்திய அமைதிப் படை நிகழ்த்திய வல்லுறவு

உள்ளிட்ட கோரங்களை இல்லையென மறுத்துப் படைத் தலையீட்டை ஆதரித்தார். ஜெயேந்திரர் பிரச்சினையில் அவருக்கு ஆதரவாகப் பேசியதோடு அவரைப் போற்றி 'ஹர ஹர சங்கர' என நாவலும் எழுதினார். ஜெயகாந்தனின் மரணத்தை ஒட்டிய செய்தியில் அதனால்தான் ஜெயேந்திரரால் இப்படிச் சொல்ல முடிகிறது :

"சங்கர மடத்துக்கும் ஜெயகாந்தனுக்கும் தொடர்பு ஏதும் இல்லை. எழுத்தாளர் என்ற முறையில் அவர் என்னைச் சந்தித்தபோது, அவருக்கும் எனக்கும் இடையே நட்பு உருவானது. சில கருத்து ஒற்றுமைகள் இணைத்து உருவாக்கிய நட்பு இது. ஆன்மீகத்தை அவர் மனம் நாடியது. மகா பெரியவரின் சிந்தனை மற்றும் செயல்பாடுகளை நான் கூறியபோது, நாத்திகத்தைக் கைவிட்டு ஆன்மீகத்தின் பாதையில் எழுதலானார். ஓரிரு நாட்களுக்கு முன்புகூட அவர் உடல்நலம் தேறி வீடு திரும்பப் பிரார்த்தித்து, பிரசாதங்கள் அனுப்பிவைக்கப்பட்டன. ஆனால், அவர் மறைந்த செய்தி பெரும் துயர் அடையச் செய்கிறது".

ஆனந்த விகடனிலும் தினமணிக் கதிரிலும் பிராமண பாஷையில் சிறுகதைகள் எழுத, அதுவரை எழுதிய மொழியிலிருந்து மெல்ல மெல்ல மாறிய புதிய மொழிநடையை எடுத்துக் கொடுத்த பார்ப்பனர்களான மணியனும், சாவியும்தான் ஜெயகாந்தனை சங்கரமடம் கொண்டு சேர்த்தனர் எனும் தரவையும் நாம் இங்கு பதிவு செய்து கொள்வோம்.

'எல்லைகளை விஸ்தரித்த எழுத்துக் கலைஞன்' ஆவணப்படத்தில் ஜெயகாந்தன் சாதி – உலகமயமாதல் – முதலாளித்துவம் குறித்துப் பேசுகிறார். சாதியின் இருப்பை பெற்றோரின் மரபின் இருப்புடன் இணைத்து அவர் உறுதிப்படுத்துகிறார். உலகமயமாதலை வரவேற்கும் அவர் எதனையும் ஆக்கபூர்வமாகப் பார்க்கவேண்டும் என்பதோடு முதலாளியும் ஒரு மனிதன் என்பதால் அவரை மனிதாயப்படுத்த வேண்டும் எனவும் சொல்கிறார். உலகமயமாதலையும், காந்தியையும் அவர் இணைக்கும் புள்ளி இது. இன்றைய முதலாளித்துவம் 17–18 ஆம் நூற்றாண்டு முதலாளித்துவமல்ல எனச் சொல்லும் அவர் அதனையும் ஆக்கபூர்வமாகப் பார்க்கச் சொல்கிறார்.



சாதி–வருண அடிப்படையிலான இந்துத்துவப் பிரபஞ்சம் அவரது கருத்து நிலை. ஓங்கூர் சாமியார், கிருபானந்த வாரியார், சங்கராச்சாரியார் சந்திரசேகர ஸ்வாமிகள், ஜெயேந்திரர் போன்றவர்கள் அவரிடம் இந்தக் கருத்து நிலையை உருவாக்குகிறார்கள். காந்தியின் தர்மகர்த்தாக் கொள்கை, இந்திரா காங்கிரஸின் தேசியம் அவரது அரசியல் நிலைபாடு. கடைசியில் அமெரிக்காவில் இருந்த ஏழு வாரங்கள் அவரை அமெரிக்க சமூகம் தான் கனவு கண்ட சமூகம் எனவும் சொல்ல வைத்தது.

இந்துஞான மரபைக் கம்யூனிச மரபாகக் கண்ட முன்னாள் மார்க்சியர்கள் பலர் இருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் பெரும் தலைவர்களில் ஒருவரான டாங்கேயின் மருமகனான பானி தேஷ் பாண்டே, தமிழக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தத்துவார்த்த இதழான 'மார்க்சிய ஒளி'யின் ஆசிரியாகவிருந்த அ.சீனிவாசன் ஆகிய இருவரும் பின்னாளில் பி.ஜே.பியில் சங்கமமானார்கள். புரட்சியாளர் அஜீதாவுடன் இணைந்து செயற்பட்ட பிலிப் பிரசாத் பின்னாளில் புட்டபர்த்தி சாயிபாபா பக்தராக ஆகினார். ஜெயகாந்தனையும் அவரது அரசியல் மற்றும் கருத்தியல் பார்வைகளையும் நாம் இவ்வாறுதான் மதிப்பிடவேண்டும்.

பெரியார், அண்ணா மற்றும் திராவிட மரபு தொடர்பான

ஜெயகாந்தனின் விமர்சனத்தில் காத்திரமான ஒரு பகுதி உண்டு. அது காப்பியங்களையும் இலக்கியங்களையும் அவர்கள் அணுகியது தொடர்பான பகுதி. எந்த மொழியிலும் காப்பியங்கள் என்பது வரலாறு நெடுகிலும் பல்வேறு வேறுபட்ட வாய்மொழி மரபுகளிலிருந்தும் கதை மரபுகளிலிருந்தும் உருவாகிறது. இந்தக் காரணத்தினாலேயே வேறு வேறு நிலப்பரப்புகளில் ஒரே காப்பியம் வெவ்வேறு கதைப் பண்புகளையும் பாத்திர வார்ப்புகளையும் கொண்டிருக்கிறது. ரொமிலா தப்பார் போன்றவர்கள், இடாலோ கால்வினோ போன்றவர்கள் காப்பியங்களை வரலாற்று ஆவணங்களாக அணுகுவது இல்லை. போலவே அதனது கதைமாந்தர்களையும் வரலாற்று மனிதர்களாக அணுகுவது இல்லை. காப்பியங்களை அணுகுவதற்கான சரியான அணுகுமுறை அதனை வேறுபட்ட காலங்களினூடே மானுடவியல் அடிப்படையில் அணுகுவதுதான்.

காப்பியங்கள் குறித்த சரியான இலக்கிய விமர்சனம் மரபு என்பது நிகழ்காலக் கண்ணோட்டத்தடன் அதனைத் திரும்பத் திரும்ப  மறுவாசிப்புச் செய்து அதனைத் திரும்பத் திரும்ப சிதறடிப்பதன் மூலம் வேறு வேறு பிரதிகளை உருவாக்குவதுதான். அகலிகை, சீதை, ஏகலைவன், ராவணன் போன்றவர்களை முன்வைத்து இவ்வாறு பெண்ணிலைவாத, தலித்திய வாசிப்புகள் வந்திருக்கின்றன. காப்பியங்கள் ஒரு மக்கள் தொகுதியின் நினைவின் பகுதியாக இருக்கும்போது அதனைச் சிதறடித்து மறு உருவாக்கம் செய்வதுதான் அது குறித்த சரியான விமர்சனமாக இருக்க முடியும். அல்லவெனில் இலக்கியப் படைப்புகளுக்கு எதிரான மனநிலையே உருவாகும். பெரியார் மகாகவி பாரதியைக் கூட கடுமையாக விமர்சிக்கும் நிலைக்கு வந்து சேர்ந்தார் என்பதை இங்கு நினைவு கூர்வோம். அதனோடு திராவிட இயக்கம் சார்ந்தவர்கள் – பாரதிதாசன் நீங்கலாக – மகத்தான படைப்பிலக்கியங்களை உருவாக்கியிருக்கவில்லை எனபதையும் நாம் நினைவு கூர்வோம். பெரியாரிய கருத்துப் பிரபஞ்சம் அடிபபடையில் சாதீய நீக்கம் தொடர்பானது எனும் அடிப்படை உண்மையை ஒப்புக் கொண்ட நிலையிலேயே நாம் இந்த நிலைபாட்டையும் எய்தமுடியும் என நினைக்கிறேன்..

ஜெயகாந்தனின் இலக்கியம் மற்றும் திரைப்படம் தொடர்பான எனது கீழ்க்கண்ட இரு கட்டுரைகளையும் வாசிப்பது அவர் குறித்த முழுமையானதொரு மதிப்பீட்டுக்கு உதவும் என நினைக்கிறேன். இந்த இரு கட்டுரைகளும் எனது இணையத் தளத்தில் (www.yamunarajendran.com) பதிவிடப்பட்டிருக்கின்றன.

1.வரலாற்றுக்கு எதிராக ஜெயகாந்தன்
2.இலக்கியம் எதிர் திரைப்படம்


# தமிழ்ப் பூங்கா
(தமிழ்ப் பள்ளி)

THAMIL POONKA

- மொழிப்பயிற்சி
- யோகாசனப் பயிற்சி
- தையற் பயிற்சி




- வாசிக்க, கதைக்க உதவும் பாடத்திட்டம்
- மாணவர்கள் தனித்தனியே கவனிக்கப்படுவர்
- மாணவரின் சுமை உணராது படிப்படியாக தமிழ் மொழியோடு இணைக்கப்படுவர்
- மாணவரின் தனித்திறன் வளர ஊக்குவிக்கப்படும்
- எந்த வயதினரும் நம்பிக்கையுடன் கற்கலாம்

328 Passmore Avenue, # 25, Scarborough, ON Canada **647 378 3006 / 905 479 5375**

**பிள்ளைகளைத் தமிழ் தெரிந்த தமிழராக வளர்ப்போம்**

# நாமார்க்கும் குடியல்லோம்!

எமக்குத் தொழில்

**சொத்துக்கள், வியாபார நிலையம்**

விற்றல், வாங்குதல்

**குறைந்த வட்டியில் அடமானம்**

பெறுதல்

## வாழ்தலும் தெரிதலும் வெவ்வேறு

உரையாடல் ஒன்றே தெளிவுபடுத்தும்!

**அழையுங்கள்**

VEEDU REALTY INC. BROKERAGE

416. 759.6000

CENTUM™ Optima Mortgages Inc.*

416.759.1818
FSCO Lic: 10894

1345 Morningside Ave. Unit 9, Toronto, ON M1B 5K3



# நேத்ரா ரொட்ரிகோ வழங்கிய
# செல்வா கனகநாயகம் நினைவஞ்சலி உரை



பேராசிரியர் செல்வா கனகநாயகத்தைப் பற்றி அவரை நன்கு அறிந்த உங்கள் முன் பேசுவது எனக்கு சற்றே வித்தியாசமான அனுபவம். ஏனென்றால் நான் அவருடைய மாணவி அல்ல, அவரது ஆய்வுகளில் இணைந்து பணி செய்யவும் இல்லை. ஆனால் கடந்த சில ஆண்டுகளில் என் வாழ்வில் மிகப் பெரிய தாக்கத்தை அவர் உருவாக்கினார். அவரது ஆளுமையை எனக்கு உணரவைத்த இரு கதைகளை இங்கு நினைவு கூர்கிறேன்.

இரு ஆண்டுகளுக்கு முன், மனித உரிமையையும் கலையையும் இணைக்கும் ஒரு மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுப்பைக் கொண்டு வரும் முயற்சியில் எனது சக ஆய்வாளர்கள் என்னை அணுகினர். 'Wilting Laughter' தொகுப்பைப் பற்றி ஒரு கட்டுரையை நான் எழுதியதால், அதில் இடம்பெற்ற கவிஞர்களின் படைப்புகள் சிலவற்றை என்னை மொழிபெயர்க்கச் சொல்லி அவர்கள் கேட்டனர். என்னால் அது இயலாது என்று முடிவெடுத்து நான் பேராசிரியர் செல்வா கனகநாய கத்தை சந்தித்து, அவருடைய வெளிவராத மொழிபெயர்ப்புகள் இருக்குமா என்று கேட்டேன்.

உடனே அவர் ”ஏன் நீங்கள் அதைச் செய்யக்கூடாது” என்று கேட்டார். ”பத்தாம் வகுப்போடு எனது தமிழ்பாடம் நின்று விட்டதால் எனக்கு அதற்கான தமிழறிவு குறைவாக உள்ளது” என்றேன். ”பல மொழிபெயர்ப்பாளர்கள் சொற்களை மட்டுமே மொழிபெயர்க்கின்றனர், கவிதைகளின் நுண்ணுணர்வை மொழிபெயர்ப்பதில்லை. உங்களால் தமிழ் பேச இயலும், தமிழகராதியைப் பயன்படுத்த முடியும். உங்களுக்கு அந்த நுண்ணுணர்வு இருந்தால் மொழிபெயர்ப்புச் செய்ய இயலும். நீங்கள் செய்யுங்கள். தேவைப்பட்டால் நான் அதை ஒரு முறை பார்த்து ஆலோசனைகள் கூறுகிறேன், ஆனால் உங்களால் செய்ய முடியும். கவிதைக்கு நியாயம் கற்பிக்க வேண்டுமானால் அதன் நுன்னுணர்வைக் கவனித்துச் செயல்படுங்கள்” என்றார்.

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் வீடு திரும்பினேன். ஆனால் மொழிபெயர்க்கத் துவங்கினேன். எனது முதல்பிரதியை அவருக்கு அனுப்பிய போது சில மாற்றங்களைச் சொன்னாலும், என்னைப் பாராட்டவும் செய்தார். கல்விப்புலத்தில் தனித்துவத்தைத் தக்கவைத்துக் கொள்ளப் போராடும் என்னைப் போன்றவர்களுக்கு அப்பாராட்டு பொன்னை விட உயர்வானது. இப்போதும் எனது பணிகளைத் தொடர்கையில் கவிதைக்கு நியாயம் கற்பிக்க வேண்டும் என்ற அவரது வாசகத்தைத் தான் நினைத்துக்கொள்கிறேன்.

எனது இரண்டாவது கதை என் தங்கை பற்றியது. என்னை விட வயதில் மிகச் சிறியவள் அவள். 1983ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்ததால், நாங்கள் புலம்பெயர்ந்த போது அவள் சிறு குழந்தை. அதனால் கறுப்பு



ஜூலை பற்றியோ அச்சமயத்தில் இழந்த என் நண்பர்களைப் பற்றியோ நான் ஒருபோதும் அவளுடன் பேசியதில்லை. பலரும் தங்கள் உளப்பாட்டை வெளிப்படுத்தாமல் புதிய நாட்டில் வாழ்வை உருவாக்கும் முயற்சியில் அடுத்த தலைமுறைக்குத் தங்கள் துயரங்களின் சுமையை அளிக்க விரும்புவதில்லை. சில ஆண்டுகளுக்கு முன் என் தங்கை பேராசிரியர் செல்வா கனகனாயகத்திடம் பயின்றாள்.

வகுப்பில் அவர் மூலம் கிட்டும் அரும் வாசிப்புகளைப் பற்றியும், அவர் உருவாக்கும் மாறுபட்ட பார்வையையும் பகிர்வாள். அவளது வாசிப்பின் தாக்கத்தால் எனது ஈழ அனுபவத்தை, நினைவுகளை பகிரச் செய்தாள். நானும் என் தங்கையும் மிக நெருக்கமானவர்கள் என்றாலும் இந்த நினைவுகள் எங்களுக்கிடையே ஒரு சுவராக அமைந்தது. இந்த உரையாடல்களின் ஊடே நாங்கள் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்துகொண்டோம். இப்போதும் அவள் அடிக்கடி சொல்வாள் அவரது பின்காலனித்துவ வகுப்புகளில் தான் அடக்குமுறைக்கு உட்பட்ட பிறநாட்டு மக்களின் அனுபவங்களை அறிந்துகொண்டாள் என்று. அவரது பல மாணவர்களைப் போலவே அவளும் புரிந்துகொண்டாள் நீதி என்பது எல்லோருக்காகவும் நாம் நாடும் ஒன்றாகும் என்பதை. அவரது அஞ்சலி கூட்டத்தில் பேசிய பல பெண் புலமையாளர்கள் நண்பரைப் போல் பேசி, தந்தையாய் வழிநடத்தும் அவரது இயல்பைப் பற்றி உரையாற்றினர். அவரை போல வேறொருவர் இல்லை.

எனக்கு மட்டுமல்ல அவரிடம் பயின்ற இளம் கல்வியாளர்களுக்கும் பேராசிரியர் செல்வா கனகநாயகம் ஏன் முக்கியமானவர் என்பது இந்த இரு கதைகளில் விளங்கும். இலக்கியத்துக்கு மட்டுமல்லாமல் மானுடர்க்குமான நியாயத்துக்கும் சேர்ந்தே அவர் கனவு கண்டார். அவருக்கே உரிய அமைதியான முறையில் அவர் அதில் வெற்றிகண்டார். இதற்காகவே சாதி, இனம், பால் இவற்றையெல்லாம் கடந்து புலமையாளர்களை அவர் ஒன்று சேர்த்தார். அவருடைய கனவுகள் அவருடன் முடிவடையவில்லை, மாறாக அவர் தொட்டுச் சென்ற பல புலமையாளர்கள் அவரது கனவுகளைத் தங்கள் கனவுகளாக்கியுள்ளனர்.

# கண்ணகி, மாதவி, கோவலன் ...

## மனப்பான்மையைக் களைந்தெடுத்தல்



ஸ்ரீரஞ்சனி

அம்பை, அகலிகை, கர்ணன் போன்ற சில இதிகாச மற்றும் காப்பியப் பாத்திரங்கள் மறுவாசிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. அத்துடன் அவை சிந்தனைக்கு நல்ல விருந்தாகவும் அமைந்திருக்கின்றன. மதுரையில், கண்ணகி மூட்டிய தீயில் எரியூண்ட ஒருவரின் மனைவி, ”உந்தன் இழப்புக்கு ஊரை எரிப்பது எவ்விதத்தில் நெறிமுறையோ”, எனக் கேட்டு கண்ணகியைக் கல்லாகச் சமைப்பதாக 'அக்னி சாட்சி' என்ற திரைப்படத்தில், இயக்குநர் கே. பாலசந்தர், கண்ணகியை அழகாக மறுவாசிப்புச் செய்திருந்தார். அவ்வகையில், இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரப் பாத்திரங்கள் பற்றிய என் பார்வையை, நடைமுறை வாழ்க்கையுடன் சேர்த்து எழுதலாம் என நானும் விழைகின்றேன்.



கரிகால மன்னனின் சபையில், மாதவி, அன்று தன் நாட்டியத் திறனைக் காட்டிய போது, தன்னுடைய வாழ்க்கையில் பெரியதொரு மாற்றம் நடக்கப் போகின்றது என அறிந்திருக்க மாட்டாள். அவளுடைய அந்த அற்புதமான நடனத்தைக் கண்டு மகிழ்ந்த சோழ மன்னர், பச்சை மாலை ஒன்றையும், மிகச் சிறப்புப் பட்டமான, “தலைக்கோலி“ என்ற பட்டத்தையும் மாதவிக்கு அளித்து அவளைப் பெருமைப்படுத்துகின்றார். வேலைக்காரப் பெண்ணின் கையில் அந்தப் பச்சை மாலையைக் கொடுத்து, நகரத்து இளைஞர்கள் பலரும் திரிந்து கொண்டிருக்கிற பெருந்தெருவிலே நின்று, அந்த மாலையை வாங்குபவர் மாதவியை அடையலாம் எனக்கூறி விற்குமாறு அனுப்புகின்றாள், மாதவியின் அன்னை சித்ராபதி.

கலையார்வமும் இளமைத் துடிப்பும் மிகுந்த கோவலன், அக்காலச் சமுதாய மரபுப்படி, மாதவியின் உடலைப் பொருள் கொடுத்து வாங்கலாம் என நினைத்து அன்று அந்த மாலையை வாங்கியிருக்கலாம். அல்லது, டாக்டர் மு.வ சொல்வது போல, அரங்கேற்றத்தின்போது மாதவி, தன்னையே காதல்கொண்டு நோக்கினாள் என எண்ணி, தானும் அவள் மேல் மையல் கொண்டு அந்த மாலையை வாங்கியிருந்திருக்கலாம், அல்லது அவளது நடனத்தால் கவரப்பட்டு அவளின் கலைக்கு அடிமை யாகி அதை வாங்கியிருக்கலாம்.

எதுவாக இருந்தாலும், போனவன் அங்கேயே தங்கிவிடுகின் றான். பரம்பரை வழக்கப்படி, தான் ஒரு நாடகக் கணிகையாக இருக்க மாட்டேன் எனத் தனது தாயாருக்கு உறுதியாகச் சொல்லியிருந்த மாதவி, கோவலனுக்கும் தன் நிலையைச் சொல்லத் தவறியிருக்க மாட்டாள் என்று கருதுவதற்கு இங்கு இடமுண்டு. இருந்தாலும், இது கண்ணகிக்கு ஏற்படுத்தக்கூடிய பாதிப்புப் பற்றி மாதவியோ அல்லது கோவலனோ எதுவும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

எப்படியோ, காலம் கரைகின்றது. மாதவியின் ஊடலும் கூடலும் முடிவுறா மகிழ்ச்சியைக் கோவலனுக்குக் கொடுக்க, அதற்குள் அமிழ்ந்து போகின்றான், அவன். மேலும் மாதவி தனக்குரிய வளாக மட்டுமே இருக்க வேண்டும் என்ற ஆக்கிரமிப்பு மனப்பான்மையும் அவனுக்குள் வளர்கின்றது. அதனால், கோயிலில் பலர் முன்னிலையில் மாதவி நடனமாடுவது வனுக்குப் பிடிக்காமல் போகின்றது.



அவ்வகையில், இந்திரவிழாவில், அவள் ஆடிய நடனம் அவனுக்கு எவ்வளவு சினத்தைக் கொடுத்திருக்கின்றது என்பதை உணராத மாதவி, யாரோ ஒரு பெண்ணை நினைத்துப் பாடுவது போல் கோவலன் பாடிய பாட்டுக்குப் பதிலாக, தானும் அப்படி இன்னொருவனை நினைத்து ஏங்கிப் பாடுவது போல ஊடல் கொண்டு பாடுகின்றாள். ஆனால், அந்தப் பாடல் கோவலனின் உள்ளத்தில் மேலும் கோபத்தை வளர்த்து, அவளை விட்டு அவன் பிரிவதற்குக் காரணமாகின்றது. மாதவிக்கு ஏற்பட்ட இந்தப் பிரிவுத் துயருக்குக் கண்ணகியின் கண்ணீர் வித்திட்டிருக்கலாமோ என்றும் இங்கு எண்ணத் தோன்றுகின்றது

தானாக மாதவியின் வீட்டைத் தேடிச் சென்று, அங்கு உண்டு, உறங்கி, களிப்பான வாழ்க்கையை வாழ்ந்தவன், பின்னர், மாதவியை விட்டுப் பிரிந்து கண்ணகியிடம் சென்றதும், 'சலம்புணர் கொள்கைச் சலதி' என அவள் மேல் அவதூறுகளை வாரியிறைத்து அவளைத் தூற்றுகின்றான். தன் மேல் பிழை என எதையும் சொல்லி அவன் கண்ணகியிடம் மன்னிப்புக் கேட்டதாகவோ அல்லது நடந்த உண்மையைச் சொல்லி, இனி இப்படி எதுவும் நடக்காது எனக் கண்ணகிக்கு உறுதிமொழி சொன்னதாகவோ சிலப்பதிகாரம் சொல்லவில்லை.

பொருள் போய்விட்டது என வருந்தும் கோவலனிடம் தன் சிலம்பைக் கொடுக்கின்றாள், கண்ணகி. ஆனால், மாதவியிடம் அவன் போனதற்காக அவள் சினக்கவும் இல்லை, ஆத்திரப்படவுமில்லை. மீண்டும், இப்படித் தன்னை விட்டுவிட்டு மாதவியிடமோ அல்லது இன்னொருத்தியிடமோ அவன் போக மாட்டானா என அவள் அவனைக் கேள்விகளால் குடையவுமில்லை. குற்றம் சொல்லவுமில்லை. இன்பத்திலும் துன்பத்திலும் கை கொடுப்பேன் எனத் திருமணம் செய்து விட்டபடியால் அவனுக்கு உதவுவது தனது கடமை எனக் கண்ணகி நினைத்திருக்கக் கூடும். இருந்தாலும், அவ்வகையில் அடக்கி வைக்கப்பட்ட உணர்வுகளால் உருவான ஒரு மனத்தகைப்புத்தான் மதுரையை எரிக்கும் அளவுக்கு ஆவேசத்தை கண்ணகிக்குக் கொடுத்திருக்கலாம் என நினைப்பதற்கும் இங்கு இடமுள்ளது.

தன்னுடைய குற்றம் மனதில் உறுத்தியதால், மற்றவர்களின் முகத்தில் விழிக்க அஞ்சி, இரவோடு இரவாக யாருக்கும் தெரியாமல் சோழ நாட்டை விட்டு விலகி, பாண்டிய நாட்டுக்கு கண்ணகியுடன் செல்கின்றான் கோவலன். போகும் வழியில், வசந்தமாலை மூலம் மாதவி கொடுத்தனுப்பிய செய்தி என்னவென்று கூடப் பார்க்காமல் இருக்கும் அவனை அவளிடமிருந்து வந்த இரண்டாவது செய்தி குழப்பி விடுகின்றது. மாதவியோடு நடத்திய இன்ப வாழ்க்கையை அது அவனுக்கு நினைவு படுத்துகின்றது. அதனால், கடமையுணர்வுடன், கட்டிய மனைவியான கண்ணகியோடு வாழ்க்கை நடத்த வேண்டுமென்று அவன் முயன்ற போதும், அதற்கு அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. இதனையே, "மாதவி அனுப்பிய கடிதம் அவனை மறுபடியும் பழைய கோவலனாக மாற்றிவிடுகிறது. அவன் மனத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. வழியில் கண்ட பாணர்களிடம் யாழை வாங்கி, யாவரும் வியக்கும்படியான அளவுக்கு இசையைக் கூட்டுகிறான், என கலைஞனான கோவலனுக்கும் கண்ணகிக்கும் எந்த அளவிலும் மனப்பொருத்தமில்லை என்பதை மிக நுண்மையான முறையில் காட்டுகிறார் இளங்கோவடிகள்", என்கிறார், இந்திரா பார்த்தசாரதி அவர்கள். மாதவியும் அவன் தன்னிடம் மீள வருவான் என அவன் மேல் கொண்ட மாறாக் காதலினால் காவலிருக்கின்றாள்.

பரம்பரை வழக்கப்படியான கணிகையர் குலம் என ஒன்று இல்லாத சூழலிலும் கூட இவ்வகையான, கோவலன் – மாதவி – கண்ணகி உறவுகளை புலம் பெயர் வாழ்வில் மட்டுமன்றி, இலங்கையிலும் நாம் பார்த்திருக்கின்றோம், இப்போதும் பார்க்கின்றோம். இங்கு, அவை அதிகளவில் உருவாகுவதற்கு மன உளைச்சல் நிறைந்த வாழ்வு, அனுகக்கூடிய வசதிகள் அதிகம் உள்ளமை என்பன பெருமளவில் தூண்டலாக அமைகின்றன எனலாம். தங்களுடைய ரசனைகளுக்கேற்றபடி



உறவுகளைத் தேடும் கோவலன்கள், முடிவில் சமுதாயம், கலாசாரம் என்ற வரம்புகளை மேவ மாட்டாமலோ அல்லது வேறு சுயநலக் காரணங்களுக்காகவோ, மீண்டும் பழையபடி குடும்ப வாழ்வுக்குள் போய்ச் சேருவது அல்லது அதற்குள் இருந்து கொண்டு மற்றைய உறவையும் பேணுவதும் கண்ணக களும் அது தான் தம் விதி எனக் காதலினாலோ அல்லது வேறு வழியில்லாததாலோ ஏற்றுக்கொள்வதும் மாதவிகள் தமது மடமையை எண்ணித் தம்மை நொந்து கொள்வதும்தான் அனேகமாக நடக்கின்றது.

அத்துடன் கலாசாரம் என்ற முலாம் பூசி, உறவுகளைப் பார்க்கும் எங்கள் தலைமுறையும் இதைத்தான் ஏற்றுக் கொள்கின்றது. உண்மையாக வாழ்வதை விட உலகுக்காக வாழ்வது உத்தமமா னது, ஆண்கள் என்றால் அப்படித்தான் இருப்பார்கள், என்று கோவலன் பக்கம் நின்று, கண்ணகி சரியாக இருக்கவில்லை என்றோ அல்லது சட்டப்படி விவாகரத்து ஆகாத அவனுடன் உறவை ஏற்படுத்தும் மாதவிக்கென்ன அறிவு என்றோ பொதுவா கப் பெண்களைக் குற்றம் சொல்வதுடன், கல்லானாலும் கண வன், புல்லானாலும் புருஷன் என்று கோவலன் பிழை பொறுத்து குடும்பத்தைக் கட்டிக் காக்க வேண்டும் என்று கண்ணகிகளுக்கு ஆலோசனை வழங்குகின்றது.

'அந்தரங்கம் புனிதமானது' என்ற கதையில் வரும் சுந்தரத்தின் மனைவி ரமணியம்மாள் மூலம் ஜெயகாந்தனும், 'அம்மா வந்தாள்' நாவலில் வரும் அப்புவின் அப்பா மூலம் ஜானகி ராமனும் கூட, adultery எனும் பிறர்மனை நயத்தல் செய்த துணையின் பிழை பொறுத்து குடும்பம் என்ற அமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தலே வேறு எந்த வாழ்க்கைப் பெறுமா னத்தையும் விட மிகவும் முக்கியமானது எனச் சொல்கின்றார் கள். பெண்ணியம் பேசுபவர்கள் கூட நியாயத்தின் பக்கம் நிற்பதைவிட குடும்பம் என்ற அமைப்புக்கே முக்கியத்துவம் கொடுக்குமளவுக்கு கலாசாரம் அனைவரையும் அதற்குள் ஊறப் போட்டிருக்கின்றது எனலாம்.

ஆனால், தற்போது, கலாச்சார மாற்றம், சுதந்திரம் என்றால் என்ன என்பது பற்றிய சிந்தனை, பிறருக்காக அன்றி எமக்காக வாழ வேண்டும் என்ற அவா, நேர்மையாக இருப்பதே உறவில் முக்கியமான பெறுமானமாக இருக்க வேண்டும் என்ற கோட்பாடு என்பவற்றால், இந்த நிலைப்பாடு சற்றுப் பிரச்சினைக்குள்ளாவ தையும் நாங்கள் பார்க்கின்றோம்.

தேவைக்கேற்பவும் நிலமைக்கேற்பவும் மாறும் பச்சோந்திகளாக இருப்பது சுலபமான விடயமாக இருப்பதால், கோவலன்களாக இருப்பதே சில கோவலன்களுக்கு பிடித்திருந்தாலும்கூட, அனே கமான கண்ணகிகளோ அல்லது மாதவிகளோ அப்படி இருக்கத் தயாராக இல்லை. அப்படிக் கண்ணகிகள் தங்களின் உரிமைக ளுக்குப் போராடும் போது – மாதவிகளுடான தொடர்பை இல்லா மல் செய்ய வேண்டும் என்ற நிலைக்கு கோவலன்கள் தள்ளப் படும் போது – சில கோவலன்கள் ஊரை விட்டு ஓடி ஒழிகின்றார் கள் அல்லது மாதவிகள் தம்மைத் துன்புறுத்துகிறார்கள் எனக் குற்றம் சாட்டி, அவர்கள் தம்முடன் தொடர்புகொள்ளல் ஆகாது என்று காவல்துறையினரின் மூலம் அவர்களுக்கு எச்சரிக்கைச் செய்தி அனுப்புகிறார்கள்.

இப்படியான விடயங்களை, இளம் வயதினர் முதல் முதியோர் வரை, சராசரி மனிதன் முதல், மேதாவிகள், சமூகப் புரட்சி செய்யும் எழுத்தாளர்கள் எனத் தம்மை இனம்காட்டுவோர் ஈறாக, எல்லோருமே எந்த வேறுபாடுமின்றி செய்கின்றார்கள் (அதே போல, அகலிகைகளும் தமது விருப்பு முடிந்த பின்பும் இந்திரன் திரும்பிச் செல்லாமல் தொடர்ந்து அவர்களுடன் இருக்க முயற்சித்தால், தாம் மீளவும் கௌதமரிடம் செல்வதற்காக, சுயநலத்துக்காக சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்கிகின்றார் கள்).

அதே சமயத்தில், இது இன்னொரு விதமான உளவியல் தேடலையும் உருவாக்கி சிலரில், முக்கியமாகப் பெண்களில், பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் மனநோய் மருத்துவமனைகளில் நோயாளர் எண்ணிக்கை அதிகமாவதைக் கூடக் காணக் கூடியதாகவுள்ளது. இதைத்தான் டாக்டர். க. ரத்தினம் அவர்கள், அகலிகை பின்வருமாறு கொதிப்பதாகச் சொல்கிறார்.

கொடுத்தேன் வாங்கினேன் என்ற<br>
கொள்கைவாத வணிகப் பேய்க்கு<br>
எனது நாட்டம் எப்படித் தெரியும்?"

இவ்வகையில் அனேகமான கோவலன்களுக்கும்/ இந்திரன் களுக்கும் கொடுத்தேன், வாங்கினேன் என்றரீதியிலான சிறு சம்பவங்களாக இருக்கும் இந்த உறவுகள் சில மாதவிக ளுக்கும்/அகலிகைகளுக்கும் மறக்கமுடியாத சரித்திரங்களா கவும் மாறிவிடுகின்றன. அதே போல கண்ணகிகளினதும் கௌதமர்களினதும் வாழ்க்கையையும் மனங்களையும் இது வெகுவாகப் பாதிக்கின்றது.

எனவே தன் அன்பின் பெறுமதி தெரியாத ஒருவரை எண்ணி ஏங்குவதும், அவரை நம்பி உரிமையற்ற உறவு கொள்வதும், பந்தங்களுக்காகவோ அல்லது பொருளாதாரக் காரணங்களுக் காக குறிப்பிட்டவருடன் வாழ்வதும் நின்றுபோய், அரிதாரிகள் தூக்கி எறியப்பட வேண்டும் என்ற சிந்தனையும் செயலும் உறுதிசெய்யப்படல், இவ்வகையான மாதவி – கண்ணகி – கோவலன் உறவுகளையும் அந்த மனப்பான்மையையும் முடிவுக்குக் கொண்டுவர உதவி செய்யும்.

# கண்ணம்மா தந்த காதல்



- தேவ அபிரா

கண்ணம்மா தந்த காதல்
இக்காதல் எப்படித் தொடங்கியது ?
ஏங்க வைத்த சிவப்பேறிய தீவிரமான விழிகள்.
அவ்விழிகளிற் கரையவோ கடக்கவோ
முடியாத காலமாயிற்று.
குருடனாகி விட விரும்பியிருந்தேன்

என் கவிதை தடக்கியோர் நாள்
அவள் மடியில் வீழ்ந்தது.
இரவுகளைத் தீப்பிடிக்க வைக்கும் வீணையிசைத்தாள்.
முடி கோதப்பட்ட போது
ஏக்கம் பிடித்த இசைச்சரமொன்று
கவிதைக்குள் நுழைந்தது.
மென்மையான வெப்பத்துள் அமிழ்ந்தேன்.
நிலவு வீணையை எடுத்துக்கொண்டது.

ஆழத்துணர்வுகளை அள்ளிச் சென்றது காற்று
பின்னொருநாள்
அவளும் நானும்.
உணர்வுகளின் வன்மம் சிதறியிருந்த விண்ணில்
இருளும் ஒலமும் போலானோம்.
வீதிவிளக்கு மௌனமாக ஒடுங்கிக்கிடந்தது.
ஆர்ப்பரித்தறைந்தது ஆழி
நடந்த கரையும் இருந்த மணலும்
அலையிற் கரைய
நடுங்கிக்கொண்டிருந்தது காற்று.
தூரத்து மதுபானக்கடையிற் புலம்பல்கள்
உயர்ந்து கொண்டிருந்தன.

உண்மை சுடாமலும்
உள்ளின் திரைகள் எரியாமலும்
கண்ணை மூடிய பசாடையொடு
போவாரொடு போகுவாய் கண்ணம்மா
சொல்லேன் பழி.
துயரத்தின் பிடி மீறாத் துணையாய்
நீண்ட தெருவெலாம் நானழுது நடந்தேன்.
துயரத்தின் ஆழத்தீயிலென்னைப்புடமிடச்சுடருமென்றால்
தோய்ந்தெழப்பட்டேன்.



1993
கண்ணம்மா கொண்ட கோபம்
அற்ப காரணங்களுக்காக வரும் பெரும் கோபம்
மனதின் இருண்ட மூலைகளுக்குள்
ஒளிந்திருக்கும் வார்த்தைகளை அள்ளி வருகிறது.
அதிகாலைச் சூரியனில் கரியைப்பூசுகிற
சொற்களை விலக்கி
என்னருகில் வந்து
என் கண்களை நோக்கி
இப்படிக்கூறினாள்:

"உனது ஆயிரமாவது கவிதையை
நாளைக்குள் எழுதி முடித்துவிடுவாய்.
எக் கவிதையிலும் வெளிவராது
உன்னுள் தேங்கிக் கிடந்து
கோபத்தில் சிதறும் சொற்களை
என்ன செய்யப்போகிறாய்?
வற்றாத உன் சொற்களஞ்சியத்தை
நான் மட்டுமே அறிவேன்.
வெட்கப்படு.
அவள் எழுந்து வெளியே நடக்கச் சென்று விட்டாள்.
திரும்பி வந்ததும் கூறினாள்
நீயில்லாத போதும் சூரியன் சுடர்ந்தது.
2014

சக்கரவர்த்தி



# மாயலின்

நீண்ட தாடி.
அலை அலையாக்
சுருள் சுருளாக தோள்
வரை வளர்ந்த் செம்பட்டைக்
கேசம். சுமாராக முப்பது வயது மதிக்க
லாம். திடகாத்திரமான உடல் எல்லாம் கிடையாது.
மிக மெலிந்த தேகம். இடுப்பில் வேட்டி மாதிரி எதையே சுற்றிக் கட்டியிருந்தார். அதே மாதிரி இன்னோர் துணியால் உடலை முடிப் போர்த்தியிருந்தார். அவ் ஆடை வெள்ளாடையில்லை. வெண்மையில் இருந்து தாழ்ந்திருந்தது. பாய்மரக் கப்பல்களில் பயன்படுத்தும் காரிக்கன் துணியாக இருக்க வேண்டும் அது.

இரவு ஒரு மணிக்குக் கதவைத் தட்டியது ஜோஷ்வாவா? மலைப் பிரசங்கி ஜோஷ்வாவா என் வீட்டின் முற்றத்தில்? எவ்வகை உணர்வை வெளிப்படுத்துவது என்பதில் சிரமம் இருந்த தெனக்கு.

ஜோஷ்வா புன்னகைத்துக்கொண்டே இருந்தார். சாம்பல் நிறக் கண்களில் கருணை வழிந்தது. நான் விறைப்படைந்து கொண்டே போனேன். பிரகாசம் அற்ற இரவில் என் முற்றம் மட்டும் குளிர்ந்த ஒளியில் மிளிர்ந்து கொண்டிருந்தது. அவரை

வீட்டின் உள்ளே அழைக்க வேண்டும் என்ற எண்ணமின்றி உணர்வின்றி ஆச்சரியத்திலேயே அமுங்கி நின்றேன்.

தலையை இடப் பக்கமாக சரித்து மீண்டும் மெள்ள நிமிர்த்திக் கொண்டார். இச்செயலில் ஏதேனும் பொருள் இருக்கலாம். எனக்குப் புரியவில்லை. கணங்கள் கடந்து தன்னிச்சையாக வீட்டின் வரவேற்பறைக்குள் போனேன். ஜோஷ்வாவும் ஒரு ஆட்டுக் குட்டி போல் என் பின்னே வந்து வரவேற்பறையின் மையத்தில் நின்று கொண்டார்.

ஜோஷ்வாவை நான் எதிர் பார்க்கவில்லை. பிரசங்கி ஜோஷ்வா என் எதிர்பார்ப்புப் பட்டியலில் இல்லை. உரையாடல் பட்டியலில் அவர் இருந்தாலும் நேரடியாகச் சந்தித்து பேசுவோம் கேள்வி கேட்கவோ பிரியப்பட்டதில்லை. இருந்தாலும் என்னை அவர் தேடி வந்திருக்கிறார்.

பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்பது பற்றிய சுரணை அற்றவ னாக ஜோஷ்வாவின் அசைவுகளை நோக்கிய வண்ணம் நின்று கொண்டிருந்தேன். பிரபஞ்சப் பெருவெளியின் சூத்திரத்தைப் படைத்தவன் புன்முறுவலுடன் எப்படி நோக்குவான் என்னும் கற்பிதம் என்னுள் உண்டு. அப்படித்தான் ஜோஷ்வா என்னை நோக்கிக் கொண்டிருந்தார். நிதானத்திலும் நிதானம். நானோ மைக்ரோ நிதானம்.

ஜோஷ்வாவுக்கும் கிருஷ்ணாவுக்கும் இடையில் நிறையவே வேறுபாடு. எனக்கு உரையாட வேண்டும் என்னும் எண்ணம் தோன்றும் போதெல்லாம் கிருஷ்ணா என் வீட்டுக் கதவைத் தட்டுவான். என்னுடன் உரையாடத்தான் அவன் வருகின்றான் என எண்ணித்தான் நான் இருப்பேன். ஆனால் அவன் அப்படி அல்ல. ஆடலும் பாடலும் உல்லாசமுமே உலகை இயங்கச் செய்வன. எனது ஆனந்த நடனமே உலகின் இயக்கம் என்பான். போதனைகளாலும் பிரசங்கங்களாலும் உலகை மலரச் செய்ய முடியாது என்பது அவன் எண்ணம்.

"கீதை உன் உபதேசம் தானே?" என்றேன், ஏதோ ஒரு சந்தர்ப் பத்தில். அவன் கடும் கோபமாகி விட்டான். ஆனாலும் புன்னகைத்தான். தன் கொண்டையில் செருகியிருந்த மயில் இறகைப் உருவி என் முகத்தை வருடினான்.

" கீதை என் உபதேசம் கிடையாது." என்றான்.

"நீ அருளியதாகத்தானே உலாவுகிறது."
"இல்லை. என் பெயரை சொல்லி போரை நியாயப்படுத்த அப்படி ஒன்றை உருவாக்கி விட்டார்கள்."

"நீ கூட போர் பிரியன் தானே?" என்றேன் எள்ளலாக.

"நான் ஒன்றும் போர்ப் பிரியன் கிடையாது. ஆனால் போர் தவிர்க்க முடியாதது. போர் மானுட சொரூபம். நீயும் நீ சார்ந்தவர்களும் வாழ வேண்டும் எனில் போர் செய்துதான் ஆக வேண்டும்." மிக மிக இயல்பாகச் சொன்னான்.

கிருஷ்ணா கோபமாக இருப்பதாக எனக்குத் தோன்றியது. ஆனால் அப்படி அல்ல. அவன் நடனம் ஆடும் மனோநிலையில் தான் இருந்தான். அவனுக்கு மாறாக நான் எப்போதும் உரையாடும் உணர்வில்தான் இருப்பேன். நெடுநாளாக அவனி டம் கேட்க வேண்டும் என்று கேள்வி ஒன்றை கிடப்பில் போட்டு வைத்திருந்தேன்.

"ஏன் கிருஷ்ணா தர்மம்தான் இறுதியில் வெல்லும் என்கின் றாயே. உண்மையைச் சொல். இறுதியில் வெல்வது தர்மமா அல்லது இறுதியில் வெல்வதற்கு தர்மம் என்று பெயரிட்டிருக் கின்றாயா?" என்றேன்.

என் கேள்வியை அவன் கேட்காதது போன்று பாவனை செய்தான்.. கானம் இசைத்துக் கொண்டு நடனத்திலேயே லயித்திருந்தான். கேள்விகளைத் தவிர்த்து விட்டு உல்லாச உணர் விற்கு என்னை உற்சாகப்படுத்தினான். உல்லாசத்தை உணர்வு விரும்பினாலும் அதே அளவு உரையாடலையும் விரும்புகிறது உளம்.
"சொல்லு கிருஷ்ணா இறுதியில் வெல்வது தர்மமா? அல்லது இறுதியில் வெல்வதற்கு தர்மம் என்று பெயரிட்டிருக்கிறாயா?"
நான் கோபமானது போன்று பாசாங்கு செய்தேன்.
நடனத்தை நிறுத்தி விட்டு சாந்தமாக என்னைப் பார்த்தான் கிருஷ்ணா.





இருபது ஆண்டுகளுக்கு முந்தைய நினைவுகளை அப்பார்வை மீட்டிற்று. அந்த நாட்களில் எல்லாம் நிறையக் கோபிகைகளை அழைத்து வருவான். இருநூறு கோபிகைகளையாவது கிருஷ்ணா எனக்கு அறிமுகம் செய்து வைத்திருப் பான். அந்த மகரந்தக் காலத்தில் எல்லாம் என் இல்லம் கோபிகைகளால் நிறைந்திருக்கும். விடிய விடிய மதுவுண்டு கோபிகைகளுடன் நானும் கிருஷ்ணாவும் களி நடனம் புரிந்து கிடப்போம்.

என் கேள்வியை ஏதோ மாயத்தனம் செய்து மறைத்து என் மூளைக்குள் வேறு ஜாலங்களைப் புகுத்த முனைகின்றான் என்பதை நான் புரிந்து கொண்டேன். நானும் விடுவதாய் இல்லை.

”சொல்லு கிருஷ்ணா. இறுதியில் வெல்வது தர்மமா? அல்லது இறுதியில் வெல்வதற்குத் தர்மம் என்று பெயரிட்டிருக்கிறாயா?” என்றேன் மயங்கிய நிலையில். என் நிதானத்தை அவன் கலங்கலாக்கிக் கொண்டிருக்கிறான் என்பதை உணர்ந்தேன்.

ஆட்டத்தை நிறுத்தி விட்டு கிருஷ்ணா மந்திரப் புன்னகை பூத்தான்.

”இந்தா மரம் என்று கடுகளவே உள்ள விதையைக் கொடுத்தால் நீ ஏற்பாயா? விதையில் இருந்து மரத்தை எடு. மரத்தில் இருந்து எடுத்த விதையில் எண்ணெயை எடு. நான் கொடுத்த விதையில் இருந்து எண்ணெய் எடுக்காதே” என்றான் மாறாப் புன்னகை யுடன். நான் என்ன விளங்கிக் கொண்டிருப்பேன் இந்த உரையில் இருந்தென்று அவனுக்கே விளங்கிற்றோ தெரியாது.

”பறவாயில்ல நீ தொடந்து டான்சே ஆடு. மறக்காமல் அடுத்த முறை வரும்போது கோபிகைகளை கூட்டிக்கொண்டு வா.” என்றுவிட்டு மெய்யாலுமே நான் கோபமாகி விட்டேன்.

கிருஷ்ணாவுடன் மிக நெருக்கமான நண்பனுடன் உறவாடுவது போன்று உரையாட முடியும். அதற்கு ஏற்ற மாதிரி நம்மைத் தயார் படுத்திக்கொண்டு அவனும் தயாராய் இருப்பான். பின்பு ஓய்வான ஒரு நாளில் நிதானமாகச் சொன்னான்.

“எப்படி குறைந்த ஒளிதான் இருட்டோ அதே போன்றதுதான் அதர்மமும். தர்மமும் அதர்மமும் நேர் எதிரானவைகள் அல்ல. ஆழமாய் நோக்கு புரியும். குறைந்த தர்மம்தான் அதர்மம் என்பது. கடுமையான அதர்மங்களை புரிந்தே அனைத்து தர்மங்களும் நிலைநாட்டப்பட்டுக் கொண்டும் வெல்லப்பட்டுக் கொண்டும் இருக்கிறது என்பதை இதுவரை காலமும் நான் செய்த போர்களில் இருந்து நீ கற்றிருப்பாய் என நான் நினைத்தேன்.”

கிருஷ்ணாவிடம் காட்டக் கூடிய நெருக்கத்தை ஜோஷ்வாவிடம் காட்ட முடியுமா தெரியவில்லை. பிரசங்கிகள் உரையாடுவதற்கு உகந்தவர்கள் இல்லை. கேள்விகளையும் அவர்கள் விரும்புவ தில்லை என கேள்விப்பட்டிருக்கிறேன். தாங்கள் கற்றதை உணர்ந்ததை நம்புவதை மற்றவர்களுக்கு ஊட்டவும் திணிக் கவும் தான் முனைவார்களே தவிர விவாதத்திற்கும் உரையாட லுக்கும் உகந்தவர்கள் அல்ல. அவர்கள் சொல்வதை நாம் எல்லோரும் கேள்விகள் இன்றி கேட்டுக்கொண்டிருக்க வேண் டும் என்றே பிரசங்கிகளின் உளவியல் இயங்குகின்றது.

ஜோஷ்வா கூட என்னுடன் உரையாட வரவில்லையோ என்று தோன்றுகிறது. ஆனால் எனக்கு அவர் வைன் கொண்டு வந்திருக்கிறார். அதுவும் நூறு வீதம் இனிப்பற்ற வைன். எனக்கு ‘டயபட்டீஸ்’ இருக்கின்ற தகவலை முன்னமே திரட்டி இருக்கும் அவரது அக்கறை எனக்குள் சிலிர்ப்பை உண்டு பண்ணுகிறது. அட பிள்ளைகளுக்கும் ராதிகாவுக்கும் அப்பம் மிகவும் பிடிக்கும் என்பதையும் தெரிந்து கொண்டு அவர்களுக்கு அப்பமும் கொண்டு வந்திருக்கின்றார். எப்பேர்ப்பட்டவர் ஜோஷ்வா.

மிக நிதானமாகவும் அமைதியாகவும் நடந்த வண்ணமே இருக்கின்றார். உரையாட வேண்டும் என்னும் உந்துதல் இப்போது என்னுள் எழுகின்றது. விவிலியம் மறைத்த அவரது காதல் வாழ்வு பற்றிக் கேள்வி எழுகின்றது. கடவுள் பற்றி அவரிடம் இருக்கும் தெளிவற்ற போதனை பற்றியும் கேட்க வேண்டும் என்ற எண்ணமும் எழுகின்றது. இவை எல்லாவற்றையும் விட் யாருமே அறிந்து கொள்ளாத பதினெட்டு ஆண்டு கால அவரது மர்ம வாழ்வு பற்றியும் தெரிந்து கொள்ளப் பேரவா எழுகின்றது.

ஏற்கனவே கிடைக்கப்பட்ட புனைவுப் பதில்கள்தான் கிடைக்கும் என்று தெரிகின்றது. இருந்தாலும் சம்பந்தப்பட்டவரிடம் இருந்து கிடைக்கின்ற பதில் பொய்யாக இருந்தாலும் அது ஒரு திறமான பொய்யாக இருக்கும் என்பது என்னளவான நம்பிக்கை.

இருக்கையில் அமரப் பிரியப்படாதவராக நகர்ந்த வண்ணமே இருந்தார் ஜோஷ்வா.

"அமருங்களேன்." என்றேன் நான்.

மாறாப் புன்னகை. பிரசங்கிகள் எப்போதும் பிறர் சொல்வதை ஆமோதிப்பதில்லை. அது சரியாக இருக்கும் பட்சத்திலும்.

"நீர் அறியப்பட்ட சரிதைகள் எல்லாம் உண்மையானதும் சத்தியமானதும் என்றில்லை."

இது ஜோஸ்வாவின் குரலா? இல்லை அவர் சொல்வது போன்று நான் பிரமை கொண்டேனா புரியவில்லை. ஆனால் அச் சத்தத்தை நான் உணர்ந்தேன் என்பது மட்டும் உண்மை.

ஜோஷ்வாதான் இதை எனக்குச் சொல்லியிருந்தால் இந்த ஒற்றை வசனத்தைக் கொண்டு நான் எதனைக் கற்றுக்கொள்ள முடியும் என்று தெரியவில்லை. புத்தன் கூட இப்படித்தான் உரையாட என்று வந்து விட்டு கண்மூடித் தியானத்தில் அமர்ந்து விடுவார். மணித்தியாலங்கள் கடந்து நாட்கள் கடந்து சில மாதங்கள் கூடக் கண் திறக்காமல் ஆழ் தியானத்தில் ஆழ்ந்திருப்பார். நானும் மாதக்கணக்காக அவர் முன்னே அமர்ந்திருந்த நாட்கள் அதிகம்.

அன்று கடும் புழுக்கம். மூன்று மாதங்களாக மழை இல்லை. காரணம் இல்லாமல் மனம் ஏனோ புத்தனை வரவேற்கத் தயாராக இருந்தது. வீட்டில் வேறு யாருமில்லை. விடுமுறைக்காலம் என்பதால் எல்லோரும் மதுரைக்குச் சென்றிருந்தார்கள். இப்படியான தனிமைச் சந்தர்ப்பங்களில் கிருஷ்ணாவும் கோபிகைளுமே எனது தனிமையை விரட்டத் துணை புரிவார்கள். ஆனால் அன்று மட்டும் அதிசயமாக புத்தனைத் தேடிற்று மனம்.

புத்தனுக்காகப் பச்சைத் தேனீர் தயாரித்து வைத்திருந்தேன். சூடு ஆறும் முன் வந்து விட்டார். புத்தன் இருக்கும் இடம் எப்போதும் பிரகாசமாகவே இருக்கும். அதுதான் ஞானத்தின் பிரகாசமோ என நான் ஆச்சரியப்பட்டதுண்டு. பிரசித்தமான பிரசங்கிகளை நான் வீட்டுக்கு விரும்பி அழைப்பதன் நோக்கம் அவர்களுடன் உரையாடவும் அவர்கள் பிரசங்கத்தைக் கேட்கவும்தான். ஆனால் அவர்களோ என் வீட்டுக்கு வந்தவுடன் மௌனமாகவே இருந்து விடுகின்றனர். சில சமயங்களில் இது எனக்கு சஞ்சலத்தை ஏற்படுத்தி விடுகிறது.

புத்தனுக்குத் தேனீரைக் கொடுத்தேன். மெல்லிய வாசனையையும் இலேசான துவர்ப்பையும் தவிர வேறேதும் சுவையில்லை அந்தப் பச்சைத் தேனீரில். ஆனாலும் இரு கைகளாலும் அந்தத் தேனீர் கோப்பையை ஏந்தி வாஞ்சையுடன் ரசித்த அழகு இருக்கிறதே. அப்பப்பா... பின்பு அந்தத் தேனீரை உறுஞ்சி உறுஞ்சிக் குடித்த அழகு இருக்கிறதே...



அடடா.. போகியை விடவும் யோகியே வாழ்வை அதிகம் ரசித்திருப்பான் என்பது எவ்வளவு பெரிய உண்மை.
கட்டாந் தரையில் சம்மணமாக இருந்து இரு கைகளில் தேனீர் கோப்பையை ஏந்தி அதை முகர்ந்து அரை விழி மூடி இரு மணி நேரமாக ஒரு கோப்பை தேனீரை அணு அணுவாக சுவைப்பதென்பது மாபெரும் கலை. அது தியானம். தேனீர் அருந்துவதில் ஆரம்பிக்கின்றது வாழும் கலை. மிகவும் எளியதில் இன்பத்தை நுகர்தல் வாழ்வின் சூட்சுமம். இந்தத் தியானத்தைத்தான் புத்தன் எனக்கு உணர்த்த விரும்பினார் போலும்.

ஜோஸ்வாவும் இதுபோல் எதையேனும் குறிப்பால் உணர்த்தத் தான் வந்தாரோ என்று தோன்றுகின்றது. தேனீரை அருந்தி முடித்த புத்தன் வெளியே சென்று வரலாம் என அழைத்தார். எங்கே எனக் கேட்காமல் அவர் பின்னே சென்றேன். பல தடவைகள் இப்படி நடந்ததுண்டு. இடுகாடு, சுடுகாடு, நந்தவனம், சந்தை, மடம் என்று எங்கெங்கோவெல்லாம் அழைத்துச் சென்றிருக்கின்றார்.

இம்முறை என்னையவர் அழைத்துச் சென்ற இடம் கன்பூசியஸ்

களின் அங்காடி. மட்பாண்டங்கள் நிறைந்த அங்காடி அது. சின்னதும் பெரியதுமாக விதம் விதமான வடிவங்களில் விதம் விதமான வேலைப்பாடுகளுடன் அழகான வர்ணப் பூச்சுகளுடன் சீசாக்களும் சாடிகளும் பானைகளுமாக நிறைந்து கிடந்தது சந்தை. பாண்டங்கள் விற்போரெல்லாம் புன்னகை பூத்த கன்பூசியஸ்களாக இருப்பது பெரும் ஆச்சரியம் எனக்கு.

"இங்கிருக்கும் சாடிகளில் ஒன்றை எடுத்துக்கொள்." என்றார் புத்தன். மயில் இறகுகளும் செரிப் பூக்களுமாக வர்ணம் தீட்டப்பட்ட சாடி என்னை மிகவும் கவர்ந்திருந்தது. அதனையே எடுத்துக் கொண்டேன்.

"இதனை நீ எடுத்துக்கொண்டதற்கான காரணம் என்ன?" என்றார் புத்தன்.

"சாடியில் வரையப்பட்டிருக்கும் செர்ரிப் பூக்களும் மயில் இறகும் அதன் வழுவழுப்பும் வடிவமும் என்னைக் கவர்ந்தது" என்றேன்.

புத்தன் புன்னகைத்தார். கண்களில் கருணை வழிந்தோடப் புன்னகைத்துக்கொண்டே இருந்தார். கரு விழி மேல் இமை மேல் செருக் நெடு நேரமாக புன்னகைத்துக்கொண்டே இருந்தார். எத்தனை யுகங்களாக என்னையவர் பார்த்துக் கொண்டிந்தார் என புரியவில்லை. அந்தப் புன்னகையின் குளிர்ச்சியில் மூன்று ஒளி ஆண்டுகள் வாழ்ந்திருக்கத் தயாராக இருந்தேன்.

"வெளி வர்ணங்களால் பெறுமானம் தீர்மானிக்கப்படுவதில்லை. வெற்றிடத்தின் விசாலமே பெறுமதியை பெற்றுத் தரும்." என்றார் புத்தன்.

காது மடல் குளிர்ந்தது. மூளையில் ஒரு நரம்பு மட்டும் துடித்தது. மனதை விசாலமான வெற்றுப் பாத்திரமாக்கிக் கொண்டு கன்பூசியஸ்களைத் தேடிக் கிளம்பியவன் வீடு வந்து சேரப் பதின் மூன்று ஆண்டுகளாயிற்று.

புத்தரைப்போல் ஜோஷ்வாவும் என்னை எங்கேனும் அழைத்துச் சென்று ஞானப்பாடம் எடுக்கப் போகின்றாரோ என்று தோன்றுகின்றது. என்னதான் பிரசங்கிகளாக இருந்தாலும் சில சமயங்களில் மௌனங்களாலும் அசைவுகளாலும் ஞானம் புகட்டுவதும் இவர்களுக்கு நிரம்பப் பிடித்துத்தான் போய் விடுகிறது.

இப்போதுதான் கவனிக்கின்றேன் ஜோஸ்வாவின் கையில் மயில் இறகு. கிருஷ்ணாவின் மயில் இறகு அது. எப்போதும் அதை அவன் கொண்டையில் செருகி வைத்திருப்பான். அவ்வப்போது அதனை உருவிக் கோபிகைகளின் முகத்தை வருடி விடுவான். அடி வயிற்றையும் கச்சை மீறும் மார் மேட்டையும் கூட வருடுவான். அவ் இறகு கோபிகைகளை ஸ்பரிசித்ததும் கண்கள் செருகச் சொக்கிப் போவார்கள். அவனது மயில் இறகின் மீது எனக்குக் கடும் மோகம். அவனது குறும்புகளுக்கு அந்த மயில் இறகு பெரிதும் உதவியாக இருக்கிறது. நானும் சில குறும்புகள் செய்வதற்காக அவனிடம் இருந்ததைத் திருடி வைத்திருக்கின்றேன். அந்த மயில் இறகை ஜோஷ்வாவின் கையில் பார்த்ததும் எனக்கொரு குறும்புப் புன்னகை வந்து விட்டது.

ஆண்டாளுக்கு கிருஷ்ணா மேல் இருக்கும் காதல் எவ்வளவு தீவிரமானதோ அதேயளவு காதல் அவள் மேல் எனக்கும் இருந்தது. காதல் என்பதையும் விடக் காதலால் விளையும் காமத்தின் 'பால் இச்சை' எனலாம். பெண்களின் இச்சையைத் தூண்டிக் கலவி கொள்வதிலும் பார்க்கக் கலவிப் பேருவகை பொங்கும் பெண்ணுடன் உறவு கொள்வதென்பது உச்சப் பேரின்பம் பயக்கும் என்பது என்னளவிலான அனுபவ உண்மை.

ஆண்டாள் கலவிப் பேருவகை பொங்கும்
பேரின்ப நிலையிலேயே எப்போதும் இருப்பாள் என்பதை நான் அறிவேன். ஆண்டாள் போன்ற பெண்கள் அரிதிலும் அரிதானவர்கள். பொதுவான பெண்களிடம் கிடைக்கின்ற இன்பத்தை விடவும் ஆண்டாளிடம் கிடைக்கும் இன்பம்
பல கோடி மடங்கு உயர் இன்பம். அது ராஜ இன்பம். கிருஷ்ணாவின் மயில் இறகைத் திருடி வைத்ததற்கு ஆண்டாளின் மேலான என் தீரா மோகம்தான் காரணம்.

அதிகாலை. மார்கழித் திங்கள்.
ஸ்ரீ வில்லிப்புத்தூர் அக்ரஹாரம் இன்னும் விடியயே இல்லை. தூரத்தில் ஆழ்வாரின் பாசுரம் மெலிதாய் கேட்டது.

**"ஆநிரை மேய்கநீ போதி**
**அரு மருந்தவா தறிவாய்.**
**கானகமெல்லாம் திரிந்து**
**உன் கரிய திரு மேனி வாட்**
**பானையிற் பாலைப் பருகிப்**
**பற்றாதார் எல்லாம் சிரிப்ப்**
**தேனில் இனிய பிரானே!**
**செண்பகப் பூ சூடவா."**

உற்றுக் கவனித்தேன். பெரியாழ்வாரின் பாசுரம்தான் அது. குரல் இனிதாய் இருந்தது. வீட்டில் இருந்தே பாசுரம் ஓதும் பழக்கமற்றவர் அவர். அதி காலையிலேயே பெருமாள் சந்நிதிக்குக் கிளம்பியிருக்க வேண்டும். அங்கிருந்துதான் பாசுரம் காற்றில் கலந்திருக்க வேண்டும். பாசுரங்களை ஓதித் திருப்பல்லாண்டையும் பாடி முடித்து வீடு திரும்ப நாளிகையாகும். மார்கழிக் குளிரில் ஆண்டாள் இப்போது தனித்து விரகத்தில் தவித்திருப்பாள். இதுவே லீலைக்கான சிறந்த தருணம்.

கிருஷ்ணாவிடம் கற்றுக்கொண்ட சில வேனு கானங்களை மனனம் செய்திருந்தேன். இப்போது அதை ஆண்டாளின் படுக்கையின் ஓரமாக இருந்து கொண்டு கனிந்த வேனு கானத்தை மெல்லிய குரலில் அவளுக்கு மட்டுமே கேட்கும் வண்ணம் இசைத்தேன்.

"நாரணா.. நாரணா..."
என்று மனசுக்குள் முனு முனுப்பது எனக்குக் கேட்டது. மூடிய இமைக்குள் விழிகள் இடதும் வலதுமாக உருள்வதையும் உணர்ந்தேன். கிருஷ்ணாவின் மயில் இறகு கொண்டு அவள் அடிவயிற்றை வருடினேன். நுண் அதிர்வுகளாய் நாபிக் கமலம் துடித்தது. நெஞ்சாங்குழிக்குள் வியர்வைத் துளி ஒன்று உருண்டோடி வந்து நின்றது. முதுகை வளைத்து மார்பை நிமிர்தினாள். கொங்கைகள் விம்மின. பின் புடைத்தன. கச்சை அறுந்து பிரிந்தது.

ஆண்டாள் விழி மலர்ந்தாள்.
"நாரணா.. நீயா?" தன்னைக் கிள்ளிப் பார்த்தாள்.

"ஆசை முகம் மறக்க வில்லையே..
ஆசை முகம் மறக்கவில்லையே" என அரற்றி என் முகம்

> **“பிரபஞ்சப் பெரு வெளியை இரண்டாய் பிளந்த களைப்பு. பாற்கடலை கடைந்து நெய் திரட்டிய உற்சாகம். கலந்து திரண்டது என்னில். பன்னிரெண்டு நூற்றாண்டுகளாய் விரகத்தில் உழன்றவளின் காமத்தீயை அணைத்தல் என்பது வார்தைக்குள் அடங்காத விபரணம். களைப்பின் தீரத்தில் உல்லாசத் தித்திப்பில் அவள் மஞ்சத்தில் பஞ்ச சயனத்தில் உறங்கிப் போனேன்”**

வருடினாள்.

”கனா இல்லை. நாராணா நீயேதான். இம்மைக்கும் நன்மைக்கும் ஏழேழு பிறவிக்கும் பற்றானவனே நாரணா. நம்பி உன் திருக்கையால் தோள் பற்றி அம்மி மிதிக்க இப்போதுதான் கனாக்கட்டேன் கண்ணா நான்.” உருகினாள். பதறினாள். விழி நீர் மல்கினாள்.

என்னை இறுக்க அணைத்தாள் ஆண்டாள். என் நெஞ்சம் துளைத்து முதுகு வழி வந்திடும் போல் இருந்தது கமல முகைக் கலசம். தன் நெஞ்சோடு எனை அணைத்து என் முதுகை அவள் தடவுகையில் அப்படி வந்திட்டோ எனும் அந்த ஐயப்பாடு அவளுக்கும் இருந்திருக்குமோ என எண்ணத் தோன்றிற்று.

உளுந்து வறுபடும் போது பரவும் வாசம் அவ்விடம் எங்கும் பரவிற்று. அவ்வாசம் ஆண்டாளின் உடலில் இருந்துதான் கிளம்புகிறது.

“இது ராஜ நாகங்களின் கலவிக் காலம் கண்ணா. நீ அறியாததா? பாம்புகள் புணரும் வேளையில் பெண் சர்ப்பம் அந்த வாசத்தை விசுறும் என்பது நீ அறியாததா?”

ஆண்டாள் ஏதேதோ சொன்னாள். அரற்றினாள். அனுங்கினாள். என் காது மடல் கவ்விச் சிணுங்கினாள். திருமாலின் பெரும் பாற்கடலாய் கலவிப் பேருவகை பொங்கிப் பெருகிற்று.

கிருஷ்ணாவுக்கு மட்டும்தான் லீலைகள் தெரியுமா என்ன?

பிரபஞ்சப் பெருவெளியை இரண்டாய் பிளந்த களைப்பு. பாற்கடலைக் கடைந்து அமிர்தம் திரட்டிய உற்சாகம் கலந்து திரண்டது என்னில். பன்னிரெண்டு நூற்றாண்டுகளாய் விரகத்தில் உழன்றவளின் காமத்தீயை அணைத்தல் என்பது வார்த்தைக்குள் அடங்காத விபரணம். களைப்பின் தீரத்தில் உல்லாச தித்திப்பில் அவள் மஞ்சத்தில் பஞ்ச சயனத்தில் உறங்கிப் போனேன்.

**”குத்து விளக்கெரியக்
கோலக் கால் கட்டில் மேல்
மெத்தென்ற பஞ்ச
சயனத்தின் மேல் ஏறி
கொற்றலர் பூங்குழல்
நப்பினை கொங்கை மேல்
கை வைத்துக் கிடக்கும்
மலர் மார்பா வாய் திறவாய்.”**

ஒற்றைக் கொங்கை என் நெஞ்சோடு அமுங்க சயனத்தில் என் மார்போடு சாய்ந்து காதுக்குள் இசைத்தாள். முதுகு எரிந்தது நகக்கீறல்களால். அவள் பாடிய மலர் மார்பிலும் பற்களால் நன்னியிருந்தாள். சிறந்த கலவிக்கான சான்றுகள் அவை.

தெருவில் வாசல் பக்கமிருந்து
”எழுந்திரு எம்பாவாய்..”என்னும் பெண்களின் குரல் கேட்டது. கும்பலாய் பெண்கள் சிரிக்கும் ஓசையும் கூடவே சருவக் குடங்கள் உரசும் ஓசையும் ஒன்றாகக் கலந்து வந்தது. ஆண்டாளின் தோழிகள் அவளைத் திருக்குளம் அழைத்துச் செல்ல வந்து விட்டார்கள்.

புலன் உறைத்தது.
துனுக்குற்று எழுந்தேன். ஆடையைத் தேடி எடுத்தேன்.
“புறப்படுகின்றாயா நாரணா?”
ஏக்கமானாள். பொழுது புலரும் முன்னம் நான் கிளம்பியாக வேண்டும்.

”நாரணா நாளையும் வருவாயா?” விரகம் தீராக்குரலில் கெஞ்சினாள். மறக்காமல் கிருஷ்ணாவின் மயில் இறகை எடுத்துக்கொண்டேன். இன்னும் நிறைய லீலைகள் செய்ய வேண்டி இருக்கிறது.

ஆண்டாளைக் கவர கிருஷ்ணாவிடம் திருடி நான் வைத்திருந்த மயில் இறகை ஜோஷ்வா கையில் பார்ததும் ஆச்சரியமாக இருந்தது. மயில் இறகு அவர் கைக்கு கொஞ்சமும் பொருத்த மில்லாமல் இருந்தது. ஆனாலும் அதை வைத்திருக்க விரும்பவது போன்று இருந்தது ஜோஷ்வாவின் உடல் மொழி.
“இது எப்படி உங்கள் கைக்கு வந்தது?” என்றேன் ஆர்வமும் ஆச்சரியமுமாய்.

ஜோஷ்வாவின் ஓர வாய்ப் புன்னகை அழகாய் இருந்தது. மனசுக்குள் ஏதோ நெருடிற்று. கிருஸ்ணா மாயக்காரன். தந்திரம் தெரிந்தவன். அவன் தீராத விளையாட்டுப் பிள்ளையும் கூட.

கிட்டத்தில் வேனு கானம் இசைக்கக் கேட்டது. கூடவே என் வீட்டின் முற்றத்தில் கோபிகைளின் சிரிப்பொலியும் சினுங்கல் சத்தமும் கலந்து கேட்டது.



# கவிஞனின் அவஸ்தை

-மெலிஞ்சி முத்தன்

## மனப் பயணக் குறிப்பு

நாம் இருவரும் இருப்பா, இயக்கமா பூரணி?

இயக்கம் என்றும், இயக்கத்தில் வடிந்த சாரத்தின் சேகரிப்பு என்றும் நினைத்திருந்தோமே. அப்படியென்றால் நம் உள்ளே நமக்கென்று எதுவுமே இல்லையா பூரணி?........

நான் நம்ப மாட்டேன். எனக்குள்ளும், உனக்குள்ளும் நமக்கானதொரு ஆதிப் பொருள் உண்டென்றே நினைக்கிறேன். அவ்வாறு நினைக்கவே ஆசைப்படுகிறேன்............ எனது நினைப்பு தடயங்களைத் தேடுகிறது., அந்த ஆதிப்பொருள் என்னவென்று எனக்குள் உற்றுக் கவனிக்கிறேன். ஆதியும் அந்தமுமில்லாத வெளியில் தனியனாய் விடப்பட்டேனோ என்ற கவலை ஒன்றும் வந்துபோகிறது. தனித்துவத்தை விரும்பும் நானே தனியனாய் நிற்கும்போது கவலையும் கொள்கிறேன். உன்னை என்னோடு கலப்பதும்,என்னை உன்னோடு கலப்பதும் நம் இருவரின் ஆழத்திலும் எத்தனை சாத்தியமானது பூரணி?

உண்மையிலேயே நாமிருவரும் தனித்தனித் துண்டுகளா? ‘கடவுள் என்ற பெருநெருப்பின் சிறுசிறு சுவாலைகள்தான் நாம்’ என்று நாம் கற்றுக்கொண்டவற்றை உணர்வதற்கும் தனித்துவமான தன்மை இருக்கிறதா? உணர்திறன் என்பதும் கற்றுக்கொள்ளக் கூடியதா? உண்மையில் உணர்வு என்பதன் ஊற்று எங்கிருந்து வருகிறது?

மகிழ்ச்சி என்றால் என்ன என்பதை எப்போது நாம் கற்றுக்கொண்டோம்? துயரமும், அச்சமும், கோபமும் இன்னபிறவும் நமக்குள் தோன்றிய முதற்புள்ளி எது? உடலின் விளை பொருட்கள்தான் இவை என்றால் ஆணுடலும் பெண்ணுடலும் கொள்ளும் கவலையில் சமன்பாட்டு வித்தியாசம் வந்துவிடுமா? குறி மட்டும்தானே வித்தியாசம்.... இரண்டு குறிகளும்கூட கொடுத்து வாங்கும் இரட்டைக் குணங்களைக் கொண்டுதானே அமைந்திருக்கின்றன. அல்லது மனித வரலாறு உணர்வுக் கலப்புகளை உருவாக்கி அவற்றைப் பொதுமைப்படுத்தி ஒரே பெயரிட்டுத் தந்திருக்கிறதா?

நான் உன்பெயரை மந்திரம் போல முணுமுணுத்துக்கொண்டே இருக்கிறேன். அந்தப் பெயர் உனது ஆழுமையாலும், எனது அன்பாலும் ஒளிபெருகிக்கொண்டிருக்கிறது. உன்மீதான காதல் வளர்கிறதே தவிர சலிக்கவில்லையே. சலிப்பினால் உன்னை விட்டுக் கடந்துபோக முடியாத நான் உனக்கெதிரான பாதகமான நினைவுகளை திரும்பத் திரும்பச் செய்வதனால் விலகிவிட முடியுமா? எண்ணங்கள் பயணிக்கின்றன, எண்ணங்கள் சந்திக்கின்றன, எண்ணங்கள் பிரிகின்றன. அப்படியென்றால் வெவ்வேறு திசைகளுக்கு பயணிக்கும் எண்ணங்களின் இருத்தல்தான் மனமா? எண்ணங்களை அகற்றிவிட்டால் மனம் என்பது இல்லாமல் போய்விடுமா? நான் மனமில்லாமல் போனால் நீ எங்கே இருப்பாய்? நீ மனமில்லாமல் போனால் நான் எங்கே இருப்பேன்?

மனம் தோன்ற முதல் மனிதர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்? மனமில்லாமல் போனால் சிரிப்பு இருக்குமா? சிரிப்பு என்பதற்கு வாய் தேவையா? இதோ வாயில்லாமல் சிரிக்கும் ஆசை எனக்குள் இப்போதே பெருகுகிறதே பூரணி. என் செல்வமே வா வாயில்லாமல் சிரிப்போம்.

நான் சிந்திப்பதற்கான கருவிகளை என் மரபுக்குள் இருந்தே எடுத்துக்கொள்கிறேன். அதனால்தான் என் சிந்தனை முறை இவ்வாறு அமைகிறதோ..... இந்தச் சிந்தனை முறையென்பதும் நமது மதங்கள் காட்டிய இடத்திற்குத்தான் நம்மைக் கூட்டிச் செல்லலாகுமோ. அப்படியென்றால் சிந்திப்பதற்கான புதிய முறையை எப்படி ஆக்கிக்கொள்ள முடியும் பூரணி?

தூண்டும் ஒரு சொல்
தூண்டும் ஒரு பொருள்
தூண்டும் ஒரு தரவு
புதிதாய் ஒரு நான்
துலங்கும் ஒரு அனுபவம்
என்று சாத்தியமாகும்?

நான் கேள்விகளை மட்டும் கேட்டுக்கொண்டே இதுவரையில் வந்திருக்கிறேன். நான் கேட்ட கேள்விகளெவற்றுக்கும் பதில் சொல்லால் வந்துகொண்டிருக்கிறேன் என்று நீ சிந்திப்பது தெரிகிறது. கேள்விகள் அறியாமையின் எழுப்புதல்கள் என்று மட்டும் இல்லையே....... அவற்றுக்குப் பின்னால் கணிசமான முடிவுகளும் இருக்கின்றன என்பதும் உனக்குத் தெரியுமல்லவா? கேள்விகளிடமிருக்கும் பயணக் குணமும், பதில்களிடம் இல்லையே. ஆனாலும் பதில்கள் முடிந்த முடிவுகளும் இல்லையே. பதில்களிலும் அடுத்த கேள்விக்கான இடைவெளிகள் இருக்கிறன. பதில்கள் நம் உரையாடலை இன்னொரு வகையில் விரிக்கக்கூடியன தான்..ஆனாலும் நாம் கேள்விகளின் படிக்கட்டுகளில் செல்வதே இப்போதைக்கு போதுமானதென்று நினைக்கிறேன்.



என் காதலியே நம் காதலை புதிய எல்லைகளுக்கு விரித்துச் செல்லவே ஆசையாய் இருக்கிறேன். அவ்வாசையே ஆழம்தேடும் தாகத்தோடு எனக்குள் எழுந்தபடி இருக்கிறது. அதை முன்னோக்கிக் காண்பதற்கு நம்மிடம் இரண்டு கருவிகள் மட்டுமே உள்ளன. ஒன்று ஊகம், மற்றது கற்பனை.

ஊகம் என்பது ஒரு வகையில் விவாத அடுக்குகளின் உடம்புதான். அது ஒரு புள்ளியிலிருந்து புறப்பட்டு அதற்குச் சாத்தியமான புள்ளிகளில் ஊடாடுவது. அது ஒரு வகையில் இலட்சியவாதத்தின் வழி காட்டி.. கற்பனை என்பதோ தொடங்கிய புள்ளியையே தொலைத்துவிடக் கூடியது. ஆனாலும் அறிவின் முன்னால் சென்று ஒழுங்குபடுத்தக் கூடியது. மிகைப்படுத்தலின் எழுச்சியைத் தோற்றுவிக்க வல்லது. நீகூட என் கற்பனைகளின் உறைந்த உயிர் வடிவம்தானே. கற்பனை என்பதன் இடைவெளிகளில் அமர்ந்துவிட நோட்டம் பார்த்துக்கொண்டே இருக்கிறது மறதி. அதனால் நான் உன்னை மறந்துவிட முடியுமா?

மறதிக்கும், நினைவுக்கும் நடுவில் ஏற்படும் சந்தேகம் எல்லாவற்றையுமே பழுதடைய வைத்துவிடுகிறது. சந்தேகம் உருவாக்கும் கற்பனைகள் இருக்கின்றனவே அப்பப்பா ....அவை மிக,மிகக் கொடுமையானவை. அரிவாளால் சதையையும், சவ்வையும், எலும்பையும் நரநரவென வெட்டுவதற்கு ஒப்பான வேதனையைத் தரவல்லவை அவை. ஆனால் சந்தேகத்தை ஆக்கச்செயலுக்கு உதவியாகப் பார்க்கும் மனிதர்களே சாதனையாளர்கள் ஆகின்றனர். நான் என் சந்தேகப்புத்தியின் மீதும், பொறாமையின் மீதும் மிகுந்த அவதானமாய் இருக்கிறேன் பூரணி. எனக்குள் பொறாமை வருமாயின் அது என் போதாத தன்மை என நினைக்கிறேன். பொறாமைக்கு மருந்தாக கடின உழைப்பையே நான் காண்கிறேன். நான் யாரின்மீதாவது தற்செயலாய் பொறாமை கொள்ள நேரும்போது. எனது எல்லையை மீறி அவர்களை வாழ்த்தத் தொடங்கி விடுகிறேன். ஆமாம் அதுவே என்னை சுத்தப் படுத்தக் கூடியது.

அது மட்டுமல்ல. நம்மிருவருக்குள்ளும் ஒரு முற்றுப்பெறாத தன்மை இருக்கிறதுபோலும். அதுதான் முழுமை பெறும் செயலைநோக்கி நாம் இயங்கிக் கொண்டிருக்கிறோம்.

ஒதுக்கப்படலையும், தனிமையையும் உணரும்போதெல்லாம் உன்னை நினைத்துக்கொள்வேன் பூரணி. தர்க்க முடிவுகளின் இரசிகர்களால் கட்டமைக்கப்படும் இந்த உலகத்தில் நானும், நீயும் ஒதுக்கப்படுதலுக்கான சாத்தியங்களைக் கொண்டவர்கள்தானே. என் தாயிடமிருந்து என்னை வாங்கிக்கொண்டவள் நீ. எனக்கு எப்போதுமே ஒரு தாய் தேவையாய் இருக்கிறது. 'எவ்வளவு ஆழுமையாய் நான் வளர்ந்தாலும்'. என் தேவையை நான் உணரும்போதெல்லாம் உன்னை நினைத்துக்கொள்வேன் பூரணி. உன்னுடைய கையைப் பிடித்துக்கொண்டு என் மன வீதியில் நடந்து திரிவேன்.



உன்னுடைய வேலையை நீ பிரக்ஞைபூர்வமாகச் செய்யும்போதெல்லாம் நான் உன்னோடிருப்பேன்' என்று நீதானே சொல்லியிருக்கிறாய். அதுதான் உன்னையும் கூட்டிக்கொண்டு இந்த இலக்கிய யாத்திரையைத் தொடங்கிவிட்டேன்.

எனக்கு என்ன தெரியும்? நெஞ்சை முட்டும் மகிழ்ச்சி வந்தாலும், குரல்வளையை அடைக்கும் துயரம் வந்தாலும் எழுதுவேன். இலக்கியத்தின் மடியில் தலை சாய்ப்பேன். நீ என்னருகில் இருந்தாலும் அதையே செய்வேன். என்னுடைய அன்புக்குள் ஆழ்ந்ததுயரம் ஒரு நதியைப்போல ஓடிக்கொண்டிருப்பதை நீயன்றி வேறுயார் அறியக்கூடும் பூரணி?.

நான் உன்னைப்போலவே இலக்கியம் எனும் இயக்கத்தை நேசிக்கிறேன். உனக்கு உள்ளே புகுந்து உன் ஆன்மாவைத் தேடுவதுபோலவே. இலக்கியத்தையும் அணுகுகிறேன். அது பொய்யர்களின் வேலையாள் போலவோ, அதிகாரம் மிக்கவர்களின் வெதுவெதுப்பான சேவகர் போலவோ ஆக்கப்படுகையில் எரிச்சல் அடைகிறேன்.

00

வார்த்தைகளில் மறைக்கப்பட்ட அர்த்தங்கள், தெளிவின் மைகள், அர்த்தத்தில் எதிர்பாராத திருப்பங்கள் இவையெல்லாமே நிகழ்ந்துவிடும் அந்தரங்கமான நிகழ்ச்சியில் இயங்கும் அரசியலை துருவித்துருவிப் பார்க்கும் என் மௌனத்தின் கனத்தை நீ உணர்ந்துகொள்கிறாயா பூரணி? 'தெளிவின்மை' என்பது கூட இலக்கியத்தில் அனுமானங்களுக்கான வெளி தானே. வாசகரின் அனுமானங்களோடு விளையாடும் உத்திகளும் கலைப்படைப்பை வளர்த்துச் செல்ல வல்லனவே.

படிமங்கள், உத்திகள், புனைவுகள், மொழிநடை என்பவை எல்லாவற்றுக்குள்ளும் நுட்பமாகப் பரிமாறக் கூடியவைதானே செய்திகள். படைப்புக்குள் இயங்கும் செய்திகள் ஒன்றோடு ஒன்று மோதக் கூடியன, ஒரு நோக்கத்துடன் இழுத்துச் செல்லப்படக் கூடியன அச்செய்திகளால் மனித அந்தரங்கத்தில் ஏற்படுத்தக்கூடிய தர்க்கநிலை,அதிர்வு ஒரு படைப்பிற்குப் போதுமானதென்று நினைக்கின்றேன். ஆனால் 'செய்தி' என்பதன் உண்மைத்தன்மை முக்கியமானதல்லவா?

புனைவு என்பதையே பொய் என்று புரிந்துகொள்ளுமளவுக்கு பொய் சாரம் மிகுந்துவிட்டதே பூரணி.

00

எழுதுதல் " ஒரு கனதியான அனுபவமாக மாறிப் போனது கவிதையின் மூலமே . கவிதைக்கும் எனக்கும் இருக்கும் அந்தரங்க உறவை எப்படி மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது? நான் புரிந்து கொண்ட கவிதையும் ,மற்றவர்கள் புரிந்துகொண்ட கவிதையும் ஒன்றா? இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைக்கும் முன்னரே .. இந்த எல்லைகளைத் தாண்டிப் பார்த்தால் என்ன ? என்ற ஆசையும் ,அவசரமும் தோன்றி விட்டது எனக்கு.

உரைநடையில் செறிவை ஏற்படுத்தியபோது மரபுக்கவிதையின் தாக்கத்திலிருந்து நான் விடுபட முயன்றேன். கடலை வடையும், உழுந்து வடையும் உருவத்தில் வேறு விதமாக இருந்தாலும் அவை இரண்டையுமே வடை என்று அழைக்கும் மனப்பழக்கம் இருப்பதுபோல் நவீன கவிதையையும் பழகிக்கொண்டேன். சொற்களோடு இயங்குவதற்கு ஒரு துணிவு வேண்டும். அத்துணிவை வளர்த்துக் கொண்டேன். என்னுடைய அனுபவத்தில் நான் கண்ட கவிதை தன் முகத்தையும் ,என்முகத்தையும் களைந்து எறிவதில் நாட்டமுடையதாக இருந்தது. எனது தவறுகளை எனக்கு உணர்த்தும் வல்லமை அதற்கு இருந்தது . சொற்களின் பின்னால் கட்டமைக்கப் பட்டிருக்கும் அரசியலை உரசிப் பார்த்தது , சொற்களிலிருந்து தனக்குத் தேவையான ஒன்றை என் சுயத்தின் ஆழத்தை நோக்கி நகர்த்தியது . அது என் சுயத்தின் வேரில் பசுமையைப் பூசியது, வேரின் சாறை வெளியே கொண்டு வந்தது. அப்போது மொழி தேனைப்போல அல்ல. இளநீரைப்போல இனித்தது.

எழுதும்போதும்.. ஒவ்வொரு சொல்லையும் கடந்து போகும்போதும் இந்த எழுத்து மரக் காட்டிடை எங்கே போகிறோம்? என்ற கேள்வி எனக்குள் எழுந்தபடி இருந்தது. அப்போதெல்லாம் கவிதையை இரகசியமாக நோக்கி இருக்கிறேன்..... நான் கட்டுரை எழுதும்போதுகூட அது என்னுடன் இருந்தது. இன்று ஒரு கட்டறுத்த ஆடுபோல என்னை விட்டு எங்கோ ஒரு முட் புதருக்குள் சிக்கிக் கிடக்கிறது.

பேசிக்கொள்ளும் தருணங்கள் தொடரக் கூடியனவாக இருக்கின்றன..................

# பாசிக்குடா.

கோ. நாதன்

அலைகளற்ற கடலின் இடையே
உப்பு நீரில் மிதக்கின்ற பெரும் கூட்டத்தினூடே
இயற்கை அழிந்து பரந்த கடல் நோயுற்றிருந்தது.?

குழந்தைகளின் குறிகளை மட்டும் கிழித்தெறிந்திருக்கும்
உல்லாச அறைகள் – நிர்வாணப் பிணவுடலானதும்
முருகை கற்பாறைகளிடுக்கில் மறைக்கப்படுகின்றன.
ஆணுறைகளால் வரிந்து கட்டிய சின்னக் கரங்களில்
மருதாணி பதிந்த கறைகளினது அழகு நெடி
இன்னொரு பரிதாபத்தினை மீள்படுத்துகின்றது.

தெளிவுற்றிருக்கும் கடல் நீரிலடியிலிருந்து
குறிகள் வழியே இரத்தக்கசிவு மெல்லிய கோடாய்
நீலக்கடல் நிறத்தை செங்கடலாக்கின்றன.
மீன்களற்ற கடல் என்ற போதும்
பிணங்களை உப்பு நீர் உறைய வைத்திருந்து
மரணத்தின் அமைதியை காட்சிப்படுத்தியுள்ளது.?

தடுப்புக் காவலிலுள்ள தமிழச்சிகளை
கடும் மூளைச்சலவை மூலம் திசை திருப்புதலில்
கட்டாய பாலுறவு செழுமைக்கான பின்னர்
கச்சைகள் மட்டுமான உடலாக்கப்பட்ட  மேனிகள்
சூரியக் குளியல் எனப்படும் மணல் மேட்டின் ஊடலில்
உடல் பிறழ்வு உட்படுத்தப்பட்டே மானம் கரைகிறது.

கொழும்பு பொருளாதார நகர் கட்டிடங்களை மிஞ்சிய
மிக விலை உயர்ந்த உல்லாசக் கட்டிடங்களுள்
மதுக் கோப்பை மீறி வழிகின்ற நுரைகளூடே
தமிழ் சிறுமிகளின் விலை தீர்மானிக்கப்படுகின்றன.
அவர்களது கிழட்டு ஆண்குறியில்
திராட்சை ரசம் பூசிய முழு நிர்வாணவுடலாய்
ஒரு ஆண்மை வெளிப்படுத்தியே  கிடத்தியிருக்கும்.

மௌனமுற்று துயிலும் கடல் நீரின் மேலான
காற்றும் வந்தவனின் கட்டளையின் கையகப்படுத்தலில்
கடற்கரை சுதந்திரம் பறி போய்விட்டது.?
வடை, கிழங்கு, கடலை, கச்சான் விற்கப்பட்டவனின்
நிலத்தில் பதப்படுத்தப்பட்ட
பண்டங்கள் துவக்குகள் வழியே விற்கப்படுகிறது.?





# பெண்களிடம் இருக்கும் அதிகாரம்



## பெண்களுக்கானதல்ல

## பெண்கள்: பன்முக அடையாளங்களும் அதிகாரமும்



- மீராபாரதி

வரலாற்றில் பெண்கள் மீதான அதிகாரம்  தனியுடமை உருவான பொழுதில் இருந்தே  ஆரம்பித்திருக்க வேண்டும். அதாவது தாய்வழிச் சமூகத்திலிருந்து தந்தைவழிச் சமூக மாற்றம் ஆரம்பமானதிலிருந்து பெண்கள் மீதான ஆணாதிக்க சமூகத்தின் அதிகாரம் செயற்பட ஆரம்பித்திருக்கலாம். இது ஆண்களுக்கு பல உரிமைகளையும் சலுகைகளையும் அளித்தது. முதலில் பெண்களை தமது உடமையாக்கினார்கள். ஒரு ஆண் விரும்பியளவு உடலுறவு கொள்ளவும் தேவையானளவு குழந்தைகள் பெறவும் பெண்களை நிர்ப்பந்தித்தார். ஒரு குழந்தையைப் பெறுவதற்கான பெண்ணின் தெரிவை மறுத்தார்கள். பெண் நிலத்தின் மீது உரிமை கொள்வதை மறுத்தார்கள். வீட்டிற்குள் செய்கின்ற வேலைகளுக்கான ஊதியத்தை மறுத்தார்கள், இவ்வாறான வேலைகளைப் பெண்களின் கடமையாக்கினார்கள். பெண்களுக்கு என்று கனவுகள், ஆசைகள், இலட்சியங்கள் இருப்பதைத் தடை செய்தார்கள்.  இதை எல்லாவற்றையும் தனது குடும்பத்திற்காகத் தியாகம் செய்யப் பெண்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இவ்வாறு வீடுகளுக்குள் வாழ்ந்த பெண்களின் மீது ஆண்களின் அனைத்து அதிகாரமும் பல தளங்களில் செயற்பட்டது. மேலும் வீட்டுக்குள் முடக்கப்பட்ட பெண்ணுக்குப் பொது வெளியில் இயங்குவதற்கான நடமாடுவதற்கான சுதந்திரமும் மறுக்கப்பட்டது அல்லது கட்டுப்படுத்தப்பட்டது. ஆண்களின் துணையுடன் மட்டுமே செல்வதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. பொதுவெளியில் பெண்களுக்கான வாக்குரிமை, பேச்சுரிமை, ஊர் சுற்றும் உரிமை என்பன மறுக்கப்பட்டன. ஆகவே பொதுவெளியில் பெண்களுக்கு எந்த அதிகாரமும் இருக்கவில்லை. தனிப்பட்ட வெளி மட்டுமல்ல பொது வெளியும் பெண்களுக்கு பாதுகாப்பானதாக இருக்கவில்லை. இவ்வாறு பெண்கள் மீதான அதிகாரம் எல்லா இடங்களிலும் வெளிகளிலும் அவர்களுக்கு எதிராக நிலை நாட்டப்பட்டது. இதை வெற்றிகரமாக நிறைவேற்ற இறுக்கமான  பண்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவற்றின் விளைவாக பெண்கள் ஆண்களின் அடிமையாக்கப்பட்டார்கள்.



பெண்கள் தம் மீதான அடக்குமுறைகளைப் புரிந்து கொண்டு தம் விடுதலைக்காக கடந்த நூறு ஆண்டுகளாக தீவிரமாகப் போராட ஆரம்பித்தார்கள். இதன் விளைவாக தம் மீதான சுரண்டல்கள், தம்க்கிருக்கின்ற சுதந்திரமின்மை, தெரிவின்மைகள் மற்றும் உடல் மீதான அதிகாரம் தொடர்பாக விழிப்படைந்தார்கள். ஆகவே, தம் உடல் மீதான அதிகாரத்தைக் கோரினார்கள். மேலும் குழந்தை பெறுவதற்கும் கருவைக் கலைப்பதற்குமான தெரிவிற்கான உரிமை மற்றும் வாக்குரிமை, சம தொழில் வாய்ப்புகள், சம ஊதியம், வீட்டில் வேலைப் பங்கீடு என்பவற்றுடன் தம்மை ஒரு சக மனுசியாக மதிக்கும்படியும் கோரினார்கள். கற்பதற்கான உரிமைக்காகப் போராடினார்கள். இவ்வாறான

போராட்டங்களின் விளைவாகப் பெண்கள் படிப்படியாகச் சில உரிமைகளைப் பெற்றுக் கொண்டனர். அதேவேளை பெண்கள் மீதான ஆண்களின் அதிகாரமும் படிப்படியாகக் குறைய ஆரம்பித்தது. ஆனால் இன்னும் முழுமையாக அந்த அதிகார மானது இல்லாமல் போகவில்லை. போராட்டம் தொடர்கின்றது. குறிப்பாகத் தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் தமது விடுதலைக்கான பயணத்தில் பாதியளவு கூட முன்னேறவில்லை.

தமிழ் சமூகங்களில் பெண்கள் மீதான அடக்குமுறை மற்றும் சுரண்டல்கள் என்பது இப்பொழுதும் கூட அடக்குமுறையாகவோ சுரண்டலாகவோ பார்க்கப்படுவதில்லை. மாறாக இவை தமிழர் கலாசாரமாக பண்பாடாக பார்க்கப்படுவதுடன் பெண்களின் கடமைகள் ஆக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் இப்பொழுது சுழல் மாறிவருகின்றது. தமிழ் பெண்கள் அதிகளவில் கல்வி கற்பது மட்டுமல்ல தம் மீதான ஆணாதிக்க சமூகத்தின் கட்டுப்பாடுகளையும் அடக்குமுறைகளையும் புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளார்கள். தமது உரிமைகள் மற்றும் சுதந்திரம் தொடர்பாக தெளிவாக உள்ளார்கள். ஆகவே இதுவரை காலமும் தமிழ் சமூகங்களில் பெண்கள் இருந்த நிலையை தமிழர் பண்பாடு எனவும் இவை பெண்களின் கடமைகள் எனவும் கூறி இனியும் அவர்களை ஏமாற்றமுடியாது. ஆனால் இதைப் பொறுக்க முடியாத (ஆணாதிக்க) சமூகமும் ஆண்களும் இப் பெண்களைப்பற்றிய எதிர்மறையான முத்திரைகளைப் பதிப்பிக்கின்றனர். உதாரணமாக, “ஆட்டக்காரி” “திமிர் பிடித் தவள்” “பிடிவாதக்காரி” “ஆணவம் கொண்டவள்” இப்படி பல. சில பிரச்சனைகள் இயல்பாக மனிதரிடம் இருக்கின்ற தன்முனைப் பினால் உருவானவை. இதற்கு ஆண் பெண் என்ற வேறுபாடி ல்லை. ஆனால் பெண்கள் தமது உரிமைகள் தொடர்பாக கதைப்பதை தட்டிக் கேட்பதை மறுப்பதற்கும் அவர்களை எதிர்மறையாகக் கட்டமைப்பதற்கும் இவ்வாறான முத்திரை களை சமூகமும் ஆண்களும் பயன்படுத்துகின்றனர். இதற்கு ஆதரவாகவே ஆண்களால் நிர்வகிக்கப்படும் ஊடகங்களும் துணைபோகின்றன.

ஊடகங்கள் சமூகத்தில் முன்வைக்கப்படும் இவ்வாறான கருத்துக்களைக் கேள்வி கேட்டு உரையாடல்களை ஆரம்பிக்க வேண்டும். ஆனால் அவர்கள் இதற்கு மாறாக சமூகத்தில் ஏற்கனவே இருக்கின்ற ஆணாதிக்க கருத்துக்களை மீள மீள அழுத்தம் கொடுத்துப் பாதுகாப்பனவையாகவும் மேலும் வேரூன்றசெய்பவையாகவுமே இருக்கின் றன. தூரதிர்ஸ்டவசமாக சமூகத்தின் மீது அக்கறை கொண்ட அல்லது முற்போக்கு கதைக்கின்ற பெரும் பான்மையான ஆண்களும் பெண்கள் எதிர்நோக்கும் பன்முகப் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளத் தவறுகின்றனர். ஆகவே இந்த ஆண்களும் தமது இயலாமையின் இறுதி அம்பாக இவ்வாறான முத்திரைகளைப் பெண்களுக்கு எதிராகப் பயன் படுத்துகின்றனர். இவ்வாறான பார்வையிலிருந்து நாம் விடுபடமுடியும். இதற்கு மீள மீள ஒருவர் மீதான பன்முக ஒடுக்குமுறைகள் மற்றும் அவர் எதிர் கொள்ளும் சுரண்டல்கள் தொடர்பாக நாம் ஆழமாகக் கற்க வேண்டியவர்களாக உள்ளோம். இதுவே சமூகத்திலிருக்கின்ற சகல அடக்குமுறைகளையும் சுரண்டல்களையும் புரிந்து கொள்வதற்கும் அதிலிருந்து விடுபடுவதற்குமான வழியாக அமையும்.



இன்று பெண்கள் வீடுகளில், நிறுவனங்களில் உயர் பதிவிகளில் மட்டுமல்ல சில நாடுகளில் தலைவர் களாகவும் இருக்கின்றார்கள். உலக சனத் தொகை யில் சரிபாதி எண்ணிக்கை கொண்ட பெண்கள் இருந்தபோதும் இவ்வாறு அதிகாரத்தை கையில் கொண்டுள்ள பெண்களின் எண்ணிக்கையானது ஆண்களுடன் ஒப்பிடும் பொழுது மிக மிகக் குறைவா னது. கை விரல்களில் எண்ணி விடலாம். இவ்வாறு குறைவான எண்ணிக்கையுள்ள அதிகாரங்களைக் கொண்ட பெண்களும் பெண்களுக்கான அதிகா ரத்தை வெளிப்படுத்துவதில்லை. மாறாக இவர்கள் ஆண்களின் அதிகாரத்தையும் அதை வழிநடாத்தும் ஆணாதிக்க சிந்தனைகளையும் கொண்டவர்க ளாகவே இருக்கின்றார்கள். மேலும் ஆணாதிக்க நிறுவனங்களைக் கட்டிக் காப்பவர்களாகவுமே இருக்கின்றனர். ஆகவே இச் சிறிய எண்ணிக்கை யான பெண்களின் செயற்பாடுகளை பொதுமைப்

படுத்தி எல்லாப் பெண்கள் மீது விமர்சனங்களை முன்வைக்க முடியாது. மேலும் இவர்களைப் போன்றவர்களே அனைத்துப் பெண்களும் என முடிவு செய்யவும் கூடாது. இது பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறைகளை மறுப்பதற்கும் புறக்கணிப்பதற்குமே ஆதரவளிக்கும். குறிப்பாக இன, மொழி, மதம், சாதி, நிறம், பிரதேசம், தேசம் மற்றும் பல்வேறு நாடுகளின் அடிப்படையில் ஒடுக்கப்படுகின்ற ஆண்கள் இது தொடர்பாக மிகவும் கவனமாக சிந்திக்கவும் எழுதவும் செயற்படவும் வேண்டும். ஏனெனில் இவ்வாறு பல வழிகளில் ஒடுக்கப் படுகின்ற ஆண்கள் இன்னுமாரு ஒடுக்குமுறைக்கு ஆதரவாக அல்லது அதை மறுத்து அல்லது அதைப் புரியாமல் குரல் கொடுப்பது தவறாகும். இது அறமல்ல. மாறாக சக ஒடுக்குமுறை களைப் புரிந்து கொள்ளவும் அவர்களுடன் இணைந்து பயணிக் கவும் முயற்சிக்க வேண்டும்.. அதை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதுதான் எம் முன் உள்ள சவால்?

தலைமைப் பதவிகளில் வீற்றிருக்கின்ற சிறிய எண்ணிக்கை யிலான பெண்கள் கூட எந்தக் கஸ்டமும் இல்லாமல் குறிப்பிட்ட பதவிக்கு வரவில்லை. ஆணாதிக்க சிந்தனை அதிகாரம் செலுத்து கின்ற, அதன் கலாசாரம் ஆழமாக வேரூண்டி இருக்கின்ற சூழலில் பல தடைகளையும் அவமானங்களையும் கடந்தும் அவற்றை எதிர்கொண்டும் இப் பதவிகளுக்கு அவர்கள் வந்திருக்கின்றனர். அந்தவகையில் இவர்கள் பன்முக அடையா ளங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்கள். இவர்களது ஓர் அடையாளம் மக்களைச் ஒடுக்கி சுரண்டுகின்றதாக இருக்கின்ற அதேவேளை இன்னுமொரு அடையாளம் இவர்களையே ஒடுக்குவதாக ஆகக் குறைந்தது கட்டுப்படுத்துவதாக இருக்கி ன்றது. இதற்கு நாம் இப்பொழுது அறியக் கூடிய பிரபல்யமாக இருக்கின்ற ஜெயலலிதா, கில்லரி, சந்திரிகா, போன்றவர்கள் நல்ல உதாரணங்களாகும். இவர்களை மதிப்பிடும் பொழுது இவர்கள் கொண்டிருக்கின்ற சிந்தனை, பதவி மற்றும் அதிகாரம் போன்ற அடையாளங்களை விமர்சிக்கும் அதேவேளை ஒரு பெண்ணாக எதிர்நோக்கும் ஒடுக்குமுறைகளை அல்லது ஆகக் குறைந்தது எதிர்நோக்கும் கருத்தியல் (வசைகளையும்) சவால்களையும் பிரச்சனைகளையும் கருத்தில் கொண்டே விமர்சிக்கப்பட வேண்டும். குறிப்பாக, இவ்வாறு அதிகாரங்களும் பதவிகளும் இல்லாத ஆனால் ஆணாதிக்க சிந்தனைகளுக்கும் நுகர்வுக் கலாசாரத்திற்கு ஆட்பட்டுத் தம் மீதான ஒடுக்கு முறைகளை உணராது பிரக்ஞையின்மையாக உரையாடுகின்ற செயற்படுகின்ற சாதாரண பெண்களை விமர்சிக்கும் நாம் அதிகம் கவனம் எடுக்க வேண்டும். அல்லது சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்ற ஆணாதிக்க கருத்துக்களை நாம் மீள உறுதி செய்வதுடன் அதன் வழியிலான அடக்குமுறைகளையும் சுரண்டல்களையும் பிரக்ஞையின்மையாக ஆதரவளிக்கவும் மீளவும் சமூகத்தில் அவற்றை நிலைநிறுத்தவும் பங்களித்த வர்கள் ஆவோம்.

உதாரணமாக ஜெயலலிதா பிராமண சமூகத்தை சேர்ந்தவர். ஆகவே சாதி அடிப்படையில் சமூகத்தில் உயர் தளத்தில் ஏற்க னவே இருக்கின்றார். பல்வேறு மொழிப்புலமை உடையவர். இந்தியச் சுழலைப் பொறுத்தவரை அவ்வாறு ஒரு பெண் இருப்பது பலமானதே. இவையும் அவருக்கு அதிகாரத்தையும் உயர் தகுதியையும் வழங்குகின்றன. ஒரு நடிகையாகப் புகழ் பெற்றும், பல ஆண்டுகள் முதலமைச்சராகத் தேர்வு செய்யப் பட்டும் தனது தகுதியை, ஆற்றலை, பலத்தை அவர் நிரூபித்துள் ளார். இவற்றையெல்லாம் பல தடைகளை உடைத்து கடந்தே பெற்றுள்ளார். இவரது கருத்துக்களுடன் செயற்பாடுகளுடன் நாம் உடன்படாமல் இருக்கலாம். விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் இந்த ஆணாதிக்க சமூகத்தை எதிர்கொண்டு இவ்வாறு நிற்பதையும் அவரது ஆற்றலையும் நாம் மதிப்பிட்டாக வேண் டும். கருணாநிதியின் அரசியலுக்கு அப்பால் அவரது தமிழுக்காக அவரை மதிப்பதைப் போல இவரது ஆற்றல்களுக்காக இவர் மதிக்கப்பட வேண்டும். குறிப்பாக இவரது பெண் என்ற அடையாளம் இவரது இப் பயணத்திற்கு பெரும் தடையாக இருந்துள்ளது. ஆணாதிக்க சமூகம் பலவழிகளில் இவரை அடக்க முயற்சித்துள்ளது. அசிங்கப்படுத்தியுள்ளது. நல்ல உதாரணம் இவரைப் பற்றி வரையப்பட்ட மூன்றாம் தரமான கேலிச் சித்திரங்கள். அவ்வாறான கேலிச் சித்திரங்களை இங்கு பதிவு செய்வதே அசிங்கமானது எனக் கருதுகின்றேன். பெண்களை அசிங்கப்படுத்த அவர்களது பாலியல் அடையாளங் களையே ஆணாதிக்க சமூக படைப்பாளர்கள் கையாள்வார்கள். இதை எல்லாம் எதிர்கொள்ள இந்த சமூகத்திற்கு ஏற்றவகை யான ஒரு மனிதராக அவர் மாற வேண்டி உள்ளது. இது அவரையும் அவரது செயற்பாடுகளையும் நியாயப்படுத்து வதல்ல. அவரது சிந்தனை மற்றும் மக்கள் விரோத செயற்பாடு கள் தொடர்பாக கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட வேண்டும். ஆனால் இங்கு கருத்தில் எடுக்கப்படுவது அவர் கொண்டுள்ள அடக்கப்படும் அடையாளம் சார்ந்த ஒரு பார்வை மட்டுமேயாகும்.

ஜெயலலிதா அவர்களை இருவர் நேர்காணல்கள் எடுத்துள்ள னர். ஒருவர் ஆண் மற்றவர் பெண். ஆண் எடுத்த நேர்காணலில் இருவரும் ஏட்டிக்குப் போட்டியாகவும் வன்மமாகவுமே கேள்வி பதில் அளிக்கின்றனர் (Karan Thapar interview with Jayalalitha). இவ்வாறான ஒரு மனிதருடன் நேர்காணல் எடுக்க வேண்டுமாயின் எந்தளவு பொறுமையாகவும் உறுதியாகவும் தெளிவாகவும் பயமின்றி சமரசமின்றி கேள்வி கேட்க வேண்டும் என்பதற்கு இந்த நேர்காணலை எடுத்தவர் நல்ல உதாரணம். அதேவேளை பெண் நிருபர் எடுத்த நேர்காணலில் ஜெயலலிதா அளித்த பதில்கள் புறக்கணிக்க கூடியவையல்ல. ஒரு பெண்ணாக அவர் எவ்வளவு கஸ்டப்பட்டிருக்கின்றார். கட்டுப் பாட்டுக்குள் இருந்திருக்கின்றார். இந்த ஆணாதிக்க சமூகம் அவரை எவ்வாறு மாற்றுகின்றது எனப் பலவற்றை அறிந்து கொள்ளலாம். ஆரம்பத்தில் அம்மாவின் கட்டுப்பாடு, அதேவேளை அம்மாவின் அன்புக்கு ஏங்குவது, அம்மாவின் மரணம், தனிமை, எம்.ஜி.ஆர் தனது கட்டுப்பாட்டுக்குள் அவரைக் கொண்டுவருவதும் பயன்படுத்துவதும் என தொடர்கின்றது. “நான் இவ்வாறு இருப்பதற்கு உங்களைப் போன்றவர்கள் தான் காரணம்” என நேர்காணல் எடுத்த ஆணையும் இந்த ஆணாதிக்க சமூகத்தையும் குற்றம் சாட்டுகின்றார். புலமை, ஆளுமை மற்றும் புகழுடன் அதிகாரத்தில் இருக்கின்ற ஒரு பெண்ணிற்கே இவ்வளவு பிரச்சனைகள் எனின் சாதாரண பெண்களின் நிலையை எண்ணிப் பார்க்கலாம்.

இதேவேளை ஜெயலலிதாவை ஒரு பெண் நேர்காணல் காண்கின்றார் (Rendezous with Simi Garewal & Jayalalitha)

**“ இதேவேளை ஜெயலலிதாவை ஒரு பெண் நேர்காணல் காண்கின்றார் (Crendezvous with Simi Garewa & J) அதில் இவரது இன்னுமொரு மனித அடையாளம் வெளிப்படுகின்றது. வெட்கம், மகிழ்ச்சி, ஆனந்தம் என பல உணர்வுகளை இருவரும் வெளிப்படுத்துகின்றனர். ஒரு சூழலை நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் மாற்றுவதில் சக மனிதர்களின் பங்கு எந்தளவு முக்கியமானது என்பதற்கு இந்த இரண்டு நேர்காணல்களும் நல்ல சான்று. இரு நேர்காணல்கள் எடுக்கப்படும் சூழல்களும் கருத்தில் கொள்ளப்படலாம். பெண் எடுக்கின்ற நேர்காணலில் அவர்களுக்கு இடையில் எந்தவிதமான தடைகளும் இல்லை. அவர்களது மனங்களைப் போல திறந்த வெளிகளாக இருக்கின்றன. ரம்மியமான ஒரு சுழல். ஆனால் ஆண் எடுக்கின்ற நேர்காணலில் இருவருக்கும் இடையில் ஒரு பெரிய மேசை மதில் சுவர் போல் தடையாக இருக்கின்றது. இந்த தடைச் சுவர் நீக்கப்படாத வரை மற்றவரைப் புரிந்து கொள்வது என்பது கஸ்டமானது. ”**

அதில் இவரது இன்னுமொரு மனித அடையாளம் வெளிப்படுகின்றது. வெட்கம், மகிழ்ச்சி, ஆனந்தம் என பல உணர்வுகளை இருவரும் வெளிப்படுத்துகின்றனர். ஒரு சூழலை நேர்மறையாகவும் எதிர்மறையாகவும் மாற்றுவதில் சக மனிதர்களின் பங்கு எந்தளவு முக்கியமானது என்பதற்கு இந்த இரண்டு நேர்காணல்களும் நல்ல சான்று. இரு நேர்காணல்கள் எடுக்கப்படும் சூழல்களும் கருத்தில் கொள்ளப்படலாம். பெண் எடுக்கின்ற நேர்காணலில் அவர்களுக்கு இடையில் எந்தவிதமான தடைகளும் இல்லை. அவர்களது மனங்களைப் போல திறந்த வெளிகளாக இருக்கின்றன. ரம்மியமான ஒரு சூழல். ஆனால் ஆண் எடுக்கின்ற நேர்காணலில் இருவருக்கும் இடையில் ஒரு பெரிய மேசை மதில் சுவர் போல் தடையாக இருக்கின்றது. இந்தத் தடைச் சுவர் நீக்கப்படாத வரை மற்றவரைப் புரிந்து கொள்வது என்பது கஸ்டமானது.

இவரைப் போல் அண்மைய காலங்களில் அதிகம் அடிபடுகின்ற பெயர் கில்லரி. குறிப்பாக இவர் ஒபாமாவுடன் போட்டி போட்ட காலங்களில் போருக்கு ஆதரவளித்து உரையாற்றியபோது இவர் ஆண் (சிந்தனை) களின் பிரதிநிதியாகவே (எனக்குத்) தோன்றினார். அதேவேளை ஒபாமா ஒப்பீட்டளவில் பெண்களின் பிரதிநிதியாக அல்லது பெண்நிலை சார்ந்தே தோன்றினார். ஏனெனில் அவர் அன்று போர் எதிர்ப்பாளராக இருந்தார். (ஒபாமா இன்று போரை வேவ்வேறு வழிகளில் முன்னெடுக்கின்றார். இதற்கு அவர் தலைமை தாங்கும் நிறுவனத்தை மீறி அவ(ர்)ரால் ஒன்றும் செய்ய முடியாது அல்லது செய்யாது இருப்பது காரணமாக இருக்கலாம்.) ஆனால் அன்று சிலர் கில்லரி பெண்ணாக இருப்பதால் அவரை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு எடுத்தவர்களும் உள்ளனர். இவ்வாறான சுழ்நிலைகளில் ஒருவரது கருத்தியலை கணக்கில் எடுக்காமல், அதனை ஆராயாது, அவரது அடையாளத்திற்காக மட்டும் அவரை ஆதரிப்பது என்பது ஆபத்தானது. இதேவேளை கில்லரி வெள்ளையினப் பெண்ணாக இருந்தபோதும் இந்த ஆணாதிக்க சமூகத்தில் அமெரிக்க ஜனாதிபதிக்கான அவரது போட்டி பெண்களுக்கு நம்பிக்கையளிக்கின்ற ஒரு செயற்பாடு என்றால் மிகையல்ல. இவ்வாறு பெண்களின் அடையாளம் என்பது ஆணாதிக்க சமூக கலாசார சித்தனை கொண்ட சூழலில் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றது. ஆகவே இப் பெண்களையும் அவர்கள் எதிர்நோக்கும் மற்றும் அவர்கள் உருவாக்கும் பிரச்சனைகளையும் ஒற்றைப்படையாகவோ தட்டையாகவோ பார்க்க முடியாது.

ஒபாமாவைப் போல் சமாதானம் பேசி வந்தவர் சந்திரிகா. ஆனால் இறுதியாக அவரும் சிங்கள பௌத்த பேரினவாத நிறுவனத்திற்குள் அகப்பட்டார். விழுந்தார். அல்லது அவரது சிந்தனையும் ஆழ்மனதில் அதுவாகவே இருந்திருக்க வேண்டும். சந்திரிக்கா இந்த நிறுவன ஆதிக்கத்தைப் பற்றி புரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் ஒபாமாவும் புரியாமல் இருந்திருப்பாரா என்பது சந்தேகமும் கேள்வியுமே. இருப்பினும் ஒபாமா பெண்களுக்கு குறிப்பிட்ட பதவிகளுக்கு உரிய ஊதியம் வழங்கப்படுவதில்லை எனவும் ஆண்களுக்கு நிகராக ஒரே தொழிலுக்கு அதேயளவு ஊதியம் பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதையும் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இது அமெரிக்கா போன்ற ஜனநாயக நாடுகளில் கூடப் பெண்கள் எந்தளவு பாரபட்சமாக நடாத்தப்படுகின்றார்கள் என்பதற்கான சான்றாகும். அந்தளவிற்கு அரசு, அரசாங்கங்கள், கல்வி நிறுவனங்கள், சமய நிறுவனங்கள் என அனைத்து சமூக நிறுவனங்களும் ஆண்நிலைக் கருத்துகளை மையமாகக் கொண்டவை. ஆதிக்கம் செய்கின்ற கட்டுப்படுத்துகின்ற சிந்தனைகளும் அவையே. இவை உருவாக்கிய கலாசாரமே சமூகத்தின் பொதுவான கலாசாரம் என ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. மேலும் இவை அதிகாரப்படிநிலையானவை ஒரு ஒழுங்கமைவையே அனைத்து நிலைகளிலும் உருவாக்குகின்றன. ஆகவேதான் இதற்குமாறாக ஒவ்வொரு நிறுவனத்திற்குள்ளும் வெளியிலும் சூழலிலும் பெண்களையும் சம அளவில் இணைக்கின்ற மதிக்கின்ற அவர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குகின்ற அதிகாரப்படிநிலையற்ற பண்பாட்டை கலாசாரத்தை சிந்தனைகளை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது.

ஒரு குடும்ப நிறுவனத்திற்குள் ஒரு பெண் படித்து வேலைக்குப் போய் நிறையப் பணம் உழைப்பது என்பது இன்று அவசியமானது. இப்பொழுது அது ஒரு கலாச்சாரமாகவும் உருவாகிக் கொண்டு வருகின்றது. ஆனால் இவ்வாறு பொது வெளிக்கு வரும் பெண்கள் ஆண்களால் உருவாக்கப்பட்ட கலாசாரச் சமூகத்திற்குள் வாழவும் வேலை செய்யவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். மேலும் ஆண் நோக்கு நிலையிலிருந்தே இவர்களது பிரச்சனைகள் பார்க்கப்படுகின்றன. குழந்தைகள் பராமரிப்பு மற்றும் வீட்டு வேலைகள் தொடர்பான பொறுப்புகளை எடுக்காது வேலைக்கு செல்கின்ற ஆணுக்கும்

இப்பொறுப்புகளை செய்து கொண்டு மட்டுமல்ல மாதாந்த இரத்தப்போக்கு வயிற்றுக் குத்துடனும் வேலைக்கு செல்கின்ற பெண்ணுக்கும் இடையில் பல வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால் இவை கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. மறுபுறம் இவ்வாறு படித்து வேலைக்குப் போகின்றவர்கள் எல்லோரும் பெண்ணிநிலை வாதிகளோ அல்லது பெண்ணிலைவாதக் கருத்துக்களைக் கொண்டவர்களோ அல்ல. ஆனால் இதுவரை பெண்ணியவாதப் போராட்டங்கள் பெற்றுக்கொடுத்த வெற்றிக ளையும் உரிமைகளையும் இப் பெண்கள் அனுபவிக்கின்றனர். இந்தப் பெண்களில் பெரும்பான்மையானவர்கள் ஆணாதிக்க சிந்தனைக்கு உட்பட்டவர்கள் மட்டுமல்ல நுகர்வுக் கலாசா ரத்தின் ஆதிக்கத்தையும் உள்வாங்கியவர்கள். அதற்கு ஏற்ப தமது முன்னேற்றத்திற்காக ஆண்களைப் போல, (தம்மை அடக்கி சுரண்டுகின்ற ஆண்களுடனும் அவர்களுக்கு எதிராகவும்) போட்டி போடவும் போராட வேண்டியவர்களாகவும் இருக்கின் றார்கள். இதன் விளைவாகப் இப் பெண்கள் “அதிகார மோகம் கொண்டு அலைகின்றார்கள்”, “ஆண்களை மதிப்பதில்லை”, “அடங்காப்பிடாரி”, “ஆட்டக்காரி” என சமூகம் இவர்கள் மீது முத்திரைகள் குத்துகின்றன. இந்த மதிப்பீடுகள் ஆணாதிக்க சிந் தனையின் வெளிப்பாடுகளாகும். இவ்வாறு இப் பெண்களை எதிர்நிலைக்கு கொண்டு சென்று விமர்சிப்பது ஆரோக்கியமான வழியல்ல. இதற்கு மாறாக இவர்களைச் சுற்றி சமூகம் கட்டமைத்த சிந்தனைகளை கட்டவிழ்ப்பு செய்ய முயற்சிப்பதே ஆரோக்கியமான பார்வையும் வழியுமாகும். இதைச் செய்யாமல் இந்த சமூகத்திற்கு பலியாகிப் போன பெண்களை அதுவும் ஒருசிலரை பெரிதுபடுத்தி பொதுமைப்படுத்துவது சரியான பார்வையுமல்ல. இது மேலும் பெண் ஒடுக்குமுறைக்கு ஆதர வான பார்வையாக, செயற் பாடாகவே இருப்பதுடன் சமூகத்தில் ஏற்கனவே நிலவுகின்ற ஆணாதிக்க சிந்தனையை மீள நிலைநாட்டுவதற்கே பங்களிக்கும்.



இன்றைய உலகத்தில் கூட (தமிழ்) பெண்களுக்கு தனது நாட்டுக்குள் மட்டுமல்ல தனது ஊருக்குள்ளேயே இருட்டிய பின்னர் ஊர் சுற்ற முடிவதில்லை. இவர்களால் ஆண்களைப் போல உலகம் சுற்றவும் முடியாது. பாதுகாப்பு பிரச்சனை. எப்பொழுதும் எதுவும் நடக்கலாம் என்ற அச்சம். பாலியல் தொல்லைகளுக்கும் வன்புணர்வுக்கும் உட்படலாம் என்ற பயம். ஆனால் ஆண்களுக்கு அப்படியல்ல. எந்த ஊரிலும் எந்த நாட்டிலும் எந்த நேரமும் உலகமெல்லாம் எப்படியும் சுற்றித் திரியலாம். (சில விதிவிலக்குகளைத் தவிர. இந்த சுதந்திரம் வெள்ளை ஆண்களுக்கே அதிகம் பொருத்தமானது). இவ்வாறு ஊர் உலகம் சுற்றுகின்ற ஆண்கள் மட்டுமல்ல ஊருக்குள்ளே கட்டுப் பெட்டியாக இருக்கின்ற ஒரு ஆண் கூட எத்தனை பெண்களுடனும் உறவு வைத்திருக்கலாம். காதலிக்கலாம். கடைசியில் ஒரு பெண்ணை திருமணம் செய்யலாம். இந்த ஆண்கள் பெரும்பாலும் பிரச்சனைகளை எதிர்நோக்குவதில்லை. ஆனால் ஒரு பெண் இவ்வாறு இருந்துவிட்டால் அவளால் இன்னுமொரு திருமணம் மட்டுமல்ல இன்னுமொருவரைக் காதலிப்பது கூட சாத்தியப்படாது. விதி விலக்குகள் இருக்கலாம் ஆனால் பொதுவாக இப்படித்தான் இருக்கின்றது. இவ்வாறான ஒரு சுழலில் எந்தவிதமான அடிப்படைகளும் இல்லாது ஆண்கள் தமக்கு தனிப்பட நேர்ந்துவிட்ட ஒரு நிகழ்விற்காக பெண்களைப் பொதுவாக விமர்சிக்கின்றபோது அதிகமான பொறுப்புணர்வும் அக்கறையும் கொள்ள வேண்டும். பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளின் பன்முக தன்மைகளை ஆராய்ந்துதான் இவற்றை வெளிக்கொண்டுவரவேண்டும். அதுவே நியாயமான வழிமுறையும் பார்வையுமாகும்.

பெண்கள் பல்வேறு உரிமைகளை இன்று பெற்றிருந்தாலும் இன்னும் சமூக பொருளாதார அரசியல் இனப்பெருக்க மற்றும் பாலியல் உரிமைகளை அடை வதற்கு பெறுவதற்கு பல தடை களை எதிர்நோக்குகின்றனர். அரசின் கொள்கைகள் பெண்களின் வாழ்விலும் செயற் பாட்டிலும் மாற்றங்கள் பல வற்றை ஏற்படுத்தியுள்ளன. அதேவேளை பெண்களுக்கு ஒரு புறம் உரிமைகள் இருந்தாலும் மறுபுறம் அதை அனுபவிக்க முடியாத தடைகளும் உள்ளன. ஒரு புறம் (ஆண்கள் பெண்கள்) அனைவரும் ஒரு நாட்டின் பிரஜைகள் எனவும் சம வாய்ப் புகளும் அந்தஸ்தும் உள்ளது எனவும் கூறுவார்கள். மறுபுறம் இன்றும் குடும்பம், அரசு, தொழிற் துறை, மதம், மற்றும் நீதித்துறை போன்றவை ஆணாதிக்கக் கருத்துக்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன. இவை பெண்கள் மீதான கட்டுப்பாடுகளாக வெளிப்படையாகவோ மறைமுகமா கவோ செயற்படுகின்றன. இந்தடிப்படைகளில் இவ்வாறான சமூக நிறுவனங்கள் தொடர்பான புரிதல் அவசியமானது.

அரசு, மதம், கல்வி, மட்டுமல்ல குடும்ப “நிறுவனங்கள் அனைத்தும் அடிப்படையிலையே மனிதர்களை அடக்கி கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அதிகாரம் நிறைந்தவை யாகும்.” மேலும் “இந்த நிறுவனங்கள் பால் அடிப்படையிலும் ஒடுக்குமுறையையும் பாரபட்சத்தையும் மேற்கொள்பவை.” ஆகவே ஆண்களே எப்பொழுதும் அதிகாரத்தில் இருக்கின்றனர். அல்லது ஆணாதிக்க சிந்தனைகளே எப்பொழுதும் அதிகாரத்தில் இருக்கின்றன. “அதிகாரத்துவம் என்பது ஒரு சமூக கட்டமைப்பு. இங்கு சில சமூக நடவடிக்கைகளும் குறிப்பிட்ட சில மொழிகளும் பழக்கவழக்கங்களும் பின்பற்றப்படும். அவையே நிரந்தர மானவையாகும். இதைப் பின்பற்றுகின்றவர்களுக்கே ஊக்குவிப்



புகளும் கௌரவங்களும் வழங்கப்படும்." "இந்த நிறுவனங்களில் கீழ்படிவுள்ளவர்களாக இருப்பதற்கு "பெண்மையான" பழக்கவழக்கங்களையும் செயற்பாடுகளையுமே ஆணாகவோ பெண்ணாகவோ இருந்தாலும் பின்பற்றவேண்டும். இதன் அர்த்தம் பெண்ணாக இருப்பின் இந்த நிறுவனங்களில் கஸ்டமில்லாமல் வேலை செய்யலாம் என்றோ விரைவாக உயர் பதவியை அடையாளம் என்பதோ அல்ல. அவ்வாறு உயர் பதவியை அடைவதற்கு அதிகாரத்துவ நிறுவனம் உருவாக்கிய "ஆண்மைத்தனமான" பழக்கவழக்கங்களையும் செயற்பாடு களையும் பின்பற்றவேண்டும்" என்கின்றனர் பெண்ணியவா திகள். இங்கு "பெண்மை என்பது கீழ்படிந்துபோவது மற்றவரிடம் இரஞ்சுவது என்பதாக கட்டமைக்கப்பட்டுள்ளது." இதனால்தான் "அதிகாரத்துவமானது பெண்ணியத்துடன் இணைந்து செல்ல முடியாதது மட்டுமல்ல ஆண்களை மையப்படுத்திய அரசானாது பெண்களை உள்வாங்கவோ அல்லது பெண்களுக்கு பதில ளிக்கவோ முடியாதது" என சில பெண்ணியவாதிகள் கூறுகின்றனர். மேலும் "ஒரு அரசை உருவாக்குகின்ற வழிமுறையில் பெண்களுக்கு குறைவான பங்களிப்பே உள்ளது. அல்லது எந்தவிதமான பங்குமில்லை எனக் கூறலாம்." இங்கு, "உருவாக்கப்படும் அரச சட்டங்களும் கொள்கைளும் பெண்களுக்கு எதிரான, பெண்கள் மீதான பாலியல், உழைப்பு, சந்ததி போன்ற பெண்களின் மீதான அதிகாரத்தின் அடிப்படையிலையே உருவாக்கப்படுகின்றன". ஆகவேதான் "பெண்ணியம் என்பது அனைத்து (ஆண்) ஆதிக்க நிறுவனங்களையும் எதிர்ப்பதாக இருக்கின்றது. "இந்த நிறுவனங்கள் உருவாக்கிய சிந்தனைகள், பழக்கவழக்கங்கள் சிறு வயதிலிருந்தே எங்கள் ஆழ் மனங்களில் நன்றாகப் பதிந்து விடுகின்றன. ஆனால் இப் பழக்கவழக்கங்கள் மற்றும் குறிப்பர்க ஆண்கள் அனுபவிக்கின்ற சலுகைகள் தவறு நியாயமற்றது நீதியற்றது எனப் புரிந்தபின்பும் எத்தனை பேர் இதிலிருந்து விடுபட முயற்சிக்கின்றோம்" எனப் பெண்ணியவாதிகள் கேட்கின்றனர். இக் கேள்வி நியாயமானதே.

**"இன்றைய உலகத்தில் கூட (தமிழ்) பெண்களுக்கு தனது நாட்டுக்குள் மட்டுமல்ல தனது ஊருக்குள்ளேயே இருட்டிய பின்னர் ஊர் சுற்ற முடிவதில்லை."**

பல்வேறு கட்டுரைகளிலிருந்து எடுத்து தொகுக்கப்பட்ட கருத்துக்கள். பால் பாலியல் காமம் காதல் பெண் பெண்ணியம் என்ற நூலில் வெளிவந்த கட்டுரை.

# ஆயுத எழுத்து
# ஒரு சிப்பாயின் உலகம்






போருக்கும் போராட்டத்திற்கும் வித்தியாசமிருக்கிறது. அதேபோன்றுதான், இராணுவத்திற்கும் விடுதலை அமைப்பிற்கும், சிப்பாய்க்கும் போராளிக்குமிடையே வித்தி யாசங்கள் இருக்கின்றன.

போர், இராணுவம், சிப்பாய்கள் போன்ற சொற்களைச் சொல்லும்போதே எமது மனத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் அனேகமாக எதிர்மறையானவை. இந்தச் சொற்களை அதிகாரத்துடனும், பழமையுடனும், அநீதிகளுடனும், அழிவுகளு டனும், வதைகளுடனும் வலிகளுடனும் தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகின்றன.

ஆனால், விடுதலை, போராட்டம், போராளிகள் போன்ற சொற்கள் இப்போதும் எமது மனங்களில் ஒருவகைக் கனவுவாதக் கிளர்ச்சியையே ஏற்படுத்துகின்றன. இந்த சொற்கள் நீதியுடனும், கனவுடனும், புதுமையுடனுமே அனேகமாகத் தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகின்றன.

நாம் கற்ற வரலாறுகளும், நாம் பெற்ற அனுபவங்களுமே போருக்கும் போராட்டதிற்கும், சிப்பாய்க்கும் போராளிக்கு மிடையேயான வித்தியாசங்களை நாம் உணரக் கற்றுத் தந்துள்ளன.

ஒரு போராளி யார் என்று கேட்டால் "அவர் சிப்பாயல்ல" என்பதே சுருக்கமான பதில்.
அப்படியென்றால், சிப்பாயென்றால் யாரென்ற கேள்வி வருகிறது.

சிப்பாயோ தானிருக்கும் அரசில் தன்னை அடையாளம் காண்பவர். அந்த அரசின் அங்கமாகத் திகழ்பவர். அரசின் கொள்கைகளில் இருக்கும் அநீதிகள் பற்றி அக்கறை கொள்ளாதவர். அல்லது தன் மட்டில் நியாயப்படுத்திக் கொள்பவர். தான் அங்கமாக விளங்கும் அரசு கொண்டிருக்கும் கொள்கைகளை, பண்புகளை அப்படியே காப்பதற்காகச் செயற்படுபவர். சுருக்கமாகச் சொன்னால் சொல்வதைச் செய்பவர். இருப்பதை அப்படியே காப்பவர். இருப்பதிலிருக்கும் நியாய, அநியாயங்கள் பற்றி அவருக்கு அக்கறையில்லை.

ஆனால், ஒரு போராளிக்கு இருக்கும் அல்லது இருக்க வேண்டிய மனோநிலையோ சிப்பாயின் மனோநிலைக்கு நேர்எதிர்மாறா னது. அவர் என்ன இருக்கிறதோ அதில் திருப்தி கொள்வதில்லை. தன்னையும் மக்களையும் ஆட்சி செய்யும் அரசின் கொள்கை களில், அடிப்படைப் பண்புகளில் இருக்கும் அநியாங்களையும் அநீதிகளை அவரால் சகித்துக்கொள்ள முடிவதில்லை. அதனா லேயே ஒரு நபர் போராளியாக உருவெடுக்கிறார். அவரது நோக்கமோ இருப்பதைக் குலைப்பது. அலசி ஆராய்வது. அநியாங்களையும்



-தர்சன்

அநீதிகளையும் எதிர்ப்பது. இருப்பதை மாற்ற முற்படுவது. முடியாவிட்டால் அழிப்பது.

இந்த நோக்கங்களைக் கொண்ட போராளிகளும் போராட்ட அமைப்புகளும் தாம் எந்த அநியாயங்களுக்கும், அநீதிகளுக்கும் எதிராகப் போராடுகின்றனவோ அதே அநியாயங்களையும் அநீதிகளையும் தமது பண்பாகக் கொண்டிருக்க முடியாது.

ஒரு அரசு இனவாத ரீதியில் செயற்பட்டு அதன் மக்களின் ஒரு பகுதியினரை ஒடுக்குகிறதென்றால், அதற்கு எதிராகப் போராடும் விடுதலையமைப்பொன்று இனவாத ரீதியில் செயற்பட முடியாது. இனவாத அரசைக் கேள்விகளில்லாமல் பாதுகாக்கும் இராணுவச் சிற்பாய்கள் போல் இனவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் அமைப்பை தம்மைப் போராளிகளாக கருதுபவர்கள் கட்டிக்காக்க முடியாது.

எப்போது மக்கள் மீது ஈவிரக்கமின்றி அநியாயங்களையும் அநீதிகளையும் இழைத்துவிடும் அரசின் பண்புகளை அதே அரசுக்கு எதிராகப் போராடும் போராட்ட இயக்கமொன்று தமது பண்புகளாக வெளிப்படுத்துகின்றதோ அன்றே அது தனது திசைகாட்டியைத் தொலைத்து விடுகிறது.

அரசு போலவே செயற்படுமொன்று விடுதலை இயக்கமாக இருக்கமுடியாது. இராணுவச் சிற்பாய்போல் சொல்லிலும் செயலிலுமிருக்கும் நியாய அநியாயங்களை அலசிப்பார்க் காமல் சொன்னதை செய்பவர் போராளியாக இருக்க முடியாது.

ஈழ விடுதலைப் போராட்டம் போராளிகளையும் உருவாக்கி யிருக்கிறது. தம்மைப் போராளிகளாக நினைத்துக்கொண்ட சிப்பாய்களையும் உருவாக்கியிருக்கிறது.

ஆயுத எழுத்து என்ற இந்த நாவல் புலிகள் அமைப்பில் போராளியாகத் தன்னை நினைத்துகொண்ட ஒரு சிப்பாயின் கதையைச் சொல்கிறது.

நாவலின் பிரதான பாத்திரம் “அவன்“ என்று மட்டுமே அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. தன் தந்தையின் தொந்த ரவே உலக மகா தொந்தரவாக தெரிந்த அவனின் பார்வையை தமிழருக்கு எதிரான 83 ஆம் ஆண்டு யூலை வன்முறையும் படுகொலைகளும் மாற்றிப் போடுகின்றது. இலங்கை அரசின் கொடுமைகளுக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற உந்துதல் அவனுக்கு இங்கேயிருந்துதான் பிறக்கிறது.

அவன் யாழ்பாணத்தின் மேலாதிக்க சாதியான வெள்ளாளர் சாதியைப் பின்னணியாகக் கொண்டவன். மத்தியதர வர்க்கத் தைச் சேர்ந்தவன்.இந்த சாதியையும் வர்க்கத்தையும் சேர்ந்த இளைஞர்கள் பெரும்பாலும் அப்போது புளோட் இயக்கத்தையே விரும்பி னார்கள். அந்த இயக் கத்துடனேயே இணைந்தார்கள்.

நாவலின் பிரதான பாத்திரமான அவனுக்கு புளொட் இயக்கத்தில் சேர்வதில் தடைகளிருந்தன. முதலா வது தடையாகவிருந்தது அவனது சொந்தக்காரர் கள் புளொட் இயக்கத்தில் முக்கிய பொறுப்பிலி ருந்தது. இவர்கள் இவனைக் கண்டால் “போய் ஒழுங்காப் படியடா “ என்று குட்டியனுப்பி விடு வார் கள் என்ற பயம். இரண்டாவது தடையாகவி ருந்தது புளொட் இயக்கத்தின் உள் இயக்க வன்முறை களும் கொலைகளும்.

புளொட்டை விட்டால் அவனுக்கு அடுத்த தெரிவாக விருந்தது ஈ.பி.ஆர்.எல்.எப். ஆனால், இவனுக்கு இந்த இயக்கத்தில் சேர்வதற்கும் அவனது பார்வையில் இரண்டு வில்லங்கங்கள் இருந்தன. முதலாவது வில்லங்கமாவிருந்தது “செஞ்சீனம்“ என்ற புத்தகம். இரண்டாவது வில்லங்கமாக விருந்தது கியூபா விடுதலைப் போராட்டம்/ கியூபாப் புரட்சி என்ற புத்தகம். இரண்டையும் வாசித்தால்தான் ஈ.பி.ஆர்.எல்.எப்பில் இணையலாம் என்று பொறுப்பாளர் சொல்லிவிட்டார்.

இவையெல்லாம் அவனுக்குச் சரிப்பட்டு வரவில்லை.
புலிகளை அணுகுகிறான். எறிகுண்டை எப்படி எறியலாம், ரிவோல்வரை எப்படி இயக்கலாம் என்ற விளக்கத்துடன் அவனிடம் ஒரு ரிவோல்வர் கொடுக்கப்படுகிறது.

இந்த அணுகுமுறை அவனைக் கவர அவன் புலிகளில் இணைந்து கொள்கிறான்.

வந்தவுடன் ஆயுதத்தைக் கையில் கொடுக்கும் அணுகுமுறை யால் கவரப்பட்டதாலோ என்னவோ அவன் புலிகளில் இணைந்த காலத்திலிருந்து 2000 ஆண்டுகளின் ஆரம்பங்களில் வெளியேற்றப்படும்வரை ஒரு சிப்பாயாகவே வாழ்கிறான்.

இலங்கையரசு மக்களை ஏமாற்றும் வேலைகளில் ஈடுபடுவது போலவே அவன் உறுப்பினராக இருந்த புலிகள் அமைப்பும் ஈடுபடுகிறது. தம்பியைக் கேடையமாக வைத்தே அண்ணனைக் கொலைசெய்யும் சகோதர இயக்க அழிப்புகளில் ஈடுபடுகிறது. இலங்கையரசு, இந்திய அரசு போலவே பொது மக்கள் கொலைகளில் ஈடுபடுகிறது. இலங்கை அரசுபோலவே இனவாதரீதியான செயற்பாடுகளில் ஈடுபடுகிறது. இலங்கையில் வடக்கில் தமது கட்டுபாட்டுப் பகுதியிலிருந்த முஸ்லீம்களை ஈவிரக்கமின்றி வெளியேற்றுகிறது.

எந்த அரச குணாம்சங்களுக்கு எதிராகப் போராடுகிறோம் என்று சொன்னார்களோ அதே குணாம்சங்களைக் கொண்ட அமைப்பாக புலிகள் மாறுவதை இந்த நாவல் பதிவு செய்கிறது.
புலிகளின் மேற்குறிப்பிட்ட செயல்கள் சிலவற்றில் “அவன்“ நேரடியாக ஈடுபடுகின்றான். சில செயல்கள் அவனுக்கு சங்கடத்தையும் சஞ்சலத்தையும் கொடுக்கின்றன. ஆனால், எந்தக் கட்டத்திலும் எந்த அநியாயமான செயல்களும் அவனை அவனது இயக்கத்தின் செயற்பாடுகளைக் கேள்விகுட்படுத்தி, அதிலிருந்து வெளியேறும் உந்து விசையைக் கொடுக்கவில்லை. புலிகள் அமைப்பு அவனை வெளியேற்றும் மட்டும் அமைப்பு சொல்வதைச் செய்கிறான்.

ஆகவேதான் இந்த நாவலின் பிரதான பாத்திரத்தை ஒரு போராளியாக அடையாளங் காணாமல் ஒரு சிப்பாயாகவே அடையாளம் காண்கின்றேன்.

கடந்த கால வரலாறுகளை, வரலாற்று நிகழ்வுகளை அடிப் படையாக கொண்ட நாவல்களின் வெற்றி அது பேசுபொருளாகக் கொண்ட சமூகத்தில் பிரபல்யமில்லாத அல்லது தெரியாத

கோணங்களையும் காட்சிகளையும் காட்டிவிடுவதிலேயே தங்கியிருக்கிறது. இதற்கு எந்தச் சமூகத்தை, காலத்தைப் பின்னணியாகக் கொண்டு நாவல் இயங்குகிறதோ அந்தச் சமூகத்தின் ஆதிக்கப் பார்வையில் கதை சொல்லப்படக் கூடாது.

ஆனால், ஆயுத எழுத்து என்ற இந்த நாவல் அது இயங்கும் சமூகத்தின் ஆதிக்கப் பார்வையிலேயே பெரும்பாலும் கதைகளைச் சொல்லியிருக்கிறது.

புலிகள் இயக்கத்தை மையமாகக் கொண்டு இயங்கும் இந்த நாவல் பண்டிதர், திலீபன் போன்ற பிரபல்யமான புலிகளின் உறுப்பினர்களை பொதுவாகச் சமூகம் விரும்பும் வெளிச்சத்திலேயே காட்டுகிறது. அதேநேரம், "துரோகியாகக்" காட்டப்பட்டு கொலை செய்யப்பட்ட மாத்தையா போன்றவர்களையும் எதிர் மறையான நிறம் கொண்டே தீட்டுகிறது. அதாவது, மாத்தையா என்பவர் சார்ந்து தமிழ் ஆதிக்கப் பொதுத்தளம் எந்தவகைக் கருத்துக்களைக் கொண்டிருக்கிறதோ அந்தவகைக் கருத்திற்கு மேலும் உரமூட்டியிருக்கிறது. மாத்தையா போன்றவர்களின் "நல்ல" பக்கங்களைச் சித்தரித்து அவர்போன்ற பாத்திரங்களை மனிதராக்க இந்த நாவால் முயலவில்லை.

அதனால்தான் சொல்கிறேன் இந்த நாவலின் கதை பெரும்பாலும் ஆதிக்க பார்வையூடாகவே சொல்லபட்டிருக்கிறது என்று.
மேலும் சொல்வதானால்
நாவலின் "அவன்" என்ற பிரதான பாத்திரத்தை எடுத்துக் கொள்வோம். முன்பே சொன்னதுமாதிரி அவன் யாழ்ப்பா ணத்தின் ஆதிக்க சாதியைப் பின்னணியாக கொண்டவன். மத்தியதரவகுப் பிலிருந்து வந்தவன். ஒரு ஆண்.
இந்த சமூகப் பின்னணியைக் கொண்ட "அவன்" நாவலின் தமிழ்ப்பொதுச் சூழல் அல்லது ஆதிக்கச் சூழல் விரும்பத்தக்க வகையிலேயே சித்தரிக்கப் பட்டிருக்கிறான்.

இந்த அவனை புலிகள் தமது அமைப்பிலிருந்து வெளியேற்றும் வரை அவர்களுக்கு விசுவாசமா கவே இருக்கிறான். ரேலோ இயக்கமோ, இலங்கை புலனாய்வுப் பிரிவோ அவனை வதைசெய்யும் போதில் எல்லாம் அவன் உண்மைகளைக் கக்குவ தில்லை. நாவல் எங்கிலும் திறமையானவனாயும் சாகசம் நிறைந்தவனாயும் சித்தரிக்கபடுகின்றான். தமிழ் ஆதிக்கச் சூழல் "தூரோகம்" என்று கருதக்கூடிய எந்தச் செயலிலும் அவன் ஈடுபட்டதாய் நாவல் சித்தரிக்கவில்லை.

ஆனால், அவனை வதை செய்யும், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தும் இலங்கை புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பெண்ணொருவரை இந்த நாவல் ஈ.பி.ஆர். எல். எப் இயக்கத்துடன் தொடர்புபடுத்துகிறது. ராணி என்ற பெயருடன் நாவலிலே வரும் இந்தப் பெண் முதலிலே ஈ.பி.ஆர்.எல்.எப் உறுபினராய் இருக்கிறார். தனது கணவரைக் கொன்ற புலிகளின் உறுப்பினரைக் கொல்வதற்கு "இந்திய இராணுவ கால ஈ.பி.ஆர்.எல்புடன், இலங்கை புலனாய்வுப் பிரிவுடன் (இந்த இடத்தில் எதனுடன் இணைந்தார் என்பதில் தெளிவில்லை) சேருகிறார். கணவனைக் கொன்ற தனது சொந்தக் காரனான புலி உறுப்பினரைக் கொன்ற பின்பும் இலங்கைப் புலனாய்வுப் பிரிவிலேயே தனது பொருளாதார சூழல் காரணமாக வேலை செய்கிறார்.
ராணி என்ற இலங்கைப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பெண்ணை ஈ. பி. ஆர். எல். எப் உடன் தொடர்புபடுத்தும் இந்த நாவல் ஈ.பி. ஆர். எல். எப்பை தாழ்த்தப்பட்டவர்களுடன் ∴ தலித்துக்களுடன் தொடர்புபடுத்துகிறது.

ஆக, ஆதிக்க சாதிய மத்தியதர வர்க்கப் பின்னணியைக் கொண்ட அவன் என்ற ஒரு ஆணை விசுவாசமானவராகவும் திறமைசாலி யாகவும் சாகசம் நிறைந்தவராகவும் சித்தரிக்கும் நாவல் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை, தலித் பின்னணியைக் கொண்ட பெண்ணை சித்திரவதையில் ஈடுபடுபவராகவும், பாலியல் வல்லுறவு கொள்பவராகவும் சித்தரிக்கிறது.

இப்படி நாவல் காட்டும் கோணமும் காட்சியும் அது மையமாகக் கொண்டியங்கும் சமூகத்தின் ஆதிக்க சிந்தனையின் கோணல் பார்வைக்கு உரமூட்டுகிறதேயன்றி அதனைக் கேள்விக்குட் படுத்தவில்லை.

நாவலில் வரும் கதைகள் பெரும்பாலும் ஆதிக்க சிந்தனையுடன்



சொல்லப்பட்டாலும் சில இடங்களில் அது விரித்துவிடும் காட்சிகள் கவனிக்க தக்கன.

வேலிச் சண்டையொன்றுக்கு விலக்குபிடிக்கபோன புலிகள் நடந்த தகராற்றில் சீலன் என்ற பொது மகனைக் கைது செய்கிறார்கள். தமது துப்பாக்கியொன்றை அவனிடம் பறிகொடுத்த அவாமானத்திலும் தம்மை அவமதித்ததையும் தாங்கிக்கொள்ளாததாலும் அவனைச் சித்திரவதை செய்கிறார்கள். அந்தச் சித்திரவதையில் எதிர்பாராத விதமாகச் சீலன் இறந்துவிடுகிறான்.

வேலிச் சண்டையில் நடந்த தகராற்றால் புலிகள் பொதுமக னைக் கொலைசெய்ததாக மக்கள் அறிந்தால் அவர்களைப்பற்றி மக்களுக்குள்ள நல்லபிப்பிராயம் சரிந்துவிடும் என்ற அச்சத்தால்

சீலன் விசாரணையில் துரோகியாகக் கண்டுபிடிக்கப்பட்டு, சுட்டுக்கொல்லப் பட்டதாகக் காட்டுவதற்கு திட்டமிடுகிறார்கள்.

நாவலின் அந்தக் காட்சி இவ்வாறு விரிகிறது:
"நள்ளிரவு தாண்டிய நேரம் சீலனில் உடல் வானில் ஏற்றப்பட்டது. சண்டிலிப்பாயில் சன நடமாட்டம் அதிகம் இல்லாத பகுதியான கல்வளைக்கு இறங்கும் இரண்டாவது சிறிய வீதியில் உள்ள மைல் கல்லுக்குப் பக்கத்தில் உடலைப் போட்டுவிட்டு சுட்டுவிடுவதென்று முடிவாகிறது. சுட்டால் இறந்து பல மணி நேரமாகிய உடலில் இருந்து அதிக ரத்தம் வராதே என ஒருவன் சொன்னான். அதற்கு இன்னொருவன் ஐடியா சொன்னான். அவனது யோசனைப்படி, பண்ணையில் இருந்து பெரிய சேவல் ஒன்றைப் பிடித்து உரப்பையில் கட்டினார்கள். வாகனம் சண்டிலிப்பாயை நோக்கிப் பயணித்தது. குறிப்பிட்ட இடத்தில் நின்றதும் அவனது உடலை இழுத்து மைல் கல்லுக்குப் பக்கத்தில் கிடத்தினார்கள். பாரத்தின் எஸ்.எம்.ஜி உடலின் தலையைக் குறிவைக்க அவன் அதைத் தாழ்த்தி மார்புக்கு நேரே இறக்கிவிட்டான். துப்பாகி சிலகுண்டுகளைத் துப்பியது. வாகனத்திலிருந்து சேவலை எடுத்தவன், அதன் கழுத்தை ஒரே வெட்டில் அறுத்து, சீறிய ரத்ததை உடலின் மார்புப் பகுதியெங்கும் வழியவிட்டான், சேவலையும் துண்டாடப்பட்ட தலையையும் மீண்டும் உரப்பையினுள் போட்டு வாகனத்தில் ஏற்றிக்கொள்ள தேசத்துரோக குற்றத்திற்காக மரணதண்டனை என்று எழுதி தயாராக வைத்திருந்த ஒரு கடுதாசியை அங்கு வீசிவிட்டு பரத்தும் வாகனத்தில் தாவினான். வாகனம் புறப்பட்டுப் போய்விட்டது"

வேள்விகளில் சேவல்களைப் பலிகொடுக்கும் நிலத்தில் நிகழும் இந்தக் காட்சி இங்கே பலியாக்கப்பட்டது எவர் அல்லது என்ன என்ற கேள்வியைக் கேட்டு நிற்கிறது.
சீலன் என்ற தனிமனிதரா? அல்லது மானுடமா? ..
சேவலா? மனிதாபிமானமா?...
அல்லது ஒரு விடுதலை இயக்கத்திற்கு அடிப்படையாக இருக்க வேண்டிய நேர்மையா? விடுதலையென்ற கனவா?..
இல்லை எல்லாமுமா?
நாவலின் அதியுச்சக் காட்சியாக இதனையே அடையாளங் காண்கின்றேன்.
நாவலில் கவனிப்பைக் கோரும் இன்னும் சில காட்சிகள் நலீமாராணி என்னும் முஸ்லீம் பெண்ணை மையமாகக் கொண்டு நகர்கின்றன.

யாழ்ப்பாண நூலகத்தில் நூலகராக நலீமாராணி வேலை செய்கிறார். புத்தகங்கள் மீது அதீத விருப்பம் கொண்டவர். யாழ் நூலகம் எரிக்கபட்டபோது எரிந்திருந்த புத்தக மேட்டிலிருந்த எஞ்சியிருந்த புத்தகங்களை அழுகையுடன் சேகரிக்கிறார்.

அந்தக் கட்டத்தில் நாவல் நலீமாராணியை இப்படி விவரிக்கிறது:
"எப்போதும் சிறு புன்னகையோடு இருக்கும் அவரின் முகத்தில் அழுத கண்களோடு உறவு ஒன்றினை இழந்துவிட்ட சவக்களை மட்டுமேயிருந்தது."

இந்தச் சாவீட்டிலிருந்து படிந்திருந்த சாம்பலை உதறிவிட்டு காலம் வாழ்வை இன்னுமொரு குரூரமான புள்ளிக்கு இழுத்துச் செல்கிறது. புலிகள் முஸ்லீம்களை வடக்கிலிருந்து வெளியேற்றுகிறார்கள்.

அந்தக் கொடுமைக்குப் பின்னான ஒரு பொழுதில் நலீமாராணி இருந்த கோலத்தை நாவல் இப்படிச் சித்தரிக்கிறது:
"யாழ்ப்பாண நூலக எரிப்பின் பின்னர் பார்த்த அதே அழுத கண்களுடனான சவக்களையை மீண்டும் அவன் நலீமாராணி யின் முகத்தில் கண்டான்."

நூலகம் எரிக்கப்பட்ட போது தமிழர்களுடன் முஸ்லீம்களும் சேர்ந்து அழுதார்கள். ஆனால், முஸ்லீம்கள் ஈவிரக்கமின்றி வெளியேற்றப்பட்டபோது எத்தனை பேர் அவர்களுக்காக அழுதார்கள், போராடினார்கள்?

கொடிய காலம் வந்து நின்றவொரு புள்ளியில் சேர்ந்தழுத வர்கள் எப்படி அதே காலம் இழுத்துச் சென்ற வேறு புள்ளிகளில் தனித்தனியாக அழவேண்டிய நிலைக்கு வந்துசேர்ந்தார்கள்?...
இறுதியாக இந்த நாவல் முடியுமிடமாக நான் காணும் இடத்தைத் தந்துவிட்டு இந்த உரையை முடிக்கிறேன்.

ரோகன் என்ற புலிகளின் உறுப்பினர் ஆயுதங்களை வாங்குவதற்காக மெமே என்ற பாதாள உலகத்தலைவருடன் பேரத்தில் இறங்குகிறார். அந்தப் பேரம் முடியும்போது அவர்களுக்கு இடையேயான உரையாடல் இப்படி விரிகிறது.

"இப்போது எங்கள் பேரம் முடிந்துவிட்டது. சாவகாசமாகப் பேசலாமா?. உங்கள் கட்டுபாட்டுப் பகுதிகளில் நீங்கள் போதைப்பொருளை உற்பத்தி செய்யலாமே? ஏன் வேறு நாடுகளில் இருந்து கடத்த வேண்டும்? " 'மெமே கேட்கிறான்'
'அதற்கு ரோகனின் பதில்:'

"எங்களது தேசத்தை உன்னதமான தேசமாக உருவாக்கு கிறோம். அங்கு போதைப் பொருட்கள் கிடையாது விலை மாந்தர் கிடையாது. பிச்சையெடுப்பவர் கிடையாது. அநாதைகள் கிடையாது."

மெமே சத்தமாகச் சிரித்தபடி "என்ன சொல்கிறாய்? உங்கள் தேசம் உருவானால் அதில் முதலில் பாதிக்கப்படுவது நீதான். "
"அது எனக்குத் தெரியும். எனது தேசம் உருவாகின்ற அந்தப் பொழுதே நான் தற்கொலை செய்துகொள்வேன். அங்கு என் போன்றவர்கள் வாழ மாட்டார்கள்."

இந்தத் தருணமே எனது வாசிப்பில் இந்த நாவல் முடிந்துவிடும் தருணமாகக் கொள்கின்றேன்.
நன்றி.

'ரொறொன்ரோவில் நடைபெற்ற நாவல் வெளியீட்டு நிகழ்வில் ஆற்றிய உரை சற்று திருத்தப்பட்டு நீட்டப்பட்டிருக்கிறது.'

# யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்

- எஸ். கே. விக்னேஸ்வரன்

அண்மையில் ரொறொன்ரோவில் நடைபெற்ற நாடகம் ஒன்றைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. 'Me from Jaffna' என்பது அந்த நாடகத்தின் தலைப்பு. யாழ்ப்பாணச் சமூகத்தின் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஒருவர் கனடாவுக்கு வந்து அங்கு தன்னைத் தகவமைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கையாளும் குறுக்கு வழிகள் கொண்டிருக்கும் நம்பிக்கைகள் என்பவற்றை நையாண்டி செய்வதாக அந்த நாடகம் அமைந்திருந்தது. யாழ்ப்பாணத்தின் மத்தியதர வர்க்கத்தின் ஒருவகை மாதிரியான குறியீடாக அந்தப் பாத்திரம் அமைய வேண்டும் என்பது அப்பிரதி ஆசிரியரின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும். ஒரு வகை மாதிரி என்ற முறை யில் ஒருபுறம் அது சரியானதும் இன்னொருபுறம் அது போதாமைகளைக் கொண்டதாகவும் இருந்தது. ஒரு நாடகத்தில் அப்படி ஒரு போதாமை இருப்பது தவிர்க்கமுடியாதது தான்.



ஏனென்றால் ஒரு பிரதேசத்தின் வகை மாதிரியின் முழுப் பரிமாணத்தையும் ஒரு ஓரங்க நாடகத்தில் கொண்டு வந்துவிட முடியாது. இந்த வகை மாதிரியிலுள்ள ஆசிரியரின் விமர்சனத்திற்குரிய பக்கத்தை மட்டுமே கணக்கில் எடுத்தே அந்த நாடகம் உருவாக்கப்பட்டி ருந்தது. செங்கை ஆழியானின் 'ஆச்சி பயணம் போகிறாள்' இலிருந்து கே. எஸ்.பாலச்சந்திரனின் 'அண்ணை றைற்" வரையும் அதற்குப் பிறகும் இவ்வாறு யாழ்ப்பாணச் சமூகத்தை நையாண்டி செய்யும் பல கலை இலக்கிய வெளிப்பாடுகள் வெளிவந்துள்ளன. இந்த வெளிப்பாடுகள் அதே யாழ்ப்பாண சமூகத்தின் மத்தியில் அதிகளவு வரவேற்பைப் பெற்றவையாகவும் இருந்து வந்திருக்கின்றன. வேறெந்தச் சமூகத்தினையும் விட இந்தச் சமூகம் தன்னுள்ளே தன்னை விமர்சனத்துக்குள்ளாக்குவதில் பின் நிற்கவில்லை என்பது யாழப்பாணச் சமூகத்தை விளங்கிக்கொள்ள முயலும் ஒருவரின் கவனத்திலிருந்து சற்றும் விடுபட்டுவிடக் கூடாத முக்கியமான அம்சம். தவிரவும் இவை எல்லா வற்றிற்கும் அப்பால் அதற்கு வேறுசில.. என்றென்றைக்கும் மறக்க முடியாத தடங்களைப் பதித்த வரலாறும் உண்டு. அந்த வரலாற்றுக்குப் பின்னாலுள்ள அச்சமூகத்தின் உழைப்புத்தான் இன்று வரை அந்தச் சமூகத்தைத் அதன் ஆயிரம் பலவீனங்களுக்கு மத்தியிலும் பனைமரமாய் நிமிர்ந்து நிற்க வழிவகுத்து வைத்துக் கொண்டிருக் கிறது.

கையிலிருக்கும் இந்த நூலைப் பற்றி இன்று அறிமுகம் செய்ய என்று நினைத்த போது எனக்கு இந்த நாடகம் நினைவுக்கு வந்தது. இந்த நாடகம் யாழ்ப்பாணச் சமூகத்தின் ஒரு

பிரிவின் போக் கைப்பிரதிநிதித்துவப்படுத்தும் பாத்திரத்தை மையமாகக் கொண்டிருந்தது. இதற்கு நேரெதிரான அல்லது மாறுபட்ட வேறு போக்குகளும் அங்கு இல்லாமலில்லை. ஆனால் இது பொத்தாம் பொதுவாக நடுத்தர வர்க்கத்தை அதனுள் இருக்கும் ஒரு கூறை மட்டும் கணக்கிலெடுத்தே இத்தகைய படைப்புகள் உருவாகியிருந்தன. விமர்சனபூர்வமான இத்தகைய படைப்புக்களின் வருகையே வேறு போக்குக்கள் இருந்தன என்பதற்குப் போதிய ஆதாரமாகும்.



இந்நூலில் யாழ்ப்பாணத்தில் விபுலானந்தர் காலத்தில் நிலவிய மூன்று பிரதான போக்குகள் அடையாளப்படுத்தப்படுகிறது. அவற்றின் இயல்புகளையும் செயற்பாடுகளையும் அடையாளம் காட்டுகிறது. அதிலுள்ள ஆதிக்கம் பெற்ற இதர பிரதான போக்குகளிலிருந்து விடுபட்ட மூன்றாவதும் முற்போக்கானதுமான போக்கையும் அதற்கும் விபுலானந்தருக்குமிடையிலான உறவையும் பற்றி விவரிக்கிறது. "யாழ்ப்பாணச் சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்' என்ற இந்த நூலின் தலைப்பைப் பார்க்கும் ஒருவருக்கு யாழ்ப்பாணச் சமூகத்திற்கும் விபுலானந்தருக்குமிடையில் என்ன உறவு இருந்திருக்கக் கூடும் என்ற ஐயம் எழுவது இயல்பே. ஏனென்றால் விபுலானந்தர் பிறந்ததும் அவரது ஆன்மீகம்சார் பணிகளுக்காக அவர் அதிகளவிற் செயற்பட்டதும் கிழக்கு மாகாணத்தில் அவரது சமய இலக்கிய மற்றும் சமூக ஈடுபாடுகள் யாழ்ப்பாணத்தின் இத்துறை சார் பெரும் போக்குகளிலிருந்து தெளிவாக வேறுபட்டிருந்தன. யாழ்ப்பாணம் தீவிரமான சைவசமய கருத்துக்களின் செல்வாக்குக்கு உட்பட்டதாயிருக்கும் அதே வேளை விபுலானந்தர் ஒரு சன்மார்க்கவாதியாக அனைத்து மதங்களையும் அனுசரித்த போக்குடையவராக இருந்தார். யாழ்ப்பாணம் திருமுறைகளிலும் புராண பாடங்களிலும் சைவ சித்தாந்தத்திலும் கவனம் செலுத்திக் கொண்டிருக்க அவர் மொழி , இசை மற்றும் நாடகம் பற்றிய தீவிரத் தமிழியல் ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் சாதியம், தீண்டாமை என்பவை பிரதான போக்குகளின் பெருந்தலைவர்களாலேயே நியாயப் படுத்தப்படுபவையாக இருந்த வேளையில் அவர் சாதியத்தை மறுதலிப்பவராகவும் ஒடுக்கப்பட்ட மக்கள்பால் ஈடுபாடு கொண்டவராகவும் இருந்தார். ஆக இத்தகைய ஒருவரை எவ்வாறு யாழ்ப்பாணச் சமூக உருவாக்கத்துடன் தொடர்பு படுத்தப்பட முடியும் என்பது ஒரு நியாயமான கேள்வியே. இந்த நூல் முதலில் எனது கைக்குக் கிடைத்தபோது இரண்டு முக்கியமான விடயங்களை இது பேசக்கூடும் என்று கையிலிருக்கும் இந்த நூலைப்பற்றி அறிமுகம் செய்ய என்று நினைத்தபோது எனக்கு இந்தநாடகம் நினைவுக்கு வந்தது.

இந்த நாடகம் யாழ்ப்பாணச் சமூகத்தின் ஒரு பிரிவின் போக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாத்திரத்தை மையமாகக் கொண்டிருந்தது. இதற்கு நேரெதிரான அல்லது மாறுபட்ட வேறு போக்குக்களும் அங்கு இல்லாமலில்லை. ஆனால் இது பொத்தாம் பொதுவாக நடுத்தர வர்க்கத்தை அதனுள் இருக்கும் ஒரு கூறை மட்டும் கணக்கிலெடுத்தே இத்தகைய படைப்புக்கள் உருவாகியிருந்தன. விமர்சனபூர்வமான இத்தகைய படைப்புக்களின் வருகையே வேறு போக்குகள் இருந்தன என்பதற்குப் போதிய ஆதாரமாகும்.

ஆகவே இத்தகைய ஒருவரை எவ்வாறு யாழ்ப்பாணச் சமூக உருவாக்கத்துடன் தொடர்புபடுத்த முடியும் என்பது ஒரு நியாயமான கேள்வியே. இந்த நூல் முதலில் எனது கைக்குக் கிடைத்தபோது இரண்டு முக்கியமான விடயங்களை இது பேசக்கூடும் என்ற எதிர்பார்ப்பு எனக்குள் எழுந்தது. ஒன்று யாழ்ப்பாணச் சமூகம் பற்றியது. மற்றையது விபுலானந்தர் பற்றியது. கூடவே யாழ்ப்பாணச் சமூக உருவாக்கத்தில் விபுலானந்தர் எத்தகைய பங்களிப்பை வழங்கியிருக்கக் கூடும் என்பது பற்றியும் இது பதிவுசெய்திருக்கலாம் என்று நினைத்தேன். ஆனால் நுலை வாசிக்கத் தொடங்கிய பின் இந்நூலின் நோக்கம் இவையல்ல. அது தமிழ் தேசியத்தின் வேரை யாழ்ப்பாணச் சமூகம் மற்றும் விபுலானற்தர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து அடையாளம் காண முற்படும் நோக்குடன் எழுதப்பட்டிருக்கிறது என்பது புரிந்தது. ஒருவகையில் முன்னெப்போதும் செய்யப்படாத ஒரு புது முயற்சியை ஆரம்பித்து வைக்கும் நோக்குடன் இந்தநூல் எழதப்பட்டிருக்கின்றதென்ற முறையில் மிகவும் முக்கியமான ஒருநூலாக இதைக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

இரண்டாவது இந்த நூல் எழுதப்பட்ட காலம் 1996. இந்த நூலை எழுதுவித்து அதை முதலில் வெளியிட்டவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கிளிநொச்சியில் இயங்கி வந்த 'சாளரம்' வெளியீட்டகத்தினர். புலிகளின் அதிகாரத்துக்குட்பட்ட வெளியீட்டகம் ஒன்றிலிருந்து விபுலானந்தரை அடையாளம் காணும் நோக்கிலமைந்த ஒரு நூல் வெளிவருவது ஒரு வகையில் ஆச்சரியமான ஒரு விடயமாகத் தோன்றலாம். ஆயினும் அது நடந்திருக்கிறது. நூலாசிரியர் கௌரிகாந்தன் இந்நூல் வருவதற்கான பின்னணியைத் தனது முன்னுரையில் இவ்வாறு எழுதுகிறார்: "இந்நூல் எழுதப்பட்ட வெளிக்கொணரப்பட்ட காலப்பகுதியில் அந்நிய இராணுவத் தலையீட்டை எதிர்கொள்வதன் போதான பேரிழப்புக்களின் பின்னால் தமிழீழ அரசு மீளவும் நிலைநிறுத்தப்பட்டிருந்தது. இவ் அன்னிய இராணுவத் தலையீடும் அதை வெற்றி கொள்ளப் புலிகள் இயக்கத்தால் கடைப்பிடிக்கப்பட்ட அரசியல் இராணுவ வழிமுறைகளும் பல படிப்பினைகளைத் தமிழ் பேசும் மக்களுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் கொடுத்திருந்தன. அப் படிப்பினைகள் ஒன்றுக்கு மேற்பட்ட இராணுவ மற்றும் அரசியல் சிந்தனைப் போக்குகளை தமிழ்பேசும் மக்களிடையேயும் புலிகள் இயக்கத்தினுள்ளும் தோற்றுவித்திருந்தன. இது இயல்பானதே. புலிகள் இயக்கத்தினுள் ஆக்கபூர்வமான

சுமுகமான ஒரு உட்கட்சிப் போராட்டம் ஆரம்பமானது என்று கூறலாம். இது புலிகள் இயக்கத்திற்கு முற்றிலும் புதியதோர் மரபாகும்.”

இத்தகைய ஒரு ‘புதிய மரபு’ உருவாகுவதற்கான காரணமாக புலிகள் இயக்கம் ஒரு இயக்கம் என்ற நிலையிலிருந்து ஒரு அரசாங்கம் என்ற நிலைக்குப் பரிமாணம் அடைய வேண்டி ஏற்பட்டதால் உருவான அகநிலை மாற்றத்தை அவர் குறிப் பிடுகிறார். அவர் கூறுகிறார்: “ஏற்கனவே இருந்த இராணுவ மைய–அரசியற் கட்டுமானம் அரசு இயந்திரமாக மாற்ற முறுவதும் அரசாங்கம் என்ற புதிய சிவில் அங்கம் ஒன்று உருவாகுவதும் உடனடி அவசியங்களாகின்றன. இச் சிவில் அங்கம் நூறு விழுக்காடும் அரசியற் தன்மை பெற்றதாக இருக்க வேண்டியதுவும் அரசு இயந்திரம் தொடர்ந்தும் இராணு வ மைய – அரசியல் அங்கமாக இருக்க வேண்டியதுவும் அவசியமாகிறது. ஆனால் அவசியப்படும் இந்த இராணுவ மைய அரசியற் கட்டுமானம் இயக்க காலத்தில் இருந்தது போலன்றி முற்றிலும் வேறுபட்டதாகும். இயக்க கால இராணுவம் ஒரு எளிய அங்கியாகவே இருந்தது. ஆனால் அரசாங்கம் எனும் அங்கத்துடன் இணைந்த இராணுவமோ ஒரு பல்தொகுப்பு அங்கியாகவே அமையவேண்டும்.

இராணுவக் கட்டமைப்பு, காவற்துறைக் கட்டமைப்பு, அதிகாரத்துவக் கட்டமைப்பு,, வங்கிக் கட்டமைப்பு,, ஊடகத் துறைக் கட்டமைப்பு ஆகிய இன்னும் பிற சுயாதீன செயற்பாடுள்ள எளிய அங்கிகளின் கூட்டான பல்தொகுப்பு அங்கியே இந்த அரச இயந்திரமாகும். அரசாங்கக் கட்டுமானம் புலிகள் இயக்கத்துக்கு முற்றிலும் புதியது. ஆனால் அரசு இயந்திரக் கட்டுமானமோ புதியதல்ல. ஆனால் பல மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட வேண்டியது. இம் மாற்றங்கள் எண்ணிக்கை மாற்றங்களோ அல்லது புதிய புதிய அங்கங்களை இயக்க இராணுவத்துடன் கொண்டு போய் ஒட்டுவதோ அல்ல. அது அடிப்படை மாற்றத்தைக் கோரி நிற்கும் ஒரு புதிய வடிவமாகும்.

இந்தக் காலகட்டம் புலிகள் தமக்கான சொந்த அரச இயந்திரத்தை உருவாக்கிக் கொள்ள முயன்ற காலகட்டம் என்றும் தாம் மறுபிறப்பெடுப்பதற்காக அவர்கள் முயன்று கொண்டிருந்த காலகட்டம் என்றும் குறிப்பிடும் நூலாசிரியர் இதற்கான வழிமுறையாகவே மேற் சொன்ன உட்கட்சிப் போராட்டம் நடந்தது என்றும் அதன் ஒரு அங்கமே இந்த நூல் என்றும் குறிப்பிடு கிறார். பதிப்பாளர்கள் விபுலானந்தர் பற்றிய நூலொன்றைக் கொண்டு வருவதற்கு விரும்பியதற் கான உடனடி அரசியற் பின்னணியை “யாழ் சைவ வேளாளப் புத்திஜீவிகளால் ஆறுமுகநாவலரைப் பற்றி உருவாக்கவும் பரப்பப்பட்டு வரும் உண்மைக் குப் புறம்பான மதிப்பீடுகளைப் பகிரங்கமாக நிராகரிக்க வேண்டும் என்பதே” என்று குறிப்பிட்டு அதற்கு உகந்த ஒரு நூலை எழுதும்படி தன்னிடம் கேட்டதாக அவர் குறிப்பிடுகிறார். இந்த நிலையில் ‘மத ஆன்மீக சாதீய மதிப்பீடுகளால் புனிதமானவர் என்று சமூகத்தின் உச்சாணிக் கொம்பில் தூக்கி வைக்கப் பட்டிருக்கும் ஒருவரை’ வெகுஜனத் தன்மை பெறவேண்டிய ஒரு நூலில் நிராகரணம் செய்து எழுதுவது எத்தகைய சாதகமான பலனையும் தராது என்பது மட்டுமல்ல பாதகமான விளைவுகளையே தரும் என்பதால் நேர்மறைக் குணாம்சங்களைக் கொண்ட விபுலானந்தரைக் கொண்டு வருவதன் மூலம் ஆறுமுக நாவலரின் எதிர்மறைக் குணாம்சங்களை ஆராயலாம் என்ற அடிப்படையில் இந்நூல் பிறந்தது என்கிறார் ஆசிரியர். இது ஒரு கல்லில் இரு மாங்காய் கள் என்ற என்ற எதிர்பார்ப்புடன் தொடங்கப்படுகிறது.

அதாவது விபுலானந்தரை அறிமுகம் செய்வதும் ஆறுமுக நாவலரின்பால் உருவாக்கப்பட்ட சிந்தனை மரபின் எதிர்நிலைப் போக்குகளைக் கேள்விக்குள்ளாக்குவதும் ஆகும். விபுலானந்தர் ஆறுமுகநாவலர் இறந்து பதின்மூன்று வருடங்க ளுக்குப் பிறகு 1892 இல் பிறக்கிறார். ஏற்கனவே ஆறுமுக நாவலரால் உருவாக்கப்பட்டுப் பலம் பெற்றிருந்த ‘சைவத் தமிழ் மறுமலர்ச்சி’ என்ற பாரம்பரியத்தின் பாதிப்புக்களினூ டுதான் அவரும் வளர்ந்து வருகிறார். நாவலருக்கு “நாவலர்” பட்டம் வழங்கப்பட்டமை குறித்து விபுலானந்தர் எழுதிய செய்யுள் ஒன்று அவர் எவ்வளவு தூரம் ஆறுமுகநாவலரால் தன் இளமைக்காலத்தே ஈர்க்கப்பட்டிருந்தார் என்பதற்கு நல்ல உதாரணமாகக் கொள்ளலாம்.

ஆயினும் பின்நாளில் விபுலானந்தரின் சமூகச் செயற்பாடுகள் அனைத்தும் அறுமுகநாவலரது பாதையினின்றும் விலகிய சாதி மத வேறுபாடுகளைத் துறந்த தமிழியல் ஆய்வுகளிலும் பிற நாட்டு நல்லிலக்கியங்களைத் தமிழுக்கு அறிமுகப்படுத்து வதிலும் ஒரு சனாதனதர்மத்தைப் பேணும் துறவு நிலையாளராகப் பரிணமிப்பதிலுமாக அமைந்திருந்தன. அவரது சிந்தனைகள் நிச்சயமாக சைவத்தமிழ்ச் சிந்தனைப் போக்கி லிருந்து விடுபட்டு அதற்கு நேர் முரணான புதிய தளத்தில் பயணிக்கும் தன்மை கொண்டதாக அமைந்திருந்தது. சைவத் தமிழ் இயக்கத்தின் அரசியல் சார்பு அன்றைய மேட்டுக் குடியினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் போக்கில் அமைந்திருக்க விபுலானந்தரின் அரசியல்சார்பு அந்தக் காலத்திலேயே புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டிருந்ததுடன் தீவிரமாகச் செயற்பட்டு வந்ததுமான “யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்” என்ற இளைஞர்களின் அமைப்பின் செயற்பாடு களுடன் தொடர்புபட்டதாக இருந்தது.



## " தீண்டாமை ஒழிப்புப் போராட்டம், சம ஆசனம், சமபந்தி போசனம் ' என்பவை அவர்களது நிகழ்ச்சி நிரலின் பிரதான அம்சங்களாக இருந்தன. "

இந்த நூல் விபுலானந்தரின் பிரதான பணிகளைத் தெளிவுபடுத்துவதுடன் நில்லாது அவற்றின் முக்கியத்துவம் மற்றும் அவற்றின் புரட்சிகரத் தன்மை என்பவற்றைச் சுட்டிக்காட்டுகிறது. குறிப்பாக விபுலானந்தரிடம் எத்தகைய சமூக அரசியல் சிந்தனைகள் இருந்தன. அவற்றை அவர் எப்படிச் செயல்வடிவுக்குக் கொண்டுவந்தார் என்பவற்றை இந்த நூல் தேவைக்கு ஏற்ற அளவுக்குத் தெளிவாக முன்வைத் துள்ளது. அந்த வகையில் விபுலானந்தர் பற்றிய மற்றைய நூல்களில் காணமுடியாத பக்கங்களை இந்நூல் பதிவு செய்கிறது. "யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்" இலங்கையின் வரலாற்றிலே மிகவும் முக்கியமான ஒரு புரட்சிகரமான அமைப்பு என்பது பெரும்பாலும் மறைக்கப்பட்டே வந்து ள்ளது. பின்நாளில் எழுந்துவந்த இலங்கையின் முற்போக்கு அணியினருக்கான ஆரம்பப்புள்ளி அது என்பதைத் தமிழ் தேசிய அரசியலை முதன்மைப்படுத்தி வரலாற்று நூல்களை எழுதிய பலரும் வசதியாக மறந்துவிடுவதை அவதானிக்கலாம். அது இயங்கிய 1924 முதல் 1931 வரையான காலப்பகுதியில் அதன் செயற்பாடுகள் அனைத்தும் புரட்சிகரமான நடவடிக்கைகள் என்பதில் ஐயமில்லை.

தீண்டாமை ஒழிப்புப்போராட்டம், சம ஆசனம், சமபந்தி போசனம் என்பவை அவர்களது நிகழ்ச்சி நிரலின் பிரதான அம்சங்களாக இருந்தன. பிரதான காலனித்துவ மிசனரிமார்களது அணியுடனோ இராமநாதன் தலைமையிலான காலனித் துவவாதிகளிடம் மேட்டுக்குடியினருக்கு ஏற்ற விதத்திலான சீர்திருத்தத்தை இரந்து நின்ற அணியுடனும் அது தன்னை இணைத்துக் கொள்ளாது தனித்துவமாக இயங்கியது. சாதி மதவேறுபாடுகளுக்கு அப்பால் நின்று தீண்டாமையை ஒழிப்பதற்காகவும் தமிழ் மொழிக் கல்விக்காகவும் நாட்டின் பூரண சுயாட்சிக்காகவும் அது உழைத்தது. முற்போக்கு எண்ணம் கொண்ட தமிழ் மீது அக்கறை கொண்ட படித்த சைவ, கிறிஸ்தவ மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இணைந்து செயற்பட்ட ஒரு புரட்சிகர அமைப்பாக அது இருந்தது. அது தன்னை ஒரு அரசியல் இயக்கமாக வளர்த்தெடுத்துக் கொள்ளாவிட்டாலும் அதனிடம் திட்டவட்டமான புரட்சிகரமான அரசியற்கருத்துக்களும் நிலைப்பாடுகளும் இருந்தன. இலங்கையில் நடந்த இராம நாதனது படித்த வாலிபர்களுக்கு மட்டும் வாக்குரிமை போதும் என்ற கோரிக்கையை நிராகரித்து சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டபின் நடந்த முதலாவது சட்டசபைத் தேர்தலைப் பகிஸ்கரித்தல் என்ற முடிவை 'யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்' எடுக்கிறது.

வெற்றிகரமாக நடந்த இந்தப் பகிஸ்கரிப்புக்கு அது முன்வைத்த காரணம் டொனமூர் ஆணைக்குழுவின் சீர்திருத்த அறிக்கையானது இலங்கை மக்களது தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை என்பதாகும். இது இன்று வரை தமிழ்த் தேசியவாத வரலாற்றாசிரியர்களான ஏ.ஜே.வில்சன் முதல் முருகர் குணசிங்கம் வரையிலான யாராலும் முக்கியத்துவம் கொடுக்கப்படாத ஒன்றாகவே கணிக்கப்பட்டு வருகிறது. ஆயினும் இன்று வரை இலங்கை பூராவும் இருக்கக் கூடிய அனைத்து முற்போக்குச் சக்திகளுக்கும் சிங்கள முற்போக்கு சக்திகள் உட்பட ஆரம்பப் புள்ளியாக அமைந்தது 'யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்'. ஆதன் பின்னர் ஆரம்பித்த இடதுசாரி இயக்கங்களிலும் பிற அரசியல் இயக்கங்களிலும் 'யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸின்' அன்றைய செயற்பாட்டாளர்களும் அவர்களின் வழிவந்தவர்களுமே பிரதான பங்காற்றினர் என்பதை வரலாற்றிலிருந்து மறைத்துவிட முடியாது. காங்கிரஸ் இயங்கிய காலத்தில் பெரும்பாலும் விபுலானந்தர் யாழ்ப்பாணத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அக்காலத்தில் அவர் காங்கிரசின் ஒரு தீவிர செயற்பாட்டு அங்கத்தவராக இருந்தது மட்டுமல்லமால் அதன் மாநாடுகளைத் தலைமைப் பதவி ஏற்று நடத்தியும் உள்ளார். மகாத்மா காந்தி இலங்கைக்கு வந்த போது அவரை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரவேற்று வாலிபர் காங்கிரஸ் நடாத்திய முற்றவெளியில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்திற்கு விபுலானந்தர் தலைமை தாங்கினார். தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு அந்த வரவேற்புக் கூட்டத்தில் சம உரிமை வழங்கக் கூடாது என்று எதிர்த்த சாதி வெறியர்களது எதிர்ப்பையும் மீறி இந்தக் கூட்ட மேடையில் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் பிரதிநிதிகள் வீற்றிருந்தார்கள் என்பது வாலிபர் காங்கிரஸின் விட்டுக் கொடுக்காத கொள்கைப்பிடிப்புக்கு ஒரு நல்ல உதாரணம்.

மொத்தத்தில் இத்தனை தகவல்களையும் உள்ளடக்கி யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸினதும் விபுலானந்தரினதும் முக்கியத்துவத்தை வலியுறுத்தி எழுதப்பட்ட இந்நூல் ஒரு முக்கியமான நூல். அரசியல் மட்டத்தில் உட்கட்சி உறுப்பினர்களிடையேயான விவாதத்தை நோக்கமாக கொண்டு தயாரிக்கப்பட்டதாலும் நூலாசிரியரே குறிப்பிடும் நூல் எழுதப்பட்ட சூழல் காரணமாகவும் இந்நூல் மிகவும் சுருக்கமான நூலாகவே அமைந்துள்ளது. சமூக உருவாக்கம் தொடர்பாக நூலாசிரியர் 'எழுநா' வெளியீட்டுக்கான தனது முன்னுரையில் சுருக்கமாக விபரித்திருந்தபோதும் அது வெறும் கோட்பாட்டு விளக்கமாகவே அமைந்துள்ளது. அந்தக்கோட்பாட்டைப் பின்பற்றி யாழ்ப்பாண சமூக உருவாக்கம் எவ்வாறு நடந்துள்ளது என்பதை இந்நூல் விளக்க முற்படவில்லை. மேலும் விபுலானந்தரின் யாழ் வாலிபர்

காங்கிரசுடனான உறவு அதன் சுயராச்சிய உணர்வு, சாதி மத சமத்துவம், தாய்மொழிக் கல்வி, கல்வியிற் சமவாய்ப்பு, தேசநலன் சார்ந்த கல்வி போன்ற கொள்கைகளின் அடிப்படையிலான செயற்பாடுகளுக்கு எப்படி வலுவூட்டுவதாக அமைந்திருந்தது என்பது குறித்தும் .இந்நூல் ஆராயப் புகவில்லை. வாலிபர் காங்கிரஸ் அக்காலத்தில் வளர்ந்து வந்த மொழி சார் அரசியலை எவ்வாறு நோக்கியது என்றும் அந்த அரசியலுக்கும் 1930 களின் முற்பகுதியிலேயே அது கலைந்து போனதற்குமிடையில் ஏதாவது சம்பந்தமிருந்ததா என்பதைப் பற்றிய ஆய்வையும் இந்நூல் உள்ளடக்கவில்லை. இவை நூலின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டவை என்று நூலாசிரியர் நினைத்திருக்கலாம்.

ஆனால் இன்று இந்த நூலின் வாசகர்களுக்கு அது அவசியம் என்றே நான் கருதுகிறேன். எவ்வாறாயினும் எந்தக் காரணத்திற்காக இந்த நூல் எழுதப்பட்டதோ அந்தக் காரணத்தைச் சாதிப்பதில் அது வெற்றி பெறவில்லை என்கிறார் நூலாசிரியர். அதற்கு அவர் சொல்லும் காரணம் அது சைவ வேளாள ஆதிக்க குரூரங்களுக்கு எதிரானது என்ற பக்கத்தில் இயக்கத்தினர் இந்நூலை வரவேற்றனர். ஆனால் புலிகள் இயக்கத்தின் ஒரு சாரார் இந்நூலில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் பற்றிக் கூறப்பட்டிருப்பதை விரும்பவில்லை. இலங்கைத் தேசியம் பேசும் அனைவரையும் துரோகிகள் என்று வகைப்படுத்தி வைத்திருக்கும் அவர்கள் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசை முற்போக்கானது என்று கூறுவதை வெறுத்தார்கள். இவ்வமைப்பைச் சாதாரண மக்கள் மத்தியில் இருட்டடிப்புச் செய்வதே இவர்களின் நோக்கமாக இருந்தது.'

அவரது கசப்பான அனுபவம் கவலைக்குரியது. ஆயினும் அன்றைய வாலிபர் காங்கிரசாக முற்போக்கான பாத்திரம் வகித்த 'மூன்றாவது அணி' தான் இன்றும் பிரதான அரசியற் போக்குகளை மறுத்துச் சரியான போக்கைக் கண்டடைய முயலும் அணியாக உள்ளது. ஆனால் அன்று வாலிபர் காங்கிரஸ் அமைப்பாக இருந்தது. இன்றைய மூன்றாவது அணி அமைப்பாக இல்லை. நிறைந்த கேள்விகளுடன் உலகம் முழுவதுமாய் சிதறிப்போய்க் கிடக்கிறது. இவ்வகையான நூல்களும் அவற்றின் மீதான விவாதங்களும்தான் கேள்விகளுக்கு விடைகளைக் காணவும் தமக்கான சரியான அரசியல் மார்க்கத்தைத் தெளிந்து கொள்ளவும் வழி சமைக்கும். இந்நூலை எழுதிய கௌரிகாந்தன் அவர்களுக்கும் அதை மீள்பிரசுரம் செய்த 'எழுநாவுக்கும்' பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்!



வீடென்ன
உலகத்தையே
வாங்கலாம்!



Suganthan Thavarajasingam
Mortgage Agent
Lic # M08010501

Direct: 416.859.2564
Office: 416.283.2377 x 116

OBSIDIAN MORTGAGE CORPORATION

FIRST NATIONAL FINANCIAL LP
NATIONAL BANK
EQUITY
Scotiabank
HOME TRUST
B2B BANK
EQUITABLE BANK
Meridian
IC SAVINGS

35 Grand Marshall Dr, Toronto ON M1B 5W9
M08010501 FSCO 10473



- தமிழ்நதி

# ‘பார்த்தீனியம்’
## நாவலிலிருந்து ஒரு அத்தியாயம்…



**அத்தியாயம் -28**

“நீ ஒருநாளைக்கு ஷெல்லடி பட்டுத்தான் சாகப்போறாய்” என்றாள் சந்தியா. கேட்பதற்குக் குரூரமான அந்த வார்த்தை களை நீண்டநாள் அவதானிப்பின் பின் அவள் வருத்தத்தோடு சொன்னாள். அப்படி அவள் கடிந்து கொள்ளுமளவிற்கு வானதியின் நடவடிக்கை விசித்தி ரமாக இருந்தது. எப்போ தெல்லாம் நேரம் கிடைத்ததோ அப்போதெல்லாம் கடமையே போல நகர மத்திக்கு வெளிக்கிட்டுப் போய்விடுவாள். அப்படிப் போக, அவளுக்கு விசேடமான காரணங்கள் ஏதும் வேண்டி யிருக்கவில்லை. தலையில் குத்துகிற “கிளிப்“பையோ, ஒட்டுப் பொட்டையோ சாக்கு வைத்துக் கிளம்பிச் செல்வாள். அந்தப் பொருட் களையெல்லாம் திருநெல்வேலிச் சந்தியி லுள்ள கடைக ளிலேயே வாங்கிவிடலாம். ஆனாலும்,அவள்ரவுனுக்குத்தான்போனாள்.

“சுபாஷ் கபே“க்கு அருகில் பரணியைக் கண்டதாக தனஞ்சயன் கூறிய நாளிலிருந்து ரவுனைச் சுற்றியே அலைந்து கொண்டிருந் தாள். ஷெல் லடி அதிகரித்து பேருந்துகள் ஓடாத நாட்களில், அந்த வழியாகச் செல்லும் சகமாணவிகள் யாருடைய சைக்கி ளிலாவது தொற்றிக் கொண்டு போனாள். அப்படி யாரும் அகப் படாத நாட்களில் நடந்தே போனாள். மயிரிழையில் சாவி லிருந்து தப்பித்து வீடு திரும்பும் அவள் தோழிகளது முகத்திருப் பலை எதிர்கொண்டாள். “நியு மார்க்கெட்” டினுள்ளிருந்த கடைக் காரர்களில் சிலருக்கு அவளது முகம் பரிச்சயமாகிப் புன்னகைக்கு மளவிற்கு அங்கேயே வளைய வந்தாள். அடர் நிறத்தில் கட்டம்

போட்ட சேர்ட் அணிந்த யார் போனாலும் திரும்பித் திரும்பிப் பார்த்தாள். அவனுடைய சாயலுள்ளவரது முதுகையே காணமுடிந்ததெனில், வேகமாக நடந்து முன்னால் போய் முகத்தைப் பார்த்தாள்.

**"இந்த நாடகத்தின் உச்சக்காட்சியென, இராணுவச் சுற்றிவளைப்பொன்றில் பரணி சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டானென்ற செய்தியை "யாழ் வானொலி" ஒலிபரப்பியது. அந்த வானொலி குறித்து குழப்பகரமான அனுமானங்கள் நிலவின."**

அவளோடு தொடர்பற்றுப்போன இந்த இடைவெளியில் அவன் மெலிந்திருக்கலாம். காலை இழுத்து இழுத்துப் போகிற அந்த இளைஞன்... அவன் காயப்பட்டிருக்கலாம். அஞ்சலிச் சுவரொட்டி களை மினக்கெட்டு நின்று வாசித்தாள். துண்டுப் பிரசுரங்களை யும் பத்திரிகைகளையும் ஒரு வரி விடாமல் வாசித்தாள். கரபுரவென்று இரையும் வானொலியின் மீற்றர்களை மாற்றி மாற்றி ஒலிபரப்புகளைக் கூர்ந்து செவிமடுத்தாள். அவளுக்கான வரி.. அவள் நேசித்த பெயர்... கருகிவிட்ட செடி நுனியில் ஒரு சிறு தளிர்... அவளுக்கு அது போதும்.

அவளை நாளும் பொழுதும் உருக்குகிற காதல் நாசமாய்ப் போகட்டுமென்று ரதி சபித்தாள். இம்முறை தனபாக்கியம் அவளைப் பார்க்க வரும்போது வானதியை கிளிநொச்சிக்குக் கூட்டிக் கொண்டு போய்விடும் படியாகச் சொல்லவிருந்தார்கள். உயிரைவிட படிப்பொன்றும் பெரிதில்லை. மேலும், அவள்தான் படிப்ப தேயில்லையே! எப்போதாவது குற்றவுணர் வினால் உந்தப் பட்டுப் புத்த கத்தை விரித்துக் கொண்டு அமர்ந்திருப் பதற்குப் பெயர் படிப்பன்று என்பதை அவர்களும் அறிவார்கள்.

படிக்காமலே பரீட்சை எழுதக் கூடியவளென, இயல்பான புத்திசாலித்தனத்தைப் பயன் படுத்தக்கூடியவளென தோழி களால் வியந்து பேசப்பட்ட வானதி இப்போதில்லை. கலைந்து உருமாறும் முகில் கூட்டங்களுள் மணிக்கணக்காக எந்தப் பிசாசையோ உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் தோழி அவர்களுக்கு அச்சத்தையும் வேதனை யையும் அளித்தாள். ஒருநாளிரவு தற்செயலாகக் கண்விழித்துப் பார்க்கையில் வானதியின் பாயில் அவளைக் காணாது தேடி விறாந்தையில் குந்தியிருக்குமவ ளைக் கண்டு அதிர்ந்தாள் ரதி. வீட்டுக்கு முன்புறமுள்ள வீதியில் மோட்டார் சைக்கிளின் உறுமல் கேட்கும்போதெல்லாம் அவளு டைய முகம் பரபரப் படைவதையும் கண்கள் ஒளிர்ந்து பின் ஏமாற்றத்தில் அணைவதையும் அவர்கள் அவதானிக்கத் தவறவில்லை.
இந்த நாடகத்தின் உச்சக்காட்சியென, இராணுவச் சுற்றிவளைப் பொன்றில் பரணி சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டானென்ற செய் தியை "யாழ் வானொலி" ஒலிபரப்பியது. அந்த வானொலி குறித்து குழப்பகரமான அனுமானங்கள் நிலவின.அந்த ஒலிபரப்பை, பலாலியிலிருந்து இராணுவம் நடத்துவதாகச் சிலர் சொன்னார்கள். இயக்கங்களிலொன்று நடத்துவதாக வேறு சிலர் சொன்னார்கள். எந்த இயக்கம் நடத்துகிறதென்பதை அறுதி யிட்டுக் கூறமுடியாதபடி குழப்பமாக, எதிரும் புதிரும் நின்று பேசுகிற செய்திகளை ஒலிபரப்பினார்கள். உச்சரிப்பை வைத்து அடையாளங் காணும்படியாகவும் இல்லை. பல சமயங்களில் அவை மனுசக்குரல்கள் போலில்லாமல் கரகரவென்றொலித் தன. விசயங்கள் உண்மையோ பொய்யோ யாழ்ப்பாணத்தவர் கள் அதைக் கேட்கத் தவறுவதில்லை. அன்று மட்டும் விதிவிலக்காக, துல்லியமாக பரணியினுடைய சொந்த ஊர், சொந்தப் பெயர், இயக்கப் பெயர், பணி உள்ளடங்கலான விபரங்கள் ஒலிபரப்பப்பட்டன.

"இருக்கிற விசர் போதாதெண்டு இவங்கள் வேறை.. ஆக்களைக் குழப்புறதுக்காகச் சொல்லுறாங்கள்" மலர்விழி சலித்துக் கொண்டாள். அந்த வானொலி அவ்வப்போது உண்மையையும் ஒலிபரப்பிய காரணத்தால் உள்ளூக்குள் பயமாகவும் இருந்தது.

அடுத்த ஒரு மணித்தியாலத்தில் வானதி வவுனியாவுக்குச் செல்லும் பேருந்திலிருந்தாள். விம்மி வெடிக்கும் அழுகையை அடக்க எவ்வளவோ முயற்சித்தும் முடியாமல் அவளையும் மீறிக் கேவல் வெளிப்பட்டுவிட்டது. பேருந்தினுள் இருந்தவர்கள் வானதியைத் திரும்பிப் பார்த்தார்கள். ஆனையிறவின் உப்பளக் காற்றில் அவளுடைய கண்ணீருப்பும் கலந்தது. அதுவொரு நெடிய பயணம். கடிகார முள் அசையாமல் நின்றது. மணிக்கூட் டைக் கழற்றி யன்னல் வழியாக எறிந்துவிடலாம் போலிருந்தது. மயிலாடுகுளத்தை அவள் சென்றடைந்தபோது, அவளுக்குப் பரிச்சயமான முகங்களில் புன்னகையையன்றி எந்தவொரு பதகளிப்பையும் கண்டாளில்லை. அவளிருந்த கோலத்தைப் பார்த்துப் பதறிப்போன சிவசேகரம் ஈச்சங்குளத்துக்கு குணசேக ரனை அனுப்பிவைத்தார். குணசேகரன் திரும்பிவரத் தாமதம் ஆக ஆக அம்மாவின் முகமும் கலவரமடையத் தொடங்கியது.

இல்லை! அப்படியொன்று நடந்திருந்தால் இந்நேரம் அவர்க ளுக்குச் செய்தி வந்திருக்கும். ஆனால், தேடிப்போன குணசேகரன் ஏனின்னும் திரும்பி வரவில்லை?

"நீ கவலைப்படாதை பிள்ளை. பரணி முந்தநாளும் வந்திட்டுப் போனது" அம்மா ஆறுதல் சொன்னார். மாலை சரிந்து இரவும் ஆனது. கடப்பை வெறித்தபடி மண்கும்பியில் அமர்ந்திருந் தார்கள். சாறத்தின் நுனியை வலக்கையால் தூக்கிக்கொண்டு தடக்குமாப்போல நடந்து வருவது அவன்தான்! பின்னால் குணசேகரன்.

"அம்மாளாச்சி! ஏழு செவ்வாய் உன் காலடிக்குத் தவறாமல்

வருவேன்" வானதி தன்னுடைய பிரார்த்தனை வீண்போக வில்லை என நெகிழ்ந்தாள்.

அவனுடைய முகம் காய்ச்சலில் வாடிப்போயிருந்தது. மலேரியாக் காய்ச்சல். உடல் நலமின்மை முகச்செந்தளிப்பைக் கபளீகரம் செய்திருந்தது.

"சுற்றிவளைப்பில உங்களைச் சுட்டுக் கொன்று போட்டதா யாழ் றேடியோவிலை சொன்னாங்களாம்" சிவசேகரம் சிரித்தார்.

"அந்த றேடியோ விடுகிற பகிடியளைத் தெரிஞ்சாக்கள் இதையெல்லாம் சீரியஸா எடுக்கமாட்டினம்" குணசேகரன் சொன்னான்.
பரணி எதுவும் பேசாமலிருந்தான். அவனுடைய மௌனம் எல்லோரையும் உறுத்தியது. திடீரெனச் சொன்னான்:
"ஆர் என்ன சொன்னாலும் நம்பிக்கொண்டு ஓடி வந்திடுறதா? இனி நீங்கள் இஞ்சை வரவேண்டாம்"

"ஏன் வரவேண்டாம்? நீங்கள்தானே வரலாமெண்டு சொன்ன னீங்கள்?" அவமானத்தில் குரல் கம்மிப் போயிற்று.
"அப்ப இருந்த நிலைமை வேறை... இப்ப..." வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கிக்கொண்டாற்போல நிறுத்தினான்.

ஏங்கிப்போய்ப் பார்த்தாள். கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் நஞ்சில் கொஞ்சம் நாக்கில் சுரந்துவிட்டதா? கல்நெஞ்சக்காரன்! ஆனாலும், அவன் உயிரோடு இருக்கிறான். அவளுக்கு அது போதும்!
"தம்பி.. இதென்னது? இந்தப் பிள்ளை இவ்வளவு தூரம் பதை பதைச்சுக்கொண்டு தேடி வந்திருக்கு... இப்பிடி எடுத் தெறிஞ்சு கதைக்கிறீங்கள்" அம்மா முதற்தடவையாக அவனிடம் கோபப் பட்டார். சாந்தாக்காவும் ஏதோ சொல்ல வாயுன்னிவிட்டுப் பேசாதிருந்தார்.

அவன் அம்மாவை ஏறிட்டுப் பார்த்தான். வாஞ்சையினிடத்தில் கடுமை. அவனால் தாங்க முடியவில்லை. அவருடைய மடியில் படுத்து அழ முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

"ஏதோ கோபத்திலை கதைக்கிறதை நீங்களேனம்மா பெரிசு படுத்திறீங்கள்?" சிவசேகரம் தாயில் சினந்தார்.

"இல்லை அண்ணை. நான் தெளிவா முடிவெடுத்துத்தான் சொல்லுறன். இவ இனி இஞ்சை வரவேண்டாம்" எங்கோ பார்த்துக்கொண்டு சொன்னான்.

"இவவாம்! பேரைக்கூடச் சொல்ல முடியாதளவு கசந்து போனேனா?" விசும்பினாள் வானதி.
அவன் கல், மரம், இரும்பாய் நின்றான். நட்சத்திரங்கள் இறைந்து



கிடந்த வானத்தைப் பார்த்து நெடுமூச்செறிந்தான். பிறகு எழுந்து வாசலை நோக்கி நடந்தான். சிவசேகரம் அவனைத் தொடர்ந்தார்.

"தம்பி! என்ன நடந்தது?"
"அண்டைக்கு நீங்கள் சொன்னது சரி. நாவல்குளத்து விதானை யார் தன்ரை வேலையைக் காட்டிட்டாரண்ணை"
சிவசேகரம் அதிர்ந்துபோய் நின்றார்.
"என்னிலை எங்கை பிழைபிடிக்கலாமெண்டு மாத்தையா ண்ணை காத்திருக்கிறார்"

பனித்தூறலில் உடல் சில்லிட்டது. மரங்களும் குளிரில் நடுங்குவதான பிரமை. தூரத்தில் கண்டி வீதியில் வாகனங்கள் இரையுமோசை. யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் இராணுவத் தொடரணிகளாயிருக்கலாம்.

"வானதி பாவம். அழுது குளறிக்கொண்டு ஓடிவந்துது. நீங்கள் கொஞ்சம் ஆறுதலாக் கதைச்சிருக்கலாம்"

"நான் இருக்கிற நிலைமையில அவளுக்கு நம்பிக்கை குடுக்க

விரும்பேல்லை அண்ணை. அவள் வாழவேண்டியவள்"
கண்கள் ஈரத்தில் பளபளத்தன.
"எல்லாம் ஒருநாள் சரிவரும் தம்பி"
அவன் அவநம்பிக்கையோடு சிரித்தான். பிறகு, அவ்வளவு நேரமும் வாசலிலேயே நின்றுகொண்டிருந்த சின்ன நேசனுடைய சைக்கிளில் ஏறிப் போய்விட்டான்.
அந்தச் சம்பவம் வானதியை காயப்படுத்தியது. அவமானப் படுத்தியது. அதீத கௌரவம் பார்ப்பவளென அறியப்பட்டிருந்த அவளுடைய முகத்தில் ஓங்கி மிதித்தது. ஆனாலும் காதல் மாபெரும் மறதியை வழங்கியது.

கோட்டைக்குள்ளிருந்து வெளியேற எத்தனிக்கும் இராணுவத் தைத் தடுத்து நிறுத்த பிற மாவட்டங்களிலிருந்தும் போராளிகள் வரவழைக்கப்பட்டிருப்பதாக அவளிடம் தனஞ்சயன் சொன் னான். பரணி நிச்சயம் வந்திருப்பான். தற்செயலாகச் சந்தித்து விடுமாப்போல அவனுடைய முகத்தைப் பார்க்கமுடிந்தால்... ஒரு நிமிடம், ஒரு வார்த்தை... ஓராண்டுக்குப் போதும்.

"நீயொரு பைத்தியக்காறி" ரதி மென்மையாகவும், சந்தியா கடுமையாகவும் கடிந்துகொண்டதை வானதி பொருட்படுத்த வேயில்லை.

அவளிடம் ஒரு மனக்கணக்கு இருந்தது. அந்தக் கணக்கு வழங்கும் இடைவெளிகளில் நகரத்தில் நுழைந்து வெளியேறு வாள். பெரியளவிலான இராணுவ நகர்வொன்றை எதிர்பார்த்து பெரும்பாலான சனங்களும் வீடுகளிலிருந்து வெளியேறி விட்டார்கள். எஞ்சியோர் பதுங்குகுழிகளுள் பாதி நாட்கள் வாழ்ந்தார்கள். பெரும்பாலான கடைகள் பூட்டப்பட்டு விட்டன. கோட்டையிலிருந்து ஷெல்லடி தொடங்க, எஞ்சி யிருக்கும் கடைகளின் பலகைகள் மடமடவென்ற ஓசையெழத் தூக்கி அடுக்கப்படும். அரிதாக ஓடும் மினிபஸ்களில் அகப்பட்டதில் ஏறி அடைந்துகொண்டு சனங்கள் ஓடித் தப்புவார்கள். சற்றைக் கெல்லாம் நகரம் வெறிச்சோடிவிடும்.

அன்றைக்கு அவளுடைய மனக்கணக்குப் பிழைத்துவிட்டது. இவளும் தெருநாயொன்றும் மட்டுமே பேருந்து நிலையத்தில் நின்றார்கள். கஸ்தூரியார் வீதியிலிருந்து பாய்ந்தடித்துக் கொண்டு வரும்போது, வேகமெடுத்து விரைந்துகொண்டிருந்த மினி பஸ்ஸின் பின்புறத்தைப் பார்த்தாள். நாய் இவளது காலடியில் ஒடுங்கியது. அதன் நாசி ஈரத்தை அவள் பாதங்களில் உணர்ந்தாள். நிராதரவான அதன் கண்கள்... அவள் இன்னமும் ஏனங்கே நிற்கிறாளென போராளிகளுள் ஒருவன் வினவினான். இல்லை கத்தினான். அவள், அவர்களிடம் பரணியைப் பற்றி விசாரிக்கலாமாவென்று யோசித்துக்கொண்டிருக்கையில், அவர்கள் ஆயுதங்களைத் தோளிலேற்றி அவசரமாக ஓடிப் போனார்கள். அவள் ஆஸ்பத்திரிக்குப் பின்பக்க வீதியால் நடக்கத் தொடங்கினாள். அங்கு ரியூசன் சென்ரர்களில் யாராவது நிற்பார்கள். அடிபாடு தொடங்கிவிட்டது. கோட்டையை நோக்கியும் கோட்டையிலிருந்தும் குண்டுகள் பறக்கத் தொடங்கின.

வானதி மரணத்தைக் கண்ணெதிரில் கண்டாள். எறிகணைகள் அவளுடைய தலைக்கு மேலால் கூவிப் பறந்தன. எரிந்தபடி விரைந்து வருகிற அன்னாசிப் பழங்கள்! அவள் தாங்கொணாத பயத்தோடு கத்தியழுதபடி ஸ்ரான்லி வீதி வழியாக ஆரியகுளச் சந்தியை நோக்கி ஓடினாள். நாயின் ஊளை அவளைத் தொடர்ந்தது. பின் சடுதியாய் மறைந்தது. எதிர்ப்பட்ட கடை யொன்றினுள் புகுந்து விழுந்தாள். அது, ஒட்டு வேலைகள் செய்கிற பட்டறை. எறிகணைகள் ஆங்காரத்தோடு கூவி வந்து விழுந்து வெடிக்குமோசை செவிகளைப் பிளந்தது. காதில் ஈரமாக ஏதோ கசிந்தது. தொட்டுப் பார்த்த விரல்களில் குருதி... நிற்காமல் கொப்பளித்து வழிந்து சட்டையை நனைத்தது. அவள் அருகில் கிடந்த பழந்துணியை எடுத்து காதோடு சேர்த்து வைத்துப் பிடித்துக்கொண்டாள். துணியில் கிறீஸ் மணத்தது. சிறிது நேரத்தில் சத்தங்கள் குறைந்துபோய்விட்டன. ஓரிடத் திலிருந்து கூம்பு வடிவில் புகை திரண்டெழுந்து வானத்தில் பரவுவதைக் கண்டாள். நிணமும் துணியும் கருகும் வாடை. நெருப்பின் பெருவாய் கட்டிடங்களைத் தின்று பரவிற்று. துயருற்ற ஆன்மாவின் விடுபடலைப்போல ஆசுவாசத்தோடு கிளம்பிப் பரவிய புகை சாவதானமாக நகரை மூடியது.

சிறிது நேரத்தில் எறிகணை வீச்சு ஓய்ந்தது. இடைவேளை நேரம். எழுந்து வெளியில் வந்தாள். உடைகளில் அழுக்கு. முழங்கைச் சிராய்ப்பிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. "எலக்ரோனிக்" பொருட்கள் விற்கும் கடையொன்று சிதிலமா கியிருக்க, அதன் உரிமையாளர் தலையில் கைவைத்தபடி நின்றுகொண்டிருந்தார். இடிபாடுகளினுள்ளிருந்து கம்பிகள் இறைஞ்சுவதுபோல கைகளை நீட்டிக்கொண்டிருந்தன. அவள் தன்னைக் காப்பாற்றுவாளென்ற நம்பிக்கையில் பின்தொடர்ந்து வந்த நாய் வயிறு கிழிந்திருக்க மன்றாடும் தோற்றத்தில் வானத்தைப் பார்த்து நான்கு கால்களையும் உயர்த்தியபடி உயிரற்றுக் கிடந்தது. குற்றவுணர்வின் இருள் தன்னுள் படிவதை அவள் உணர்ந்தாள்.

மீண்டும் நகரம் மெல்லென அசையத் தொடங்கிற்று. கடைகளின் பலகைகளில் ஒன்றிரண்டு வியாபாரத்தினை எதிர்பார்த்து விலக்கப்பட்டன. அவள் புகையிரதக் கடவையைக் கடந்து ஆரியகுளச் சந்தியை நோக்கிப் போனாள்.

யாரோ வீட்டைக் காலிசெய்து பொருட்களை ஏற்றிக்கொண்டு பலாலி வீதி வழியாகப் போனார்கள். முதிய பெண்ணொருவரை சைக்கிளில் வைத்து உருட்டிக்கொண்டு இளைஞனொருவன் போனான். இரும்பு ட்ரங்குப் பெட்டி காரியரில் கட்டப் பட்டிருந்தது.



பதுங்குகுழியிருந்தவர்கள் அதற்குள் பதுங்கினார்கள். அற்றவர்கள் வானத்தைப் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந் தார்கள். உலங்கு வானூர்தி எப்போதும் சஞ்சரித்துக்கொண்டி ருக்கும் மாயம்போல திடீரென வானத்தில் தோன்றிச் சுடத்தொடங்க இவர்களும் விழுந்தடித்துக்கொண்டு சமைய லறை கொங்கிறீற் தளத்திற்குக் கீழ் ஒளிந்துகொள்வார்கள். வேண்டுமென்றே குறிதவறவிடும் குண்டுவீச்சு விமானங்கள் இவர்களில் கருணைபாலித்தால் நால்வருக்கும் ஒரே கல்லறை. தனஞ்சயன் தங்கியிருந்த கொக்குவில் வீட்டில் பதுங்குகுழி இருந்தது. இவர்களை அங்கு வந்துவிடுமாறு அவன் கூப்பிட் டான். ஆனால், யாரோவொருவரின் வீட்டில் தங்குவதிலுள்ள நடைமுறைச் சிக்கல்கள் இவர்களைப் பின்னடிக்க வைத்தது. ஷெல்லடி, விமானக்குண்டு வீச்சினைப் பார்க்கிலும், பொழுது போக்குப்போல வந்து சுட்டுச் சுட்டு விளையாடும் உலங்கு வானூர்திகளுக்கே அஞ்சினார்கள். சன்னங்கள் கூரையோடு களைச் சிதைத்தன. மரங்கள் காயப்பட்டன. வெளிச்சுவர் களிலும் சன்னச் சிதைப்புகள். நீலவானத்தைப் பார்த்தபடி படுத்துக் கிடந்தபோது போரின் "அழகியலை" அவர்களால் இரசிக்க இயலவில்லை.

திருநெல்வேலியை நோக்கி நடந்தாள். அவள் எண்ணியிருந்தது போல சாவதற்கு விரும்பவில்லை என்பதை அந்தக் கணம் உணர்ந்தாள். வாழும் வேட்கை எதைப் பார்க்கிலும் மேலோங்கி நின்றது.

அவள் வீட்டுக்குத் திரும்புவதன் முன்னதாக செய்தி வந்தடைந்து விட்டது.

"ஆஸ்பத்திரியிலை ஷெல் விழுந்து நிறையப்பேர் செத்துப் போச்சினமாம்"

அவளைக் கண்டதும் ரதி கோபத்தோடு கத்தினாள்.

"உனக்கு விசராடி? சனமெல்லாம் அமளிப்பட்டு ஓடுகுது. நீ ஆடி அசைஞ்சு வாறாய்?"

"இனிப் போகேல்லை"

அதன்பிறகு வந்த நாட்களில் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் யாழ்நகர எல்லைக்குள்ளும், எல்லையைத் தாண்டியும் எங்கெங்கும் பரந்து விழுந்தன. வின்சர் திரையர ங்குச் சந்தியில் விழுந்த எறிகணைகள் பதினேழு பேரைப் பலியெடுத்தன. பலருக்குக் காயம். விமானங்கள் குண்டுகளைத் தாராளமாக அள்ளி வீசின. உலங்குவானூர்திகள், கீழிருப்பவர் களது தலையே இறங்குதளம் என்குமாப்போல தாழ்ந்து வட்டமிட்டுச் சுட்டன.

அமுதினி பருத்தித்துறையிலுள்ள தன் வீட்டுக்குப் போய் விட்டாள். வடமராட்சியில் பெரிய சண்டை நடந்துகொண்டிருந் தது. அவள் என்னவானாளோ என இவர்கள் கலங்கிக்கொண் டிருந்தார்கள். அங்கிருந்தவர்களில் அநேகர் அகதிகளாகப் போய்விட்டதாகப் பத்திரிகைகள் கூறின.

வானதி முன்னைப் போல கண்டபடி நகரத்துக்குச் செல்வ தில்லை. மரணத்தை நேரெதிர்கொண்ட நாளில் அவள் வாழ்வை நேசிக்கத் தொடங்கியிருந்தாள். பரணியின் ஞாபகம் வரும்போதெல்லாம் அவள் அவனைத் தேடியலைந்த நாட்களை நினைத்தாள். அழுது குழறிக்கொண்டு வீதியால் ஓடிய அந்த நாளை நினைத்தாள். அவன், அவளுடைய நெஞ்சில் பொருக்கேறிய காயமானான்.

ஆனாலும், அவள் அவனுக்காக வேண்டி வைத்த நேர்த்தியைச் செய்து முடித்தாள். ஏழு செவ்வாய்கள் அம்மன் கோவிலுக்குப் போனாள். அம்மனுடைய இளஞ்சிவப்புப் பாதங்களைப் பார்த் துக்கொண்டு மணிக்கணக்காக அமர்ந்திருந்தாள்.

கோவிலுக்குப் போய்விட்டு வந்த நாளொன்றில், பரமேஸ்வராச் சந்தியைக் கடந்துபோன கரும்பச்சை நிற வாகனத்தில் துப்பாக்கி ஏந்தியபடி அமர்ந்திருந்த பரணியைக் கண்டாள். அவனும் அவளைக் காணாமலிருந்திருக்க முடியாது. அந்த வாகனம் தடதடத்தபடி யாழ்நகரை நோக்கி விரைந்தது. வீட்டை நோக்கி நடந்தபோது, வினோதமானதும் குழப்பகரமானதுமான உணர்வொன்றினால் அவள் பீடிக்கப்பட்டிருந்தாள்.

அன்றைக்கென்று பார்த்து தனபாக்கியம் வந்து சேர்ந்திருந்தார். “இந்தச் செல்லடிக்குள்ள உன்னை விட்டிட்டு நெஞ்சிடிச்சுக் கொண்டு நான் அங்கை இருந்து என்ன செய்யப்போறன்? நானும் இஞ்சையே வந்திடுறன்” என்றார்.

“அப்பா?”

“அவருக்கென்ன? வீடு எடுத்திட்டுக் கூப்பிட்டா வருவார்”

அவள் தோழிகளைப் பார்த்தாள். கண்ணீரிலும் சிரிப்பிலும் ஒன்றானவர்கள்!

“நீங்களும் எங்களோடை வாங்கோவன்” கூப்பிட்டாள்.

“விசர்க்கதை கதைக்காதை. இஞ்சை எங்கையோ பக்கத்திலை தானே... அம்மாவின்ரை சமையலைச் சாப்பிட அடிக்கடி வருவம்” உலங்கு வானூர்தியின் இறக்கைச் சத்தம் கேட்கவும் எழுந்து சமையலறைக்குள் ஓடினார்கள்.

“விட்டா வீட்டுக் கூரையிலையே வந்து இறங்கியிடுவான் போலை கிடக்கு” தனபாக்கியம் வசை பாடினார். நெருக்கி யடித்துக்கொண்டு அடுப்படிப் புகட்டுக்குள் இருந்த அந்த இக்கட்டான நிலையிலும் அவர்களது முகங்களில் புன்னகை பரவியது. எதற்குச் சிரிக்கிறார்களென்பது புரியாமல் வானதி ரதியைப் பார்த்தாள்.

ரதி அவளிடம் ஏதோ கேட்டாள். அவளுக்கு அதுவும் கேட்கவில்லை. காதைத் தொட்டுப் பார்த்தாள். இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. தாய்க்குத் தெரியாமல் சட்டையின் நுனியைத் தூக்கித் துடைத்தாள்.
“என்ன?” ரதி சைகையால் வினவினாள்.
வானதி ஒன்றுமில்லை என்பதாகத் தலையசைத்தாள்.

இடது காதினுள் கடலலைகளின் இரைச்சலன்றி வேறேதும் கேட்பதில்லையென்பதை அவள் தாமதமாகத்தான் தெரிந்து கொண்டாள். இடதுபக்க செவிப்பறை உடைந்து போய்விட்டது.

Best
Photo Booth
in Town




Our Services
Photography
Photo Booth
Complete Photo Album
Graphic Design
Virtual Tour

Affordable
High Quality
Professional Photographers

...capturing memories, one shot at a time

Real Shadows
Digital Photography
Real Shadows Digital Photography
www.realshadows.com

Call
647 200 JUDE
5833



-திருமாவளவன்

# கறி சோறும் கரண்டி முள்ளும்



நீண்டநாட்களுக்குப்பின் அவனைச் சந்தித்த போது மிகக்களைப் புடன் காணப்பட்டான். தன் மனைவியைப் புடவைக்கடையில் விட்டுவந்ததாகச் சொன்னான். அவன் என் நீண்ட நாள் நண்பன். அண்மை யில் சிலகாலம் இருவருக்குமான தொடர்பு விடுபட்டுப் போயிருந் தது. பெருநகரவாழ்கை எங்களை இப்படித்தான் ஆக்கிவிட்டது.

“வீட்டில் ஏதாவது விசேடமா”
“இல்லை. இவ்வாரம் மூன்று கலியாண வீடு” என்றான். அவனது குரலில் சலிப்பு இருந்தது. உடலிலும் மன திலும் வாழ்வின் களைப்புப் படிந்து ஆளே மாறிப் போயிருந்தான்..

பொதுவாகவே இளவேனிற் காலத்திலிருக்கும் உற்சாகம் முதுவேனிலில் இருப்ப தில்லை. பழங்களும் தானி யங்களும் முற்றிச் சரிவதுபோல மனிதரும் களைத்துச் சோர்கின்றனர்.

ரொரன்றொவில் தமிழர் விழாக்களும் திருமணக் கொண்டாட்டங் களும் இணைந்து கோடைகாலம் முழுவதையும் ஆக்கிரமித்து விடுகிறது. எம்மவர்கள் இந்த நாட்டில் காலூன்றிக் கால்நூற்றாண்டு கடந்து விட்டது. இப்போ எம்மவர் வேரூன் றிக் கிளை பரப்பி விரியத் தொடங்கிவிட்ட னர். வருடம் முழுவதும் இத்தகைய விழாக்க ளுக்குப் பஞ்சமில்லை. கடந்த சில ஆண்டுகளில் புதிய பல மணவிழாக்கூடங்கள் திறக்கப்பட்டுள் ளன. இருந்தும்கூட ஒருவருடத்துக்கு முன்பே விழா மண்டபங்ளை ஒழுங்கு செய்யவேண்டிய நிலையுள்ளது. நாட்கள் இருக்கிறனதானே பார்க்கலாம் என்றால் பின்பு மண்டபத்திற்கு அலைய வேண்டிவரும். அவ்வளவு பிஸி!

“கனடாவுக்கென்று தனிப் பஞ்சாங்கம் எழுதுறாங்கள் அமாவாசை, அட்டமி, நவமி, என எது வருகிறதோ இல்லையோ ஒவ்வொரு வார இறுதிகளில் கல்யாண நாள் மட்டும் வந்து தொலைக்கிறது” என அண்மையில் முதியவர் ஒருவர் அலுத்துக் கொண்டார்.

“ஐயா! ஊரில் இருக்கும் வரைதான் அட்டமியும் அமாவாசையும்.. கடல் தாண்டிய பின் இதுகள் எல்லாம் சித்திக்காது.”

இது நான். எனக்கே உரிய பாணியில் வார்த்தைகளை கேலிச் சுவைதோயச் சொன்னேன். அவர் உசாராகி விட்டார். தன் மனக்கிடக்கையைக் கொட்டித் தள்ளி விட்டார்.

“ஒவ்வொரு கலியாணத்துக்கும் ஒவ்வொரு புதுச் சேலை வேணும். பட்டுச்சேலைகளை கழுவிப் பாவிக்கும் வழக்கமே கனடாவில் தமிழ் பெண்டுகளுக்கு இல்லை. இரண்டு அல்லது மூன்று விழாக் களுக்கு உடுத்தியபின் அதைத் தொடுவதே இல்லை”

வருத்தப்பட்டார். உண்மை தான். நான் வேறு பலரிடமிருந்தும் இந்த மனவலியை அறிந்திருக்கிறேன். சில

ஆண்டுகளுக்கு முன் நண்பன் ஒருவன் வீடுமாறினான். அவனுக்கு உதவிசெய்வ தற்காக போயிருந்தேன். ஏழெட்டு "சூட்கேஸ்" பொதிகள். ஒவ்வொன்றும் பிணப்பாரம். ஏற்றி இறக்கி மிகவும் களைத்து விட்டோம். ஒவ்வொரு "சூட்கேஸ்" இலும் "அம்மிக்கல்" வைத்துக் கட்டியிருக் கிறாயா? என்றேன்

"இவ்வளவும் பட்டுப் புடவை கள். என்ர மனுசி பாவித்துக் கைவிட்டது"

"கைவிட்டதெண்டால் பிறகேன் சேர்த்து வைச்சிருக்கிறாய்"
"என்னத்தைச் செய்யிறது. இதில முக்கால்வாசி சீலைகள் இரண்டு தடவைக்குமேல் உடுத்தி னதில்லை. ஒவ்வொன்றும் நான் நித்திரை முழிச்சு "பக்டரி யில்" மாரடிச்சு உழைச்ச காசு. எறிய மனமில்லை"

அந்தக்குரலில் இருந்தது பகட்டா அல்லது சலிப்பா? என என் சிறிய மூளைக்குப் புரியவில்லை.

"சரிதான். இப்பிடி வீடுவீடாய்ச் சுமந்து என்ன செய்யப் போகிறாய்"
"ஊருக்கு அனுப்பலாம் இனசனமாவது உடுத்தும் என்று நினைச்சன். அதுவும் சரிப்படாது போலை கிடக்கு. ஊரும் ரொம்ப மாறிப் போச்சு. கனடாவிலையிருந்து உன்ரை மனுசி உடுத்தின "பழஞ்சீலை" அனுப்பினனியோ எண்டு கேட்டால் தேவையில்லாமல் பொல்லைக்குடுத்து அடிவாங்கின கதையாய்ப் போயிடும். பயமாய் கிடக்கு. இருக்கட்டும் பார்ப்போம்"

எனக்கு அவன் மனநிலை புரிந்தது. ஓடுற வெள்ளத்தோடு சேர்ந்து ஓடவேண்டியிருக்கிறது. தனி ஒருவன் எதிர்நீச்சல் போட நினைச்சால் பிறகு இருக்கிற குடும்பமும் இல்லாமல் இவன் நடுரோட்டிலை குடும்பம் எங்கோ கூட்டில் என நிற்கவேணும். வேறென்ன செய்வது ?

ஊரில் இருந்தபோது என் அம்மாவிடம் இருந்த பட்டுப்புடவை இரண்டுதான். ஒன்று திருமணக் கூறை. சந்தனக் கலர். எப்போதும் அதில் "பூச்சி உருண்டை" வாசனை தூக்கலாக இருக்கும். இன்னொன்று பின்நாளில் அப்பா வாங்கிக்கொடுத்த காஞ்சிபுரம் பட்டு. மயில் நீலம். அகன்ற சரிகைக்கரை போட்டது.

அதுதான் ஊரில் நடந்த எல்லாத் திருமண வீடுகளுக்கும் அம்மா உடுத்துவார். அப்பா இறந்தபின் அதுவும் இல்லை. கூட்டிக் கழித்துப்பார்த்தால் அம்மா உடுத்தியதை விட நான் அதை உடுத்தியதுதான் அதிகம். நாடகத்திற்கு. அதிலும் அந்தக் காஞ்சிபுரம் சேலையில் "தார்பாசு"க் கட்டிப் பண்டாரவன்னி யனாகத் தோன்றியபோது என்னுள் அறியாமல் ஒருவித மிடுக்கும் கம்பீரமும் எழும்

அம்மாவின் கூறைச் சேலை நைந்து பல இடங்களில் கிழிசல் வந்துவிட்டது. முடிவில் அதைப் பழைய பித்தளை பொருட்கள் வாங்க வருகிற "காக்கா" வுக்கு வித்தோம். நிறுத்து எடைக்குப் பணம் தந்தான். அந்தக்காலத்திலை பழஞ்சீலைக்கு இவ்வளவு பணமா என வியந்தோம். இதைக் கொண்டுபோய் என்னசெய்யப் போகிறான் என்று யோசித்தோம்.

சேலையை அப்படியே தீமூட்டி எரித்தால் சரிகைமட்டும் எரியாமல் எஞ்சுமாம். அதில் தங்கம் இருக்கிறதாம். ஒருமூலையில் எரித்துக்காட்டினான். நாங்கள் ஆச்சரியத்தில் வாயைப்பிளந்துகொண்டு நின்றோம்.

உண்மைதான். இப்போ நாங்கள் வாழ்வது வெறும் அசேதனம். அன்றிருந்தது ஒரு பொற்காலம்.

2.

அறுபதுகளின் நடுப்பகுதி. சித்திரை விடுமுறைக்காலம். வெயில் ஏறத் தொடங்குகிறது ஒரு மனக்கணக்கில் பத்து மணியிருக்கும். அம்மா துரையரக்கா வீட்டுப் படலையில் நின்றார். அவர்கள் வீடு எங்கள் வீட்டிலிருந்து இரண்டு வளவு தள்ளியிருந்தது.
துரையரக்காவுக்குச் சற்றுப் பெரிய சரீரம். அதிக தூரம் அதைச் சுமந்து நடக்கச் சிரமப்படுவார். அதனால் வசதி கருதி வைரி மீன்கடகம் இறக்குவது அவர் வீட்டுப் படலையடியை அண்மித்துத்தான். இது வாடிக்கை.
அன்று அம்மா வைரிக்காக காத்திருந்தார். மேலும் ஓரிருவர் சேர்ந்திருந்தனர். வைரி வரும்வரை துரையக்கா வீட்டு முன் படியிலிருந்து பேசிக்கொண்டிருந்தனர்.
அந்த நேரம் பார்த்து இரண்டு கிடுகு வண்டில்கள் அந்தப் படலையைத் தாண்டியது. முன்னால் பாக்கியநாதன் வண்டிக்காரருக்கு வழிகாட்டியபடி சைக்கிளில் மெதுவாய்ப் போய்க் கொண்டிருந்தார்.
"இரண்டு கிடுகுவண்டில் ஒழுங்கையுக்காலை போகுது யாருக்காக்கும்" என்றார் அம்மா. துரையக்காவும் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தவர்... மெல்லக் கதையை அவிழ்த்து விட்டார்.
"நேசத்தின்ரை மோளுக்குக் கலியாணமாம். வைகாசியிலை நாள் வைச்சாச்சு".
அப்பிடியே ! மெய்யே அக்கா அப்ப எங்கை கலியாணம் கொழும்பிலையே!
அம்மா



கதைக்குக் கொக்கியைப் போட்டார்.

நேசக்காவின்ரை மகள் இராஜேசுக்கும் கூப்பன் கடைச் சின்னமாக்காவின் இளையவன் சிவலிங்கத்துக்கும் காதல் என்றதும், நேசக்கா "நான் தொடுகிலும் இந்தக் கலியாணத்திற்கு சம்மதியன்" என்று அடம்பிடிச்சதும் அம்மாவுக்கு வடிவாய்த் தெரியும்.

நேசம் கொழும்பிலை வீடுவாங்கி அங்கையே குடியேறிக் கனகாலமாச்சு. சிவலிங்கத்திற்கும் குறையொன்றுமில்லை. வீட்டில் கடைக்குட்டி. நல்ல உத்தியோகம். அக்கா, தங்கை என்று பெரிய பொறுப்பொன்றும் கிடையாது. இரண்டு குடும்பமும் "ஒண்டுக்கையொண்டு" உறவுங்கூட.

இருந்தென்ன. காதலெண்டு வந்துவிட்டால் நாங்கள் எதிரி அல்லவா? வெறும் கௌரவப் பிரச்சினை ஒன்றுதான் காரணம். "இல்லை உதிலை கண்மணி வீட்டிலை கலியாணமாம். பெரிய எடுப்பாச் செய்யப் போகினம்போல. அதுதான் பந்தலுக்குக் கிடுகு போகுது போலக்கிடக்கு. முன்னுக்கு பாக்கியநாதனல்லே போறான்."

துரையக்கா உறுதிப்படுத்திக் கொண்டார்.

கண்மணி நேசத்திரை தமக்கைக்காரி. அந்த வீட்டிலை செல்லத்துரை குடும்பம் குடியிருந்தது. அவற்றை மூத்தமகன்தான் பாக்கியநாதன். என்னைவிட ஒருபத்து வயது மூத்தவர்.

"அப்ப நேசக்கா கலியாணத்து சம்மதம் சொல்லிட்டாவே"

அம்மா துருவித்துருவிக் கேட்கிறார். துரையக்கா தனக்கேன் வீண்வம்பு என்று நினைத்தாரோ தெரியாது. கதையை மழுப்புறா. அந்த நேரம் பார்த்து வைரி முன்னாலை நடந்துவர பின்னால் நாச்சி தலைச்சுமையோட வாறது தூரத்திலை தெரியுது.

சின்னம்மாக்காவும் மீன் வாங்க ஒரு சருவச்சட்டியோடை வாறார். அதோடை துரையக்கா கதையை நிறுத்திப்போட்டார்.

3.
மாப்பிள்ளை பெண்பிள்ளை என இருவீட்டிலிருந்தும் ஆணும் பெண்ணுமாய் கலியாண வீட்டிக்கு அழைப்பு வைத்துச் சென்றதி லிருந்து எனக்குள் பரபரப்பு தொற்றிக் கொண்டுவிட்டது.

"வலு பெரிசாய் செய்யப் போகிறார்களாம்"

வீட்டுக்கு மாவிடிக்க வந்த பொன்னுமாமி அம்மாவுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார்.

"இராசநாயக மச்சானுக்கு ஒரேயொரு பொம்பிளைப்பிள்ளை. கொழும்பிலை பெரிய உத்தியோகம். வெள்ளவத்தையிலை வீடுவளவு கிடக்காம் பின்னை சும்மா குடுப்பினமே"

பதிலுக்கு அம்மா. எனக்கு பாடசாலை விடுமுறைக்காலம். பிறகு சொல்லவா வேண்டும்.

நல்லநாள் பார்த்து பந்தல்க்கால் நாட்டினர் "பெரிய சொக்கட்டான் பந்தலாம்" என்று ஊரெல்லாம் பேச்சு அடிபடத் தொடங்கிவிட்டது. சக்கரைக்கட்டாடியார் பந்தல் பொறுப்பை எடுத்திருந்தார். எங்கடை ஊரிலை பாதிக்குடும்பத்திற்கு அவர்தான் வெள்ளாவி வைக்கிறது.

பாடசாலை லீவு நாட்களின் மாலையில் "கிளாரம்மா" வீட்டுக்கு படிக்கப்போ என அம்மா என்னைக் கலைத்துவிடுவார். "சொக்கட்டன் பந்தல்" என்றால் அது எப்படி இருக்கும் என்பதை அறியும் ஆவலில் இருந்தேன்.அதற்கு முன் அந்தச் சொல்லை கூட நான் கேள்விப்பட்டதில்லை.

கிளாரம்மா வீடு எங்கள் ஊரின் மேற்கெல்லை தாண்டி இருந்தது. அதிகதூரம் இல்லை. கண்மணிமாமி வீடு தாண்டி அப்பால் வேகமாக ஐந்து நிமிடம் நடந்தால் "களையிட்டி" வரும். கம்மாளர்களும் மரச்சிற்பம் செய்யும் ஆசாரிகளும் என ஆறேழு குடும்பங்களைக் கொண்ட சிறியகுறிச்சி. களையிட்டி என்ற பெயரே ஊரிலை பலருக்கு தெரியாது. "தைச்சக்கடவை" என்பார்கள். அதைத் தாண்ட வீமன்காமம். கிளாரம்மா வீடு அதன் எல்லையிலிருந்தது.

கிளாரம்மாவின் மகள் மலரக்கா எனக்கு கணக் குப்போடக் கற்றுத்தருவார். தமிழில் சொல்வதெழுதல் தருவார். சித்திரம் வரைவது மற்றும் வீட்டுப்பாடங்களை செய்ய உதவுவார்

பந்தற்கால் நாட்டியதிலிருந்து கல்யாணம் வரையிலான பத்துப்பன்னிரண்டு நாட்கள் எனக்கு வீட்டில் இருப்புக்கொள்ள வில்லை. கண்மணிமாமி வீட்டின் வடபுறத்தில் ஒழுங்கைக்கும் வீட்டுக்கும் இடையில்தான் பந்தர் போட்டார்கள். போகும் போதே வேலிப்பொட்டுக்குள்ளால் என்ன நடக்குதென நோட்டம் விட்டபடிதான் படிக்கப் போவேன். முடிந்ததும் எங்கும் மெனக்கெடாமல் ஓடி வந்துவிடுவேன்.

நாள் கிட்டக்கிட்ட "பொன்னுருக்கி" "நாள்ச்சட்டி" வைத்தபின் அம்மா பலகாரச் சூட்டிற்கு உதவி செய்யப் போவார். பயிற்றம் பணியாரம், அதிரசம், முறுக்கு. அச்சுப்பலகாரம் என ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்று. ஊர்ப்பெண்டுகள் கூடியிருந்து பேச்சும் சிரிப்புமாய் ஒரே ஆரவாரம்.

இன்றைக்கு என்ன பலகாரம் என்று ஒருநாள் கேட்டேன்.

"ஏதோ புதிசாய் "மிச்சராம்". இங்கிலீசுப் பலகாரம் போலை நான் முன்னைபின்னைக் கேள்விப்பட்டதே இல்லை! அதுக்கென்று தனியாய் பெட்டையள் கடலைமாவிலை ஓமப்பொடி காரப்பூந்தி எல்லாம் சுட்டாளவை" என்றார் அம்மா. சக்கரைக் கட்டாடி யாரின் ஒற்றைத் திருக்கல் எப்போதும் படலைக்குள் நின்றது. அவர் நடராசா கட்டாடியாருக்கு வேலைகளை ஏவிக் கொண்டிருந்தார். கிடுகுப்பந்தருக்குள் சினிமாக்களில் வருவது போன்ற ஒரு பெரிய மாளிகை உருவாகிக் கொண்டிருந்தது.

பெரிய மாளிகையின் உட்புறம்போல படிப்படியாக முறிச்சு வெள்ளைகட்டி ஒவ்வொரு முறிப்புக்கும் பச்சை, மஞ்சள், சிகப்பு, நீலம் என தனித்தனி சரிகை வேலைப்பாடுகளுடன் கரைகள் பொருத்தப்பட்டது.

பெரிய கண்ணாடிச்சர விளக்குகள் இரண்டு நடுவே தொங்கின. அதற்கு எண்ணெய் விட்டு விளக்கு வைப்பார்களா? அல்லது லைட் போடுவார்களா? என்பதிலேயே என் ஆராய்ச்சியிருந்தது. கல்யாணத்திற்கு முதன்நாள் மாலை இரண்டு மாட்டு வண்டிலில் பெரிய மணவறை வந்து இறங்கியது. மூன்றடுக்கு மணவறை என்று புழுகினார்கள். சிறுசிறு கண்ணாடிச் சில்லுகளைப் பதித்து "காக்காய்பொன்" தாளால் விளிம்புகள் அமைக்கப் பட்டிருந்தன. அண்மையில் அது புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். காய்ச்சி ஒட்டிய வச்சிரத்தின் நெடி மூக்கை உறுத்தியது.

இருபுறமும் பெரிய யாளிகள் மணவறையைச் சுமந்துநின்றன. முதற்தட்டின் நடுவில் பிள்ளையாரின் உருவம் இருந்தது. இரண்டாம் தட்டில் தாமரைப்பூவின் மேல் இலட்சுமி. இருபுறமும் பல தேவபாலகரின் உருவங்கள் இறக்கைகட்டிப் பறப்பது போன்ற பாவனையில் பொருத்தப் பட்டிருந்தன.

எனக்கு இப்படி சோடனை சார்ந்த விடயங்கள் என்றால் போதும். வாயைப் பிளந்தபடி அந்த இடத்தில் அப்படியே குந்திவிடுவேன். அம்மா வீட்டைபோய் சாப்பிட்டுவா என துரத்திக் கொண்டே இருந்தார்.

பந்தரின் உள்ளே பெரிய கதிர்ப்பாய்கள் விரிக்கப்பட்டு அதன்மேல் கம்பளங்களும் புற்பாய்களும் போடப்பட்டன. அதற் கென ஊரில் உள்ள சிங்கப்பூர்பென்சனியர் வீடுகளிலிருந்து ஒன்று இரண்டு என கம்பளங்கள் சேர்க்கப்பட்டன.

பந்தரில் இருந்து வீட்டின் முன்புறம்வரை கண்னாடி மணிச்சரங்கள் தொங்கவிடப்பட்டன. முன் படலையின் இருபுறத்திலும் பழுத்த பெருங்குலையோடு கதலிவாழைகள் நிறுத்தப்பட்டன. குலையின் அடியில் செவ்விளநீர் தொங்கியது. மறுநாள் சமையலுக்காக அளவெட்டியிலிருந்து "தன் உதவியாட்களுடன் அப்பையா பரம்" வந்து இறங்கினார். அவர்தான் அந்த சுற்றுவட்டாரத்தில் பெரிய சமையற்காரர்.

பின்நேரம் ஊர் பெரியபெடியள் எல்லோரும் கூடினர். முன் ஒழுங்கையில் இருபுறமும் மரங்கள்நட்டு மேலே வெள்ளை "டிசூப்" பேப்பரால் சோடிக்கத் தொடங்கினர்.இரவு எட்டுமணிக்கு மேல் அம்மா என்னை நிற்கவிடவில்லை. நீ சின்னப்பொடியன். வா! வீட்டை என்று இழுத்துப்போய்விட்டார்.

விடிந்ததும் ஓடிவந்து பார்த்தேன். வாழைசீப்புபோல வெட்டி ஒட்டப்பட்ட வெள்ளை "ரிசு" அலங்காரம் மெல்லிய சின்னக் காற்றில் சரசரத்து ஒலியெழுப்பியது.

அன்று ஊரே திருமணத்துக்கான ஆயுத்தத்தில் இருந்தது.

4.

சில ஆண்டுகளுக்கு முன் தொரன்றோவில் என் மகளின் திருமணம் நிகழ்ந்தது.

முதலில் திருமணத்திற்கான நாள்வைப்பது பற்றி பேச்செழுந் தது. "வின்டர்" காலம் என்றால் கடும்கஷ்டம். பட்டுப்புடவை யோடு "ஸினோ"வில் அலையேலாது. அதனால் வைகாசிக்குப் பிறகுதான் நாள்பார்க்க வேண்டும் என்பது முதற் நிபந்தனை யாக இருந்தது.

"கிழமைநாளிலை திருமணம் வைத்தால் ஒருவரும் வரமாட்டி னம். அதாலை சனி,ஞாயிறு விடுமுறை பார்த்துத்தான் வைக்கவேணும் அதிலையும் ஞாயிறு மாலை என்றால் அடுத்தநாள் வேலை என்று சனம் நேரத்தோடு ஓடியிடும். இதையும் கணக்கில் கொள்ளவேண்டும்"

இது இரண்டாவது நிபந்தனை.

எனக்கு மூன்று சகோதரம். குடும்பம், பிள்ளைகள் என எல்லோரும் ஐரோப்பிய நாடுகளில் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் வருவதானால் ஓகஸ்ட் மாதந்தான் நல்லது செப்டெம்பர் முதல்வாரம் பாடசாலை தொடங்கிவிடும். திரும்பவேண்டும். இது மூன்றாவது "கொன்டிஷன்".

> **"கிழமை நாளிலை திருமணம் வைத்தால் ஒருவரும் வரமாட்டினம். அதாலை சனி, ஞாயிறு விடுமுறை பார்த்துத்தான் வைக்கவேணும் அதிலையும் ஞாயிறு மாலை என்றால் அடுத்தநாள் வேலை என்று சனம் நேரத்தோடு ஓடியிடும்.**

இதிலும் சிக்கலுண்டு. தமிழ்க்கலண்டருக்கு ஆடிமாதத்தில் நற்கருமங்கள் செய்வதில்லை என்பது எங்கள் மரபு. எனவே ஓகஸ்ட்மாதத்தில் வரும் முதல் 15 நாட்களும் ஆடிக்குள் அடங்கிவிடும். செய்ய முடியாது. இதற்கப்பால் பொருத்தமான மண்டபம் கிடைக்கவேண்டும்.

பிறகுதான் பஞ்சாங்கம். எப்படி நாள் எடுப்பது? அமாவாசை அட்டமி நவமி கழிந்தால் ஒவ்வொரு வார இறுதியும் பொது நாள்தான். எப்படியோ நாள்பிடித்து மண்டபமும் பார்த்தாயிற்று. திருமண அழைப்பிதழ் பற்றி பேச்செழுந்தது. மகள் ஈ– பக்கங்களைத்தேடி ஒரு கம்பனியை பிடித்து அவர்கள் மாதிரி அழைப்பிதழும் அனுப்பிவிட்டார்கள். அது வீட்டில் எல்லோ

ருக்கும் மிகவும் பிடித்துப் போயிற்று.

நாங்கள் முடிவுசெய்துவிட்டோம். முதலில் என் நண்பனிடம் அழைப்பிதழை காண்பித்தேன். "நீங்கள் இதுதான் எடுப்பதென முடிவு செய்துவிட்டீர்களா?" என்றார். ஆம் என்றேன்.

"ஒரு கிறீஸ்தவத் திருமணம் என்றால் இது மிகஅழகான அழைப்பிதழ். தமிழ்த்திருமணம் என்றால் நான் இத்தெரிவை விரும்பேன்"

என்றார். காரணம் கேட்டேன். அழைப்பிதழ் கறுப்புநிறத்தில் வெள்ளிக்கம்பிகள் போன்ற அச்சமைப்பில் எழுத்துகள் இருப்பதை சுட்டிக்காட்டினார்.

அவர் கூறியது சரியே. மங்களகரமானது என சில நிறங்களை வைத்திருக்கிறார்கள். அது எங்கள் மனதில் படிந்துபோய் விட்டது. அவ்வளவுதான். நான் இந்த தெரிவுகளில் நாட்டமில்லாதவன்.

எனக்கு
எந்த விதி முறையோடும்
உடன்பாடு கிடையாது
என் மூலத்தை தரிசித்து
மனதுக்கிசைந்தபடி சுயத்தை வரைய
விழைகிறேன்
சற்று விலகியிருங்கள்

எனக் கவிதை சொன்னவன். கவிதை வேறு வாழ்வு வேறா? இருந்தாலும் அவர் கருத்தை வீட்டிலும் மணமகனிடமும் எடுத்துரைத்தேன். அவர்கள் தங்கள் முடிவில் உறுதியாக இருந்தார்கள்.

அழைப்பிதழ்கள் அச்சிட்டு வந்தன. முதலில் என் மைத்துனர் வீட்டுக்கு எடுத்துச்சென்றேன். அவரை என் தந்தைபோலக் கருதுவதால், அவர் ஒருவரால் மட்டுமே என்னைத் திட்டவோ என்மனதை மாற்றவோ முடியும்.

கொடுத்துவிட்டு மௌனமாக இருந்தேன். எல்லாவற்றையும் பலமுறை பார்த்தார். 'அழைப்பிதழ் அழகாக வந்திருக்கிறது' என்றார். என் மகிழ்ச்சிக்கு அளவில்லை. அதன்பின் இந்தக் கறுப்பு விவகாரத்தை மெல்ல அவிழ்த்து விட்டேன்.

வெள்ளைக்காரனுக்குத்தான் கறுப்பு துயரத்தின் நிறம். அவன் வெள்ளை நிறத்தை உயர்ந்ததாகவும் கறுப்பு என்பதை தாழ்ந்ததாகவும் பார்த்தான். அது அவர்களது உயர்வுதாழ்வின் வெளிப்பாடு. எங்களைப் பொறுத்தவரையில் கறுப்பு என்பது உறுதி. கறுப்பு வலிமை. என்றார்.

உண்மையான வார்த்தைகள் அவை. மகிழ்ந்தேன்.

இந்தப் பெருநகரத்து அலைச்சலுக்குள் உறவுகளுக்கிடையே யான பரிமாற்றங்கள் வெறும் சுகதுக்கங்களுடன் முடிந்து விடுகின்றன. அதற்குமேல் தொடர்வதில்லை. உண்மையை சொல்லப்போனால் நேரம் இல்லை. எல்லோ ரும் வேலைவேலை என ஓடுவதிலேயே வாழ்வைத் தொலைத்து விடுகிறனர்.

தொலைபேசியில் அழைப்புவைத்து மண்டபத்தில் வாழ்த்தி விட்டு வருவதோடு உறவுப்பரி மாற்றம் முடிந்துவிடுகிறது . பின்பு எப்போதா வது பிறிதொரு விழாவில் சந்தித்தால்தான் உண்டு.

ஒரு மாற்றீடாக தொரன்றொவில் இருப்பவர் களை அழைப் பிதழ்களோடு வீட்டில்சென்று அழைப்பது என்று தீர்மானித் தோம். அதன் சிரமத்தை பின்புதான் அறிந்துகொள்ள முடிந்தது. எங்கள் ஓய்வுநேரம் அவர்கள் ஓய்வுநேரம் எனப்பொருத்தமான பொழுத றிந்து ஒவ்வொரு வீட்டாரிடமும் முன் அனுமதி பெற்று வீட்டுக்குச்சென்று அழைப்பிதழ் கொடுத்தோம்.

"மண்டபப்பொதி"க்குள் விருந்திலிருந்து வீடியோ, புகைப்படம் என சகலதும் அடங்கியிருந்தது. எங்கள் விருப்புக்கேற்ப சிலவற்றை நாங்களே செய்வது என முடிவு செய்தோம். இந்த அனுபவமானது ஒரு தனிப்பதிவு எழுதுவதற்கு போதுமானது.
நான் ஒரு மந்தையிலிருந்து விலகிய ஆடு போல உணர்ந்த கணங்கள் அவை.. முகத்துக்கு முன்னால் பாராட்டி பின்னால் "விசரன் தேவையில்லாமல் முறியுறான்". என்கிற குரல்களைக் கடந்து செல்லவேண்டியிருந்தது.

மேலே சொல்லப்பட்டவை ஒரு எடுத்துக்காட்டுத்தான். யாரோ போட்ட தடத்தில் எல்லோரும் நடக்கவேண்டியிருக்கிறது. ஒரு வியாபார உலகில் பகட்டாக வாழ்கிறோம். எங்கள் விழாக் களை மண்டபக்காரரே வடிவமைக்கிறார்கள். நாங்கள் பணத்தைக் கொட்டிவிட்டு வெறுமனே பகட்டாகநின்று போலியாகக் கதைபேசிப் பெருமை பேசுகிறோம்.

இது ஊர் அல்ல, நீ வாழ்ந்த காலம் அல்ல, இது உன் நிலமல்ல, புதிய ஊர், . புதிய திணை, வேறு காலம், நீ கிராமத்தவன், பெருநகரத்துக்குள் தவறி விழ்ந்துகிடக்கிறாய்! என்கிறது என்னுள் ஒரு குரல்

இதை உணரமுடியாத ஒரு கிராமத்தானாகவே நான். "ஏதோ" இன்றும் வாழ்கிறேன்.

5.
பொலின்டனும் பாய்க்கியநாதனும் இருட்டோடு எழுந்து மயிலிட்டிக்குப் போயிருக்க வேண்டும். இரண்டு சைக்கிலில் வந்து இறங்கினர். இரண்டு கரியரிலும் பெரிய ஐஸ் பாளங்கள் கட்டப்பட்டிருந்தன. அவை உருகி நீர் சொட்டத் தொடங்கி விட்டது.

தவசியின் மோன் இராசன் அடிவளவில் மரத்துக்குக்கீழ் நல்ல நிழல் விழும் இடம்பார்த்து பெரிய கிடங்கொன்றை வெட்டிக் கொண்டிருந்தான். அதை இரண்டுபேர் மேற்பார்வை செய்து கொண்டிருந்தனர். குசினிப்புற விறாந்தையில் பெண்டுகள் காய்பிஞ்சு அரிந்துகொண்டிருந்தனர்.

கோப்பியின் வாசம் மூக்கைத் துளைத்தது. இரண்டு பெரிய செப்புக்கடாரத்தில் கோப்பி கலந்து ஆறவைக்கப்பட்டிருந்தது.

“இரவுக் கலியாணத்தக்கு விடியக்காலமையே கோப்பி கலந் தாச்சுப் போலைகிடக்கு“

என்றபடி அம்மா அருவாள் மனையிலிருந்து மரவள்ளிக் கிழங்கைச் சீவத் தொடங்கினார். கொழும்பிலிருந்து வந்து நின்ற பெட்டைகள் கோப்பியில் சிறிது எடுத்து சுவைத்தப் பார்த்தனர். அவர்களின் முகத்தைப் பார்க்க எனக்கு வாயூறியது.



நன்றாக சூடு இறங்கிய பின் கடாரங்களின் ஊற்றி அதன் அகன்ற வாய் “பொலித்தீன்” தாளால் மூடப்பட்டு கிடங்குக்குள் இறக்கப் பட்டது. சுற்றிவர ஐசும் மரத்தூளும் போட்டார்கள். இராசன் கிடுகு எடுத்துவந்து மேலே நிழல் போட்டான்

அன்றுதான் எங்கள் ஊருக்கு முதன்முதலாக “ஐஸ்கோப்பி” அறிமுகமான நாள்.

மாப்பிளை வீட்டைத் தாண்டித்தான் நாங்கள் கண்மணி மாமி வீட்டுக்குக் போகவேணும். மாப்பிளைவீட்டில் பெரும் ஆரவாரம் எதுமில்லை. பலகாரச்சூட்டுக்கும் அம்மா உதவிக்கு ஒருநாள் போய்வந்தார். எல்லாப் பலகாரத்திலும் கொஞ்சங்கொஞ்சம் செய்தார்கள் என்றார்.

சிவலிங்கத்தின் தகப்பனார் இறந்துவிட்டார். தமையன் “அப்போதிக்கரி”. அவர்தான் எல்லாவற்றையும் முன்னின்று செய்ய வேண்டும். அவர் கொஞ்சம் வரையறவான மனுசன். ஆடம்பரங்களில் அதிகம் நாட்டமில்லாதவர். தேவைக்கதி கமாக ஒரு செப்புச் சல்லி கூட விலகவிடமாட்டார். மிகக் கண்ணியமான மனிசன் என்ற வகையில் எல்லோருக்கும் அவர்மீது நல்லமதிப்பு உண்டு.

அவர்கள் வீட்டுக்கு முன் ஒரு பொட்டல் வெளிக்காணி இருந்தது. அதற்குள் இருந்த பற்றைகளை வெட்டித் துப்பரவாக்கி இருந்தார்கள். நிலத்திலிருந்த நெருஞ்சி முட்களை அகற்று வதற்காக வாழைக்குற்றிகளை உருட்டினார்கள். அதற்குள் திருமணமான தம்பதிகளின் வரவேற்பு நிகழ்வு நடக்கவிருப் பதாகச் சொன்னார்கள்.

திருமணத்தின் அடையாளமாக வீட்டுக்கு முன்புறம் வண்ணப் பேப்பரால் சோடித்திருந்தனர்.

பொம்பிளை வீட்டில் நேசம்மாமி திருமணத்திற்கு முரண்டு பிடித்ததால் ராஜேசின் சிறிய தகப்பன் செல்வமாணிக்கர்தான் எல்லாவற்றையும் முன்நின்று நடத்தினார். அவர் நல்ல செழிப்பானமனுசன். அவரின் தாராளமனது பற்றி முன்பும் பல பதிவுகளில் சொல்லியிருக்கிறேன்.

அன்று முழுவதும் மாணிக்கர் நல்ல உசாராகவே நின்றார். பின்நேரம் மூன்றுமணிபோல லைட்இஞ்சின் வந்தது. ஊர் முழுவதும் ஒன்றுதிரன்டு கடும்அமர்களமாக இருந்தது.

செல்வமாணிக்கருக்கு யாழ்ப்பாணத்தின் பெரியபெரிய நாதஸ்வரவித்துவான்களோடு நல்ல தொடர்பிருந்தது. சும்மா சாதாரணநாட்களில் கூட வடமராட்சிப்பக்கம் “சேவகம்” முடிந்து திரும்பும்போது மாணிக்கரைப் பார்த்து அவரோடு தண்ணி பாவிச்சு விருந்துண்டு போகும் வழக்கம் பல மேளகாரருக் குண்டு.

அந்த உறவில் நாலைஞ்சு கூட்டம் மேளகாரர் வந்திருந்தனர். ஆறு மணியளவில் பந்தருக்குள் கச்சேரி தொடங்கிவிட்டது.

மாப்பிளை வீட்டார் “உருத்திராபதி செட்” மேளத்தைப் பிடித்தி ருந்தனர். அதுவொன்றும் அக்காலத்தில் மிகப்பிரபலமான “செட்”என்று சொல்லமுடியாது. இதுவும் இல்லாவிட்டால் பொம்பிளை வீட்டார் மதியாயினம் என்ற காரணத்தால் பிடிக்கப் பட்டது.

தோழன் போய் மாப்பிளை வீட்டுச் சடங்கு சபைசந்தி எல்லாம் முடிந்து ஆராத்தி எடுத்து மாப்பிள்ளை புறப்படவும் தெல்லிப்பழையில் இருந்து மெயில்றெயின் புறப்படும் விசில் சத்தங் கேட்கவும் சரியாக இருந்தது.
ஒழுங்கையில் ஒரு மூன்றுவளவு தாண்டினால் பெண்வீடு. உரத்து கூப்பிட்டால் அங்குகேட்கும். இரண்டுநிமிட நடைதூரம். மேளதாளத்தோடு ஊர்வலமாகச் செல்ல ஒரு ஐந்து நிமிடங்கள் எடுத்திருக்கும்.

லைட் எஞ்சின் வெளிச்சத்தில் கலியாணவீடு ஒளிவெள்ளமாக காட்சிதந்தது. நாங்கள் போட்டோக்கிராபரையே வட்டமிட்டபடி நின்றோம். கமெரா ஒவ்வொரு முறை மின்னி அடங்கியதும் அதன் ஒளிக்குமிழை கழற்றி வீசுவார். அதைப் பொறுக்குவதில் என் வயதொத்தவர்களுக்குள் பெரும்போட்டி.

எட்டுமணிக்கு தாலிகட்டு முடிந்ததும் பலகாரம் பரிமாறி “ஐஸ் கோப்பி” வழங்கினார்கள். அது சில்லிட்டு தொண்டைக்குள் இறங்கியபோது அமிர்தம் போல இருந்தது. சிலர் இரண்டு, மூன்றுதரம் வாங்கிக்குடித்தார்கள்.

கட்டாடியார் முன்னே வெள்ளைவேட்டியால் திரைபிடித்தார். பால்பழம் பரிமாறினார்கள். இரண்டுபேர் ஒருவர் இழுக்க மற்றவர் பின்நின்று தள்ளுவதுமாக ஒரு பசுக்கன்றை இழுத்துச் சென்றனர். அது பயத்தில் மிரளமிரள விழித்தது.

நான் அம்மாவிடம் இதை ஏன் இழுத்துச்செல்கிறார்கள் என்றேன். அம்மா முழுவியளங் காட்டப்போகிறார்கள் என்றார். நான் மெதுவாக சுழிச்சுக்கொண்டு முன்னுக்குப்போய் விடுப்புப் பார்த்தேன். ஆரோ ஒரு பெரிசு தலையிலே குட்டுவைச்சு வெளியிலே கலைத்து விட்டார்.

மாப்பிள்ளை பொம்பிளையை வெளியில் கூட்டிச்சென்று ஐயர் அருந்ததி காட்டினார். மணமக்களை வாழ்த்தி அறுகரிசி போட்டதும், அவர்களை வீட்டுக்குள் அழைத்துச் சென்றனர்.

மாணிக்கர் சின்னையா தண்ணீர்ச்செம்போடு வந்து அதை சிவஞானசுந்தர மாமாவிடம் கொடுத்து பந்திக்கு அழைத்தார்.

ஆண்கள் முதற்பந்திக்கு தயாராயினர்.

6.

எனக்குள் ஒரு நண்பன் இருந்தான். அவன் இச்சூழலையும் காலத்தையும் நன்குணர்ந்தவன்.

அவன் மகன் ஒரு வேற்றினப் பெண்ணைக் காதலித்தார். காதலித்தார் என்ற சொல் தவறு. "டேற்" பண்ணினார் என்பதே சரியானது. "டேற்றிங்" என்ற சொல்லுக்கு சரியான தமிழ்ப்பதம் இல்லை. இந்த உறவுக்கு இருவீட்டிலும் அனுமதி இருந்தது.

கிட்டத்தட்ட ஐந்துவருடங்கள் இந்த உறவிருந்தது. திடீரென ஒருநாள் இருவரும் வீட்டிற்க்கு வந்திருந்தனர். அவள் கைவிரலில் புதிதாக ஒருமோதிரத்தை காண்பித்தாள். தாங்கள் "என்கேச்" பண்ணியதாகச் சொன்னாள். இவையெல்லாம் எனக்குப் புதியது. நான் கொஞ்சம் பழைய மனுசன்.

அதன்பின் ஒருவருடம் கழித்து கத்தோலிக்க தேவாலயத்தில் இவர்கள் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு முன் மணவாழ்கை பற்றிய வகுப்பு நடைபெற்றது. வாரத்தில் ஒருநாள் என கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் இந்த வகுப்பு நடந்தது.

தேவாலயத் திருமணத்திற்கு மிகநெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே அழைப்பிருந்தது. அதன்பின் மண்டபத்தில் வரவேற்பு நிகழ்விருந்தது.

வாழ்வில் நெருக்கமாக பழகுகிற உறவினர், நண்பர்களுக்கு மட்டுமே அழைப்பு அனுப்பப்பட்டது.

நண்பன் பல விடயங்களில் விட்டுக்கொடுக்க வேண்டியிருந்தது. பல சமயங்களில் என்னுடன் முரண்பட்டுக்கொண்டான். நீ உணர்வின் வழியில் சிந்திக்காதே. நாங்கள் இருப்பது புதியதேசம், பல்கலாசாரமக்கள் கொண்ட நாடு, அதற்கேற்ற படிதான் வாழவேண்டும் என்றான்.

திருமண அழைப்பிதழின் உள் பதிலிடுவதற்கான அஞ்சல்தலை யுடன் கூடிய பதிலட்டை இருந்தது. அதில் வினாக்கள் இருந்தன. யார்யார் கலந்துகொள்வீர்கள்?. குறிப்பிட்ட மூன்று உணவு வகையறாக்களில் அவர்கள் எந்த உணவை விரும்புகிறார்கள் என்ற விபரங்கள் கேட்கப்பட்டிருந்தன.

நானும் நண்பனும் தினமும் முரண்பட்டுக்கொண்டோம். இது எங்களின் கலாச்சாரம் அல்ல. இதை நடைமுறைப்படுத்துவது சிரமம் என்றேன். இவன் நல்லவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றான்.

நண்பன் தன் உறவுகளுக்கு தானே கொண்டுசென்று அழைப்பிதழ் கொடுத்தான். பிறிதொரு நாளில் அவனே சென்று பதிலட்டையையும் பெற்றுக்கொண்டான். நிலமையை புரிந்துகொண்டவன் ஆதலில் அதற்கேற்றபடி அழைக்கப் படுபவர்கள் பட்டியலைக் குறுக்கியிருந்தான். தன் நெருங்கிய உறவுகள் பலரை அழைக்கவில்லை.

இதனால் நீ குறைகேட்கப் போகிறாய். மனச்சங்கடம் அடைவாய் என இடித்துரைத்தேன். அவன் தான் எதையும் சந்திக்கும் மனப்பக்குவத்தில் இருப்பதாகச் சொன்னான்.

பெண் பக்கத்திலிருந்து சிறுவர்கள் யாரும் அழைத்துவரப் படவில்லை. எங்கள் கலாசாரம் அங்ஙனம் அல்லவே. குடும்ப சமேதராய் கலந்துகொள்வதே எங்கள் பண்பாடு. அதனால் சிறுவர்பராமரிப்புக்கென தனியானகூடமும் சிப்பந்திகளும் உணவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

பெரியவர்களுக்கான இருக்கையில் அவரவர் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. அவர்களின் உணவு முதலில் சொல்லப் பட்டபடி அவரவர் தெரிவுக்கு ஏற்ப மேசைக்கு எடுத்துவரப் பட்டது.

முதலில் உணவைத் தெரிவு செய்தவர்கள் அது நவராத்திரி காலம் என்பதை மறந்துவிட்டிருந்தனர். அசைவ உணவைத் தெரிவு செய்திருந்தனர். இதனால் சில உணவுத்தட்டுகள் வீணாயின.

இந்த திருமணநிகழ்வு எனக்கும் பல அனுபவங்களைப் புரிய வைத்தது. ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பண்பாடு உண்டு. அவரவருக்கு தங்களது பண்பாடு உயர்ந்தது. நாங்கள் எங்கள் மண்ணுக்குரிய பண்பாடுகளோடு இந்த புதியமண்ணில் வேர் ஊன்றமுடியாது சீரழிகிறோம்

ஒவ்வொரு விழாக்களிலும் நாங்கள் படும் அவலம் சொல்லி லடங்காதது.

7.

செல்வமாணிக்க சின்னையா முகப்பு வாசலிலே நின்றார். நேரம் நள்ளிரவைத் தாண்டிவிட்டது, உள்ளே கச்சேரி சூடுபிடித்திருந் தது. அவர்களின் உற்சாகத்தைப் பார்த்தால் அது அப்போ

தைக்கு முடியும் போலத் தெரியவில்லை.

இடையிடையே வாணம் மேலே சென்று வெடித்து வண்ண வண்ணப் பூந்திரிகளைச் சொரிகிறது. மாணிக்கர் சின்னையா வைக் கடந்து யாரும் வீடுசெல்லமுடியாது. இனி மாப்பிளை பொம்பிளையை "கால்மாறி" அழைத்துச் செல்லவேண்டும். அதற்கான எந்த அசுமாத்தமும் இல்லை.

சிவஞானசுந்தர மாமா நேரத்தைப் பார்த்தார். ஒருமணியை அண்மிக்கிறது. அவருக்கு இவற்றிலெல்லாம் மனம் ஒன்றவில்லை. ஏதோ நல்லபடி எல்லாம் முடியவேண்டும் என்பதொன்றே எண்ணமாயிருந்தது.

அவர் பந்தருக்குள் செல்வதும் முகப்பு வாசலுக்கு வருவதுமாக இருந்தார். மாணிக்கர் சின்னையாவுக்கும் நல்ல "முசுப்பாத்தி". அவர் எங்கையோ ஒளிச்சுவைத்து இடைக்கிடை போய் புதிப்பித்துக் கொண்டிருந்தார்.

அது சிவஞானசுந்தரமாமாவுக்கு நன்றாகத்தெரியும். இருந்தும் மெல்லக் கிட்டப்போய் காதோடைகாதாய் கையிலிருந்த மணிக்கூட்டை பார்த்தபடி

"மாணிக்கர்! நேரம் ஒருமணியாச்சு இனிக் கால்மாறவல்லே வேணும்" என்றார்.

"உள்ளுக்கை போய் பார் கச்சேரி நடக்குது. அதைப் பார்! அது பிடிக்கையில்லை என்றால் இதைப்பார்! டேய் மாணிக்கா! நல்லதாய் விடு ஒரு அவுட்டு வாணம்" என்றார்.

மாணிக்கன் வீட்டுக்கு முன்னாலை நடு ஒழுங்கையிலை "கொட்டு" வைச்சு அதற்குள் அவுட்டு வாணத்தை போட்டுக் கொழுத்தினான். அது மேலைபோய் வெடித்தது பூந்திரிகளை சொரிந்தது.

சிவஞனசுந்தரமாமா அடங்கிப் போனார்.

இரண்டுமணி தாண்ட மாப்பிளைபொம்பிளை வாசலுக்கு வந்தனர். ஆராத்தி எடுத்து அழைத்துச்செல்லப்பட்டனர். மாப்பிளை வந்த வழியால் செல்லக் கூடாது. கால்மாறி வேறுவழியால் செல்ல வேண்டும் என்பது மரபு.

தெற்குப்பக்கமாகத் திரும்பிச்செல்லும் ஒழுங்கையூடாகத் திரும்பி சுற்றிவருவதென முடிவுசெய்யப்பட்டது. சக்கரைக் கட்டாடியார் நிலப்பாவாடையை விரித்துச் சென்றார். முன்னே ஐந்து கூட்டம் மேளம். ஒரு இருநூறுயார் தூரம் சென்றதும் ஒரு சிறு முடக்கு வரும். அது சந்திபோன்ற அகன்றஇடம். மாணிக்கர் அதில் மேளகாரரை மறித்தார். அரைமணி நேரம் ஒருபெரிய சமா நடந்தது. அது முடிய மாணிக்கர் சின்னையா குரலை உயர்த்தி

"பொம்பிளை பகுதி மேளகாரர் எல்லாம் நிப்பாட்டுங்கோ. கட்டுங்கோ மேளங்களை" என்றார்.

ஒருநிமிடம் மழைவிட்டது போன்ற அமைதி.

உருத்திராபதியின் நாகஸ்வரம் ஒற்றைக்குரலாய் ஒலிக்க தொடர்ந்தது ஊர்வலம்

8.

சிறிமாவோ காலத்தில்தான். கியூ என்றசொல் எனக்கு தெரியவந்தது. அப்போதெல்லாம் அம்மா விடியப்புறம் ஐஞ்சு மணிக்கு எழுப்பிவிட்டு "ஓடிப்போய் கியூவரிசையிலை" நில்லுங்கோ என்பார். நாங்கள் சங்கக்கடைக்கு முன்னால் பாணுக்கு வரிசையிலை நிற்போம்.

அன்றிலிருந்து இன்றுவரை இந்த "கியூ"வில் நிற்பதே வாழ்க்கையாகப் போய்விட்டது. இங்கு நடக்கும் எங்கள் திருமணவிழாக்களில் தாலிகட்டிய கையோடு இரண்டு கியூ ஆரம்பித்து விடும். ஒன்று மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதிக்க நீளும். மற்றையது பின்புறமுள்ள உணவுமேசையை நோக்கி நீளும்.

முன்பெல்லாம் திருமணம் பெண்வீட்டில்தான் நடைபெறும். பெண்வீட்டார் வந்து மாப்பிளைவீட்டுப் பெரியவர்களுக்கு "செம்புதண்ணீர்" கொடுத்தபின்தான் அவர்கள் வாயலம்பி சபைக்குச் செல்வர்.

சபையில் கூட எப்படி இலை போடுவது என்பதிலிருந்து எப்படி உணவு பரிமாறுவது என்பதுவரை பல ஒழுங்கு மரபுகள் இருந்தன. இவையெல்லாம் பண்பாட்டு விழுமியங்கள் எனப் பேணப்பட்டன

இப்போது சபை பரிமாறும் வழக்கம் எங்களிடமிருந்து ஒழிந்துவிட்டது. இங்கு நாங்கள் சென்று எங்களுக்குத் தேவையான உணவை எடுத்துவந்து உண்ணும் முறையே எம்மவரின் வழக்கத்தில் உள்ளது. எங்கள் சோறு, கறியோடும் முள்ளுக்கரண்டியோடும் போராடும் காட்சிதான் சிறப்பு. சபை என்பது வழக்கொழிந்து போயிற்று.

மேலைத்தேயத்தவரின் திருமணங்கள் தேவாலயங்களில் இடம்பெறும். அங்கு வந்திருப்பவரின் முழுக்கவனமும் சடங்கில் குவிந்திருக்கும். பின் திருமணவரவேற்பு மண்டபத்தில் நிகழும். அது விருந்துக்கும் கேளிக்கைக்கும் உரியதாக இருக்கும். அதிகமும் சிப்பந்திகளால் மேசையில் உணவு பரிமாறப்படும். பின்னர் ஆட்டம்பாட்டம் கொண்டாட்டம் எனக்கழியும்.

எங்கள் திருமணவிழாக்களிலும் இந்த மேலைத்தேய வரவேற்புக்கு உரியவகையில் மண்டப ஒழுங்குகள் இருக்கும். அதில் சம்பிரதாயத் திருமணச்சடங்கும் நிகழும். அவை ஏதோ வீடியோக் கமெராக்காரர்களுக்கு நிகழ்வதாகவே தோற்றம் தரும். சபை தங்கள்பாட்டில் அரட்டை அடித்துக் கொண்டி ருக்கும். இதனால் ஒழுங்கான சடங்குமின்றி சபையுமின்றி நல்ல வரவேற்பு நிகழ்வுமற்றுப் போய்விடுகிறது.

"கும்பலிலே கோவிந்தா" அடைமொழியைத்தான் உதாரணப் படுத்த முடியும்.

இந்தச் சூழலிலே ஒரு திருமணத்தை எப்படிச் சிறப்பாகச் செய்வதென்பதே கேள்வி? இதனால் இங்கு வளரும் அடுத்த தலைமுறையினர் பெற்றோருக்காக ஒரு திருமணநிகழ்வும் தங்களுக்காக ஒரு வரவேற்பு நிகழ்வும் செய்கின்றனர்.

பல திருமணங்கள் தேவாலயத்தில் ஒன்று, சைவக்கலியாணம் என மேற்சொன்ன வகையில் ஒன்று, வரவேற்புநிகழ்வு ஒன்று என மூன்றுநிகழ்வுகள் நடப்பதும் உண்டு.

இந்தச் சிதைவு அல்லது இந்தக் குழப்பம் திருமணவாழ்வு என்ற பந்தத்தையே அர்த்தமற்றதாக்கி விடுகிறது. பல திருமண உறவுகள் மூன்றுமாதங்கள் கூட நீடிப்பதில்லை.

இது திருமணங்களை மட்டும் குறித்ததல்ல. இவை சிறு உதாரணம் மட்டுமே. சரியெது? பிழையெது? என்பதல்ல என்வாதம். எவ்வாறு இந்த வாழ்வியல்நெறி பெருநகர வாழ்வினால் சிதைகிறது என்பதை மட்டுமே இங்கு பதிவு செய்கின்றேன்.

பொருளாதாரரீதியிலான புலம்பெயர்மக்களின் ஆதிக்கமானது ஈழத்தவர்களது போராட்டத்தை மட்டுமல்ல ஒட்டுமொத்த ஈழத்தமிழரின் வாழ்வியல் நெறியையும் சிதைத்து விட்டது என்ற என் கருத்தையே பதிவுசெய்கிறேன்.

கையினால் உணவை பிசைந்து குழைத்து உண்ணுகின்ற மரபு கொண்டவர்கள் நாங்கள். அதில் எந்தக் குறைபாடும் இல்லை. எங்கள் உணவும் சூழலும் அதற்கேற்ற தன்மை கொண்டவை. அதன் சுவையே தனி.

எங்கள் கலாசாரம் தெரிந்த வேற்றினத்தவர்கள் எங்கள் உணவை தம்கையால் குழைத்து உண்ணத் தலைப்படும் போது அவர்களிடம் முள்ளுக்கரண்டியைத் திணிக்கவே முற்படுகிறோம் என்பதே துயரம். நாங்கள் எங்களிடமிருந்த அனைத்து மரபுசார் விழுமியங்களையும் துறந்து வருகிறோம். “மரபுரிமைவாரம்” என ஒருவாரத்தை கொண்டாடி அதனுடு தங்களை விளம்பரப் படுத்து வதோடு முடிந்து போகிறது தமிழர் மரபு.

நாங்கள் வாழ்ந்த புலமுமின்றி சேர்ந்த நிலமுமின்றி “கறிசோறும் முள்ளுக்கரண்டி” போல வெறும் பகட்டில் வாழ்கிறோம் என்பதே உண்மை.

# OKJ Transportation

◆ வீட்டுத் தளபாடங்கள்
வர்த்தகத் தளபாடங்கள்




► ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு எடுத்துச்செல்ல நாடவேண்டிய நம்பிக்கையான நிறுவனம்.



◆ விரைவாகத் தொழிற்படுவதும் வாடிக்கையாளர்களின் திருப்தியை நிறைவேற்றுவதும் எங்கள் குறிக்கோள்!

தொடர்புகளுக்கு:

**416-876-3349**

okjtrans@rogers.com

# இருள் தின்ற ஈழம்.. எனது பார்வை.



**- நெற்கொழுதாசன்**

நவீன கலை இலக்கிய வடிவங்களுள் கவிதைக்கு இருக்கும் பெறுமானமானது தனித்துவமானது. தான் சார்ந்திருக்கும் கருத்துருவாக்கத்தின் உச்சபட்ச வெளிப்பாட்டுத் தன்மையினை வெளிக்கொணரும் அதேவேளையில், இயங்குகின்ற தளத்திற்கு வாசகனை விரைவாகவும் நெருக்கமாகவும் அழைத்தும் செல்கிறது. மனதின் அக புற வயங்களில் அதீதமானதொரு ஊடுருவலை நிகழ்த்தி, நிகழ்கின்ற கணங்களை நிறுத்தி, தான் நிகழ்த்தும் கணத்துக்கு வாசிப்போனை கடத்திச்செல்லும் போதே கவிதையும் முழுமையடைகிறது.

அதேவேளையில், ஒரு படைப்பாளியின் இயங்குதளமும், உணர்வுகளும் கவிதையின் உணர்வுகளையும் கவிதையின் வடிவங்களையும் தீர்மானித்தாலும், அந்தக் கவிதையூடாகப் பயணிக்கப்போகும் வாசகனின் தளமும், உணர்வும் அதே கவிதையில் வேறுபல பரிமாணங்களைக் கண்டெடுத்துக் கொள்கிறது. இது புதுக்கவிதைகள் கொண்டிருக்கும் விசேடமான ஒரு இயல்பு.

ஒரு கவிதையில் இயங்குதளமும், படைப்பாளியின் உணர்வுகளும் எப்படி செயற்படுகிறது என்பதனை ஈழதமிழ்க் கவிதைகளை உற்றுநோக்குவதனூடாக அறியலாம். ஈழதமிழ்க் கவிதைகளைப் பொறுத்தவரை, பெரும்பாலும் அது புலமாகவும் இருக்கலாம் புலம்பெயர்ந்த இயந்திரவெளியாகவும் இருக்கலாம், படைப்புக்களின் மையப்புள்ளி இனமுரண் அரசியல் அவலங்களே. அழிவுகளாலும் அலைவுகளாலும், இழப்புக்களாலும், வலிகளாலும் நிறைந்துபோயிருக்கும் வாழ்வியலின் பக்கங்களை பிரதிமை செய்கின்றனவாகவே அவை அமைகின்றன.

அவ்வாறானதொரு பிரதியாகவும், மனதுக்கு நெருக்கமான தாகவும் தேவ அபிராவின் ”இருள் தின்ற ஈழம்” என்ற கவிதைத் தொகுப்பினை அடையாளம் காணமுடியும். இத்தொகுப்பில் பயணிப்பதனூடாக, வேறெந்த தொகுதியிலும் அடையமுடியாத ஒரு கால இயங்குநிலை மாற்றத்தினை கண்டடையமுடியும். இருதசாப்த காலநீட்சியில் படைக்கப்பட்ட கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அவை அந்த அந்த காலநிகழ்வுகளை படைப்புமனமூடாக பதிவு செய்யப்பட்ட நிலையில், ஒரு படைப்பு மனம் அவற்றினூடாக எவ்வாறு பயணித்திருக்கிறது என்பதனையும் உணர்ந்துகொள்ள வைக்கிறது.

இயல்பான விபரிப்புக்களூடன், நேரடியான பொருள் தரும் எழுத்தோட்டத்தை கொண்டமைந்த கவிதைகள் நீண்டதொரு அனுபவ செழுமையூடாகவே பரிணமித்திருக்கின்றன. தான் வாழ்ந்த சூழலை, அந்த சூழல் தனக்கழித்த துயரத்தை, சந்தோசத்தை, நேசத்தை, பிரிவை ஊடுகடத்தி ஒரு துயரப்பொழிவை உருவாக்கி ஏங்கவைக்கின்றன. கவிதை மொழி அல்லது கவிதைக்கான மொழி என்பதைக் கடந்து எல்லாமும் கவிதைக்கான மொழியே என்று சாதாரணமாகவே படைப்பை நிகழ்த்தி முடிக்கிறார். சில இடங்களில் அந்த மொழியே இது கவிதைதானா என்ற கேள்விகளை எழுப்பினாலும் அந்த மொழியோடு இழையோடும்

அனுபவமும் உணர்ச்சியும் இன்னொரு தளத்தினை திறந்து விடுகிறது.

ஒரு கவிதை எங்கே ஆரம்பிக்கிறது .. என்ற தலைப்பில் உருவாகியிருக்கும் ஒரு கவிதையில், மிக அழகாக கவிதைகள் உருவாகும் சந்தர்ப்பங்களை குறிப்பிட்டு கவிதையை நகர்த்துகிறார். முடிவில் ஒரு கேள்வியை எழுப்புகிறார். ஒரு கவிதை எங்கே முடிகிறது.. என. அப்படியே மனதுக்குள் நிறைந்துபோகிறது கேள்வி. வியாபித்து பெருகி நினைவுகளை நீளவைக்கிறது. ஆம் ஒரு கவிதை எங்கே முடிகிறது.. எப்படி சொல்லமுடியும். ஆனால் வலிசுமந்த ஈழத்தமிழன் சொல்வான். அடக்குமுறைகளுக்குள் அடங்கிக்கிடக்கும் ஒவ்வொருவனும் சொல்வான் அதை.

கவிதை இப்படி கூறுகிறது.
அதுசரி
ஒரு கவிதை எங்கே முடிகிறது
அங்கே அதோ
நிறுத்து என்றறிவித்தல் பலகையை நீட்டியபடி
சீருடை அணிந்தொருவன் மறிக்கிறானே
அங்கே...

எங்கெல்லாம் ஆயுத அடக்குமுறைகள் கோலோச்சுகின்றனவோ அங்கெல்லாம் பயணிக்கும் இந்தக் கவிதை ஒன்று போதும் இந்த தொகுப்பின் கனதியினை எடுத்தியம்பும்.

முத்தமிடலும் தழுவிக்கொள்ளலும்
எல்லாமும் முடிந்துபோன பின்னும்
நான் உன்னை நேசித்தேன்
என்பதை நீ உணர,
நான் என்ன செய்யவில்லை மூடா ????

என்று காதலுடன் ஆண்மையை கேள்வி கேட்கிறது. பாசமும் நேசமும் தவிப்பும் அடங்கிக்கிடக்கும் இந்த வரிகள் உருவாக்கும் அதிர்வுகளை எப்படி வார்த்தைகளில் கொண்டுவருவது.. எவ்வளவு எதிர்பார்ப்புகளை இந்த வரிகள் எடுத்துச்செல்கிறது.. இப்படிக் கேட்கவேண்டிய ஒரு இடத்தில் நான் இருந்தால் என்ன செய்வேன் என மீண்டும் மீண்டும் நினைக்க வைக்கிறது. ஆண்மை என்ற அந்தக் கவிதை மேலும் பேசுகிறது,
அண்டமாய் பிரபஞ்சமாய் பால்வெளியாய்
பறந்துசெல்லும் காலத்தை வியாபித்த
அவளின் வார்த்தைகளின் கீழ்
நான் தனித்து விடப்பட்டேன்.

"நான் தனித்து விடப்பட்டேன்" எவ்வளவு கொடுமையானது இந்த நிலை. ஒரு நாவலை உள்ளடக்கி எழுந்திருக்கும் இந்தக் கவிதை மனதில் கல் எறிந்துவிடுகிறது. நினைவுகளை வளையங்களாக்கி சுழல வைக்கிறது.

நேரடியான வாரத்தைப்பிரயோகங்களும், கேள்விகளை எழுப்பி நிற்கும் விதங்களும் இவரின் கவிதைகளின் ஒரு சிறப்பான பக்கம்.அநேக கவிதைகள் கேள்விகளை எழுப்பி விடைகளை தேடவைக்கின்றன அல்லது ஒரு கனத்த மௌனத்தை உருவாக்கி விடுகின்றன.

மிகச்சிறப்பாக நதி என்ற உருவகத்தினை எடுத்துக்கொண்டு கவிதையை மழலைக் காலத்தில் ஆரம்பித்து வளர்ந்து, புலம்பெயர்ந்து வேரூன்றியபின்னும் நிகழும் அவநம்பிக்கை களையும் சுமந்துகொண்டு இருக்கையில் நாளைய சந்ததியின் பார்வைகளுக்கு என்ன பதில் சொல்லமுடியும் அந்தக் கவிதை இப்படி முடிகிறது.

பெரும்பனிவீழுமிப் பெருவெளியில்
தனித்தவென்னுள்
உறைந்துபோனது என் நதி.
என்றாவது ஒருநாள்
என்னை நீயேன் அகதியாக்கினாய் அப்பா
என்றென் மகன் கேட்கையில்
இறந்தே போகும் என் நதி.

ஈழநிலத்தில் நிகழ்ந்த மிகப்பெரும் அவலங்களில் ஒன்று முஸ்லீம்கள் வெளியேற்றம். அன்றைய நிலையில் அதற்காகவும் குரல் உயர்த்துகிறார்.

துயர அழுகையின் இறுதி முறையீடுகளும்
பாங்கொலி இழந்த பள்ளிவாசல்களும் ...
ஈழ மண்ணில் ஆறுகாலமும்
உயர்கோபுரங்களில் மணி ஒலிக்கிறது
மறுக்கப்பட புன்னகைகளை
மனிதரிடத்திருந்து பிடுங்கி பெருமானுக்கு சாத்துங்கள்.

இது தொண்ணூறுகளில் எழுதிய கவிதை. மட்டுமல்லாமல், வாழ்வு வாழ்தல் என்ற கவிதையில், பெண்ணடிமைத் தனங்க ளை உடைத்தெறியவும் அறைகூவல் விடுக்கிறார். காதல் கவிதை களில் பெருகி ஓடும் துயரம் மிக அண்மையாக வந்து சேர்க்கிறது.

முன்னறையில் இருந்து
பிரியும் என் முதுகைப் பார்த்திரு.... என்றும்,
பாறை வெடிப்பொன்றினூடு சீறிப்பாயும்
ஊற்றுநீர் போல உன் நினைவு
இக் காதலும் இப் புனிதமும்
இப்படியே வாழட்டும் என்றும்,

காதலின் பிரிவுத்துயரை அழகியலோடு கொண்டுவருகிறார்.
மென் நய மௌனத்தில்
அரளிப்பூவின் விளிம்போரம் படரும்
செம்மையைப் பார்த்தேன் –உதடுகள்.. எனவும்,

உன் செவ்விதழ்களில்
என் காதலைத் தரக் காலம் இல்லையே எனவும்

உற்ற தோழிக்காக அவளின் அன்புக்காக பாடும் கணங்களில் மு.மேத்தா அவர்களினை நினைவுபடுத்திச்செல்கிறார்.

அழகியலும் அனுபவச்செறிவும் இயல்பான மொழியும் நேரடியா

கவே கருத்து வெளிப்படும் தன்மையினையும் கொண்டிருக்கின்றன இவரின் கவிதைகள். அதீத கற்பனைகள் எதுவுமே இல்லாமல் வாழ்வியலை அந்த வாழ்வாகவே பார்த்திருக்கிறார். வசனங்களின் நீட்சியும், சில இடங்களில் உள்வாங்கப்படும் மேலதிக சொற்களும் கவிதையின் தகமையினை சிதைக்கின்றனவோ என எண்ணத் தூண்டுகிறது. கவிதைகளில் மிகுந்து வரும் வசனத்தன்மையும், சில சொற்பிரயோகங்களும் கவிதையோடு ஒன்றிப்பதில் தடங்கல்களை உருவாக்குகிறது.

தத்துவவாதிகள் தாங்கள் அறிந்த புத்தகங்களுக்கு மேல்
தலைகளை உயர்த்தவில்லை
வியாபாரிகள் இரத்தத்தை வடிகட்டிய
நிலத்தை பங்கு போடுகிறார்கள்
எஞ்சிய நிலத்தில் நீயோ கண்ணிவெடியென்கிறாய்
எனது பிள்ளைகளோ அழுகிறார்கள்
அவர்களின் முன் நீயோ வாக்குப்பெட்டிகளை வைக்கிறாய்.
இது போன்ற சில இடங்களை குறிப்பிடலாம்.

அதேபோல் "எலும்புக் கூடும் இரண்டு கனவுகளும்" என்ற கவிதை கொண்டுள்ள கருத்துருவாக்கம் மிக அலாதியானது. ஒரு மனதில் ஆதங்கத்தை, ஏக்கத்தை, அர்ப்பணிப்பை பதிவு செய்திருக்கும் விதம் அதனோடு பயணிக்கையில் உற்றுநோக்க வைக்கிறது. ஆனால் அந்தக் கவிதையில் நிகழ்ந்திருக்கும் அமைப்பு கவிதைமீதான கவனக்குறைவை உருவாக்குகிறது. எல்லைக்கோடுகள் இல்லாதவன் தான் கவிஞன். ஆனால் நிகழ்த்தும் படைப்புகள் புதிய புதிய கோடுகளை உருவாக்கி செல்லவேண்டும்.

உள்ளத்துள்ளது கவிதை –இன்பம்
உருவெடுப்பது கவிதை என்றார் கவிமணி.
வெற்று வார்த்தைகளை கோர்த்துவிடாமல் அழகியல் மற்றும் உணர்ச்சியோடு இணைந்து உருவாகும் கவிதைகளே மனதினை நெருங்குகின்றன. தவிர்த்து மற்றவைகள் கட்டுரையாகவோ அல்லது உரைநடையாகவோ அன்றில் வசன அமைப்பாகவோ கண்டுகொள்ளப்படுகின்றன.

தன் கவிதை முனைப்புப் பற்றி பின்னிணைப்பில் கவிஞர் கூறுகையில், கவிஞர் நா.பஞ்சாட்சரம் அவர்களின் மரபுவழிக் கவிதைகளின் தாக்கத்தில் கவிதைகளை எழுதத்தொடங்கி, கவிஞர் சேரன் "நடவாப் புல்வெளிகள் தேடு" என்றபோது தடம் தெளிவுபட்டது என குறிப்பிடுகிறார். சில கவிதைகளில் எனக்கு ஏற்பட்டிருக்கும் குறுக்கீடுகள், இன்னொரு தளத்தில் புதுக் கவிதையை அனுகுபவருக்கு புதுமையான "நடவாப் புல்வெளிகளாக" இருக்கவும் கூடும். அல்லது இது எனது அனுபவமின்மையகவும் இருக்கலாம்.

ஆளுமையும் அனுபவச்செறிவும் மிகுந்திருக்கும் இக் கவிதைகள் இனிவரப்போகும் கவிஞரின் கவிதைகள் மீதான நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் மிக ஆழமாகவே எழுப்பி இருக்கிறது என்பதில் மாற்று எதுவும் இல்லை.



# இலங்கை: புலிகளுடைய போர் நிறைவடைந்திருக்கலாம், ஆனால் இனச்சிக்கல் நிறைவடையவில்லை

## அமைதியை நீங்கள் கட்டிடங்களால் கட்டியெழுப்ப முடியாது



இலங்கை அரசுப் படைகளால், இறுதியானதும் இழப்புக்களுடையதும் தமிழ்ப் புலிகள் வீழ்த்தப்பட்டதுமான போர் நிகழ்த்தப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இலங்கையின் பெரும்பான்மையினருக்கு உண்மையில் என்ன நடந்தது என்பதோ தமிழர்கள் கொண்டிருக்கும் உளத்துயரங்களை எவை நியாயப்படுத்தும் என்பதோ இன்னும் தெரியாது.

By Cedric Gouverneur

கிளிநொச்சி, 20 ஆண்டுகளுக்கு மேலாக 2009 இல் அரசுப் படைகளால் மீளக் கைப்பற்றப்படும் வரைக்கும் தமிழ்ப் புலிகளின் தலைநகராக இருந்து வந்துள்ளது. பிரிவினைவாதக் கொரில்லாப் போராளிக் குழுவான தமிழீழ விடுதலைப் புலிகள் ஓர் முன்னோடி அரசுக்கட்டமைப்பாக கிளிநொச்சியைக் காட்சிப்படுத்தி மாற்றியிருந்தார்கள். அரசு அமைச்சுகள் முதல் போக்குவரத்துக் காவல்பிரிவு வரை அங்கு அமைந்திருந்தன. ஆனால், வருகைதரும் பார்வையாளரி டமிருந்து மறைப்பதற்கு 2009 இறுதிப்போரில் கொல்லப்பட்ட புலிகளின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரனின்மீதான தனிமனித வழிபாட்டுத் தனத்தை, அல்லது பெருவாரியாக நடைமுறையில் இருந்த குழந்தைப் போராளிகளை, இந்தப் புறத் தோற்றம் மட்டும் போதுமானதாக இருக்கவில்லை.

கிளிநொச்சி இப்போது, இம்முறை உள்நாட்டுப் போரில் வெற்றியடைந்தோரினால் மீண்டும் காட்சிப்படுத்தப்பட்டு இருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளை யாருடைய படைகள் அழித்தனவோ அந்த அதிபர் மகிந்த ராசபக்ச இந்த நகரத்தை வட இலங்கைக்கான மாதிரி நகரமாக ஆக்க விரும்புகிறார். தற்போது அது பணிநடைமுறையில் "பயங்கரவாதத்திலிருந்து விடுவிக்கப் பட்டது" எனச் சுட்டப்படுகிறது. " கிளிநொச்சிக்கு வருவோருக்கு வணக்கம். அமைதி, நம்பிக்கை, ஐக்கியத்திலிருந்து எழும் நகரம்" என்றவாறு ஆங்கிலத்தில் எழுதிய பலகை வரவேற்கிறது. துப்பாக்கி ரவைகளின் துளைகளினால் சல்லயடையாகச் சிதைக்கப்பட்டிருக்கும் அழிவுகளுக்கு அப்பால் அங்கே ஓர் சாதாரண வாழ்வுக்கான தோற்றம் இருக்கிறது. அந்த A9 பாதை புதிதாயிருக்கிறது. 20 ஆண்டுகால இடைநிறுத்தத்திற்குப் பின் புகைவண்டி பெருநகரான வவுனியாவிற்கு அரைமணிநேரத்தில் அழைத்துச் செல்கிறது. பெரும்பாலான சோதைனைச் சாவடிகள் கண்ணிவெடி புதைக்கப்பட்ட நிலங்களைப்போல காணாமல் போய்விட்டன. புதிய வணிக முயற்சிகளும் தங்கும் விடுதிகளும் திறக்கப்பட்டுள்ளன. போரின் கடைசி நாட்களின் சாட்சியாக தண்ணீர்தாங்கி மட்டும் சிதைந்தமாதிரியே இருக்கிறது: அதன் அருகே ஓர் அறிவிப்பு "இதற்கு மேலும் அழிவு இல்லை" என்கிறது.

துணைப்படையைச் சேர்ந்த மேஜர் ஒருவர் சிறார்கள் விளையாடும் இடத்துடன் கூடிய ஓர் மூன்றடுக்குக் கட்டத்திற்கு வரவேற்று அழைத்துச் செல்கிறர். அவர் "ஐக்கிய மையத்திற்கு வரவு நல்வரவாகட்டும்" என்று வரவேற்கிறார். " புலம்பெயர் தமிழர்களின் பரப்புரை சொல்வதற்கு அப்பால் கிளிநொச்சியில் மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதைப் பார்ப்பீர்கள்" என்கிறார். ஏறக்குறைய 750,000 புலம்பெயர்ந் தோர் அய்ரோப்பாவிலும் கனடாவிலும் வாழ்கிறார்கள்.

தரைத்தளத்தில் சீருடையுடன் பத்தோ, இருபதோ பிள்ளைகள் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார்கள். பெரும்பான்மையோர் LTTE யில் பணியாற்றியிருந்திருக்கின்றனர். ஆனால் இராணுவம் அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கியிருக்கிறது என்று மேஜர் எங்களுக்குச் சொன்னார். அவர் பிறகு செயற்கைக்காலுடன் இருந்த ஓர் முன்னாள் LTTE யின் லெப்ரினன்ட் கேனல் ஒருவரை அறிமுகப்படுத்தினார். இவர் இருபது ஆண்டுகள் கொரில்லாக்களுடன் சேர்ந்து சண்டையிட்டவர். அவர் " நான் 150 போராளிகளுக்கு தலைமைதாங்கினேன். இரண்டு மாதத்திற்கு ஒருதடவை கட்டளைகளைப் பெறுவதற்காக நாங்கள் பிரபாகரனைச் சந்தித்தோம்" என்று சொன்னார். அகப்பட்டால் உட்கொள்ளவேண்டும் என்பதற்காக அனைத்து புலிகளிடமும் இருக்கும் சயனைட் குப்பியைக் கடிக்காமல் விடுவதென்று 2009 இல் சுற்றிவளைக்கப்பட்டபின்பு அவர் தீர்மானித்திருக்கிறார். "நான் சரணடைந்துவிட்டேன். போதுமானளவுக்கு நான் பட்டுவிட்டேன். சிறைச்சாலை முகாமில் இராணுவம் எனக்கு மரவேலைப் பயிற்சி தந்தது. நான் தற்போது நல்வாழ்வு வாழ்கிறேன். நான் முன்பு புலிளுடன இருந்ததைவிடவும் நல்ல வாய்ப்புக்களைப் பெற்றிருக்கிறேன். எனது உறவுகளால் எனது முடிவைப் புரிந்துகொள்முடியவில்லை. ஆனால் நான் காப்பாற்றவேண்டிய 3 குழந்தைகள் உள்ளனர்."

ஒவ்வொரு தளத்திலும் உள்ள முனையங்களில் மக்களின்

ஆடையில் உள்ள இராணுவத்தினர் தொழிற்பயிற்சி வழங்குதல் மீன்படி வலைகள், பசுமாடுகள், தென்னங்கன்றுகள் வழங்குதல் வழியாக உள்ளூர்மக்களுக்கு எப்படி உதவியிருக்கின்றனர் என்று காட்சிப்படுத்துகின்றனர். ஒரு முனையம் வளைகுடா நாடுகளில் வேலைக்குச் செல்வதற்கு விண்ணப்பிக்கும் வகையில் உள்ளது. வளைகுடாவில் இரண்டு மில்லியன் சிறிலங்காவினர் ஏற்கெனவே பணியாற்றி வருகின்றனர். மற்றொரு முனையம் காணமல்போன ஆட்களைப்பற்றியும் சட்டத்துக்குப் புறம்பான கொலைகளுக்கு பலியானவர்களைப் பற்றியும் முறைப்பாடுகளைப் பெறுவதற்காகாவும் உள்ளது. "காணமல் போனவர்களின் குடும்பத்தினர் காவல் நிலையத் திற்குச் செல்வதற்குப் பதிலாக இங்கு வருவதையே விரும்பு கின்றனர்" என்று ஓர் இளம் லெப்ரினன்ட் சொன்னார். தனிப்பட்ட பிற தரப்புக்களின்படி இந்த "அய்க்கிய மையம்" பாதுகாப்பு அமைச்சின் ஓர் பகுதியே. இது காணாமல்போன குடும்பத்தின ருக்குப் பணம் வழங்கி அவர்கள் வாயை அடைக்கிறது. தகவல் அறிய விரும்புவோருக்கு "LTTE ஆல் உங்கள் பிள்ளை கொல்லப்படவில்லை என்று எப்படி உறுதியாகத் தெரியும்?" படையினரால்தான் உனது மகன் அல்லது மகள் கடத்தப்பட்டார் கள் என்பது எப்படி உறுதியாகத் தெரியும்? அவர்களை கொண்டுபோன படையினரை உன்னால் அடையாளம் காட்ட முடியுமா?" போன்ற மிரட்டும் கேள்விகள் பதிலாகவருகின்றன.

இந்த மேஜர் எங்களை அடுத்து செஞ்சோலை ஏதிலிக் குழந்தை கள் மையத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு நூற்றுக்குக் கிட்டவான பெண் குழந்தைகள் எமக்காக அமைதியாக நின்றனர். அங்கே நாங்கள் அந்த ஏதிலி மையத்தின் தலைவர் குமரன் பத்மநாதனைச் சந்தித்தோம். தற்போது அறுபதுகளைத் தொட்டிருக்கும் அவர் ஒரு காலத்தில் உலகில் மிகவும் தேடப்பட்ட ஓர் ஆள். அப்போது கே.பி என்று அறியப்பட்ட இவர் 1976இல் LTTEயின் துணை நிறுவனர்களில் ஒருவர். முப்பதாண்டுகாலம் ஆயுதங்கள் கொள்வனவில் ஈடுபட்டவர். 1991 இல் இந்தியாவின் பிரதமராயிருந்த ராசீவ் காந்தியின் அரசியல்படுகொலையில் சந்தேகிக்கப்பட்டவர். ஆகஸ்ட் 2009 இல் மலேசியாவில் வைத்துக் கே.பி கைது செய்யப்பட்டார். அங்கிருந்து சிறிலங்காவிற்கு நாடுகடத்தப்பட்டார். 2012 அக்டோப ரில் விடுதலைசெய்யப்பட்டார். அன்றிலிருந்து எங்களைவிட்டு விலக முன்னர் அந்த மேஜர் முன்னாள் எதிரிக்கு சல்யூட் வைத்துவிட்டுச் சென்றார்.

புலம்பெயர் நாடுகளில் இருந்து கிடைக்கும் போதுமானளவு நிதியுடன் (விருப்பத்துடனோ அல்லாமலோ வழங்கப்படும்) தென்கிழக்காசிய நாடுகளில் வலைப்பின்னல் உடைய சரக்குக் கப்பல்களைக்கொண்ட ஓர் கப்பல் படையை புலிகளுக்காக கே.பி உருவாக்கியிருந்திருந்தார். 2007 இல் அரசுப் படைகள் தமிழ்ப்புலிகளின் விமானப்படைத் தாக்குதலால் அதிர்ச்சி யடைந்தன. LTTE தான் வரலாற்றில் விமானப்படையை வைத்திருந்த ஓர் கொரில்லா இயக்கமாகும். எப்படி இதைக் கையாண்டார் என்று கேட்டோம். பத்மநாதன் அமைதியாகப் பதிலளித்தார் "நாம் விமானத்தை பாகங்களாப் பிரித்தெடுத்து வேறுபட்ட கொள்கலன்களில் வைத்து எடுத்துவந்தோம்." பிரபாகரன் எப்படிப்பட்ட மனிதர்? "தனிப்பட்டவகையில் அவர் மிகவும் நல்லவர். ஆனால் அவர் யார் சொல்வதையும் கேட்கமாட்டார். அவருடன் முரண்படவும் யாரும் விரும்புவ தில்லை – அது மிகவும் ஆபத்தானது". எப்படி பத்தமநாதன் புலிகள் தோற்கடிக்கப்பட்டதைப் புரிந்துகொண்டார்? "9/11 இற்குப் பின்பான உலக மாற்றத்தைப் பிரபாகரன் புரிந்துகொள்ளவில்லை. LTTE மாற்றம் பெற்றிருக்க வேண்டும். நாம் பேச்சுவார்த்தை செய்திருக்கவேண்டும்."

நம்பிக்கை தரக்கூடியதாகவிருந்த 2002 பெப்ரவரி போர்நிறுத்தத்துக்கு அப்பால் டுவுவுநு தனது கடும்போக்கைக் கடைப்பிடித்தது. தனது இராணுவ ஆதிக்கத்தை நிலை நிறுத்தியது. வடக்கிலும் கிழக்கிலும் தனது அரசைக் கட்டியெழுப் பியது. கொழும்பு இதைப் பொறுத்துக்கொள்ளவில்லை. எதிர்ப்பில் ஈடுபட்டது. "நாம் முன்னேறியிருக்கவேண்டும். சண்டையினால் நம் எதையும் சாதிக்கவில்லை. எனக்குக் கவலையாகவிருக்கிறது. எவ்வளவு மக்கள் தங்கள் உயிரை இழந்துவிட்டார்கள்." பத்மநாதன் சொல்கிறார். இந்தப் பழைய கொரில்லாப் போராளி தன்னை இந்து மதத்தில் ஆசுவாசப் படுத்திக் கொள்கிறார். புலம்பெயர் தமிழருக்கோ இவர் ஓர் துரோகி. "இங்குள் சூழ்நியை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. சிலர் இன்னும் பிரபாகரன் உயிரோடு இருப்பதாக நம்பிக் கொண்டிருக்கிறார்கள்! அவர்கள் இயல்பு நிலையை ஏற்றுக் கொள்ளவேண்டும்." என்று அவர் சொல்கிறார். வெற்றிய டைந்தோரைப்பற்றி அவர் ஓர் விமர்சனத்தை வைக்கிறார்." இராணுவம் பெருந்தொகையான விவசாய நிலங்களைக் கைப்பற்றி வைத்திருக்கிறது. இது தமிழர்களை ஒடுக்கப் பட்டிருப்பதாக உணரவைக்கிறது. நான் இதை எப்போதும் இராணுவத்திடமும் அரசிடமும் சொல்லிவருகிறேன்."

இராணுவத்தின் புதிய தலைமயகத்தில் நாம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்கேவைச் சந்தித்தோம். இந்தப்பகுதயில் இருக்கும் இலங்கை ராணுவத்தின் தலைமைக் கட்டளை அதிகாரி. 1803 இல் பிரித்தானிய வந்தேறிகளை சிங்களக் குதிரைப்படை தாக்கும் காட்சி படிக்கட்டில் ஏறும்போது சுவரில் மாட்டப்பட்டு இருக்கிறது. மற்றொன்று 2009 மேயில் இறுதிச் சமரில் புலிகளை இலங்கை இராணுவம் தாக்கியதைக் காட்டுகிறது. ரணசிங்கே போர்க் குற்றம் சாட்டப்பட்டவர் என்ற அடிப் படையில் USA விசா தராதையிட்டு கோபத்துடன் இருக்கிறார். "இந்த குற்றச்சாட்டுக்கள் நியாயமற்றவை. இராணுவம் தமிழர்களுக்குச் செய்யும் அனைத்தையும் பாருங்கள். நாம் அவர் களைப் பயங்கரவாதத்திலிருந்து விடுவித்தோம். அவர்களில் பலர், முன்னாள் புலிகள் கூட இன்று எங்களுக்காக வேலை செய்கிறார்கள். முன்னாள் குழந்தைப் போராளிகளுக்கு மறுவாழ்வு கொடுத்துவரும் எமது பணிகள் குறித்து எனக்கு பெருமையாக இருக்கிறது. எப்படியோ, குவான்டன மோவிலிருந்து பார்த்தால் USA போதிக்கும் நிலையில் இல்லை."

இராணுவத்தின் சில நடவடிக்கைகளை அவர் நியாயப்படுத்த முயன்றது அசிங்கமாக இருந்து. "மக்கள் தங்களுடைய நிலம் என்கிறார்கள். ஆனால் அவர்களால் நிரூபிக்க முடியாது. ஏனென்றால் பயங்கரவாதிகள் நிலப்பதிவு ஆவணங்களை அழித்துவிட்டார்கள். யார் உண்மையான உரிமையாளர் என்று உறுதியாக அறியாமல் நிலத்தைத் திருப்பிக் கொடுக்கவோ அல்லது இழப்பீடு வழங்கவோ எங்களால் முடியாதுள்ளது." "இராணுவம் இந்தப்பகுதியில் 6000 பேரைக்கொண்ட மூன்று

டிவிசன்களுடன் உள்ளது" என்று அவர் சொன்னார். (ஒரு டிவிசனில் 7000 முதல் 9000 இருந்தபோதிலும்). இன்னும் எவ்வளவு காலத்திற்கு இவர்கள் இருப்பார்கள் என்று கேட்டபோது அவர் பதில்சொல்லாது நழுவினார். "ஏன் நாங்கள் போகவேண்டும்? இங்கேயும் இலங்கைதான் உள்ளது. மேலும், நாங்கள் கலைந்துபோகமாட்டோம் – சிறிலங்காவின் படையினர் இந்த நாட்டின் அபவிருத்தியில் பங்கெடுக்கிறார்கள்." வடக்கு முழுவதும் கட்டுமானப்பணிகளில் படையின் ஈடுபடுகிறார்கள். அவர்கள் உணவுவிடுதிகள், தங்கும் விடுதிகள் ஏன் பண்ணைகள்கூட நடத்துகிறார்கள். உள்ளூர் வியாபாரத்துக்குப் போட்டியாக இது இருப்பது உள்ளூர் மக்களை இன்னும் கோபம் கொள்ளவைக்கிறது.

நகரின் மத்தியில் இரண்டு தமிழ் முதியோரைக் கண்டோம். "நாங்கள் ஒன்றுக்கும் பயப்படமாட்டோம். ஏனென்றால் நாங்கள் ஏற்கெனவே செத்துவிட்டோம். எங்கள் அன்புக்குரிய பெருந்தொகையானவர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள். போர் நிறைவடைந்தபின்னும் ஏன் அவர்களுக்கு இவ்வளவு இராணுவம் இருப்பது தேவையாக இருக்கிறது? எங்களைக் கட்டுப்பாட்டில் வைக்கத்தான்! நாங்கள் ஆக்கிரமிப்பில் இருக்கிறோம். ஐந்தாறுபேர் சேர்ந்தவுடனேயே சாதாரண உடையில் இருக்கும் காவல்துறை வந்து நுழைகிறது." என்று சொன்னார்கள். அய்க்கிய மையம் பற்றிச் சொன்னவுடன் அவர்கள் சிரிக்கிறார்கள். "அது வெறும் பரப்புரை. பெரும் பாலான மக்கள் அரசாங்கத்தை எதிர்க்கிறார்கள்." கடந்த செப்டம்பரில் நடைபெற்ற மகாண கவுன்சில் தேர்தலில் கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மக்கள் 80% மேலாக சுயாட்சிக்கு ஆதரவான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு ஆதரவாகவே வாக்களித்தனர். அந்த இருவரும் புலிகளிற்குச் சார்பான இராணுவத்திற்கு எதிரான தமது நிலையை மறைக்கவும் இல்லை. "நாங்கள் அது மிகவும் சரியாக இருந்தது என்று சொல்லவரவில்லை. குழந்தைப் போராளிகள்...அது மன்னிக்கமுடியாததுதான். நாம் LTTE யுடன் இருந்தபோது இராணுவத்துடன் இருப்பதைவிட மிகவும் சுதந்திரமாக உணர்ந்தோம். அப்போது அது எங்களுடைய அரசாக இருந்தது." அவர்கள் பதட்டத்துடன் திரும்பிப் பின்னால் நோட்டம் விட்டார்கள். இரண்டு இளைஞர்கள் எங்களைக் கண்காணித்துக் கொண்டிருப்பதைக் கண்டோம். அதனால் எங்கள் நேர் காணலை முடித்துக்கொண்டோம்.

நாங்கள் கழுகுக் கண்களுக்குத் தப்பி கிராமப்புறம் ஒன்றிற்கு வண்டியை ஓட்டினோம். கிராமத்தவரிடம் பேசினோம். சிலர் அங்கங்களை இழந்திருந்தார்கள். போரின் இறுதி நாட்களில் எப்படி இராணுவம் பல அனைத்துத் திசைகளிலுமிருந்து தங்களுக்கு செல்வீசியது என்று விவரித்தார்கள். "நாம் அனைவரும் எமது அன்புக்குரியவர்களை இழந்திருக்கிறோம்". ஓர் இளம்பெண் படையினர் எப்படி நடந்துகொண்டார்கள் என்று சொல்லும்போதே கண்ணீர் சிந்தினார். "அவர்கள் மிக மோசமானவர்கள்". ஓர் விவசாயி பின்வருமாறு சொன்னார்: "அரசாங்கம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 50,000 ரூபாய்கள் ($385) தருவாதக வாக்களித்தது. ஆனால் எங்களுக்கு 20,000 ($150) மட்டுமே தரப்பட்டது. பெரும்பாலான பணம் அவர்களுடன் ஒத்துழைப்பவர்களுக்குச் சென்றுவிட்டது." மனித உரிமைப் பணியாளர் ஒருவர் இதை உறுதிப்படுத்தினார். கிராமத்தினர் கோபமாக இருந்தார்கள். "சிங்களவர்களால் வீதிகள் போடப்படுகின்றன." "எப்படியிருப்பினும் எங்களிடம் வண்டிகள் இல்லை. இந்த வீதிகள் இன்னும் அதிகமான இராணுவத்தினரைக் கொண்டுவருவதற்குத்தான் உதவும்". "அவர்கள் வருவது எமக்குப் பயத்தைத் தருகிறது. மக்கள் தொடர்ந்தும் காணாமல் போய்க்கொண்டிருக்கிறார்கள்." அவர்கள் ஆக்கிரமில் இருப்பதாக உணர்ந்தாலும் அவர்கள் LTTE இன் இல்லாமையை மிகவும் உணர்வதாகச் சொன்னார்கள். "அப்போது ஊழல் எதுவும் இங்கு இல்லை. ஒரு குற்றமும் இல்லை. அவர்களுடைய நீதிமன்றம் மிகவும் நேர்மையாக இருந்தது. புலிகள் விலைகளை நிர்ணயம் செய்திருந்தார்கள். ஒரு கிலோ அரிசி 35 ரூபாய். ஒப்பிடுகையில் இப்போது 80 ரூபாய் அல்லது 100 ரூபாய் இன்று. இரவில் வெளியே போவதற்குப் பெண்களுக்கு பாதுகாப்பு இருந்தது." குழந்தைப் போராளிகள் கூட "விருப்பத்துடனேயே" சென்றிருந்தார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். புலிகளின் காலத்தில் அவர்கள் வாழ்வு உன்னதமாயிருந்து என்ற நினைவினால் கிராமத்தினர் இன்று கவலையாக இருக்கிறார்கள.

அரசாங்கப் படையினர் தங்கள் பெருமைகளைக் காட்டிக் கொள்ள மார்பிள்களிலான நினைவிடங்களை எழுப்புகிறார் கள். அதே வேளை புலிகளின் கல்லறைகளைச் சிதைக்கிறார் கள். நினைவுகளை அழித்தல் கொழும்பிற்கு உள்ளூர் மக்க ளிடம் ஆதரவைப்பெற்றுத் தராது. வுயே வைத் தேர்தலில் வெற்றிபெறவைத்தும் ஒரு பயனும் இல்லை என்பது கிராமத் தவர்களை இன்னும் அதிக கோபத்திற்கு ஆளாக்கியிருக்கிறது. "தேர்ந்தெடுக்கப்பட்ட TNA உறுப்பினர்கள் தங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும் அனைத்தையம் கொழும்பே முடிவு செய்கிறது என்றும் விளக்கிச் சொன்னார்கள். டுவவுநு யின் கீழ் இருக்கும் போது தேர்தல் இல்லை. ஆனால் நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. அவர்கள் எங்களுடைய அரசாக இருந்தார்கள்." வடக்கில் நாம் உரையாடிய அனைவரும் இத்தகைய பயத்தை, துயரத்தை, இழப்பின் வலியைக் எதிரொலித்தார்கள். கரையோரத்தில் மீனவர்கள் தெற்கிலிருந்து வரும் சிங்களப் படகுகளால், ஏன், பாரிய சீன மீன்பிடிக் கப்பல்களாலும் ஏற்படும் தொழிற் போட்டிபற்றியும் முறைப் பாட்டைச் சொன்னார்கள். கிழக்கில் சிங்கள தமிழ் எல்லைப் புறப் பகுதிகளில் பெருவாரியான சிங்கள விவசாய மக்கள் வரவால் கிராமத்தவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை "குடியேற்றக்காரர்கள்" என்று அழைக்கிறார்கள். கிழக்கில் மக்களிடையே அதிகரித்துவரும் பாரபட்சம் பற்றி உணர்வலைகள் காணப்படுகின்றன. "சிங்களவர்களால் எதையும் செய்யமுடியும். எங்களால் ஒன்றும் செய்யமுடியாது".

யாழ்ப்பாண நகரம் இலங்கையின் தொலைவடக்கில் உள்ளது. இலங்கையில் தமிழ்ப் பண்பாட்டின் வரலாற்றுப் பிறப்பிடம் இது. 1980களிலும் 90களிலும் இது கைப்பற்றப்பட்டு கைவிடப்பட்டு மீண்டும் கைப்பற்றப்பட்டது. இது இன்னும் அழிவுகளின் சுவடுகளைத் தாங்கிநிற்கிறது. ஆனால் அங்கே அதிகளவில் மகிழுந்துகளும் புதிய தங்கும் விடுதிகளும் காணப்படுகின்றன. வெளிநாட்டு தொண்டு நிறுவனத்தினரைத் தற்போது உல்லாசப்பயணிகள் இடம்பெயர்த்திருக்கிறார்கள். வீதித் தடைகள் காணாமல் போய்விட்டபோதும் இன்னும் அதேயளவு காவல்நிலையங்களும் ராணுவத்தினரும் நிலைகொண்டுள்

ளனர். வுயே யின் முக்கிய உறுப்பினரும் இலங்கைத் தமிழ் மாநிலக் கட்சியின் தலைமைச் செயலாளர் குலநாயகன் பின்வருமாறு சொன்னார்: "தமிழ் மக்கள் உரிமைகளுக்காகத் மக்களாட்சி வழியில் தங்களுக்காகப் போராட எங்களில் நம்பிக்கை வைத்தார்கள். TNA யிடம் மகாணத் தேர்தலில் 38க்கு 30 இடங்கள் கிடைகத்தன. ஆனால் நாங்கள் அதிகாரமற்றவர்கள். 13 ஆவது திருத்தச் சட்டத்தினால் தரப்படும் கொஞ்ச நஞ்ச அதிகாரமும் ஆளுனரினால் கையாளப்படுகிறது. ஆளுனரோ ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவர். மக்கள் கோபமாக உளள்ளனர்." TNA வடக்கு கிழக்கு மகாணங்களை ராணுவ மயப்படுத்தலில் இருந்து விடுவிக்குமாறு விலியுறுத்திக் கேட்டுவருகிறது.

மேற்றிராணியார் மாளிகையில் நாங்கள் தோமஸ் சவுந்திர நாயகம் ஆண்டகை அவர்களைச் சந்தித்தோம். ஆகஸ்ட் 2006 இலிருந்து காணமல் போன அவரது உதவியாளர் பற்றியும் கியுரேர்ரர் பற்றியும் செய்தி ஏதாவது கிடைக்கும் என்று இன்னும் காத்திருக்கிறார்." மக்களுடைய விருப்பையே வடக்கு மகாகண சபை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதை அரசு புரிந்து கொள்வது தேவையாயிருக்கிறது. அதற்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்." என்று அவர் சொன்னார். "மக்களை மீழிணைப்புச் செய்வதற்கு இந்த நாட்டில் எதுவும் செய்யப் படவில்லை. போர் முடிந்தவுடனேயே அனைவரையும் ஓர் வட்டமேசைக்கு ஜனாதிபதி அழைத்திருக்கவேண்டும். ஆனால் அந்த வாய்ப்பை அவர் தவறவிட்டுவிட்டார். அதற்குப் பதிலாக அதிகாரத்தில் இருப்பவர்கள் தமிழ் மக்களில் எதிர்பார்ப் புக்களை மறுதலிக்கிறார்கள். உள்நாட்டுப் போரை "பயங்க ரவாதத்திற்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கை" என்று குறுக்குகிறார்கள்." இருக்கும் சூழல் இப்படியே போனால் கொந்த ளிப்பான நிலைக்கு வந்துவிடும். இந்த ஏப்பிரலில் இரண்டு வுயே உறுப்பினர்கள் வெளிப்படையாகப் பின்வருமாறு அறிவித்தார் கள், "சர்வாதிகாரம் தொடருமானால் மக்களோடு சேர்ந்து போராடத்தயங்கமாட்டோம்". சிலநாட்கள் முன்பாகத்தான் யாழ் குடாநாட்டில் பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்று சாட்டப்பட்ட மூன்று தமிழர்கள் இராணுவத்தால் கொல்லப் பட்டிருந்தார்கள். 2009 இற்குப் பிற்பாடு நடந்த மிகமோசமான நிகழ்வாக இது இருக்கிறது. மார்ச்சுக்கும் யூனுக்கும் இடையில் 47 மக்கள் கைதுசெய்யப்பட்டு LTTE ஐ மீளக்கட்டச் சதி செய்தார் கள் என்று குற்றம் சாட்டப்பட்டார்கள்.

மீழிணைப்பிற்கான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை என்று கொழும்பில் மனிதவுரிமைப் பாதுகாவலர் கள் அதிருப்தி தெரிவிக்கிறார்கள். " அரசாங்கம் பொருளாதார வளர்ச்சி மட்டுமே மீழிணைப்பைக் கொண்டுவரும் என்று நம்புவதற்கு விரும்புகிறது." என மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் தலைமை இயக்குனரான பாக்கியசோதி சரவண முத்து சொல்கிறார். "ஆனால் நீங்கள் அமைதியை சீமேந்து (கான்கிரீட்) கொண்டு கட்டியெழுப்ப முடியாது. மாகாணச் சபைத் தேர்தல் முடிவுகள் இதை நரூபிக்கன்றன. TNA பெருவாரியாக வெற்றி பெற்றது. போர் முடிவு பெற்றிருக்கலாம். ஆனால் சிக்கல் நிறைவுபெறவில்லை. தமிழ்ச் சிறுபான்மையினருக்கு சுயாட்சியை வழங்குவதற்கான சிங்களப் பெரும்பான்மையின் மறுப்பில் அதன் வேர்கள் நிலைகொண்டிருக்கின்றன."

2005 இல் தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர் மீண்டும் 2010இல் மீளத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரஜபக்ச 2015 இலும் ஆட்சித்தலை மையை வெல்வற்கு எதிர்பார்க்கிறார். சிங்களவர்களிடையே அவர் பிரபலமானவர். "பயங்கரவாதத்திற்கு" எதிரான அவரது தீர்மானமான நடவடிக்கையை அவர்கள் பாராட்டுகின்றனர். அவர்களைப்பொறுத்தளவில் தமிழ்ப் பிரிவினைவாதம் என்பது, பேருந்துகளிலும் தொடர்வண்டியிலும் புத்த விகாரைகளிலும் வைக்கப்படும் வெடிகுண்டுகள், சிங்கள முசுலிம் கிராமத்தவர் படுகொலைகள், போர்க் கைதிகள் உயிரோடு கொழுத்த பட்டமை, அரசியல் வாதிகளின் படுகொலைகள் மற்றும் பிரபாகரனை விமர்சிக்கத் துணிந்த யாரும் படுகொலைக்குள் ளானமை என்பன போன்ற LTTE வன்முறைக்குச் சமன். அவர்களுக்கு ஐ.நா சுமத்தியிருக்கும் போர்க்குற்றச்சாட்டு என்ன என்பது புரியவில்லை. 1972 இலிருந்து 2009 வரைக்கும் 100,000 மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்று கணிப்பிடப் பட்டிருக்கிறது. 2009 இறுதித் தாக்குதலில் "பல்லாயிரக்கணக் கானோர்" இறந்ததாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. தென் கரையில் உள்ள ஓர் உணவக உரிமையாளர் எம்மிடம் "ஒரு கணவன் மனைவி எங்காவது போகவேண்டும் என்றால் ஆளுக்கொரு பேருந்தைப் பிடிக்கவேண்டும். ஏனென்றால் ஏதாவது தாக்குதல் நடந்தாலும் அவர்கள் குழந்தைகள் எதிலிகளாக மாட்டார்கள். 25 ஆண்டுகளாக ஒருவரும் எங்களுக்கு உதவவில்லை. மேற்குலகுக்கு எந்த ஆர்வமும் இல்லை. இது பெரிய சிக்கலாகவும் எல்லைதாண்டியும் போயிருந்தது. நீங்கள் எங்களைப் பயங்கரவாதிகளுடன் பேச்சுவார்த்தை செய்யவேண்டும் என்றுகூடச் சொன்னீர்கள். இப்போது எப்படியோ இந்த நரகத்திற்கு ஓர் முடிவு கட்டி விட்டபிறகு, நீங்கள் இங்கு வந்து சிக்கலைத் தருகிறீர்கள்?" ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணைக்கான குழுவிற்கு யூன்மாதம் வருவதற்கான சிறிலங்கா விசா இன்னும் கிடைக்கவில்லை.

தேசிய அமைதிக் கவுன்சிலின் தலைமை இயக்குனர் யெகான் பெரரா ஜனாதிபதியின் பிரபல்யம் பற்றி விளக்கமளித்தார்: "தமிழ்ப் பிரிவினைவாதம் என்ற ஒருமைப்பாட்டுக்கெதிரான உள்நாட்டு அச்சுறுத்தலுக்கு எதிராகவும் வெளியிலிருந்து வரும் வெளிநாட்டு தலையீடுகளில் இருந்தும் நாட்டைக் காப்பவராகப் பெரும்பான்மையான சிங்கள மக்கள் ராஜபக்சவைப் பார்க்கின்றர். அவர் சிங்கத் தேசியவாதத்திற்குச் சாமரம் வீசுகிறார். ஆனால் அந்தக் கொள்கை தமிழ் சிறுபான்மை யினரைத் தனிமைப்படுத்தி இனரீதியான இறுக்கத்தை மோசா மாக்குகிறது." "இங்கே ஓர் உரையாடலோ மீழிணைப்போ நடைபெறவில்லை. தமிழரும் சிங்களவரும் தங்கள் அன்றாட வாழ்வில் தோளோடு தோள் உரசலாம். ஆனால் அவர்கள் அரசியல் பற்றிக் கதைக்கமாட்டார்கள். அல்லது ஒரு சிங்க நண்பர் அரசியல் கதைப்பார். அவரது தமிழ் நண்பர் அமைதியாயிருப்பார். ஏதாவது தவறாற ஆகிவிடுமோ என்ற பயத்தினால் இது நடக்கும், அல்லது டுவுவுநு யின் ஆதரவாளர் என்ற முத்திரை விழுந்துவிடுமே என்ற பயத்தினால்." என்று பெரரா சொல்கிறார்.

கடடந்த காலத்தில் புலிகளிடமிருந்து கொலைமிரட்டல் பெற்ற தமிழர் எங்களிடம் இப்படிச் சொன்னார்: "போரின் பின்னர் எனது சிங்கள மருத்துவர் என்னிடம் பின்வருமாறு சொன்னார் "நீங்கள் மிகவும் மகிழ்ச்சியாயிருப்பீர்கள் என நினைக்கிறேன். பயங்

கரவாதத்திலிருந்து உங்களை நாங்கள் விடுவித்துவிட்டோம்." அவர் மிகவும் உண்மையாக அதைச் சொன்னார். ஆனால் இதைவிடவும் மிகவும் நடடந்து முடிந்த நிகழ்வு சிக்கலானது என்ற உண்மையை அவருக்குச் சொல்ல எனக்குத் துணிவு வரவில்லை." உரையாடல் இன்மை மக்களைத் தங்கள் சொந்தத் தவறுகளை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தையும் இல்லாது ஆக்குகிறது. எதிர்காலத்தை மேலும் சீரழிக்கிறது.

ராஜபக்சேயின் தேசிவாத எடுத்துரைப்புக்கு வேறு செயற்பாடும் உள்ளது. ஊழலில் இருந்தும் அதிகாரக்குவிப்பிலிருந்தும் மக்களின் கவனத்தை அது திசைதிருப்புகிறது. அவரது உடன்பிறப்புக்கள் பசிலும் கோட்டபாயவும் பொருளாதார அபிவி ருத்தி, பாதுகாப்பு மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சர்களாக ஆகி விட்டனர். அனைத்து வெளிநாட்டு உதவிகளும் கூட்டுத் திட்டங் களும் நாட்டின் வரவுசெலவுக்கூடாகத் தாண்டிச் செல்ல வேண்டும். அத்துடன் அவர்கள் ஆதரவுக் கருத்தையும் பெற வேண்டும். பெரும் வட்டி வீதத்துடனான பாரிய சீனாவின் முதலீடு (ஒரு ஆண்டுக்கு 6%-7%) எவ்வித வெளிப்படைத் தன்மையும் அற்றது.

ராஜபக்சேவிடம் எதேச்சாதிகாரப்போக்கு உள்ளது. "பெரும் பான்மை மக்கள் ஆதரவு இருப்பதால் அதிகாரப்பரவலாக்கம் தேவையற்றது என அவர் நினைக்கிறார்" என்று ஓர் ஆய்வாளர் சொல்கிறார். ஜனாதிபதி தனது முன்னாள் கட்டளைத் தளபதி ஜெனரல் சரத் பொன்சகாவை சிறையில் அடைத்துள்ளார். இது அவரை அரசியலுக்குச் செல்லவிடாமல் தடுத்துள்ளது. இரண்டு ஜனாதிபதி ஆட்சிக்காலத்தைத் தொடர்ந்தார். உச்ச நீதி மன்றத்தின் தலைவரைப் பதவியிறக்கினார்.

அரசு சார்பு நாளேடு எந்தவொரு விமர்சனக் குரலையும் அரசுக்கெதிரான துரோத்தனமாகவோ அல்லது LTTEக்கு ஆதரவான குரலாகவோ விவரிக்கிறது. பாதுகாப்பு அமைச்சரால் வழிநடத்தப்படும் அதி வலது சாரிக் குழுக்கள் தேவாலயங் களையும் பள்ளிவாசல்களையும் வக்கீல்கள் பேரணியையும் தாக்கியுள்ளது. ஊடகவியலாளர் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் போகின்றனர். 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மெர்வின் டி சில்வா என்ற ஒரு அரசாங்க அமைச்சர் மனிதவுரிமைப் பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளரின் கை கால்களை உடைப்பதாகச் சபதம் செய்தார். கடந்த நவம்பரில் சிங்கள மனித உரிமை வக்கீல் நிமல்கா பெர்ணா ண்டோ நாட்டின் பிரபல வானொலி நிகழ்ச்சியில் வைத்து கொலை மிரட்டல் விடுக்கப்பட்டார். தனது இளம்வயதில் மிகவும் தீவிரமான மனித உரிமை ஆதரவாளரான ராஜபக்சே மே மாதம் 2 ஆம் திகதி "இந்த அரசாங்கத்தை நிலை குலைக்கும் உள்நாட்டு வெளிநாட்டு சதிகளுக்கு அரசாங்கம் இடமளிக்காது" என்று கூறியுள்ளார்.

Cedric Gouverneur, 'Sri Lanka: Up country with the Tamil Tigers'', Le Monde Diplomatique, English edition, Feb. 2004

தமிழ்ப் புலிகளின் ஆண்டு வரவுசெலவு 200முதல் 300 மில்லயன் டொலர்கள்.

Cedric Gouverneur, 'The time of tiumphalism', Le Monde Diplomatique, English edition, Aug. 2010

"ஐ.நா சபை சிறிலங்காவில் இலங்கைப்போரில் நடந்துள்ள முறைகேடுகள் குறித்து விசாரிக்க ஏற்றுக்கொண்டுள்ளது" ஐ.நா செய்தி மையம், 27 மார்ச் 2014.

இது வெளிவந்தது Le Monde Diplomatique English edition July 2014 இல். மொழிபெயர்த்தபின்னர் தற்போது வெளியாகிறது. காலப் பகுதியைக் கணக்கிட்டுக் கொள்க.

Eric Paul Meyer, '' Defeating the Tiger's want solve the problem'' , Le Monde Diplomatique, English edition, March 2009.

Chrles Haviland, 'Sri Lanka minister Mervyn Silva threatens Journalists'', BBC, 23 March 2012.

**ஆங்கில, பிரஞ்சுவழி தமிழில் ரஃபேல்**

Translated by From French to English Stephanie Irvine

# இசை வானில் ஒரு விண்மீன்

**- மைதிலி தயாநிதி**

கடந்த இரு தசாப்தங்களில் இலங்கைத் தமிழ்ப் பாடசாலைகளில் நுண்கலைத் துறையினைத் திட்டமிட்டு வழிநடத்திய கல்வியியலாளருள் முதன்மையாக வைத்தெண்ணப்படத் தக்கவர் கலாநிதி மீரா வில்லவராயர். அவர் 2014 நவம்பர் 22 ஆம் திகதியன்று இயற்கை எய்தியமை இசையுலகிற்கு ஒரு பேரிழப்பாகும். இசைத் திறன், இசைக்கல்விப் புலமை எனும் அரிய நலன்கள் ஒருங்கே பொருந்திய மீரா இசை கற்பித்தற் துறையில் தனது தடங்களை விட்டுச் சென்றிருக்கின்றார். இசைத்துறையில் முனைவர் பட்டம் பெற்ற பாடகியான அவர் மகரகம தேசியக் கல்வி நிறுவகத்தில் அழகியற்கலைப் பிரிவில் பிரதம செயற் திட்ட அதிகாரியாகப் பணியாற்றியவர். இசை கற்பித்தல், இலங்கைத் தமிழ்ப் பாடசாலைகளில் இசைப் பாடத்திட்டங்கள் வகுத்தல், இசை ஆசிரியருக்குப் பயிற்சி வகுப்புகள் நடாத்துதல், மாணாக்கருக்கான இசைக் கல்வி நூல்களை வெளியிடல் எனப் பல்வேறு துறைகளில் ஈடுபட்டதன் மூலமாக இலங்கையின் கர்நாடக இசைக்கல்வி வளர்ச்சிக்கு அவர் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்.



இசைத்துறையில் ஆர்வமும், இரசனையும் கொண்ட பெற்றோரின் இளைய மகள் மீரா. அவர் தனது ஆரம்ப இசைப்பயிற்சியினை, 1940 களில் யாழ்ப்பாணத்தில் துரைசாமி அய்யரிடம் வாய்ப்பாட்டும், வீணையும் கற்றுத் தேர்ந்த தனது தாயார் புவனேஸ்வரி அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார். கொழும்பு சைவமங்கையர் வித்தியாலயத்தில் திருமதி. சண்முகராஜா, யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் செல்வி. யோகாம்பிகை செல்லையாபிள்ளை எனும் சங்கீத ஆசிரியைகளின் வழிகாட்டல்கள் கிடைக்கப் பெற்ற மீராவின் இசைத்திறன்கள், திருமதி பகவதி கிருஷ்ணசாமி, தெல்லிப்பழை விஸ்வநாத ஐயர், சேலம் ஜெயலக்ஷ்மி எனும் சங்கீத வித்துவான்களின் கீழ்ப் பெற்ற இசைப்பயிற்சி மூலம் உரமும், மெருகும் பெற்று விசாலித்தன. ஹிந்துஸ்தானி இசையினையும் அவர் தன் இளமைப் பருவத்திலே கற்றிருந்தார்.

இசைத்துறையில் பணி புரிவதற்கான உயர்கல்வித் தகைமைகளை மீராவுக்கு இந்தியப் பல்கலைக்கழகங்கள் வழங்கின. சென்னைப் பல்கலைக்கழகத்தில் இசையில் இளமாணிப் பட்டத்தினையும், கேரளப் பல்கலைக்கழகத்தில்

இசையில் முதுமாணிப் பட்டத்தினையும், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் " தமிழிசை வளர்ச்சியில் தேவார முதலிகளினதும் சங்கீத மும்மூர்த்திகளினதும் பங்களிப்பு" என்ற தலைப்பில் ஆய்வேடு சமர்ப்பித்து முனைவர் பட்டத்தினையும் அவர் பெற்றுக் கொண்டார்.

மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் திட்ட அதிகாரியாக 1988 ஆம் ஆண்டு இணைந்து கொண்ட அவர் பிரதம செயற்திட்ட அதிகாரியாக 1998 இல் பதவி உயர்வு பெற்று 2011 ஆம் ஆண்டு சேவையிலிருந்து இளைப்பாறினார். அத்துடன் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் ஸ்ரீபாலி வளாகத்திலும், களனிப் பல்கலைக்கழக அழகியற்கலை நிறுவகத்திலும் கர்நாடக இசைத்துறையில் வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றி, சிங்கள மாணவர்களின் நன்மதிப்பினையும் ஈட்டினார். கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள விபுலானந்தர் அழகியற் கற்கை நிறுவனத்தினது வெளிவாரிப் பரீட்சகராக மட்டுமன்றி, சென்னைப் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் முதலிய பல்கலைக் கழகங்களின் முனைவர் பட்ட ஆய்வேடுகளின் வெளிவாரி மதிப்பீட்டாளாராகவும் அவர் விளங்கினார்.

மீரா அவர்கள் கர்நாடக இசைத்துறைக்கு இரு முக்கிய வழிகளில் பங்காற்றியுள்ளார். மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் அழகியற்கலைப் பிரிவில் தமிழ் மாணவர்க்கான பாடத்திட்டங்களைத் திட்டமிடுவதிலும், அமுற்படுத்துவதிலும், ஆசிரியருக்கான கருத்தரங்குகளை நடாத்துவதிலும் அவர் முன்னின்று உழைத்தவர். அத்துடன், இசைப்பரீட்சைகளில் பரீட்சகராக இலங்கையிலும், சுவிட்சலாந்து, டென்மார்க் போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் கடமையாற்றி உள்ளார். மிக முக்கியமாக, மாணவர் நலனைக் கருத்திற் கொண்டு அவர்களுக்காக நூல்கள் எழுதியுள்ளார். இசையியல் விளக்கம் பாகம் 1, 2, 3, ஹிந்துஸ்தானி இசை–மேற்கத்திய இசை 'ஓர் அறிமுகம், ஹிந்துஸ்தானி, மேற்கத்திய செந்நெறி இசை மரபுகள்– ஓர் அறிமுகம், கர்நாடக சங்கீதம்' ஓர் அறிமுகம் என்பன அவர் எழுதிய நூல்களுட் சிலவாகும். இவ்வாறு இசைக் கல்வித்துறையில் பாடசாலை மட்டத்திலும், அதற்கு வெளியிலும் மீரா ஆற்றிய பணி கணிசமானது.

அத்துடன் தமிழிசை ஆய்வுத் துறைக்கு அவர் ஆற்றிய பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது. " தமிழிசை வளர்ச்சியில் தேவார முதலிகளினதும் சங்கீத மும்மூர்த்திகளினதும் பங்களிப்பு" என்ற தலைப்பில் தமிழிசை தொடர்பான ஆய்வினை முனைவர் பட்டத்திற்காக மேற்கொண்டிருந்த மீரா அவ்வாய்வின் அடிப்படையில் பல கட்டுரைகளினை மாநாடுகளில் சமர்ப்பித்திருப்பதுடன் சஞ்சிகைகளுக்கும் எழுதியுள்ளார். "திருஞானசம்பந்தரும் தியாகராஜரும்", "திருக்குறளும் இசையும்", "பண்முறைமையிலிருந்து இராக முறைமைக்கான வரலாற்றுப் படிநிலைகள்", "தமிழர் பண்பாட்டில் இசை" என்பன அவர் எழுதியுள்ள கட்டுரைகளிற் சிலவாகும்.

நெஞ்சுறுதி, துணிவு, தாளாண்மை எனும் விடாமுயற்சி எனும் குணநலன்களை தன் அணிகலன்களாகப் பூண்டிருந்த கலாநிதி மீரா வில்லவராயர் இலங்கையில் இசைத்துறையில் பெண்களுக்கோர் முன்னோடியாக விளங்கினார் என்பது மிகையான கூற்றாகாது. கொழும்பில் மிக நெருக்கடியான காலகட்டங்களில் வாழ்ந்தபோதும், கடமை தவறாத நேரிய வாழ்வினை அவர் வாழ்ந்திருந்தார். அவரின் நூல்களையும் , கட்டுரைகளையும் எதிர்கால சந்ததியினரும் படித்துப் பயன் பெறுவர் என்பதில் ஐயமில்லை.

# நதி மார்புச் சுழியில் பொம்மைத்தவம்.



பெருகாட்டின் இடையே
தொலைந்து போன கைப்பொம்மை
நதி வெள்ளத்தில் அலைந்து அலைந்து
நகரத்தின் கடைசி வாயிலை விரைகின்றது

வெள்ளத்தின் சகதிக் குழியினூடே
தனது மொத்த அழகையும் இழந்திருந்த பொம்மை
பூக்களான மென்மையை கொஞ்சமும் இழக்கவில்லை.
சடப்பொருளின் வடிவமானாலும் அதன் மேல்
ஒரு ஆன்மா பரவிச் சுழல்வதை உணர்த்துகின்றது

அந்தப் பொம்மை தொலைதூரத்துக் காட்டினது வலியை
உடலில் காவிக் கொண்டு வந்திருப்பதை,
உடலை மிருகங்கள் வேட்டையாடியிருப்பதை
நதி மார்பில் இறுகப் பற்றியிருப்பதை,– பொம்மை
நீர்ச் சுழியில் அகப்பட்ட வேதனை மெல்லிய கோடாய்.

நெடு நேரமாய் பொம்மையின் கண்களை மீன்கொத்திப்
பறவை கொத்தி கொத்தி சலிப்புற்று
தோல்வியில் மரக்கொப்புக்காக மீள் திரும்புகின்றது
பொம்மை கைப்பற்ற இயலாமையில்
உரத்த கத்தலில் வனத்தையே அதிரச் செய்கிறது.

இன்னுமொரு வெள்ளம் பிரித்தெடுத்த இழப்பில்
பற்றை அதன் உடம்பில் குருதிக்கறைகள் பழைய
நினைவினை வெளிப்படுத்துகின்றன
பொம்மை உடல் முழுதும் நீர்க் குமிழித் தழும்பு
வட்டங்களாய் வரைந்திருக்கும் மண் கறையிலான படிவுகள்.

எங்கேனும் மையத்தில் நிகழ்ந்தேறிய
மரணங்களின் நிஷ்டை அந்தப் பொம்மை கடத்தப்பட்ட
குழந்தையின் கரத்திலிருந்து நழுவி இருக்கக் கூடுமா ?
புதையலுக்காகக் கடத்தப்பட்ட
கன்னியின் பைகளிலிருந்து விழுந்திருக்குமா ?
ஐயங்களில் தேசம் பரிசோதனை செய்யக் கூடும் ?

**- கோ.நாதன்**


சொந்தமான ஒரு வீடு
உங்கள் வாழ்க்கையின்
மிகப்பெரியதோர் முதலீடு
வீடு வாங்க விற்க
ஈசன் குலசேகரம்
Sales Representative
416 835 1700
info@esanhomes.com
வீடுகள்
தொடர்மாடி வீடுகள்
வியாபார நிலையங்கள்
காணி முதலீடுகள்
வாங்குதல் - விற்றல்
We can also Arrange your Mortgage
ஆலோசனைகளுக்கும்
நம்பிக்கையான சேவைகளுக்கும்
எம்மை நாடுங்கள்..
விக்கி வேலாயுதன்
Sales Representative
416 457 7162
vvelauthan@yahoo.com
RE/MAX
RE/MAX
RE/MAX Vision Realty Inc., Brokerage
Office: (416) 321-2228
Fax: (416) 640-1126
www.esanhomes.com
2210 Markham Road # 1 , Toronto, ON M1B5V6

# சயந்தனின்

## வெளிவரவிருக்கும் நாவலிருந்து ...





விடத்தல், உலுவிந்தை, கரையாக் கண்ணிப் பற்றைகளும் சிறு மரங்களுமாகப் பரவியிருந்தது மந்துக்காடு. வெயில் பணிந்து இருள் மூடத்தொடங்கியிருந்த நேரம். உடலின் கடைசிச் சொட்டு நீரையும் உறிஞ்சி இழுப்பதுபோல வியர்த்துக் கொட்டியது.

லெட்சுமணன் சேட்டைக் கழற்றிச் சுருட்டி நெஞ்சில் வழிந்த நீரை ஒற்றியெடுத்தான். கழுத்துப் புறத்தையும் நெற்றியையும் தேய்த்தான். கால்களில் தசைப்பிடிப்பு வந்ததைப்போல சுளீரென்று இழுத்தது. பிரயத்தனப்பட்டுத்தான் நடந்தான்.

சங்கிலி லெட்சுமணனோடு அதிகமாகப் பேசவில்லை. “எல்லாத் தையும் நானே சொல்லித்தருவன் எண்டு பாத்துக்கொண்டு நிக்காத. அனுபவம்தான் ஒருத்தனுக்கு ஆகச்சிறந்த ஆசான் எண்டுவார் என்ர அய்யா. நான் என்ர அனுபவங்களை உனக்குச் சொல்லலாமே தவிர நீதான் உன்ர அனுபவங்களைத் தேடிக் கண்டுபிடிக்கவேணும்” என்று ஆரம்பத்திலேயே சொல்லி விட்டான், என்றாலும் வேட்டையின் சூக்குமங்களைப் பகிர்ந்து கொள்ளத் தவறவில்லை. “வெட்டைக்குள்ள நுழையமுதல் அவதானமாயிருக்க வேணும், மழைகாலமெண்டால் ரா முழுதும் மேய்ஞ்சுபோட்டு, முதுகில ஊறின மரச்சிலித் தண்ணியை உதறிக்கொண்டு, பொட்டலல்லதான் நிப்பினம்.. வாற வழியில கண்காட்டிப்பறவையள் எங்களைக்கண்டு கத்தினால் அதுதான் பொட்டலல்ல நிற்கிற உசிர்களுக்குக் கிடைக்கிற முதல் எச்சரிக்கை மணி..” அக்கறை இழையோடிய அந்தச் சொற்களை தனக்கான கௌரவமென்று லெட்சுமணன் நம்பினான். நெகிழ்ச்சியான அத்தருணத்தில், ஏனோ நீண்ட நாட்களாக மறந்திருந்த யாழ்ப்பாணத்துக் கந்தையா வாத்தியார் ஒரு கறுப்பு நிழலாக அவனைத் தொந்தரவு செய்தபடியிருந்தார். நினைவு காட்டின் வழித்தடத்திலிருந்து அவ்வப்போது விலகியோடி எப்பொழுதுமே எதையாவது சப்பிக்கொண்டிருக்கும் வாத்தியா ரின் வாயைப் பார்த்துக்கொண்டு நின்றது. கந்தையா வாத்தியார். மழையில் கரைந்து சளிந்து கீழிறங்கி சவத்தைப் புதைத்த மேடுபோலிருந்த சுவரும், வெளிச்சத்தையும் மழையையும் தாராளமாக அனுமதிக்கும் ஓலைக்கூரையுமான காட்டுப்புலம் தமிழ்க் கலவன் ஆரம்பப் பாடசாலைக்கு அவர்தான் எல்லாமும்.. ஓர் ஆடு இரை மீட்பதைப்போல முறிந்த பனங்கிழங்கையோ சிவப்பான மாம்பழக் கீலங்களையோ தின்றுகொண்டிருக்கிற முகம். விபூதியைக் குழைத்துச் சாந்து அப்பியதைப்போன்ற நெற்றி. தடித்த குரலால் “டேய், உன்ரை கொப்பன் வேட்டைக்குப் போறவனெல்லே, வீட்டில மரை வத்தலிருந்தாக் கொண்டு வா” என்று பிள்ளைகளை விரட்டுவார். கொண்டு வந்தால் “கெட்டிக்காரன்” என்று மெச்சுவார்.

மூன்றாண்டுகளுக்கு முன்னிருக்கும். ஒருநாள் ஒரு கணக்குப் பிழைத்துவிட்டதற்காக நாக்கை மடித்து பற்களில் கடித்துக் கொண்டு கந்தையா வாத்தியார் ஓங்கிக் குட்டியதில் லெட்சும ணனின் தலையில் கொப்பளம்போல வீங்கிவிட்டது. சட்டென்று ஒரு மொட்டுவிட்டதைப்போல தடிப்பு. இரவு முழுவதும் விண் விண்ணென்று

வலித்துக்கொண்டேயிருந்தது. மறுநாள் காலை லெட்சுமணன் அடம்பிடித்தான். “அவரு எப்பயும் தோட்டக் காட்டான் தோட்டக்காட்டான்னு மண்டையில கொட்டுறாரு. நான் போவல்ல..” என்றான்.

“இல்லெய்யா.. நாலெழுத்துப் படிச்சா நம்ம தலைமுறையிலும் படிச்சவன் ஒருத்தனப் பாக்கலாமில்ல.. பொறுத்துப்போய்யா..” என்று சமாதானப்படுத்திவிட்டுச் சிங்கமலை கூட்டிச் சென்றான். லெட்சுமணன் வேண்டா வெறுப்பாகத்தான் போனான். வாத்தியார் அவர்களைக் கண்டபோதே குரலை உயர்த்தினார். “எடேய்.. தேப்பனும் மேனும் வெருட்ட வாறியளோ..” என்று கேலியாகச் சிரித்தார்.

“இல்லெய்யா.. இவன் தாயில்லாம வளந்தவன். பக்குவமில்லாம நடந்தான்னா தயவுபண்ணிப் பொறுத்துக்குங்க..” சிங்கமலை லெட்சுமணனின் தோளைப் பிடித்தபடி பவ்வியமாக நின்றான்.

சுட்டுவிரலை கொடுப்புக்குள் நுழைத்துப் பற்களில் சிக்கிய பனங்கிழங்கு நார்களைச் சுரண்டிய வாத்தியார் விரலை ஒருமுறை மணந்துபார்த்துவிட்டு வேட்டியில் தேய்த்தார்.

“பின்னை.. எத்தினை தரம் சொன்னாலும் மூதேவிக்கு மண்டையில ஏறுதில்லை. உதோட மாரடிக்கவோ இந்தக் காட்டுக்கை வந்து வேகாத வெயில்ல நான் வேகிறன்.. சரி சரி போய் தலை வீக்கம் வத்த அனுப்பிவிடு..” நாக்கைப் பொச்ச டித்துக்கொண்டு சொன்னார்.

சிங்கமலை போக வேண்டாமென்றுவிட்டான். “ காலா காலமாச் சினத்தைப் பொத்தி மறைச்சுப் பழகிட்டோம். என்ன பண்ணுறது.. நீ போவேண்ணாம்.. நில்லு” என்றுவிட்டான்.

லெட்சுமணன் கந்தையா வாத்தியாரை எண்ணங்களிலிருந்து துரத்த முயற்சித்தான். ஒரு நாடகமாக அது மனதில் நிகழ்ந்தது. வாத்தியாரின் குண்டுமுகம் ஆட்டின் தலையில் பொருந்தியி ருந்தது. ஆடு இரைமீட்டிக்கொண்டேயிருந்தது “ச்சூ– ச்சூ..” எனச் சத்தமிட்டான். அது போகமாட்டேன் என்பதைப்போல தலையை இடது வலதாக அசைத்தது. சட்டென்று முன் காலைத் தூக்கி கொடுப்புப் பற்களில் செருகியது. பிறகு மணந்துவிட்டு தரையில் தேய்த்தது. லெட்சுமணன் சுள்ளித்தடியொன்றை முறித்துக் காற்றில் சுழற்றினான். காற்று ‘விசுக்’கென உதைக்க ஆட்டின் கண்கள் மிரண்டன. ஆடு கால்களை மடித்து ஊன்றியது. நாக்கைப் பொச்சடித்தது. சுள்ளித்தடி வெயிலில் தகதகக்கும் ஒரு வாளாகிய கணத்தில், ஆடு ஒரே பாய்ச்சலில் திருப்பி ஓடியது. லெட்சுமணன் சிரித்துக்கொண்டு நின்றான்.

“என்ன தனியச் சிரிக்கிறாய்..” என்றான் அத்தார். “ம்.. இனித் தனியச் சிரிக்கிற வயசுதான்” என்றபோது லெட்சுமணன் தலையைக் குனிந்தான்.

சங்கிலி இரண்டு கைகளையும் உயர்த்தி விரித்துக் கீழிறக்கி இடுப்பைப் பிடித்துக்கொண்டபோது அவனுடைய முகத்தில் அலுப்பை முறிக்கும் ரேகைகள் படர்வதாக லெட்சுமணன் கற்பனை செய்தான். அவனை முன்னே வரச்சொன்ன சங்கிலி அவனுடைய காது மடலுக்கு அருகாக கையை நீட்டி தூரத்திற்குக் காட்டினான்.

“அந்தா.. அந்த இடத்தில பார். அதில ஒரு குளமிருந்தது. இங்கையிருந்து பாத்தால், மரங்கள் அசையிற காத்தில தண்ணியில அலை மடியிறது தெரியும்..”

வெள்ளம் திட்டுக்களாகத் தேங்கி நிற்பதுபோல நீர்ப்பரப்புக்கள் தெரிந்தன. ஒன்று, இரண்டு, மூன்று.. என்று எண்ணத் தொடங்கினான். முட்டையைப்போல கோரைக்கிழங்கைப் போல நீர் வடிவங்கள் இருண்டு கிடந்தன. அவற்றின் பின்னால் வரிசையாயிருந்த பருத்ததும் மெல்லியதுமான மரங்கள் ஏமாற்றத்தில் உறைந்த யானைகளாகவும் மான்களாகவும் தோன்றின.

“கோடையைத் தாங்காமல் குளம் வத்தினாப் பிறகு ஆழமான இடங்களில இப்படித் தண்ணி தேங்கிநிக்கும். மோட்டைகளைத் தேடிப்போறமென்று சொன்னியே.. நாங்கள் தேடி வந்தது போலத்தான் மான் மரை மாடுகளும் வரும். ஆத்தமுடியாத் தண்ணி விடாயில தாகம் தீர்க்க அவைக்கும் மோட்டைகளை விட்டால் வேற கதியில்லை.”

“காத்துவளம் மோட்டையில இருந்து நம்மட பக்கம்தான் இருக்கு.” என்றான் அத்தார்.

சங்கிலி பின்னாற் திரும்பிப்பார்த்தான். ஒளியடைத்துப் பரண் கட்டுவதற்கு ஏற்ற கொடிமரங்களும் புதர்களும் கரும்பச்சை நிற இலைகளோடு நிலத்தில் பரவிப் படர்ந்திருந்தன.

“ம்.. இதைக் கேள். எப்பயும், ஒளியடைச்சுப் பரண் கட்டேக்கை, காத்து வளம் எதிரா இருக்க வேணும். எங்கடை உடம்பை அளைஞ்ச காத்து அங்கை போகக் கூடாது. மிருகங்களின்ரை உணர்ற சக்தி லேசுப்பட்டதில்லை. காத்து எங்கடை மணத்தைக் காவிக்கொண்டுபோய் அதுகளின்ரை மூக்கில பூச எத்தினைபேர் வந்திருக்கினம் எந்த மூலையில பரண் போட்டிருக்கினமெண்டு அதுகளுக்கு நல்லா விளங்கிவிடும். அதுகள் மனிசர் மாதிரியில்லை. தான் மட்டும் போனாக் காணுமெண்டு யோசிக்கிறதில்லை. அவ்வளவும் அள்ளுண்டு போயிடும். பிறகு நாங்கள் பரணைக் கலைச்சிட்டு நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு நடையைக் கட்டவேண்டியதுதான். ஓரிடத்தில அசுமாத்தம் கண்டுட்டால், நாலைஞ்சு கிழமைக்கு அதுக்கை வரமாட்டுதுகள். தண்ணியில்லாமல் செத்தாலும் கூட...”

லெட்சுமணன் ஒவ்வொரு சொற்களையும் அவை வெளியேறும் வேகத்திலேயே காட்சிகளாக்கிப் பார்த்தான். காடு ஒரு புதிதான அனுபவக் குவியலாக அவனை மூடியிருந்தது. பரவசமான உணர்வுகள் நீர்த்திரளாகி நாலாபக்கமும் அவனைச் சூழ்ந்திருந் தன. தோள்களில் பட்டுத் தெறிக்கும் திவலைகளில் கற்பூர வள்ளியின் நெடி..

“நான் பரண் கட்டுறன். நீங்கள் தடயத்தைப் பாருங்கோ” என்றான் அத்தார். அவன் கொடித்தாவரங்களை நறுக்கி விரல்களுக்கும் முழங்கைக்குமாகச் சுற்றினான். பத்துப்

பன்னிரெண்டு அடுக்குகள் சேர்ந்தபோது முடிச்சிட்டுக் கழற்றி கீழே வீசினான்.

"ஏன், கயிறு கொணந்திருக்கலாமே" நடந்துகொண்டிருந்தபோது லெட்சுமணன் கேட்டான். நீர்த் திட்டுக்கள் நெருங்கிக் கொண்டிருந்தன.

"இது இன்னொரு உலகம். இதுக்கையிருக்கிறது இன்னொரு வாழ்க்கை. அதை இந்தச் சூழலிலதான் வாழத் தெரியவேணும். துவக்கெல்லாம் வரமுன்னம் என் பாட்டனுக்குப் பாட்டன் என்ன செய்திருப்பான் எண்டு நினைக்கிறாய்.. அவன் இந்த காட்டுத் தடியால ஈட்டி செஞ்சு எறிஞ்சிருப்பான். கல்லைத்தான் தீட்டிக் கத்தியாக்கியிருப்பான். அவனுக்கும் முப்பாட்டன் நெருப்பைக் கூட அப்படித்தான் தேய்ச்சிருப்பான்.."

லெட்சுமணன் பிரமிப்போடு பார்த்தான். அனுபவங்கள் இந்த மனிதனின் காலடியில் சுருண்டு கிடக்கின்றன. அவன் பேசப் பேச மனது ஆழங்களை நோக்கிப் பாய்ந்து புதிய தரிசனங்களை வெளியே பிதுக்குகிறது.

பாதங்களில் ஈரம் தொட்டபோது வெக்கை அழிவதைப்போல ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது. குளிரான நீர் உடலின் இடுக்குகளிலிருந்தெல்லாம் சுரப்பதைப்போலான ஓர் அனுபவம்.

"கீழ கவனமாப் பாத்துநட. கால் அடையாளங்களை அழிச்சிடாதை." என்றான் சங்கிலி. அவன் குந்தியிருந்த இடத்தில் ஏர்க் கலப்பையை நிலத்தில் குத்தியதுபோல கிளறுப்பட்டிருந்தது.

"இஞ்ச வா.. இதுதான் பண்டியின்ரை கோரப் பல் அடையாளம்.. இந்தப் பல் சாகும் வரைக்கும் வளந்துகொண்டே போகும்."

லெட்சுமணன் குனிந்து பார்த்தான். ஆறிய உடற்புண்ணின் நிறத்தில் நறுக்கிய கோரைக்கிழங்கு தெரிந்தது. விரல்களால் தடவிப்பார்த்தான். சொரப்பான தோல்..

"மிச்சம் தின்ன இண்டைக்கு வருவார்.." சங்கிலி மெதுவாக முனுமுனுத்தான். "அந்தா பார். கேட்டிக்கம்பு பதிச்ச அடையாளமாத் தெரியிறதுதான் பண்டின்ர கால் அடையாளம்"

லெட்சுமணன் எட்டிப்பார்த்தான். முனை சீவப்பட்ட கேட்டிக் கம்பை, ஈர நிலத்தில் அழுத்தினால் உருவாகும் அடையாளங்கள் முன் பின்னாக மோட்டைகளைச் சுற்றவரவும் இருந்தன. அக்காலடித் தடங்களில் நீண்ட கோரப்பற்களோடு ஒரு கொழுத்த பன்றி நடந்து திரிவதாகக் கற்பனை செய்தான். திடீரென ஒன்று இரண்டு மூன்றென ஐந்தாறு பன்றிகள் அவனை ஒரு பொருட்டாயும் நினைக்காமல் நிலத்தை மணந்து திரிந்தன. அவன் குதூகலித்தான். "பன்னிக மட்டும்தான் வருமா"

"இலுப்பைப் பூ, நெல்லுப்பயிர்க் காலத்திலதான் மான், மரையின்ர நடமாட்டமிருக்கும். பண்டி பொதுவா எக்காலமும் திரியிறதுதான்.. அதுகளுக்கு அவ்வளவா உடம்பு வேர்க்கிறதில்லை. அதனால எப்பயும் உடம்பில தண்ணியோ சேறோ பூசிக்குளிர்ச்சியா வைச்சிருக்கவேணும். அதால வருங்கள்."

"கூட்டமாத்தான் வருங்களா.."

"அப்படித்தான், மிருகக் கூட்டங்களை வழிநடத்துறது எப்பயுமே தாய் உயிர்தான். தாய்தான் எல்லாம்.. அப்படியும் சிலது தனிச்சு வரும்.."

சங்கிலி தாய் என்று அழுத்திச் சொல்லவும் தந்தையுடன் படுத்திருப்பதைப்போன்ற கனவுகள் முறியும்போது உருவாகும் ஏக்கமும் தனிமையும் அவனைச் சூழ்ந்தன. அத்தருணங்களைப் போலவே கண்ணில் நீர்த்துளி.. திடீரென்று தாயின் நினைவு பெருகிற்று. அவளுக்காக ஒரு அழகான முகத்தைப் பொருத்திப் பார்க்கவேண்டும்போல அந்தக் கணத்தில் தோன்றிற்று. காட்டுக் கொடிகளைப்போல எண்ணங்கள் சிக்கியலைந்தன. எவ்வளவோ முயற்சித்தும் வல்லியாளின் முகம்தான் தெரிகிறது. நீர்த்துளி விழுந்து பன்றியின் காற்தடத்தில் சிதறியது.

அவர்கள் பரணுக்குத் திரும்பினார்கள். அத்தார் கொடி இலைகளை முறிக்காமல், வளைத்துச் சுருட்டி நான்கு பக்கத்திலும் மறைப்பு ஆக்கியிருந்தான். உள்ளேயிருந்து பார்த்தபோது இருள் இறங்கிக்கொண்டிருந்தது. குளிர் கால்களில் ஏற, லெட்சுமணன் குந்தியிருந்து கால்களைக் கட்டிக்கொண்டான். அவனுக்குள் பன்றிகளின் கோரப்பற்கள் மேலும் மேலும் வளர்ந்து யானையின் தந்தம் அளவில் நின்றன. திடீரென்று இராட்சத தவளைகளைப்போல அவனில் பாய்ந்தன. அவனுடைய மார்புக் காம்புகளின் நடுவில் பன்றியின் கோரப் பல் செருகுவதற்கு முந்தைய நொடியில் கண்களை இறுக்க மூடி கற்பனையைத் துண்டித்தான். வானம் இன்னமும் ஒளியிழக்கவில்லை.

அத்தார் மின்விளக்கின் கண்ணாடியை உள்ளங்கையால் பொத்தியவாறு இயக்கினான். புறத்தோல் தணலைப்போல சிவந்து ஒளிர்ந்தது. திருப்தியோடு அணைத்தான். "யாழ்ப்பாணத்தில இண்டைக்கு என்ன பாடோ.. எப்பிடியும் ஊருக்குள்ள புகுந்து சுட்டுத் தள்ளுவாங்கள்" என்றபோது பதின்மூன்று ஆமிக்காரர்களைச் சுட்டுவிட்டார்கள் என்றபோதிருந்த துடிப்பில்லை.

"அதனாலதான் கேக்கிறன், இதெல்லாம் ஏனெண்டு..?" எஸ் எம் ஜி தோட்டாக்களைத் துவக்குக்குள் திணித்தபடி சங்கிலி நிதானமாகக் கேட்டான். "எல்லாப் பழியும் சனங்களிலதான் திரும்புமெண்டால், சனங்களின்ர பெயரால் பிறகெதுக்கு இந்த ரத்தம்..?"

அத்தார் சங்கிலியை ஊடுருவிப் பார்த்தான். "இப்பவரை எல்லாமே அமைதியாயிருக்கிற மாதிரியும், அதைக் கெடுக்கிற மாதிரி இது நடந்ததெண்டும் நீங்கள் நினைக்கிறியள் போல.. தனிக்கல்லடிக்கு ஆமிக்காரன் துவக்கோடை வரேல்லையெண்டதுக்காக இந்தத் தீவில எல்லாம் சரியாத்தான் போய்க் கொண்டிருக்கெண்டு அர்த்தமில்லை. அங்காலை ஒதியமலை தாண்டினால் நிலவரம் வேறை.."

"துவக்கைத் தூக்கிக் கொண்டு, ஆருமே இங்கை வரவேண்டாம்"

உரையாடலை வளர்க்கவிரும்பாத தொனியில் சங்கிலி சலித்துக்கொண்டு சொன்னான்.

“தம்பி திருநெல்வேலியிலதான் கல்யாணம் முடிச்சவன், அவன்ர மனிசி வீட்டுக்காரரும் அந்தப்பக்கத்திலதான் இருக்கினம்” அத்தார் திரும்பவும் ஆரம்பித்தான்.

“தம்பிட மனிசி வீட்டுக்காரருக்காகக் கவலைப்படுற உனக்கு உன்ர மனிசி வீட்டுக்காரருக்காகக் கவலைப்பட மனது கொள்ளுதில்லை என்ன” என்று சங்கிலி கேலியாகக் கேட்டான். லெட்சுமணனுக்கு ஏனோ அப்பொழுது குறுகுறுப்பாயிருந்தது. அவன் அத்தாருடைய வீட்டில் தங்கத்தொடங்கி இருபது நாட்கள் கடந்திருந்தன. அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தவிர்த்து வேறெதையும் அவன் அறிந்திருக்க வில்லை. சந்திராவின் குடும்பத்தைப் பற்றி ஏதேனும் பேச்சு வந்தால் அத்தார் உதடுகளைச் சுழித்து கேலி பொங்க சீண்டுவதைக் கண்டிருக்கிறான். சந்திரா பொய்க்கோபம் காட்டுவாள். காய்கறி நறுக்கும் சமயங்களென்றால் நாக்கை மடித்துக் கத்தியை உயர்த்துவாள்.

“அப்பன்தான் வெட்டுவன் எண்டான். மகளும் வெட்டுவாளாம்” அத்தார் ஓர் அப்பாவியைப்போல பாவனை காட்டுவான்.

சந்திராவின் குடும்பத்திற்கும் அத்தாருக்குமிடையில் ஏதோ ஒரு தீராப்பகையொன்று இருக்கலாமென்று லெட்சுமணன் நம்பி னான். அத்தார் யாழ்ப்பாணம் பயணிப்பானாயின் கூடவே போக லாம். ஆனால் அவன் அந்தப்பக்கம் தலைவைத்தும் படுக்க மாட்டான் என்று தோன்றும்போது ஏனோ ஏமாற்றமாயிருக்கும்.

“மனிசி வீட்டுக்காரருக்கு என்ன.. அவை தள்ளித்தானே இருக்கினம். அப்பிடியே ஆமி வந்தாலுமென்ன, புண்ணியத்தார் கத்தியைத் தூக்கிக் காட்டமாட்டாரே.. எனக்குக் காட்டியது மாதிரி..” சற்று இடைவெளி விட்ட அத்தார், “ஓங்கின கொடுவாக் கத்தியோடை வேலிச் செத்தையை வெட்டிச் சாய்ச்சு உள்ள வந்த புண்ணியத்தார் என்ரை மகளின்ரையும் உன்ரை குடும்பத்தின்ரையும் தலையைச் சீவி எறிஞ்சுபோட்டு மறியலுக்குப் போவன் எண்டு சொல்லேக்க என்ரை அய்யா, உடம்பு நடுங்க அவரைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டது என்ர கண்ணுக்குள்ளயே நிக்குது.” என்றபோது உணர்ச்சிவயப் பட்டிருந்தான்.

“நான் அய்யாவின்ரை கையை கீழ இழுத்து இப்ப என்னத்துக்கு நடுங்கி ஒடுங்கிறியள் எண்டு உறுக்கிக் கேட்டன். பிறகு புண்ணியத்தாரைப் பார்த்து உங்களால மறியல்லை எல்லாம் இருக்கமுடியாது. அதுக்கெல்லாம் பழக்கப்படாத உடம்பு உது. ஆனால் என்ர உடம்பு எவ்வளவு நாளுக்கும்.. சாகும் வரைக்கும்.. மறியல்ல இருக்கும் எண்டு நெஞ்சிலை அறைஞ்சு கத்தினேன். புண்ணியத்தாருக்கு என்ன கதைக்கிறதெண்டு தெரியேல்லை.. எனக்குத் தலையைச் சிரைச்சவன் சம்பந்தியெண்டு நினைக் கவே என்ர உடம்பெல்லாம் மிளகாய்த் தூளைக் கொட்டினத மாதிரிப் பத்தி எரியுது. அப்படியொரு நிலை வருமெண்டால் என்ரை கழுத்தை நானே அறுத்துச் சாவன் எண்டு குழறினார். எனக்குச் சிரிப்புத்தான் வந்திது. அதுவும் உங்களால ஏலாது. அந்த நம்பிக்கையிலதான் சந்திராவைக் கட்டப் போறன் எண்டு நிதானமாச் சொன்னன்.. சந்திரா அப்ப ரீச்சரா இருந்தவள். அது நடந்து ஐஞ்சாம் நாள் பள்ளிக்கூடம் முடிய, நேரை வீட்டுக்கு வந்திட்டாள். அய்யா கை நடுங்க அவளைப்பாத்துக் கும்பிட்டார். பதறி கையைப் பிடிச்சு பணியவிட்டாள். இரவோட இரவா வெளிக்கிட்டு விசுவமடுவில கொஞ்சக்காலம் இருந்தம். தனிக்கல்லடியில காடு கிடைச்சு வெட்டிக் கமம் செய்யத் தொடங்கினபிறகு அய்யாவைக் கூட்டியந்தம். அவருக்குச் சாகிற வயசில்லைத்தான். எண்டாலும் நிறைவாத்தான் செத்தார். படுக்கையில கிடைக்கேக்க ஒருநாள் சொன்னார். என்னை இந்த மண்ணிலயே எரிச்சுப்போடு, அங்கை கொண்டு போகாதை.. இல்லாதவனுக்கு அந்த மண் தோதில்லை எண்டு. அப்படித்தான் செய்தம். ஆறு வருசமாச்சுது..”

மூவரின் முகங்களுக்கிடையிலும் இருள் அழுத்தமாகப் பரவியிருந்தது. ஆளை ஆள் தெரியவில்லை. வேலியைப் பிரித்துக் கத்தியை ஓங்கிக்கொண்டு புண்ணியம் உள்ளே நுழைவதுவரை லெட்சுமணன் சுவாரசியமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு நினைவுகள் தாவிவிட்டன. ‘இருட்டில இப்புடியே இருக்கிறதுதானா.. எப்ப வேட்ட நடக்கும்..’ என்று வாய்வரை வந்த குரலை நிறுத்தினான். “வேட்டையெண்டுறது ஒரு தவம், தவம் எண்டிறதே காத்திருக்கிறதுதானே..” என்று மத்தியானம் சங்கிலி சொன்னது ஞாபகம் வந்தது.

“இருட்டில எப்பிடி பன்றி வர்றது தெரியும்..” லெட்சுமணன் சங்கிலியிருந்த திசையைப் பார்த்துக் கேட்டான்.

“அசுமாத்தமும் உள்ளுணர்வும் ஒண்டாக் கிளம்பேக்கை அது தெரியும். அப்ப வெளிச்சத்தை நடுக்கமில்லாமல் நடுநெத்தியில பாய்ச்ச வேணும். வெளிச்சக் கூச்சத்தில அது அசையாமல் நிக்கும். அதின்ர கண்ணைப் பாத்து அது என்னதெண்டு உண்மையான வேட்டைக்காரன் சொல்லுவான்.. வெளிச்சத்தில பண்டியின் கண் நெருப்புத் தணல் மாதிரி சுடரும். மானுக்குப் பச்சைநிறத்தில ஒளிர்ற கண்”

“அப்ப சிறுத்தைக்கு..”

“சிறுத்தையின்ர ரெண்டு கண்ணிலயும் தீப்பந்தம் எரியும்” என்றான் அத்தார். அப்பொழுது அவனுடைய கண்களிலும் வெளிச்சத்தைப் பாய்ச்சியிருந்தால், அங்கேயும் இரண்டு தீப்பந்தங்கள் ஒளிர்ந்து கொண்டிருக்குமென்று லெட்சும ணனுக்கு ஏனோ தோன்றியது.

# ஒரு விரித்த பக்கம்

ஆ.வில்லவராயர்

உரையாடல் நவெம்பர் 2014 இதழ் கையில் வந்ததும் முதலில் விரித்த பக்கம் நான் எழுதிய கட்டுரை வந்திருக்கிறதா, எங்கிருக்கிறது என்ற ஆர்வத்தில் முதலாம் பக்கமே. அதில் ஆ.வில்லவராயர் என்பதற்க்கு பதில் சு.வில்வராயர் என்று இருந்தது. வில்லவராயருக்கு முனால் எப்போ "சு"னா முளைத்தது என்ற எண்ணத்துடன் 35ம் பக்கம் விரித்தேன். ஆரம்பமே குழப்பமாக இருந்தது. நான் எழுதியது எனக்கே புரியவில்லை. முதலாவது வசனமும் ஆறாவது வசனமும் இடம்மாறி குளப்பி அடிபட்டிருப்பதை உணர எனக்கே சிறிது நேரமெடுத்தது. போனால் போகட்டும் இதை யார் வாசிக்கப்போகிறர்கள். நான் என்ன இந்து ஞானமரபை புரிந்ததாக சொல்லிக் கொள்ளும் ஜெயமோகனா நடராசர் சிலை பற்றி சொல்லும் விளக்கத்தை மற்றவர் தேடி வாசிக்க. அப்படி வாசித்தாலும் அதில் சொல்லப்படும் நடராஜர் பற்றிய விளக்கம் அதற்காக அனுப்பப்பட்ட படம் பிரசுரிக்கப்படாததால் அர்த்தமில்லாமலே போய்விட்டது என எண்ணி வேறு பக்கங்களை விரித்தேன். 7ம் பக்கத்தில் இன்னொரு குழப்பம். சரிதான் உரையாடலில் உரையாட விவாதத்திற்குரிய விஷயம் இருக்குமோ இல்லையோ வாசிப்பவருக்கும் வாசிப்பிற்கும் நிறைய முரண்பாடு இருக்கும் எண்டு எண்ணிக் கொண்டேன்.

இன்னும் என்ன அதிர்ச்சி காத்திருக்கோ என்ற என்னத்தில் இன்னுமொரு பக்கத்தை விரித்தேன். உண்மையிலேயே அதிர்ச்சிதான். ஒரு உண்மையை நேரில் பார்த்த அதிர்ச்சி. பலரும் சந்தித்தது, உணர்ந்தது, அனுபவித்தது, ஆனால் வெளியே சொல்லாமல் மறைக்க விரும்புவது நேரிலே போட்டுடைக்கப் பட்டிருந்தது மணவிலக்கானவனின் சாட்சியத்தில். உண்மையை எழுதுகிறேன் என்று ஆபாசமாக ஜனரஞ்சகமாக எழுதமுயலும் சில படைப்புகளுக்கிடையில் உண்மை சுடும் என்பதை உணர்த்தி பலரையும் தம்மை சுயபரிசோதனைக்கு உட்படுதிய எழுத்து சஞ்சயனின் மணவிலக்கானவனின் சாட்சியம். அவரது எழுத்தாற்றலோ, அல்லது சொன்ன விடயத்திலிருக்கும் உண்மையோ, அல்லது சொன்னவரின் சத்திய வார்த்தகளோ நிச்சயம் வாசித்தவர்களை பாதித்திருக்கும். அதுவும் பெரிசுகளின் இறுமாப்பினால் உருவாகும் சச்சரவுகளால் ஏதுமறியாக் குழந்தைகளின் வாழ்வு பாதிக்கப் படுவதை அவர் "குழந்தைகளும் பெற்றோரின் யுத்தகளத்தை, குரூரமான வார்த்தைகளை, தூசணங்களை, செயல்களை, குரூங்களை எதுவித விமர்சனமும் இன்றி, எதிர்ப்பும் இன்றி ஏற்றுக்கொண்டார்கள்........ குழந்தை களினுள்ளும் நாம் விதைத்த அந்த விசத்தின் விதைகள் விதைக்கப்பட்டிருக்குமோ



என்ற கேள்வி" போன்ற வசனங்க ளினால் வாசகர் மனதில் ஆழமாக கீறிப்போகிறார்.

அவர் எழுதிய "உரையாடலுக்கும் விவாதத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் பற்றி நான் அறிந்து கொண்ட போது எனது வாழ்வில் உரையாடல்களை விட அதிகமாக விவாதங்களே நடந்திருக் கின்றன என்பதை உணர்ந்து கொண்டேன்" என்ற வரிகளை வாசிக்கும் போது நான் சில காலத்தின் முன்பு விரித்த ஒரு புத்தகத்தில் கண்ட கதை ஞாபகத்திற்க்கு வந்தது.

புதிதாகத் திருமணமான ஒரு ஜோடி ஒரு மாலைப்பொழுதில் காற்றாட வெளியே உலாவப் போயிருந்தார்கள். தொலைவில் "க்வாக்! க்வாக்!" என்ற ஒலி கேட்டது. அது ஒரு கோழிக்குஞ்சின் ஒலி போலிருக்கிறது என்றாள் மனைவி. இல்லை இல்லை அது ஒரு வாத்தின் ஒலி என்றான் கணவன். எனக்கு நிச்சயமாய் தெரியும் அது கோழிதான் இது மனைவி. கோழிக்குஞ்சு "கொக்!கொக்!" என்றுதான் ஒலிக்கும். இது நிச்சயம் வாத்து தான் இது கணவன். மறுபடியும் 'க்வாக்! க்வாக்!' என்ற ஒலி கேட்டது. பர்த்தாயா அது வாத்து தான் என்றான் கணவன். "இல்லை அது

கோழிக்குஞ்சேதான் எனக்கு நிச்சயமாய் தெரியும் இது மனைவி. கணவன் எரிச்சலுடன் “அது வா–த்–து தெரிஞ்சுக்கோ” என்று சொன்னான்.
மறுபடியும் ”க்வாக்! க்வாக்!” என்ற ஒலி கேட்டது. இம்முறை மனைவி கலங்கிய கண்களுடன் “அது கோழிக்குஞ்சேதான் இல்லையா” என்றாள். மனைவியின் கண்களைப் பார்தான் கணவன். இந்த பெண்ணை மணந்து கொண்டதற்கான காரணங்களை எண்ணிக் கொண்டான். “சிறிது தன்மையாக நான் நினைக்கிறேன் நீ சொல்வது தான் சரி, அது கோழிக்குஞ்சு தான்” என்றான். நன்றி அன்பே! என்ற மனைவி அவன் கையை இறுகப் பற்றினாள். இருவரும் அமைதியாக நடக்கத் தொடங்கினார்கள். ”க்வாக்! க்வாக்! சத்தம் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தது.

கணவனுக்கு உதித்த ஞானோதயம் என்ன? யாருக்கு வேணும் அது வாத்தோ, கோழியோ. தேவை ஒரு மகிழ்ச்சியான மாலைப் பொழுது! எத்தனை விவாதங்கள் கோழியா, வாத்தா என்ற விவாதத்தால் முறிந்திருக்கின்றன. முக்கியமானது திருமண உறவே தவிர வாத்தோ கோழியோ அல்ல.

மேலும் எத்தனை தடவை எம்மால் எமது எண்ணம் தான் சரி என்று ஆணித்தரமாக நிறுவ முடியும். அப்படி சாதித்தவை கூட சில சமயம் முற்றிலும் தவறாகிப் போனதை கண்டிருக்கிறோம். அப்படி சாதிக்க முயன்றதால் இழந்தவை எத்தனை எத்தனை!
யாருக்கு தெரியும் அந்த ஒலி மரபணு மாற்றத்தால் வாத்தாக மாற்றம் செய்யப்பட்ட கோழியிடமிருந்தும் வந்திருக்கலாம். இதை வாசிக்கும் ஆண்/பெண் இயல்வாதிகள் தம் விருப்பிற்க் கேற்ப யார் வாத்து யார் கோழி என்று சொன்னது என்பதை கணவனுக்கும் மனைவிக்கும் மாற்றி பொருத்தி வாசிக்கட்டும். என்னிடம் சண்டைக்கு வர வேண்டாம்.




நோயைப் போலவே எந்த பிரச்சனையையும் ஆறப்போட்டால் அது தீர்க முடியாததாக அறுவைச்சிகிச்சை செய்தே ஆகவேண்டியதாக போய்விடுவதுண்டு. குடும்ப பிரச்சனைகளை தீர்க்க டாக்டர் முதற்கொண்டு தொழில்முறை ஆலோசனை வழங்க பல நிறுவனங்களுண்டு. பெரும்பாலும் நாம் செய்யும் தவறு இந்த ஆலோசகர்களை நாடாது, முதலில் நண்பர்களிடம், பின் உறவினரிடம் அதன் பின் மதகுருக்களிடம் ஆலோசனை கேட்பதே. வேடிக்கை என்ன வென்றால் இந்த மதகுருக்கள் திருமணமே செய்யாதவர்களாயும், பிள்ளை வளர்த்த அனுபவ மற்றவர்களாயும், வேறும் பொருளாதார, சமூக நிர்பந்த மற்றவர்களாயும் வாழ்பவர்கள். தொழில்முறையிலான பயிற்சியு மற்ற, அனுபவமுமற்ற வரிடமிருந்து என்ன எதிர்பார்க்க முடியும், மத அடிப்படையிலான அச்சுறுத்தலை தவிர?

எபோது உங்கள் வாழ்க்கைத் துணையின் குற்றங்கள் உங்களுக்குத் தென்படுகிறதோ அப்போ ஒரு உண்மையை நினையுங்கள். அந்த குற்றங்கள் இல்லாவிடில் அவர் உங்களை மணந்து கொண்டிருக்க மாட்டார். அக்குறைகள் இல்லாத அவரை உங்களிலும் பார்க்க மேலான ஒருவர் மணந்து கொண்டிருப்பார். உங்களது தன்முனைப்பு (நுபழ) உங்களை உதைக்காவிட்டால் இந்த உண்மை புரியும்.

Petruchio: Come, come, you wasp; i' faith, you are too angry.
Katherine: If I be waspish, best beware my sting.
Petruchio: My remedy is then, to pluck it out.
Katherine: Ay, if the fool could find where it lies.
Petruchio: Who knows not where a wasp does wear his sting? In his tail.
Katherine: In his tongue.
Petruchio: Whose tongue?
Katherine: Yours, if you talk of tails: and so farewell.
Petruchio: What, with my tongue in your tail? Nay, come again, Good Kate; I am a gentleman.”
William Shakespeare, The Taming of the Shrew



# "ஒரு நாள்"

# சாத்தனூர் எனும் கனவுக் கிராமம்

**- அருண்மொழிவர்மன்**

ஒரு மாற்றத்திற்காக தொடர்ச்சியாகச் சில புனைவுகளைப் படித்துக் கொண்டிருப்பது நல்லதோர் அனுபவமாகவே இருக்கின்றது. அந்த வகையில் க.நா.சு எழுதிய சர்மாவின் உயில், ஒருநாள் ஆகிய இரண்டு புனைவுகளையும் அடுத்தடுத்து வாசிக்க முடிந்தது.

ஒருநாள், சாத்தனூர் என்கின்ற கற்பனைக் கிராமத்தில் மேஜர் மூர்த்தி கழிக்கின்ற ஒரு நாளில் நிகழ்கின்ற நிகழ்வுகளையும், அவனது நினைவு மீட்டல்களையும், அவன் நிகழ்த்துகின்ற உரையாடல்களையும், அவை ஏற்படுத்துகின்ற சிந்தனைகளை யும் கொண்டு எழுதப்பட்டது. அமைப்பு ரீதியில் இதனைக் குறுநாவல் என்று சொல்லலாம் என்று நினைக்கின்றேன்.



கிருஷ்ணமூர்த்தி என்கின்ற மூர்த்தி பெற்றோரை இழந்தவன். திருமணமான சகோதரி ஒருத்தி இருப்பினும் அவளது ஆதரவு இல்லாதவன். மாணவர் விடுதியில் சிறுவேலைகளைச் செய்து இலவசச் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டு கலாசாலையில் ஏழ்மை காரணமான இலவச மாணவனாகக் கற்று வருகின்றான். கிருஷ்ணமேனன் என்ற ஆசிரியர் ஆராய்ச்சி ஒன்றிற்காக ஜேர்மனி செல்லும்போது இவனையும் தனது உதவியா ளராக அழைத்துச் செல்கின்றார். 1936ல் அவன் ஜேர்மனி சென்று இரண்டாண்டுகளின் பின்னர் கிருஷ்ணமேனன் கம்யூனிஸ்டு களின் ஆதரவாளர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு நாடு கடத்தப் படுகின் றார். ஆயினும், தொடர்ந்து படிக்கவேண்டும் என்ற ஆவலால் ஜேர்மனியிலேயே தங்கிவிடுகின்றான் கிருஷ்ண மூர்த்தி. ஜேர்மனியில் இருந்து படிக்கின்ற இந்திய மாணவர் களில் சிறந்தவனும் அவனே என்று பெர்லின் பேராசிரியர்கள் சிலராலும் அவனே மதிப்பிடப்படுகின்றான். ஆயினும் தனது படிப்பினை பூர்த்திசெய்யும் முன்னரே ஹிட்லரின் பிரச்சாரங் களால் ஈர்க்கப்பட்டு ஹிட்லரின் படைகளுடன் இணைந்து கொள்கின்றான். அதன் பின்னர் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் ஜேர்மனியில் இந்தியர்களுக்கு அழைப்பு விடுத்தபோது அவன் தன் தேசத்துக் காகவும், தன் மக்களுக்காகவும் போராடுவதே சிறந்தது என்ற

முடிவுக்குவருகின்றான். ஹிட் லரின் ஜேர்மனி அவனுக்கு நரகமாகத் தோன்று கின்றது. நேதாஜியின் படைகளுடன் இணைந்து அவருடன் ஜப்பான், மலேயா, பர்மா என்று பயணிக்கின்றான். மேஜர் மூர்த்தியாகப் பதவி உயர்வும் பெறுகின்றான். யுத்தம் ஓய்ந்து இந்தியாவும் சுதந்திரமடைய, அவன் கல்கத்தா ஊடாகச் சென்னை திரும்புகின்றான், சென்னையிலும், டில்லியிலும் வேலை தேடி பலரைச் சந்திக்கின்றான். ஆனால் அதில் அவனால் வெற்றிபெற முடியவில்லை. சில வாரங்களிலேயே இனித் தன் வாழ்வினைத் தானாகவே பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளுகின்றான். பத்திரி கைகளில் வந்த அவன் புகைப் படத்தில் அவனை அடையாளம் கண்டு கொண்ட அவன் தாய் மாமா சிவரா மையர் அவனைச் சாத்தனூருக்கு வந்து தங்கிச் செல்லுமாறு எழுதிய கடிதம் அவனுக்குக் கிடைக்கின்றது. எட்டுமணிக்குக் கடிதம் கிடைத்து பத்து மணிக்கே வண்டியேறி சாத்தனூருக்குப் பயணிக்கின்றான். அவ்வாறு சாத்தனூர் வந்து சேர்ந்து அவன் சாத்தனூரில் கழிக்கின்ற ஒரு நாளின் நிகழ்வுகளும், அவன் காணுகின்ற மனிதர்களும், அவன் மனநிலையில் ஏற்படும் மாற்றங்களும், எதிர்காலத் திட்டமிடல் களுமே ஒருநாள் என்கிற குறுநாவல்.

இக் குறுநாவலில் இரண்டாம் உலகப்போர் மற்றும் அதை ஒட்டிய நிகழ்வுகளை போரில் நேரடியாக ஈடுபட்டவனும் போரில் நேரடியாக ஈடுபடாதவர்களும் உரையாடல்களின் வழி அலசிப் பார்ப்பதை, போரின் நிமிர்த்தங்களைப் பரிசீலனை செய்வதைப் பல இடங்களில் காணலாம். சாத்தனூரில் இருந்து எத்தனை பேர் போருக்குச் சென்றார்கள் என்று வினவுகின்றான் மூர்த்தி.

“மூன்று நாலுபேர் நேரடியாக யுத்தகளத்துக்குச் சென்றிருந்தால் அதிகம். மற்றப்படி மற்றவர்களெல்லாம், மறைமுகமாக யுத்தத்தில் பங்கெடுத்தவர்கள் தான்.

மறைமுகமாக என்றால்..?ஸ

யுத்தகாலத்தில் சாதாரண குமாஸ்தாக்களுக்குக் கூடக் கிராக்கி ஏறிவிடுகிறதே! அந்தக் கிராக்கியைப் பூராவும் பயன்படுத்திக் கொண்டவர்கள்தான் எல்லாக் குடும்பத்தாரும். குடும்பத்துக்கு ஒரு குமாஸ்தாவுக்குக் குறையாது. ஒன்றிரண்டு அதிர்ஸ்டக் குடும்பங்களில் ஏழெட்டுக் குமாஸ்தாக்கள் கூட உண்டு” (பக்கம் 86)

என்று அவனுக்கும் அவன் மாமாவுக்கும் இடையிலான உரையாடல் நகர்கின்றது. போரில் நேரடியாக ஈடுபட்டவர் களையும் மறைமுகமாக அதன் பாதிப்புகளை உணர்ந்தவர் களையும் ஒரே தட்டில் வைத்து எடைபோட முடியாதென்ற போதும் போர் எப்போதும் அதில் ஈடுபடும் தேசங்களின், சமூகங்களின் சமூக, பண்பாட்டு, பொருளாதாரத் தளங்களில் ஒட்டுமொத்தமாகத் தாக்கம் செலுத்துவதாகவே இருக்கின்றது. போரினால் பணப்புழக்கம் கிராமங்களில் அதிகரித்தது பற்றியும் அப்படிப் பணப்புழக்கம் அதிகரித்தபோதும் வறுமைப் பட்டவர்களின் பணப்புழக்கம் அதிகரிக்கவில்லை என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது (பக்கம் 87). அந்தச் சிறிய கிராமத்தில் இருந்து போருக்கு முன்னர் நான்கு தலைமுறைகளாக மக்கள் நகரங்களுக்கு நகர்ந்து கொண்டிருந்துள்ளார்கள். இவ்வாறு மக்கள் கிராமங்களைக் கைவிட்டு நகர்களுக்குச் சென்றமையால் கிராமங்களில் இருந்த வீடுகள் பாழடைந்து போகின்றன. பின்னர் அந்த வீடுகள் இருந்த நிலங்களை உழுது பயிரிட்டு தோட்டங்களாக்கு கின்றனர். சிவராமையரின் தாத்தா காலத்தில்கூட வீடுகள் இருந்த நிலங்களில் மூன்று தலைமுறையில் உழுது பயிரிட்டு தென்னந்தோப்புகள் ஆனதை சிவராமையர் சுட்டிக்காட்டு கின்றார் (பக்கம் 97). ஆனால் போரின் காரணமாக நகரங்களில் நெருக்கடி ஏற்பட அங்கிருந்து மக்கள் மீண்டும் கிராமங்களை நோக்கி நகர்கின்றனர். மூர்த்தி மேலெழுந்தவாரியாகப் பார்க் கின்றபோதே பாதிக்கு மேலான வீடுகள் புதுப்பித்துச் செப்பனிடப் பட்டிருப்பதைக் காணுகின்றான்.

மூர்த்தி நிலையான மனம் இல்லாமல் அடுத்தது, அடுத்தது என்று தாவும் மனநிலைகொண்டவனா வே இந் நாவலில் காட்டப்படுகின்றான். ஹிட்லரி ன கீழ



ம், இந்திய தேசிய ராணுவத்திலும் இணைந்து போரில் ஈடுபட்டுவிட்டுத் தன் சொந்த நாட்டிற்கும், ஊரிற்கும் திரும்பும் அவன் போரினையும், போரில் ஈடுபடவைத்த அவனது குறிக்கோளினை அல்லது சிந்தனைப் போக்கினையும் மீள்பரிசீலனை செய்ய விளைகின்றான் அல்லது மீள்பரிசீலனை செய்யும் நிலைக்குக் கொண்டு செல்லப் படுகின்றான். தேசவிடுதலைக்காகப் போராடிய பல போராளிகள் போர் ஓய்ந்த பின்னர் "கைவிடப்பட்ட போராளிகளாக" மாற்றப்படுவதையும் திருவுருக்களாக மாற்றப்பட்டு, நடைமுறை வாழ்விலான அவர்களது தேவைகள் புறக்கணிக்கப்படுவதையும் அனேகம் போர்களினதும் போராட்டங்களினதும் வரலாறுகள் எமக்கு உணர்த்தியிருக் கின்றன.

தான் கற்ற (ஆனால் முழுமை செய்யாத) கல்விக்கும், அனுபவங்களுக்கும், இந்திய தேசிய ராணுவத்தில் தான் பெற்ற பதவிக்கும் ஏற்பத் தான் நடந்து தன் தேசத்துக்கு உதவிசெய்து தீரவேண்டும் என்ற உறுதியுடன் இந்தியா திரும்பி உத்தியோகம் தேடுகின்றான் மூர்த்தி. ஆனால் இரண்டொரு வாரங்களிலேயே அவனுக்குத் தன் எதிர்காலத்தை அவனே பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது தெளிவாகிவிடுகின்றது (பக்கம் 21). இதன் தாக்கமே அவனை சாத்தனூர் வந்தபின்னர், சாத்தனூரில் (அல்லது கிராமங்களில்) போரின் தாக்கம் பற்றியும், எத்தனை பேர் போரில் ஈடுபட்டனர் என்பது பற்றியும், போர் பற்றியும் தொடர்ச்சியாகச் சிந்திக்கவும் உரையாடவும் வைக்கின்றது. ஆரம்பத்தில் அவனுக்கு "இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது மகா யுத்தத்தின் கருமேகங்கள் இந்தியாவின் வடக்கு எல்லையில் கவிழ்ந்து கொண்டிருந்தபொழுதுங் கூட சாத்தனூரில் விலைவாசிகள் தவிர வேறு எதுவும் பாதிக்கப்படவில்லை" என்ற அவதானமே தோன்றுகின்றது

> **"தேசவிடுதலைக்காகப் போராடிய பல போராளிகள் போர் ஓய்ந்த பின்னர் "கைவிடப்பட்ட போராளிகளாக" மாற்றப்படுவதையும் திருவுருக்களாக மாற்றப்பட்டு, நடைமுறை வாழ்விலான அவர்களது தேவைகள் புறக்கணிக்கப்படுவதையும் அனேகம் போர்களினதும் போராட்டங்களினதும் வரலாறுகள் எமக்கு உணர்த்தியிருக் கின்றன."**

(பக்கம்78). ஆனால் போரின் மறைமுகமான பாதிப்புகளைப் பற்றி சிவாராமையர் கூறும்போது அதனை ஏற்றுக்கொள்ளு கின்றான். அவன் இணைந்து போராடிய ஹிட்லரின் படைகள் தோற்ற தரப்பினர் ஆகின்றனர். இந்தியா சுதந்திரமடைந்த போதும் கூட அதில் நேரடியாக இந்திய தேசிய ராணுவத்தின் பங்களிப்பு பற்றிய அங்கீகாரம் தரப்படுவதில்லை. அவனும் (தேசத்தால்) கைவிடப்பட்ட போராளியாகின்றான். அவன் ஹிட்லரின் படையில் இருந்தது பற்றியும் பின்னர் நேதாஜியின் படைக்கு மாறியது பற்றியும் ஒரு நுகத்தடியில் இருந்து இன்னொரு நுகத்தடிக்கு மாறியது என்றே கருதுகின்றான். ஒருவேளை அவன் வெற்றிபெற்ற தரப்பினனாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்டவனாகவோ இருந்திருந்தால் அவனது மனநிலை இதுபோல இருந்திருக்காது என்றே கூறலாம். அவனது லட்சியங்களின் வீழ்ச்சியும் அதன் காரணமாக எழுந்த மதிப்பீடுகளின் வீழ்ச்சியும் அவனைக் கிராமிய முறையை (கிராம சமூகப் பொருளாதார முறைமையை) சரியான முன்மாதிரியாக கருதும் நிலைக்கு இட்டுச் செல்லுகின்றது. "முப்பது தலைமுறைகளில் அதிக மாறுதலில்லாமலேயே சாத்தனூர் சர்வமானிய அக்ரஹாரத்தில் வாழ்க்கை நடைபெற்று வருகிறது. இது குடும்பம் என்று, தனி மனிதனின் வாழ்க்கை என்று மகத்தான லட்சியமாகப்பட்டது மூர்த்திக்கு. இப்பொழுது என்று தனக்குள்ளேயே சேர்த்துக்கொண்டான் மூர்த்தி."(பக்கம் 107). இங்கே குறுப்பிடப்படும் "இப்பொழுது" என்பது மூர்த்தியின் மதிப்பீடுகளில் ஏற்படும் மாறுதல்களை நுட்பமாகச் சுட்டுகின்றது.

சிறுவயது முதலே தனியனாக இருந்து, எந்தப் பந்தங்களும் இல்லாமல் சுதந்திரமாகவே முடிவுகளை எடுத்துப் பழகிய மூர்த்திக்குக் குடும்பம் என்கிற பந்தம், பிணைப்பு அவசியமானதாகப்படுகின்றது. பொதுவாக மேற்கத்திய வழமைகளும் சட்டங்களும் தனிமனிதனை சமூகத்தின் ஆகச் சிறிய அலகாகக் கொண்டிருப்பவை. ஆனால் கீழைத்தேய – குறிப்பாக இந்தியா, இலங்கை உள்ளிட்ட தென்னாசிய– நாடுகளில் சமூகத்தின் ஆகச் சிறிய அலகாகக் குடும்பத்தினைக் கொண்டே மரபுகளும், சமூக அங்கீகாரமும் நடைமுறையில் இருக்கின்றன. ஆரம்பத்தில் மேற்கத்திய மனத்துடன் இருந்த மூர்த்தி மெல்ல மெல்ல குடும்பம், பந்தம் என்பவற்றை முக்கியமானதாக உணரும் கீழைத்தேய மனநிலைக்கு மாறுகின்றான். இது ஒருவிதத்தில் உளவியல் தாக்கங்களுக்குப் பரிந்துரைக்கப்படும் தெரபி, ஹீலிங் முறைகளை ஒத்ததாகவும் இருக்கின்றது. தொடர்ச்சியாகப் பதற்றமான, பரபரப்பான மனநிலையுடன் கூடிய வாழ்வை, அதை சாகசங்களாக நினைத்து அனுபவித்தவனுக்கு சாத்தனூர் சர்வமானிய அக்ரஹாரத்தில் நிலவிய அமைதியும் அங்கு வாழ்ந்த பலதரப்பட்ட குடும்பங்களின் இருப்பும், எல்லாவற்றுக்கும் மேலான அவனது மாமாவும் மாமியும் வாழ்ந்த நிதானமான வாழ்வும் ஆதர்சமானதாகப்படுகின்றது.

இந்த சிந்தனையோட்டங்களின் தொடர்ச்சியாகக் கிராமமும், அதன் வழமைகளும் உயர்வானதாக மூர்த்திக்குத் தோன்றுகின்றது. அதேநேரம் பல இடங்களில் தெளிவானவர்களாகக் கருதும்படி கட்டமைக்கப்பட்டுள்ள சிவராமையரும், அவர் மனைவியும், மூர்த்தியும் கிராமங்களின் சமூக நடைமுறைகளில் இருக்கின்ற அடிமைத்தனத்தையும்,

ஒடுக்குமுறைகளையையும் சேர்த்தே ஆதரிப்பது தெரிகின்றது. இந்த இடத்தில் தவிர்க்கவே முடியாமல் க.நா.சுவின் பிற நாவல்களிலும் – அண்மையில் வாசித்தது என்பதால் "சர்மாவின் உயிலை" நல்லதோர் உதாரணமாகக் குறிப்பிட்டுச் சொல்ல முடிகின்றது– இதே போன்ற பழம்பெருமை பேசுதல்களையும், பழைய மரபுகளை நியாயப்படுத்தி மீள வலியுறுத்தல்களும் பரவலாக இருப்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. குறிப்பாக விதவைகள் குறித்து,

"மற்றவர்களுக்கு இருந்ததைவிட வாழ்க்கை அவர்களுக்கு சுலபமாகவே இருந்தது. வழிகள் சந்தேகத்துக்கு இடமின்றித் தீர்மானமாகி விட்டன – பலருக்குப் பெரும் பிரச்சினையாக இருந்த பல விஷயங்கள் அவர்களுக்கு பிரச்சினையேயல்ல. தெருவிலே கன்னி விதவைகள் இருந்தார்கள் – வயது அதிகமாகாத விதவைகள் இருந்தார்கள் – ஒன்றிரண்டு விபச்சார விதவைகள் இருந்தார்கள். ஆனால் விதவைகளின் தொகைக்கு, விபச்சார விதவைகளின் சதவிகிதம் ரொம்பக் குறைவுதான். தற்காலத்து விதவா விவாக உரிமையை வற்புறுத்தும் நாவல்களைப் படித்தறியாததனால் விபச்சார விகிதம் குறைவாக இருந்ததோ என்னவோ, யார் சொல்ல முடியும்?" என்பது கதை சொல்லியின் கூற்றாகவே இருக்கின்றது. இதை விதவா விவாகத்தை எதிர்க்கின்ற, விதவா விவாக உரிமைகளைப் பேசுவதை குரூரமாக எதிர்க்கின்ற, அதற்கெதிராக குயுக்தியுடன் பேசுகின்ற ஒருவரின் கருத்தாகவே பார்க்கமுடிகின்றது.

எனவே கிராமங்களை நோக்கி மக்கள் திரும்புவதை (கிராமிய வழமைகள் நோக்கி மக்கள் திரும்புவதை), அதன் கட்டுமானத்தைப் போற்றுகின்ற இந்த நாவல், சாதியால் ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை பெறவும், சாதிய ஒழிப்பை சாத்தியப்படுத்தவும் ஒடுக்கப்பட்ட சாதியினர் கிராமங்களை விட்டு நகரங்களிற்கு இடம்பெயர வேண்டும் என்று கூறப்பட்டதற்கு எதிரானதாக அமைந்திருப்பதை காணமுடிகின்றது. நாவலில் நுட்பமாக மூர்த்தியின் மன ஓட்டமும் இந்தத் திசையில் நகர்த்திச் செல்லப்படுகின்றது. மலைப்பாம்பைத் தோளில் போட்டுக்கொண்டு பிச்சை கேட்கும் ஒருவனைப் பார்த்து சிவராமையரிடம் "இவன் எதற்காகப் பிச்சைக்காரனாக வேஷம் போடவேண்டும்? என்கிறான் மூர்த்தி.

"வேலை செய்ய மனசில்லாத சோம்பல்தான் காரணமாக இருக்கவேண்டும்" என்கிறார் சிவராமையர்.

இவங்களையெல்லாம் கட்டாயப்படுத்தி வேலை வாங்க வேண்டும்" என்று உரையாடல் தொடர்கின்றது. இதே சிவராமையர் பின்னர் இன்னொரு உரையாடலில் சாம்பமூர்த்திராயர் பற்றிய ஒரு உரையாடலில் "அவர் தன் சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள ஆத்மார்த்தமான ஒரு பரிபூரணத்தை எட்டிப்பிடிக்க ஆரம்பத்திலிருந்து கொண்டு முயன்று கொண்டு வந்தார். குதிரைச் சவாரி செய்யும் மணமகனாகவும், பிறகு சொத்துள்ள கிரஹஸ்தனாகவும், குடியானவனிடம் நெல் வேண்டாத மிராசுதாரராகவும், பண்டரிநாதனை பூஜிப்பவராகவும், பெண்டிழந்தவராகவும், குடிகாரராகவும், கூத்திமார் வீட்டிலேயும், பிறகு சகலமும் ஒடுங்கி நீ அறிந்த சாம்பமூர்த்தியராகவும், சவுக்கண்டியில் சந்நியாசியாகவும் அவர் ஓர் ஆத்மதேவையைப் பூர்த்தி செய்யப் பாடுபட்டார்"என்று வாதிடுகின்றார். ஆனால் பிச்சை எடுப்பவனை அவரால் சோம்பல் காரணமாகப் பிச்சை எடுக்கிறான் என்று சாதாரணமாகக் கடந்து செல்ல மட்டுமே முடிகின்றது. இதேபோல இன்னோர் இடத்தில் மனுவினை நியாயப்படுத்துவதாயும் ஒலிக்கின்றது கதைசொல்லியின் குரல்.

"நியாயத்தை அடிப்படையாகக் கொண்டு மனுவோ, மோஸஸோ, குருகங்கோ தங்கள் சட்டங்களை இயற்றவில்லை. தங்களுக் கெட்டியவரையில் நியாயம், தர்மம் என்கிற நியதி வழுவாமலும், மனித சுபாவம் என்கிற அறிய முடியாத தத்துவத்தை ஒட்டியும், ஒரு தெய்வீக பலத்தினால், சுயநலமற்ற ஆன்ம பலத்தினால், சிந்தனை என்கிற தபோபலத்தினால் அவர்கள் உரியபடி வாழ்க்கை வழிகளை மனிதனுக்கு வகுத்துத் தந்தார்கள். இது சரியான பாதை நட என்றார்கள்.

இப்போது அவர்களது தெய்வீகத் தன்மையையும், தபசையும், நியாயத்தையும், தர்மத்தையும் நாம் சந்தேகிக்கத் தொடங்கி விட்டோம். வாழ்க்கை வழிகள் இன்று கரடு முரடாகிக் கொண்டிருக்கின்றன" என்று தொடர்கின்றது அந்த வாதம். இதில் கவனமாக மோஸஸையும், குருகங்கையும் சாதியத்தை கட்டிக்காக்கும் மனுநீதியுடன் "கோர்த்து" விட்டிருக்கின்றார் க.நா.சு.

மனுநீதி கட்டிக்காப்பது சாதியத்தையும் அதன் அடிப்படையிலான தீண்டாமை உள்ளிட்ட ஒடுக்குமுறைகளையும் தான் என்றுவைத்துப் பார்க்கின்றபோது, இந்தப் பிரதியின் நோக்கினையும் அதை நோக்கியதாகவே கருத முடிகின்றது. நாவலின் ஆரம்பத்தில் வீட்டுத் திண்ணையில் இருந்து சிவராமையரும், மூர்த்தியும் பேசிக்கொண்டிருக்கும்போது இடம்பெறும் நிகழ்வொன்றை நாவலில் இருந்து அப்படியே பகிர்ந்துகொள்வது பொருத்தமானதாக இங்கே இருக்கும்.

"தெருக்கோடியிலே மூங்கிற் புதரண்டை நின்றுகொண்டு, "சாமி, சாமி!" என்று யாரோ உரக்கக் கத்தினான். "பறையன் வந்திட்டான்" என்றார் சிவராமையர். காவேரிக்கரை போகும் வழியாக அவனைக் கொல்லைப்புறம் வரச் சொன்னார் சிவராம ஐயர். அக்ரஹாரத்துக்குள்ளே ஹரிஜன் வரக்கூடாது என்று கூறுவது உண்மைதான் என்று மேஜர் மூர்த்திக்கு அப்போதுதான் தெரிந்தது. கிறிஸ்துவிற்குப் பின் 1946 இலே மகாத்மா காந்தியின் இருபது வருஷப் பேச்சுக்கெல்லாம் பிறகும், இது சாத்தியமாக இருந்தது என்பது அவனுக்கு ஆச்சரியமூட்டுவதாகத்தான் இருந்தது. (பக்கம் 60)"

இவ்வாறு இருந்த மூர்த்தியின் சிந்தனைப் போக்கு நாவலின் இறுதியில் மனுநீதியை மீறி நடப்பதால் இன்று வாழ்க்கை கரடுமுரடானதாகிவிட்டது என்று கருதுபவனாக "ஒருநாளிலேயே" மாறிவிடுகின்றது. "ஒருநாளின்" நோக்கமும் பழமையின் மீட்டுருவாக்கமாகவே அமைகின்றது. சாத்தனூர் என்பது கற்பனைக் கிராமமா, அல்லது மனுநீதி பேணும் கனவுக் கிராமமா என்பதே இப்போது என் சிந்தனையாக இருக்கின்றது.

# நுண்விமர்சனம்

**- ரியாஸ் குரானா**

நுண் விமர்சனம் –01
விமர்சனம் என்பது ஒன்றை புரிந்து கொள்ளும் பணியில் உதவுகின்ற செயற்பாடாக இருக்கவேண்டும். புறக்கணிப்பதற்கோ அல்லது புனிதப்படுத்தவோ பயன்படும் ஆயுதமாகப் பாவிக்கப்படக்கூடாது.

நுண் விமர்சனம் – 02
நட்சத்திமொன்றை மீண்டும் நட்சத்திரமாக கண்டுபிடித்துத்தர ஒரு இலக்கியச் செயற்பாட்டாளர் தேவையில்லை

நுண் விமர்சனம் – 03
ஒருவரோடு மற்றவரை இணைக்கும் ஆற்றலை, இன்றுவரை கற்பனைதான் தன்னிடம் வைத்திருக்கிறது. அறமோ, அறிவியலோ அல்ல

நுண் விமர்சனம் – 04
ஊகங்களை அடிப்படையாகக் கொண்டு கண்டடையப்படுகிற அம்சமாகவே அறமும், அறிவும் இருக்கிறது. அடையமுடியாத ஒன்றை அருகில் சந்திப்பதைப் போன்றது கற்பனை.

நுண் விமர்சனம் – 05
இலக்கியப்பிரதி கொண்டிருக்கிற காலம் என்பது, மிதக்கும் காலம். பிரதியோடு வினை புரியும்போது மாத்திரம் காலமாக உருவாகி பின்னர் காலமற்று போய்விடும் தன்மையிலானது. ஒன்றிலிருந்து ஒன்று தொடர்ச்சியாகக் கடந்து செல்லும் ஒன்றாக பிரதியில் காலம் இருப்பதில்லை. இதற்கு மாறாகவே, காலம் என்பதை நாம் எதிர்கொள்கிறோம். இன்று ஒரு நாள் என நம்புவதினூடாக, நாளை வேறொரு நாள் வருமென உறுதியாக நம்புகிறோம். 'நாளை வீட்டுக்கு வா தேனீர் அருந்தலாம்' என ஒரு இலக்கியப்பிரதி சொல்லுமானால், உடையுடுத்து நடை நடந்து, அதைச் சொன்ன கவிஞனினதோ, எழுத்தாளனினதோ வீட்டுக்கு– அந்தப் பிரதியைப் படித்த அத்தனைபேரும் வந்துவிடுவதில்லை. பல வருடங்களுக்கு முன்பான ஒரு இலக்கியப்பிரதி அந்தக் கூற்றைக் கொண்டிருந்தால், இன்று வாசிக்கும் ஒருவர் இந்த வசனத்தை இறந்த காலத்தில் வசிக்கும் எதிர்காலம் என்றும் நினைப்பதில்லை. இலக்கியப் பிரதியில் காலம் என்பது ஒரு மிதக்கும் செயற்பாடு.

அதே நேரம், ”இது ஜனநாயக நாடு, இங்கு அனைவரும் சம உரிமையோடும், சம கௌரவத்தோடும் வாழ்வதற்காக உழைப்பதற்கே இந்தப் பதவியைப் பொறுப்பெடுக்கிறேன்” என்ற செயல், குறிப்பு, மொழி, அப்படி அதை நிறைவேற்றுகிறார் என்ற நிலைக்குறிப்பு மொழியினூடாகவே அந்தக் கூற்றுக்கான அர்த்தம் நிறைவடைகிறது.

இலக்கியப் பிரதி கொண்டிருக்கிற செயல், குறிப்பு, மொழி , நடந்தாலும், நடக்காது போனாலும், அது நிறைவடைந்த ஒரு பிரதி என்ற புலத்திலிருந்தே அர்த்தப் படுத்துவதற்கு உதவ வேண்டியிருக்கிறது. மிக கம்பீரமான, திடகாத்திரமான, அழகான ஒருவன் அவன். என ஒரு இலக்கியப் பிரதி ”அவன்” என்ற ஒருவரைக் குறித்து பேசினால், இந்தக் கூற்று உண்மையா என நாம் துப்பறிந்து பார்ப்பதில்லை. அப்படியானவன்தான் அவன் என்ற கருத்தினூடாகவே அந்தப் பிரதியைக் கடந்து சென்று அர்த்தப்படுத்த முயற்சிக்கிறோம். ஆகக், காலம் சார்ந்த ஒரு செயல்குறிப்புக் கூற்றை வைத்துக்கொண்டு ஒரு பிரதி மற்றவைகளிலிருந்து விசேசமானதெனக் கண்டடைய முடியாது. இலக்கியம் என அழைக்கப்படும் இது ஒரு விசித்திரமான நிறுவனம்.

நுண் விமர்சனம் –06
எல்லையற்ற சுதந்திரத்தை இலக்கியம் கோருகிறதா? சுதந்திரம் என்பதற்கு எல்லைகளும், சகிப்புடன் கூடிய எல்லைகளும் உண்டு. இலக்கியப் பிரதி தன்னைப் ”புனைவு“ என நம்பும் வகையில் செயற்படுமானால் அது எல்லையற்ற சுதந்திரத்தை எடுத்துக்கொள்கிறது. ஆனால், அது யதார்த்தமானது என பேச முற்படுமானால், வரையறுக்கப்பட்ட சுதந்திர எல்லைக்குள் ளாகத் தன்னைச் செயல்படுத்த வேண்டியிருக்கிறது.

புனைவு எனத் தன்னைக் கருதும்படி அழைக்கும் இலக்கியம், ஜனநாயகத்தை நல்லது என்றே எடுத்துக்கொள்கிறது. பொறுப் புடன் கூடிய முக்கியமான விசயமாக ஜனநாயகத்தை பார்ப் பதில்லை தன்னை. யதார்த்தமானது என அழைக்கும்

இலக்கியப் பிரதிகள், ஜனநாயகத்தை முதன்மையான ஒன்றாகக் கருதிவிடுகிறது. தன்னைப் புனைவு என்று அழைக்கும் இலக்கியப் பிரதி, ஜனநாயகத்தை விமர்சனபூர்வமாக அனுக முயற்சிக்கிறது. ஜனநாயகம் என்பதும் ஒருவகை புனைவு என்கிறது. அது கட்டமைக்கப்பட்டது என்கிறது. இன்னும் வளமான உள்ளடக்கங்களை "ஜனநாயகம்" என்ற கருத்துக்க ளுடன் இணைத்து செழுமைப்படுத்த வேண்டும் என்பதற்கான வாய்ப்புக்களை நமக்கு வழங்குகின்றது.

நுண் விமர்சனம் –07
இலக்கியம் எப்போதும் கேள்விகளை தருகிறது. பதில்கள், இலக்கியத் தன்மையை அழிக்கின்றன.

நுண் விமர்சனம் –08
இலக்கியம் என்பது மொழியைக் கொண்டுபோய் இணைத்து வைக்கும் ஓர் இடமல்ல. தாள்களிலும், இணையங்களிலும் கவிதைபோல ஒன்றை அமைத்து வைத்தால் – அதன் வாக்கியங்கள் ஒவ்வொன்றுமே அதை இலக்கியமாக்கிவிடும் என்று எந்த உத்தரவாதமும் இல்லை. அதே நேரம், இலக்கியம் என்பது தனித்த மொழியாலான ஒரு நிகழ்வு மாத்திரமும் அல்ல. ஏனெனில், பல இலக்கியப் பிரதிகள் பிற எழுத்து மொழிவகை களிலிருந்து தாங்கள் வேறுபட்டு நிற்பதை கவனிப்பதோ, அவைகளோடு போட்டியிடுவதோ இல்லை.

நுண் விமர்சனம் –09
இலக்கியத்தில் அரசியல் பங்கேற்பது என்பது ஒருவகைப் போக்கு. அது தேவையா இல்லையா என்பது சாய்வுடன்கூடிய ஒரு பதிலை எதிர்பார்பதுமாகும். அரசியலுக்கும் இலக்கியத்திற் கும் இடையிலான உறவு என்பது உரையாடல் தன்மையிலா னது. இணையவும் விலகவுமான தீர்க்கமான எல்லைகளையும் உடன்பாடுகளையும் கொண்டது. அதேநேரம், சந்தர்ப்பத்திற் கேற்ப, புளக்கத்திற்கு வரக்கூடியதும்கூட. இலக்கியத்தில் அரசியலை மறுப்பதுகூட ஒரு போக்குத்தான். அதுவும் உரையாடலுக்கானது. இலக்கியம் அரசியலைக் கட்டாயம் கொண்டிருக்க வேண்டும் என்பதுபோன்ற தொனியில் முன்வைப்பதும் வியாக்கியானம் செய்வதுமே வன்முறை சார்ந்தது. ஏற்க முடியாததும்கூட. இலக்கியத்தை அரசியலின் இன்றியமையாத தன்மையாக மாற்றுவது இது. அதே நேரம் அரசியல் இலக்கியத்தையும், இலக்கிய அரசியலையும் போட்டுக் குழப்பிக்கொள்வதால் நேரக்கூடிய ஆபத்தும் இந்தக் கருத்துடன் இணைந்திருக்கிறது.

நுண் விமர்சனம் – 10
இலக்கியம் முற்றிலும் தேர்வு சார்ந்தது. யாரும் யாரையும் விட்டுவிடலாம். யாரையும் தேர்வு செய்யலாம். ஏன் தேர்வு செய்தோம் என்பதும், ஏன் விட்டுவிட்டோம் என்பதும் முக்கிய மான ஒன்று. அதிலிருந்துதான் கருத்துநிலை நோக்கி ஒரு வியாக்கியானம் உருப்பெறுகிறது.ஆனால், தேர்வு செய்வதற்கும், விட்டு விட்டதற்கும் பயன்படுத்திய வழிமுறைகளையும், கண்டடைந்த காரணங்களையும் வியாக்கியானம் செய்ய வேண்டும். அது இல்லாவிட்டால் அங்கு விமர்சனம் என்பது இல்லை என்று அர்த்தமாகும்.

நுண் விமர்சனம் –11
இலக்கியச் செயற்பாட்டாளர்கள் தமது பிரதி குறித்து விமர்சிப்பவர்களாக இல்லை. அந்த மரபும் இங்கில்லை. தனது பிரதியை கொண்டாடுவதுடன், பிறர் கொண்டாட வேண்டு மென்றும் விரும்புகின்றனர். அதுவே, "பிரதி"யை நேர்மையாக விமர்சிக்க வேண்டும் எனச் சொல்லும் அனைவரினதும் உள்ளர்த்தமாகும். விமர்சனம் நண்பர்பர்களையும், பகைவர் களையும் உருவாக்கும் ஒரு செயல் என்பதுபோலவே இங்கு அதிகம் அர்த்தப்படுத்தப்படுகிறது.

தனது பிரதிக்கு சாய்வாக இருந்தால், நண்பர்களாகவும் – எதிராக இருந்தால் எதிரியாகவும் கண்டுபிடித்துச் செயற்பட ஆர்வம் கொள்கின்றனர். விமர்சனங்களை எதிர்கொண்டு அதை ஒரு விரிந்த உரையாடலாக மாற்றிவிட விரும்புவதில்லை.

தமது பிரதிகளின் மீது விமர்சனங்களிருப்பவர்களினாலும், விமர்சனங்களை மதித்து உரையாடலாக மாற்றுபவர்களினா லும் மாத்திரமே, புதிது புதிதாக தமது பிரதியை உருவாக்க முடியும். இதுவரை தமது பிரதியை தாமே விமர்சித்தவர்கள் இருக்கிறார்களா என தெரியவில்லை. இந்தத் தலைமுறையா வது, தமது பிரதிகளை தாமே விமர்சிக்கும் ஒரு மரபை தொடங்கிவைக்கட்டும்.

நுண் விமர்சனம் – 12
கவிதை எப்போதும், உத்தேசிக்கப்பட்டவைகளைக் கடந்து உத்தேசிக்கப்படாத விளைவுகளையே அதிகம் கொண்டிருக்கும். ஆகவே, பொருள் விளக்கத்திற்கு பரந்த சூழல்களின் உதவி நம்பியிருக்கும் சிறு பகுதியாக கவிதைகளை அனுக முடியாதுள்ளது.

இதுவே, இலக்கியத்திற்கும் அடையாளத்திற்குமிடையிலான தொடர்பைச் சிக்கல் படுத்தும் ஒன்றாக கவிதை இருப்பதற்கு காரணமாகிறது.

நுண் விமர்சனம் – 13
எந்த ஒரு பிரதியையும், திட்டவட்டமாக அறுதியிட்டு இலக்கியம் என அழைக்க விரும்பவில்லை. அழைப்பது முடியாத ஒரு காரியமும் கூட. ஆனால், பகிர்ந்து கொள்ளவும், பேசவும் வசதியாக இலக்கியமென்று சுட்ட வேண்டி ஏற்படுகிறது. அப்படிக் குறிப்பிடும் பிரதிகள் புதிரானவையாகவும், விசித்திர மானவையாகவும் இருக்கின்றன. அவைகளோடு நெடுங்காலம் வினையாற்றுவதென்பது சாத்தியமற்றதென்றே நினைக்கிறேன். ஆபத்தானதும் கூட. நம்மோடு அதிகம் பழக்கப்பட்டுவிடும் போது, நமது கையில் ஒரு வகை அதிகாரத்தையும் திணித்துவிடக் கூடியது.

இலக்கியத்தோடு வினையாற்றுதல் என்பது, நினைவின் வடிவத்தில் ரகசியங்களை நோக்கிப் பயணிப்பதுமாகும். எங்குமில்லாத அதிக மர்மங்கள் நிறைந்த முடிவற்ற ஒரு பயணமும் கூட. நினைவின் அகத்தினுள்ளே, மொழியையும் சிந்தனையையும் இணைப்பதற்கான வரைபடங்களை உருவாக்கும் ஒரு கடின பணி. தெளிவற்றது , அறியாதது என அறியப்படுகிற வழிகளில், நினைவின் உள்வரைவுளை

கண்டுபிடித்து சமர்ப்பிப்பதுமாகும்.ஒன்றோடொன்று முரண் பட்டதும், இணைந்ததுமான பல்லாயிரம் நினைவுகளிலிருந்து கண்டுபிடிக்கப்படும் ஒரு விசயமாக இலக்கியம் இருப்பதால், அதன் மீது குறித்த ஒரு செயலையும், பண்பையும் ஏற்றிவைக்க முடியாது.

நுண் விமர்சனம் –14
எளிமையாக இருக்க வேண்டும். புரியும்படி இருக்க வேண்டும் என கவிதை குறித்து புகார்களைச் செய்வது காலங்காலமாக இருந்து வந்தாலும், இன்று அது ஒரு பெஸனாக மாறியிருக்கிறது. யாரைச் சந்தித்தாலும் அவர்களிடம் இப்படியான கவலை இருப்பதை பார்க்கலாம்.

உண்மையில் இது அவர்கள் தங்கள் கவிதை குறித்த புரிதலுக்கு சொல்லிக்கொள்ளும் சமாதானம் மட்டுமே. இந்தச் சமாதானம் கவிதையை புரிந்துகொள்ள என்றும் தடையாகவே இருக்கும்.

நுண் விமர்சனம் –15

இன்று நவீன கவிதையைப் பற்றிப் பேசுபவர்களும், அதை முன்வைப்பவர்களும் கூடப் பின்தங்கியவர்கள்தான். கவிதை குறித்து அவர்களிடம் ஒரு ஐம்பது வருசத்திற்கு முன்னைய புரிதல்கள்தான் இருக்கின்றன. பாராட்டுவதென்பது யாராலும் முடிகிற ஒருவிசயம்தான். எப்போதும், ஒரு பிரதி தன்னைக் கவிதையாக நிறைவடையச் செய்வதற்கு என்ன வழிமுறை களைக் கையாள்கிறது எனப்பேசுவதே கவிதைக்கான புரிதலைத் தர உதவக்கூடியது. நல்லது அல்லது மோசமானது என்பதை எப்படிக் கண்டுபிடித்தார்கள் என்று விபரிப்பதுதான் கவிதை குறித்த பொறுப்பான பேச்சாக இருக்கும். அது இல்லாமல் பாராட்டுவதுகூட பின்தங்கிய செயல்தான்.

நுண் விமர்சனம் –16
விபரத் தொகுப்புக்கள் போன்ற வாக்கியங்கள் புதிர்களைப் போன்ற கூற்றுக்கள் விடுகதைபோன்ற புதிர் வசனங்கள் போன்றவற்றைக் கவிதையாக மாற்றுவதற்கு பெரும் உழைப்புத் தேவை. அது நமது நவீன கவிதை வெளியில் அதிகம் நிகழவில்லை. நமது நவீன கவிதைகளின் பெரும்பகுதி, இப்படியே காட்சி தருகிறது.

ஒரு சிறு உதாரணம். அதன் வசன அமைப்பைப் பாருங்கள் விடுகதைபோலவே இருக்கும்.

பூமித் தோலில்
அழகுத் தேமல். ” அது என்ன?

இப்படிக் கேட்டால்

”விடிவு” என மாணவர்கள் விடைசொல்லக் கூடும்.
நுண் விமர்சனம் –17

கவிதை தன்னிடம் ஒரு தனிமையைக் கொண்டிருக்க வேண்டும். அதை வாசிக்கும்போது, தன்னைச் சுற்றியுள்ள அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக மறைந்துவிட வேண்டும். துணைக்கு ஏதுமற்ற ஒரு பீதியை மனதினுள் உருவாக்க வேண்டும். இப்படியான அநாதரவான நிலையை உருவாக்குவதற்கு ஏதுவான வழிகளில் அழைத்துச் செல்ல முடிகிற பிரதியே கவிதையாக இருக்கும்.

அதற்கு, கவிதை தனது செயல்களால் தனிமையை உருவாக் கித்தர வேண்டும். இந்தத் தனிமை என்பது கற்பனையின் வனாந்திரத்தில் எப்போதாவது ஒரு சந்தர்ப்பத்தில் தோன்றி மறைவதாகும்.

இதற்கெல்லாம் கவிதை வழியேற்படுத்த வேண்டும் என்பதைப் போல, அதை வாசிப்பதற்கும் பெரும் தயாரிப்புக்களை மேற்கொள்ள வேண்டும்

நுண் விமர்சனம் 18
தமிழில் நவீன கவிதை என எந்த வகைப் பிரதிகள் பயன்படுத்தப்பட்டதோ அவைகளை கடக்க வேண்டிய தேவை இன்றைய கவிஞனுக்கு முன்னே இருக்கும் முக்கியமான விசயம். அதன் மன அமைப்பு, புரிதல் நிலை போன்றவற்றை உதறி எறிந்துவிட வேண்டும். இல்லாமல், அதைப் பின்தொடர்ந்து நவீன கவிதைகளையே இன்னும் பெருக்க வேண்டும் என நினைப்பவர்களுக்கானதல்ல இது. ஆனால், இது சாத்தியப்பட வேண்டுமெனில் கவிதை குறித்த வாசிப்பும் சிந்தனையும் மிக அவசியமானதே. அதுபோலக் கவிதை குறித்த பொறுப்பான உரையாடல்கள் மிகமுக்கியம். அலட்சியம் செய்யும் எதிர்கொள்ளல்களை நான் பொருட்படுத்தப் போவதில்லை.

நான் நவீன கவிஞர்களை அவமதிக்கவில்லை. இன்றைய காலத்திலும் நவீன கவிதையைக் கட்டி அழுபவர்களை விமர்சிக்க விரும்புகிறேன். எம்.ஜி.ஆர், சிவாஜிகள் போய்விட்டார் கள். அவர்களைப்போல், சிம்புகள் நடிக்கத் தேவையில்லை என்றே சொல்கிறேன்.

நுண் விமர்சனம் –19
உண்மையில் இன்று கவிதை, நாவல், சிறுகதை இப்படியான இலக்கியச் சாமான்கள் அதிகம் தேவையில்லை. அவைகளைச் சற்றுக் குறைத்துவிட்டு அவை குறித்த உரையாடல்களும், விவாதங்களுமே தேவை.

நுண் விமர்சனம் –20
நவீன கவிதை நீங்கள் சொல்லுவதைப்போல வாழ்வின் அனைத்து அம்சங்களையும் தனது தலையில் தூக்கிப் போட்டுக்கொண்டு திண்டாடியது என்பது உண்மைதான். இன்னும் அப்படியே கவிதை பற்றியும் புரிந்து கொண்டிருக் கிறார்கள். இன்று எல்லா விசயங்களையும் கவிதை மட்டுமே பேசவில்லை. செய்திகள்கூட மூலைமுடுக்கை எல்லாம் பேசிக்கொண்டிருக்கின்றன. வாழ்வின் எல்லா விசயங்களையும் பிரதிபலிப்பதுதான் கவிதை என்ற நிலை கடந்துபோய்விட்டது. கவிதை தன்னளவில் ஒரு அனுபவமாகவும், அதுவே ஒரு அனுபவத்தை உருவாக்குவதுமான நிலைவரை அது கடந்து வந்துவிட்டது. இதைச் செய்வதுதான் கவிதை எனச் சுட்டிக் காட்டும் அதே கணம் அதிலிருந்து கவிதை நழுவிவிடுவதைப் புரிந்துகொண்டால், கவிதைக்கென்று குறித்த வேலை

யிருக்கிறதென்றோ, குறித்த பயன்பாடு இருக்கிறதென்றோ, குறித்த அர்த்தம் இருக்கிறதென்றோ நம்மால் சொல்ல முடியாமல் போய்விடும். வாழ்வின் அனைத்து அம்சங்களுக் குள்ளும் கவிதையை சும்மா கொண்டு போய் நுழைக்கிறார்கள்.

நுண் விமர்சனம் –21
நவீன கவிதை ஒரு சம்பவத்தை விபரிக்கிறது. வெளிப் படையாகவும் சிலவேளை மறைமுகமாகவும் இது நிகழ்கிறது. நவீனம் கடந்த கவிதை ஒரு சம்பவமாக இருக்க முற்படுகிறது. பெரும்பாலும் அந்தச் சம்பவம் அப்பிரதி உருவாக்கும் சம்பவமாகவே இருக்கிறது.

நுண் விமர்சனம் 22
இலக்கியம் என்றால் என்ன? என்ற கேள்வியை குழந்தைகள் கேட்டால், கவிதை, கதைகள், நாடகம் எனச் சொல்லிவிடலாம். அதிகம் விற்பனையாவது, அதிகம் பேர் பாராட்டுவது, விருதுகளும் பொன்னாடைகளும் பெற்றுக்கொள்வது என்றும் சொன்னால் அந்தக் குழந்தைக்கு அனைத்தும் புரிந்துவிடும்.

இதைத்தாண்டியும் அந்தக் கேள்விகளுக்கு பதில்கள் இருக்கின்றன என்றும். அது இலக்கியம் என நம்பப்படும் பிரதிகளை மேலும், மேலும் விபரிப்பதினூடாகவும், வியாக்கியானம் செய்வதினூடாகவும் வளரக்கூடியது என்றும் ஒரு வாசகனும், இலக்கியவாதியும் புரிந்து வைத்திருப்பது மிகவும் முக்கியமானது.

நுண் விமர்சனம் 23
வானம்பாடி கவிதை இயக்கத்தால் 70,80 களில் ஜனரஞ் சகமாகப் பெருகிய கவிதைகளின் நிலையை இன்று நவீன கவிதை என்று பேசப்பட்ட ஒரு வகையினம் அடைந்திருக்கிறது. கிறுக்கும் பக்கமெல்லாம் நவீன கவிதைகள் பெருகிக் கொண்டிருக்கின்றன.

ஒருவகை கவிதைச் செயல் மக்களை மிகவும் நெருங்குவதும், மிகவும் பழக்கப்பட்டுப்போன ஒன்றாக மாறுவதும் நடக்கக் கூடியதே. அப்படி மாறும்போது, புதிய கவிதை முயற்சிகளை அக்கறைகொள்வது, இயக்கத்திலிருக்கும் கவிஞர்களின் முக்கிய பணியாகும். அதுதான் வளர்ச்சியின் வழி. அல்லது மாற்றத்தின் ஆரம்பம்.

ஒருவகைக் கவிதை மிகவும் பழக்கமான ஒன்றாக மாறும் போதும், ஜனரஞ்சகத் தன்மையை அடைந்து விடும் போதும் ஒரு தேக்கம் உருவாகுவது தவிர்க்க இயலாததே. அந்தத் தேக்கத்தை உடைப்பதற்கு புதிய வாசிப்புக்களும், புதுவகை கவிதைச் செயல்களும் மிகவும் முக்கியமானதாகும். அதைவிட முக்கியமானது, புதிய வகை முயற்சிகளை அடையாளம் கண்டு அம் முயற்சிகளை ஊக்குவிப்பதுமாகும்.

நுண் விமர்சனம் 24
ஒரு காலத்தில் ஜனரஞ்சக வெளியில் கனத்துக்கிடந்த வானம்பாடி வகையறாக் கவிதைகளைப்போல, நவீன கவிதை என நம்பப்படும் ஒரு வகைப் பிரதிகள் பெருகி இருக்கின்றன. இந்தப் பெருக்கம் என்பது, தனது முதலாவது பயில்நிலைக் கவிதையை எழுதுபவர்கூட , நவீன கவிதை என பெரும் முக்கியத்துவம் கொடுத்து கவனிக்கப்பட்ட வடிவத்திலும், அமைப்பிலும், உள்ளடக்கத்திலும்தான் தனது முதல் கவிதையை எழுதும் அளவிற்கு , தமிழின் நவீன கவிதை என நம்பப்பட்ட வகையினம் ஜனரஞ்சகமாகியிருக்கிறது.

இங்கு அந்த குறித்த வகையறாக்களை (வகையினத்தை) ஏதோ ஒரு வகையில் கடந்துவிடும் கவிதை முயற்சிகளே தேவைப் படுகிறது. இதுதான் தமிழின் நவீன கவிதை வகையினத்தைக் கடந்து செல்லும் நிலை. ஆம், அதை இரக்கமற்ற முறையில் தூக்கி வீசிவிட்டுக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. புறங்காலால் ஒத்திவிட்டு நடந்து செல்ல வேண்டியுமிருக்கிறது.

அதற்காக, ஏலவே உள்ள தமிழின் நவீன கவிதை வகையி னத்தைப் புறக்கணிக்க வேண்டும் என்று அர்த்தமில்லை. அந்தக்கால அடையாளங்களாகவும், கவிதையின் முக்கிய முக்கிய திசைமாற்றங்களாகவும் அவைதான் இருக்கின்றன. அந்தளவில் அதற்கான இடம் இன்றும் மிக அவசியமானதே. ஆனால், அவைபோல பாவனை செய்யும் கவிதைகளை இன்றும் எழுதி எழுதி பெருக்கத் தேவையில்லை. அது மிகப் பழசு. அந்தக் காலத்தின் மிகவும் கடினமான உழைப்பைக் கொண்டிருப்பது. நான் சொல்வது என்னவென்றால், இந்தக் காலத்திற்கான கவிதைச் செயலுக்கான உழைப்பை இன்றைய கவிஞர்கள் வழங்க வேண்டும் என்பதே. நவீன கவிதை என தமிழில் நம்பப்படும் ஒரு வகை மாதிரி மாத்திரமே அனைத்துக் காலத்துக்குமான தமிழ்க் கவிதைக்கான 'ரோல்மொடல்' அல்ல. அப்படி இருக்கவும் முடியாது. அப்படி இருந்தால் அந்த மொழி செத்துவிட்டது என்று பொருள். இன்றையக் காலத்துக்கான கவிதைச் செயலை, அதற்கான உழைப்பை நிகழ்த்துவதினூ டாகக் கவிதையின் புதிய சாத்தியங்களையும் பார்வையாளர் களுக்குக் கொடுக்கலாம்.

நுண் விமர்சனம் 25
சித்திரத்திற்கு வெளியே கோடுகளை வரைவதுதான் கவிதை. சித்திரத்தினுள் கோடுகளைக் கொண்டுவருதல்தான் வாசிப்பு. ஏதாவதொரு நேரத்தில் அனைத்தையும் கைவிடுதல் அதை எழுதுதலாகும்.

நுண் விமர்சனம் 26
70களில் கவிதை என்பது அதிகமும் சிந்திக்கின்ற செயலாக இருந்தது. தர்க்கரீதியான முறைக்கு சாய்வுடையதாக செயல் பட்டது. கருத்து சொல்லுதலும், தத்துவத்தை நெருங்குவதுமாக இருந்தது. புனைவு என்பது சிறியளவிலே கவிதையில் பயன்படுத்தப்பட்டது. கருத்துச் சிந்தனை நெரிசலினுள் அமுங்கிப் போன கவிதைகள் தங்களிடம் வைத்திருந்த புனைவுகளைக் கைவிடவேண்டிவந்தது. புனைவு மேலோங்கினால் "யதார்த்த மில்லை வெறும் கற்பனையானது" எனக் கவிதைகள் பழிக்கப் பட்டன.

வாழ்வைக் கற்பனை இல்லாமல் பார்க்கத் தூண்டப்பட்டது. இன்றும் அதன் பாதிப்பு நீடித்துக்கொண்டே இருக்கிறது. கவிதை என்பது முற்றிலும் புனைவு சார்ந்த ஒரு வகையினம். அதைக் கற்பனை நீக்கம் செய்துவிட்டு அனுக விரும்புவதே ஆபத்தானது.



## அண்மையில் காலமான படைப்பாளியும் சமூகச்செயற்பாட்டாளருமான கி.பி.அரவிந்தனுக்கு அஞ்சலி

கி.பி.அரவிந்தனுடைய நேர்காணலில் :

கவிதையை என்னுடைய அடையாளமாகத் தேர்ந்தெடுத்ததற்கு சிறப்பான காரணங்கள் ஏதுமில்லை. நான் சம்மந்தப்பட்ட எரிமலை, வழிகாட்டி, தர்க்கீகம், ஈழம், பொதுமை, பாலம் என்று எல்லாமே அரசியல் பரப்புரை இதழ்கள் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். பாலம் அதற்கு விதிவிலக்கு. இவற்றில் நான் பெரும்பாலும் அரசியல் விளக்க இயக்கத்தின் கொள்கை விளக்க கட்டுரைகள்தான் அதிகம் எழுதினேன். ஆனால் அவற்றைச் சுவையாக எழுத வேண்டுமென்பதில் கவனம் கொண்டிருந்பேன்.குறிப்பாக கடித வடிவிலான இயக்க அறிக்கைகள் ஈரோஸ் தோழரிடையே வரவேற்பைப் பெற்றிருந்தன. அப்படித்தான் கவிதை என்ற வடிவத்தை நோக்கி நகரத் தொடங்கினேன்.தமிழ்நாட்டில் வானம்பாடி கவிதை இயக்கத்தினரின் படைப்புகளில் ஆர்வம் கொண்டிருந்தேன். அவர்களுடன் தொடர்பும் இருந்தது. தலைமறைவுக் காலத்தில் எழுதியவைகளில் கவிதைகளும் இருந்தன. அவைதான் அழிந்து போய் விட்டனவே.

புலம்பெயர்ந்து ஐரோப்பாவில் எழுதத் தொடங்கியபோதுதான் எனக்கான கவிதை மொழி ஒன்று உருவாகியது என்று நினைக்கின்றேன். புலம்பெயர்ந்த வாழ்தலில் வாழ்வியலில் நான் தோய்ந்தபோதுதான் கவிதையின் வீச்சம் கூர்மையாகியது. இங்கு வந்தபோது எனது கடந்த கால இலக்குகள், செயல்பாடுகளுக்கு நேரெதிராக மாறிச் செல்கிறேனோ என்ற எண்ணம் மேலோங்கி இருந்தது. ஒரு வகையயான உளவியல் தாக்கத்துக்கள் சிக்கித் தவித்தேன்.அவ்வேளையில்தான் எனது முதல் கவிதைத் தொகுதி ‘இனி ஒரு வைகறை’ வெளிவந்தது. அதில் உள்ள பெரும்பாலான கவிதைகள் தாயகத்தில் இருந்து கிளம்புதற்கு முன்னால் சரியாகச் சொன்னால் 1990ஆம் ஆண்டு அனுபவங்களை வைத்து எழுதப்பட்டது.ஒரு வகையில் என்னை 90 ஆண்டுக் கவிஞன் என்றே சொல்ல வேண்டும்.

ஆனால் அந்தத் தொகுப்பு பரவலான வாசிப்புக்குச் செல்லாவிட்டாலும் கவனிப்புக்கு உள்ளானது. அத்துடன் என்னையும் ஈழத்துக் கவிஞர்கள் வரிசையில சேர்த்தது.அதில் உள்ள ‘இனி’ என்னும் கவிதை பலராலும் பல தடவைகள் மீள எடுத்துக் கையாளப்பட்டது.

‘மனவெளி அரங்காடல்’ நாடகக் குழுவினரின்  பதினேழாவது அளிக்கை கடந்த சித்திரை மாதம் 17 , 2015 அன்று மார்க்கம் தியேட்டரில் இடம்பெற்றது. நீலம், மோகப்பறவை, செரஸ் தேவதை, காற்றெல்லாம் தென்றலல்ல, சிருஸ்டி ஆகிய நாடகங்கள் மேடையேறியிருந்தன.

























# எழுத்தாளப் பிதாமகன் எஸ்.பொவுக்கு அஞ்சலி



நன்றி: தாய்வீடு

எஸ்.பொ அவர்கள் ஈழ இலக்கியத்தில் மட்டுமல்லாது உலகு தழுவிய நவீன தமிழ் இலக்கியப்பரப்பிலும் முதன்மையான எழுத்தாளராக இருந்தார் என்பதை அறுதியிட்டுக் கூற முடியும். இலக்கியக் கலகக்காரனாக அறியப்பட்ட எஸ்.பொ அவர்கள் பேராசிரியர்களான சிவத்தம்பி, கைலாசபதி ஆகியோரால் முன்வைக்கப்பட்ட முற்போக்கு இலக்கியக் கோட்பாடுகளுடன் முரண்பட்டவர். முரண்பட்டதோடல்லாமல் தான் வரித்துக் கொண்ட இலக்கியத்துக்காகச் சளைக்காது இயங்கியவர்! போராடியவர் ! தீ, சடங்கு, வீ, நனவிடை தோய்தல், கேள்விக்குறி, மாயினி போன்ற அபாரமான தமிழ் இலக்கியப் படைப்புகளை உருவாக்கியவர். முக்கியமான ஆபிரிக்க நாட்டு இலக்கியங்கள் சிலவற்றை சிறுவர் இலக்கியங்கள் உட்படத் தமிழில் மொழிபெயர்த்தவர். "வரலாற்றில் வாழ்தல்" என்ற தனது வாழ்க்கைச் சரிதத்தை இரு நூல்களாக மிகப்பெரிய அளவில் எழுதியவர். 'மித்ர' என்ற பதிப்பகத்தை சென்னையில் நிறுவி ஏராளமான ஈழத்துத் தமிழ் இலக்கியங்களைப் பிரசுரமாக்கியவர். உலகம் முழுதும் பயணித்து இலக்கிய ஊழியம் செய்தவர். ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் பிதாமகனானக் கொண்டாடப்படுபவர். எண்பத்திரண்டு வருடங்கள் வரலாறாக வாழ்ந்து மறைந்த எழுத்தாளப் பெருந்தகை எஸ்.பொ அவர்களுக்கு அஞ்சலி!


‘உரையாடல்’ சஞ்சிகையின் தமிழ் இலக்கிய முயற்சிக்கு
வாழ்த்துகள்!
நாதன் சிறிதரன்
சட்ட அலுவலகம்
305 Milner Ave. Scarborough, ON M1B 3V4
416 499 2760




graphicland - 416 412 0900